இஸ்லாத்தின் பார்வையில்

# குடும்பக்கட்டுப்பாடு

அப்துல் ஹமீது

---

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்


பாகம் 1

- குடும்பக்கட்டுப்பாடு ஓர் மனித இனச் சீரழிவு
  - 1. குடும்பக்கட்டுபாட்டுத் திட்டத்தின் தோற்றம்
  - 2. மால்த்தஸின் கொள்கை ஆரம்பமே தோல்வி மயம்
  - 3. குடும்பக்கட்டுப்பாடு அதிவேகமாகப் பரவியதன் காரணிகள்
  - 4. தொழிற்புரட்சி ஏற்படுத்திய சமூக மாற்றம்
- சமூக அவலங்கள்
  - 1. சமூகச் சமநிலைச் சீர்கேடு
  - 2. பொருப்பற்ற மேல்தட்டு வர்க்கம்
  - 3. அமெரிக்காவில் இளம் குற்றவாளிகள் உருவாகக் காரணம்
  - 4. பொருப்பற்ற இந்திய மேல்தட்ட வர்க்கம்
  - 5. நுகர்பொருள் ஆசையில் மேல்மட்ட வர்க்கம்
  - 6. நுகர்பொருள் ஆசையில் இந்திய நடுத்தர வர்க்கம்
  - 7. சமுதாயச் சமநிலைப் பாதிப்பும் அதன் விளைவுகளும்
  - 8. சமுதாயச் சமநிலைப் பாதிப்பில் இந்தியா
  - 9. வயதானவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு
  - 10. நிவாரணத்திற்குப் பின் வேதனை
  - 11. குறைந்து போன பிறப்பு விகிதம்
  - 12. குழந்தையில்லாத் தாம்பத்யமும், மணவிலக்கும்
  - 13. அமெரிக்காவின் விவாகரத்து நிலமை
  - 14. பாலியல், குற்றங்கள், கொலைகள், நோய்கள்
    - கள்ளக் குழந்தைகள்
    - அமெரிக்கக் கல்லூரி நிலைமைகள்
    - குற்றங்கள்
    - நோய்கள்
  - 15. வளர்ந்த நாடுகளுடன் போட்டி போடும் இந்தியா
- குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளும் அதனால் ஏற்படும் மனநிலை உடல்நிலை பாதிப்புகளும்
  - 1. குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள்
    - தற்காலிக கருத்தடை முறைகள்
    - நிரந்தர கருத்தடை முறைகள்
    - இஸ்லாம் வழங்கும் மருந்தியல் கொள்கை
  - 2. கருக்கலைப்பு அல்லது கருச்சிதைவு (ABORTION)
  - 3. டீன்ஏஜ் கருக்கலைப்பு
  - 4. சமூக அவலமும் தவறான சித்தாந்தமும் - இந்திய நிலை

பாகம் : 2

- தவறான சித்தாந்தம்
  - 1. வாழ்வாதாரப் பற்றாக்குறை ஏற்படுமா?
  - 2. உலகமக்கள் தொகை வளர்ச்சியும், உணவு உற்பத்தியும்

- தனிநபர் வருமானம்
- 3. தனிநபர் வருமானக் கணிப்பு - புதிய முறை
- 4. கல்வி இல்லாக் குழந்தைகளும், தேசத்தின் வளர்ச்சியும்?
- 5. இடப்பற்றாக்குறை ஏற்படும்?
- 6. திருத்தியமைக்கப்பட்ட பயன்படாத நிலங்கள்
- 7. உணவுப் பற்றாக்குறை ஏற்படும்?
- 8. சாதனையிலும் சோதனை ¸ வேதனை
- 9. விரையமாகும் உற்பத்தி
- 10. கண்கெட்ட பின்

பாகம் : 3

- குடும்பக்கட்டுப்பாடு : இஸ்லாமியப் பார்வையும் அதன் சட்டங்களும்
  - 1. இஸ்லாத்தின் பார்வையில் மனிதன்
  - 2. மனிதனுக்குள்ள சுதந்திரம்
  - 3. மனிதனது பொறுப்புகள்
  - 4. இறைச் சட்டங்கள்
  - 5. திருக்குர்ஆன் ஓர் மருத்துவ நூல் அல்ல
  - 6. மனிதன் இறைவனுடைய பிரதிநிதி
  - 7. திருமணமும் அதன் நோக்கமும்
  - 8. பொருளாதார நோக்கம்?
  - 9. இஸ்லாமிய குடும்பக் கட்டுப்பாட்டு முறை
    - திருமறை என்ன சொல்கிறது
    - நபிமொழி (ஹதீஸ்) என்ன சொல்கிறது
  - 10. அஸ்ல் பற்றி நான்கு மத்ஹபுகள்
  - 11. கருவின் நிலை பற்றிய இஸ்லாமியக் கொள்கை
  - 12. இஸ்லாத்தில் கரு(சிசு)வின் உரிமைகள்
    - வாழ்வாதார உரிமை
    - சொத்துரிமை
    - இறந்து விட்ட கருவும் அதன் கண்ணியமும்
  - 13. கருக்கலைப்பும் அதற்கான தண்டனைகளும்
  - 14. கருச்சிதைவு பற்றி மத்ஹபுகள்
  - 15. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய இஸ்லாமியத் தீர்வு
  - 16. குடும்பக்கட்டுப்பாட்டுக்கு எதிராக ஏனைய மதங்களும், அறிஞர்களும்
    - கிறிஸ்த்துவம்
    - இந்து மதம்
  - 17. குடும்பக் கட்டுப்பாடு முஸ்லிம்களுக்கெதரான சதியே!


## என்னுரை

---

குடும்பக்கட்டுப்பாடு பற்றியும், அதன் சாதனங்கள் சமூகத்தில் எவ்வாறு மன மாற்றத்தை ஏற்படுத்தி சமுதாய சீரழிவுக்கு மக்களை இட்டுச் சென்று கொண்டிருக்கிறது என்பதையும், அத்துடன் இன்று எதற்காக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அவசியம் கடைபிடித்தாக வேண்டும் என அனைவரையும்

வலியுறுத்துகின்றோம் என்று அதன் ஆதரவுவாதிகள் கூறும் தவறான கூற்றுக்களை சரியான புள்ளி விபரங்களுடன் ஆராய்வதே இப் புத்தகத்தின் நோக்கமாகும்.

மேலும் இது பற்றி இஸ்லாம் என்ன கருத்தைக் கொண்டுள்ளது என அறிந்து கொள்ள வேண்டியது நமக்கு மேலும் அவசியமானதொன்றாக இருக்கிறது.

ஏனெனில் இது நமது (ஈமானில்) நம்பிக்கையின்பால் சம்பந்தப்பட்ட ஒன்றாக உள்ளது. அடுத்து நம்மை நோக்கி வீசப்படும், முஸ்லிம்கள் ஏன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதில்லை என்பன போன்ற கேள்விகளுக்கு சரியான பதிலும் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் நம்மால் நடத்தப்படும் மாற்றுமத நண்பர்களுக்கான கேள்வி பதில் நிகழ்ச்சியில், தவறாது இடம் பெறும் கேள்விகளுள், மேலே நாம் பார்த்த கேள்வியும் ஒன்றாக இருப்பதால் நாம் அதற்கான முழுமையான பதிலைத் தயார் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மேலும், நமது சகோதரர்கள் அதற்கான பதிலை இஸ்லாமியக் கண்ணோட்டத்துடன், ஓரளவு புள்ளி விபரங்களுடன் விளக்கம் அளித்தாலும், முழுமையான பதில் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தான் அவர்களது பதிலில் இருந்து நான் உணர்ந்தேன். இதற்கான சரியான விளக்க நூல்கள் தமிழில் இல்லாததும் ஒரு குறையாக இருக்கலாம்.

மேலும், தமிழில் சகோதரர் முஹம்மது முஹைதீன் உலவி அவர்களால் வெளியிடப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு எனும் நூலைத் தவிர்த்து வேறு நூல்கள் இருப்பதாக நான் அறிய முடியவில்லை.

இதற்கான பதிலை சரியான வடிவில் நாம் ஏன் தயாரிக்கக் கூடாது என்ற உந்துதலின் பேரில் என்னால் முடிந்தளவு இந்த புத்தகத்திற்கான ஆதாரங்களைத் திரட்டித் தந்திருக்கின்றேன்.

மேலும், இதற்கான ஆதாரத் தேடலில், அறிஞர் பெருந்தகை அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்களால் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளிவந்துள்ள (BIRTH CONTROL) என்ற நூலும், தென் ஆப்பரிக்காவைச் சேர்ந்து சகோதரர் அபுல் பழ்ல் மொஹ்சின் இப்றாஹிம் அவர்கள் எழுதிய Abortion Birth Control & Surrogate Parenting An Islamic Perspective – Abul Fadl Mohsim Ebrahim என்ற நூலும் சகோதரர் முஹம்மது முஹைதீன் உலவி அவர்கள் எழுதிய குடும்பக்கட்டுப்பாடு என்ற நூலும், என் புத்தக ஆதாரத் திரட்டலுக்கு பேருதவி புரிந்தன.

மேலும், அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்களுடைய நூலில் உள்ள புள்ளி விபரங்கள் பழையனவாக இருந்ததால், அது என் பணியை முழுமையடையச் செய்யாது என உணர்ந்தேன்.

இது பற்றி எனது நண்பர் ஷேக் இப்றாஹீம் யூசுப் அவர்களிடம் கலந்து ஆலோசனை செய்த போது, பிரிட்டானியா கலைக்களஞ்சியம் மற்றும் உலக அட்லஸ் மற்றும் செய்தித் தகவல்கள் மூலம் பெறலாம் என்ற யோசனையைத் தெரிவித்து, நான் கேட்ட புள்ளி விபரங்களை அவரும், எங்களது நண்பர் செய்யத் ஹஸன் கனி அவர்களும் சிரமம் பாராது சேகரித்துக் கொடுத்தார்கள்.

மேலும் இந்த நூல் ஹிஜ்ரி 15-08-1418 எழுதி முடிக்கப்பட்டு விட்டது. பல காரணங்களால் வெளியிட முடியாமல் இருந்த இந்நூல், கடந்த ஒரு வருடமாக தமிழ் இணையமான தமிழ்இஸ்லாம் (www.a1realism.com) இணையத்தில் தொடராக வெளிவந்து கொண்டிருந்தது என்பதையும் நினைவில் கொள்க. எனவே சில புள்ளி விபரங்கள் சற்று பழையதாக மாறி விட்டதென்பது தவிர்க்க இயலாததாகி விட்டது.

மேலும் இப்பணியை என் மூலம் இறைவன் நாடியமைக்கு நான் என்ன நன்றிக்கடன் செய்தாலும் அது ஈடாகாது. இறைவன் இதன் மூலம் நல்ல பல விளைவுகளை நம்மிலும், மாற்றுமத நண்பர்களிடமும் ஏற்படுத்துவானாக எனத் துஆச் செய்து கொள்வோமாக! ஆமீன்!!

மேலும், இப்புத்தகம் உருவாக பல வகைகளிலும் எனக்கு உதவியாக இருந்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவன் இதற்கான நற்கூலியை அவர்களுக்கு வழங்கிட வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் படிக்கும் வாசகர்கள் தங்களது மேலாக கருத்துக்களை தெரிவிப்பதோடு, தங்களது மேலான ஆலோசனைகள் மற்றும் புதிய தகவல்களைத் தந்தால் இனிவரும் வெளியீடுகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இறைவா! இதில் உள்ள நிறைகளை ஏற்றுக் கொண்டு, குறைகளை மன்னிப்பாயாக! இது போல சமுதாயப் பணியில் என்றும் என்னை நிலைப்படுத்தி, நேரான வழியின்பால் செல்லக் கூடிய நற்பாக்கியத்தை எனக்கும், எங்கள் அனைவவோர்க்கும் வழங்குவாயாக!

உன்னையே நம்புகின்றோம்! உன்னிடமே உதவியும் தேடுகின்றோம்.

அப்துல் ஹமீது

18-08-1423 (23-10-2002)

# பாகம் 1

# குடும்பக்கட்டுப்பாடு ஓர் மனித இனச்சீரழிவு

---

## 1. குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தோற்றம்

### மூல காரணகர்த்தாக்கள் :

### மால்த்தஸ் (MALTHUS) :

குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை அநேகமாக உலகுக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர், ரெவரெண்ட் தாமஸ் ராபர்ட் மால்த்தஸ் என்பவராவார். இவர் ஆங்கிலிகன் சொசைட்டி என்ற கிறிஸ்துவ சபையின் பாதிரியாரும், பொருளாதார அறிஞரும் ஆவார். 1798 ல் அவர் வெளியிட்ட, மக்கள் தொகையின் அடிப்படைக் கொள்கைகளும், வருங்கால சந்ததிகளின் முன்னேற்றத்தில் அது ஏற்படுத்தும் விளைவுகளும் (On Principles of Population as It Affects The Future Improvement of Society) என்ற நூல் தான் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்ற மனநிலையை மக்கள் மனதில் ஏற்படுத்தியது.

ஆனால் அவர் எழுதிய இந்நூலில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்கள் மற்றும் மருந்துகளை உபயோகப்படுத்தச் சொல்லி அறிவுறுத்தவில்லை. மாறாக, வளர்ந்து வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த திருமணம் செய்து கொள்வதைத் தாமதப்படுத்துதலையும், சுயக்கட்டுப்பாட்டு முறையை பேணுவதையும் அவசியம் என்பதை வலியுறுத்தி இருந்தார். இதன் மூலம் குழந்தை பிறப்பதை தாமதப்படுத்தி, அதன் மூலம் வளரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தலாம் என்ற கொள்கையை முன் வைத்தார்.

மேலும், இவரது நூல் டார்வின் போன்ற பரிணாமவியல் அறிஞர்களின் இயற்கைத் தேர்வு என்ற கோட்பாட்டை உருவாக்க தூண்டுகொலாகவும் அமைந்தது. ஏனெனில், மால்த்தஸ் தம் நூலில், இயற்கையாகவே உணவுப் பற்றாக்குளையும், நோய்களும் மனித இனத்தின் பெருக்கத்தை கட்டுப்படுத்தியே வந்திருக்கின்றது என்பதைத் தம் நூலில் குறிப்பிட்டு இருந்தார்.

மேலும், மால்த்தஸ் தம் நூலில், பூமியின் வசிப்பிடமானது ஒரு குறிப்பிட்ட அளவே உள்ளது. இன்றைய மக்கள் தொகைப் பெருக்கத்தின் அளவு 1,2,4,8,16,32,64.. .. என்ற அளவிலும், உணவுப் பெருக்கத்தின் அளவு 1,2,3,4,5,.. .. என்ற அளவிலும் சென்று கொண்டிருப்பதால் இன்னும் சில நூற்றாண்டுகளில் மக்கள் வசிப்பிடம் இன்றியும், உணவுப் பற்றாக்குறையினாலும் சிரமப்பட நேரிடும் எனும் கருத்தை எடுத்து வைத்தார்.

மேற்கண்ட மால்த்தஸின் கூற்று தவறு என்பதை சுட்டிக் காட்டி, உண்மைணை வெளிச்சத்துக்கு கொண்டு வருவதே இந்த நூலின் நோக்கமாகும்.

### பிரான்சிஸ் :

மால்த்தஸிற்குப் பின் வந்த இவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவர் மால்த்தஸ் ன் கருத்தை வலியுறுத்தியதோடல்லாமல், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்கு மால்த்தஸ் ன் கோட்பாடான சுயக் கட்டுப்பாடு, திருமணத்தைத் தாமதித்தல் போன்றவற்றை விட்டு விட்டு அதற்குப் பதிலாக, கருத்தடைச் சாதனங்களை உபயோகிக்க வேண்டும் என்றார்.

### டாக்டர். சார்லஸ் நௌல்டன்

1833 ல் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர். சார்லஸ் நௌல்டன், பிரான்சிஸ் ன் கருத்தை ஆதரித்தார். இவர் எழுதிய நூலான The Fruits of Philosophy - தான் அநேகமாக கருத்தடை பற்றி வெளிவந்த முதல் புத்தகமாகும். இந்த நூலில் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தில், கருத்தடை சாதனங்களின் பங்கும் அதன் மருத்துவ நோக்கும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

## 2. மால்த்தஸின் கொள்கை - ஆரம்பமே தோல்வி மயம்

மால்த்தஸின் கொள்கையானது அதன் ஆரம்ப காலத்திலேயே மேற்குலகினரால் ஒதுக்கித் தள்ளப்பட்டதும் அல்லாமல், அவரது கொள்கை பொய்யானது எனவும் நிரூபணமானது.

மக்கள் தொகை எவ்வளவு வளர்ந்ததோ அந்தளவு இயற்கையின் பங்களிப்பும், இறைவன் மனிதன் மீத செலுத்திய அவனது அருட்கொடையின் மூலம் உணவு உற்பத்தியும் கூடியே வந்துள்ளது. இயற்கையாகவே பூமி தன் மடியில் வைத்திருக்கும் பொக்கிஷத்தின் தன்மையை அறிய முடியாமல் இவர்களும் சடவாதம், இவர்களது கண்ணையே மறைத்து விட்டது என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. மேலும், மக்கள் தொகை பெருகப் பெருக உணவு உற்பத்தியும், அது சார்ந்த தொழில் வளர்ச்சியும், புதுப்புது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையின் தேவைகளை நிறைவு செய்யும் அளவில் வளர்ந்ததே ஒழிய, மால்த்தஸின் கொள்கைப் பிரகாரம், மக்கள் தொகை பெருப் பெருக, அந்தப் பெருக்கம் காரணமாக மட்டும் யாரும் பட்டினி கிடக்கவில்லை. மேலும் இன்று வரை இடப்பற்றாக்குறையும் ஏற்படவில்லை.

அதாவது, மால்த்தஸ் வாழ்ந்த காலமான 1780 ல் பிரிட்டனின் மக்கள் தொகை 8 மில்லியன் மட்டுமே. ஆனால் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பிரிட்டனில் ஏற்பட்ட மக்கள் வளர்ச்சி, அங்கு எந்தவித அசௌகரியங்களையும் ஏற்படுத்தவில்லை.

### பிரிட்டனின் மக்கள் தொகை வளர்ச்சி :

ஆண்டு மக்கள் தொகை - மில்லியனில்

1815 - 18.5

1911 - 45.2

1996 - 58

1997 - 65

மால்த்தஸின் கூற்றுப்படி 1780 முதல் 1977 வரை 8 மில்லியனிலிருந்து 65 மில்லியனாக பிரிட்டனின் மக்கள் தொகை உயர்ந்தும், அங்க யாரும் மக்கள் தொகை வளாச்சி காரணமாக ஏற்பட்ட போட்டியில் பட்டினி கிடந்து செத்ததாகவோ அல்லது இடப்பற்றாக்குறை காரணமாக மூச்சு முட்டி இறந்ததாகவோ நம்மால் இதுவரை அறிய முடியவில்லை. ஆனால், அதற்கு மாறாக, உலகின் முதல் தர வசதிகளைப் பெற்றிருப்பதோடு. தனி நபர் வருமானம் மற்ற நாடுகளைக் காட்டிலும் உச்சத்தில் இருப்பதே மால்த்தஸின் கொள்கை தவறானது என்பதை நிரூபிக்கின்றது.

மேலும், இந்த வளர்ந்த நாடுகள் தங்களது தவறான சித்தாந்தங்கள் மூலமும் அதனூடே குடும்பக் கட்டுபாட்டுத் திட்டமும், அதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்களும், அதனூடே மக்களிடம் ஏற்பட்ட சமூக மாற்றமும், குடும்ப அமைப்பு சிறியதும், இவைகள் ஏற்படுத்திய தாக்கங்கள் தான் (அந்த சமூகத்தை) மனித இனத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் சொன்னது எனலாம்.

### 3. குடும்பக் கட்டுப்பாடு அதிவேகமாகப் பரவியதன் காரணிகள்

குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் வெற்றி பெற மால்த்தஸ் கொண்டு வந்த மக்கள் தொகைக் கட்டுப்பாட்டின் பொருளாதாரக் கொள்கை மட்டும் காரணமல்ல. மாறாக, அவரது கொள்கையை ஆதரித்த, அவரது கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டவர்களே மால்த்தஸ் - ன் கொள்கையை செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தவர்கள். மேலும், இத் திட்டம் வெற்றிகரமான ஒன்று, நடைமுறைப்படுத்த வேண்டிய ஒன்று என்ற நிலையை ஏற்படுத்தியதற்கு இன்னும் சில காரணிகள் தூண்டு கோலாக அமைந்தன.

அதாவது, ஐரொப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சி மற்றும் பொருளாதாரக் கொள்கையை மட்டுமே வாழ்க்கையின் அடிப்படை நெறியாகக் கொண்டு முதலாளித்துவ மற்றும் கம்யூனிஸ கொள்கைகளின் எழுச்சியும், நுகர் பொருள் கலாச்சாரம், நாகரீக மோகம், செக்ஸ் ஆகியவை தான் வாழ்வின் பிரதானம் என்ற சமுதாய வாழ்வும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அவசியம் தான் என்ற குரலை எழுப்பியது.

இயற்கையாகவே ஒரு சமூகத்தின் அமைப்பு மற்றும் பொருளாதாரம் என்பது, மனித இனத்தின் ஆண், பெண் என்ற இரு பிரிவினரிடையே பல்வேறு தொடர்புகளைக் கொண்டதாய் அமைந்து இருக்கின்றது. மனிதனின் ஆரம்ப காலத்தில், இரு பாலருமே உணவு போன்ற தேவைகளுக்கு சம பங்களிப்புச்

செயதனர். அப்போதைய பல்வேறு சமூகங்களில் மானிட சமத்துவம் ஆண், பெண் வித்தியாசம் பாராமல் பேணப்பட்டது.

அதன் பின் வந்த நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில், வளர்ச்சி என்பது அவர்களது சொத்தின் பால் தொடர்புடையதாய் அமைந்தது. இந்த அடிப்படையின் விதிப்படி, பெண்களும் சொத்துக்களாகக் கருதப்பட்டு, அவர்களின் உரிமைகளின் நிலை தாழ்ந்தும், அவர்களது நடவடிக்கைகள் மிகுந்த கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. மேற்கண்ட கட்டுப்பாடுகளை முதலாளித்துவம் சார்ந்த தொழில் முறை சமுதாயம் வளர்த்தும் பாதுகாத்தும் வந்தது. இச் சமூகம், வீட்டிலும் சரி, வெளியிலும் சரி பெண்களை தாழ்ந்த நிலையில் தான் வைத்திருந்தது.

மேலும், 20 ம் நூற்றாண்டிலும், இரண்டு உலகப் போருக்குப் பின்னும் மேற்கத்திய தொழில்முறை சமுதாயத்தில் உயர்படிப்பு (White color) கொண்ட சமூகம் மற்றும் தொழில் நிபுணர்களுக்கும் ஏற்பட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இது வரை வீட்டுக்குள்ளேயே இருந்து குடும்பப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபட்டிருந்த பெண்களை, வீட்டுக்கு வெளியே அழைத்து வந்து, தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் பெண்களின் பங்கை அதிகமாக்கின.

மனித இன அறிவியல் மற்றும் ஆய்வு முடிவுகளின்படி, வீட்டுக்கு வெளியே ஆணும் பெண்ணும் கலந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்ட போது தான், பாலியல் விவகாரங்களில் மிகப் பெரும் தளர்ச்சியையும், தாரளப் போக்கையும் ஏற்படுத்தி, பெண்களின் சீரழிவில் - பாலியல் சமத்துவம் என்ற போலித் தோற்றத்தை உருவாக்கியது.

இதையோ பேராசிரியர் சிரில் ஜோட் அவர்களும், பெண்கள் தங்கள் குழந்தைகளையும், வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு வீட்டிலேயே அடங்கிக் கிடந்தால், வாழ்க்கைத் தரம் சிறிதளவு பாதிக்கப்பட்ட போதிலும் கூட உலகம் ஒரு மகிழ்ச்சிகரமான இடமாக விளங்கும் என்பதே எனது நம்பிக்கை என்றார்.

இனி புதிய தொழில்முறைப் பொருளாதாரமும், அதன் கொள்கைகளும் மேற்குலகின் சமூக வாழ்வை எவ்வாறு சீரழித்தது என்பதையும், அதில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் அதன் சாதனங்களும் எவ்வாறு பங்காற்றின என்பதையும் இனி வரிவாகக் காண்போம்.

## 4. தொழிற்புரட்சி ஏற்படுத்திய சமூக மாற்றம்

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள் ஐரொப்பாவில் புதியதொரு தொழில்முறை பொருளாதாரத்தை உருவாக்கியது. இதன் மூலம் பெரும் பெரும் ஆலைகள் உருவாக்கப்பட்டன.

மக்கள் தாங்கள் வேலைவாய்ப்புப் பெறவும், புதிதாகத் தோன்றியுள்ள நுகர்பொருள் கலாச்சாரத்தில் தாங்களும் இணையவும், தாங்கள் இதுவரை வாழ்ந்த கிராமம் அதன் சார்பு சூழ்நிலைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை உதறித்தள்ளி விட்டு நகரங்களை நோக்கி குடிபோக ஆரம்பித்தார்கள்.

இதுவரை தாங்கள் கட்டிக் காத்து வந்த மரபு வழிப்பழக்கவழக்கங்கள் ஒழுக்கங்கள், குடும்பப் பாரம்பரியங்கள் ஆகிய அனைத்தையும் இழந்து பணம் பண்ணினால் போதும் என்ற நிலை அவர்களில் உருவாகியது.

அத்துடன் நகரங்களில் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக ஏற்பட்ட, உயர்ந்து விட்ட வீட்டு வாடகையும், மேலும் தான் சம்பாதித்ததைக் கொண்டு தன் வசதியைப் பெருக்கிக் கொண்டால்

போதுமானது என்ற சுயநலக் கொள்கையின் காரணமாக தாய் பிள்ளைகளையும், தகப்பன் குடும்பத்தையும், பாரமானதொரு விசயமாகக் கருதத்தலைப்பட்ட போது, குடும்ப அமைப்பு அந்த சமூகத்தில் முதன்முதலாகச் சீர்குலைய ஆரம்பித்தது.

அதன்மூலம் ஆண் திருமணமின்றி தன் வாழ்க்கையையும், பெண் திருமணம் செய்யாமலும், திருமணம் செய்தாலும் பிள்ளை பெற்றுக் கொள்ளாமல் இருக்கவும், வாழத்தலைப்பட்டனர்.

இறுதியில் திருமணம் இன்றி வாழும் ஆண் தனது உடல் சுகத்தைத் தீர்க்க விலைமாதர்களை நாட வேண்டிய நிலை. விலைமாதுவோ எளிதில் கர்ப்பம் தரிக்காமல் இருக்க குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களை நாடவேண்டிய நிலை.

இப்படியாக எதற்காகவோ கண்டுபிடிக்கப்பட்ட குடும்பக் கட்டுபாட்டுச் சாதனங்கள் ஒரு தீய வழிமுறைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது** என்பது தான், முதன் முதலாக மனித சமுதாயத்தில், இந்தக் குடும்பக் கட்டுப்பாடும் அதன் துணை சாதனங்களும் ஏற்படுத்திய மாபெரும் சீரழிவாகும்.

**இன்றைய நம் இந்தியாவில் - விபச்சாரியிடம் செல்லும் போது, ஆணுறை அணிந்து செல்லுமாறு, அரசுகள் விளம்பரம் செய்கின்றன. குடும்பக் கட்டுப்பாட்டு சாதனமான, சாதனமாக இருக்க வேண்டிய ஆணுறை, இன்று விபச்சாரத்தை வளர்க்கவும் அதன் மூலம் ஏற்படும் எய்ட்ஸ் நோயைத் தடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் குடும்பப் பின்னணியில் வாழும் மக்கள், தங்களது குடும்பத்தை தாங்கள் வாழும் இடத்தில் ஏற்பட்ட போட்டி காரணமாக அவற்றைச் சமாளிக்கவும் - அதற்காக தங்களது குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்திக் கொள்ளவும் - குறிப்பாக குழந்தைப் பேற்றைத் தடுத்துக் கொள்ளவும் குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்களைப் பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.

மேலும், ஆணின் மீது ஏற்றப்பட்ட அதிகமான பொருளாதாரச் சுமை, இவர்களாகவே வலிய ஏற்படுத்திக் கொண்ட நுகர்பொருள் கலாச்சாரம் போன்றவை ஒரு குடும்பத்தில் ஆணினுடைய வருமானம் மட்டும் போதாது என்ற நிலையை ஏற்படுத்தி, அவற்றைச் சமாளிக்க பெண்ணையும் பணம் சம்பாதிக்கும் சூழலுக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

குடும்பத்தையும் பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டிருந்த பெண்ணை சம்பாதிக்க வேண்டும் என்ற பொருளாதாரம் என்ற ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்ட நிலையில், அவளை வீட்டிலிருந்து வெளியேற்றி, வீதிக்கு இழுத்து வந்து அவளது பெண்மையைச் சீரழித்தது.

அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும், விமானப் பணிப் பெண்ணாகவும், ராணுவத்திலும் வேலையில் அமர்ந்த பெண் ஆண்களுடன் சரிநிகர் சமமாக வேலை பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும், தான் பெற்ற வேலையைத் தக்க வைத்துக் கொள்ளவும், தன்னுடன் பணிபுரியும் ஆணால் பாலியல் பாலாத்காரம் ஏற்பட்டாலும், அதைச் சமாளித்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெண்ணின் மேல் ஏற்றப்பட்ட பொருளாதராச் சுமை, மகப் பேற்றுக்குப் பின் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டிய அவசியம், குழந்தைப் பாராமரிப்பு போன்றவற்றிற்காக நீண்ட விடுமுறை எடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. மேலும், அதிலும் குறிப்பாக பெண்களின் அழகு ஒன்றையே முதலீடாக இட்டு, வேலையில் அமர்த்தப்படும் அலுவலக வரவேற்பாளர், விமானப் பணிப் பெண், அந்தரங்கச் செயலாளர், போன்றவற்றில் மகப்பேறு ஒன்றே அவர்களது வேலையை இழக்கும் காரணிகளாக அமைந்து விடுவதால், பெண்களின் பெண்மையையும் தாமும் தாயாக வேண்டும் என்ற உணர்ச்சியையும் இயற்கையிலேயே அவர்களுக்கு உள்ள பாலியல் ஆசைகளையும் கூட மழுங்கடிக்கச் செய்து விடுகின்றது. ** அப்படியே திருமணம் ஆனாலும், கர்ப்பம் தரிக்காமல் இருக்க மாத்திரைகள் மற்றும்

கருத்தடைச் சாதனங்களை உபயோகிக்க ஆரம்பித்து விடுவதால், பெண்ணின் மனநிலையிலும், உடல்நிலையிலும் மாற்றம் ஏற்பட்டு, பின்னாளில் அவளை பெரும் பாதிப்புக்களுக்கு இட்டுச் சென்று விடுகின்றது.

**பெண்களின் முன்னேற்றத்தில் இதுவரை ஏற்பட்ட புறக்கணிப்புகள் நீங்கி, பெண்களிடம் தற்பொழுது அதிக தன்னம்பிக்கை காணப்படுகின்றது. இதன் மூலம் இந்தியப் பெண்கள், சுயமாக கம்பெனிகளை நிர்வகிப்பவர்களாகவும், ஏன் வங்கிகளைக் கூட நிர்வகிக்கும் அளவுக்கு உயர்ந்து உள்ளார்கள். மேலும், தொழில் வள நகரான பெங்களூரில் குழந்தைப் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. ஏனெனில், இளம் கம்ப்யூட்டர் வேலை மற்றும் அலுவலகங்களில் வேலை செய்யும் பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதையும், வீட்டுப் பொறுப்புக்களையும் காட்டிலும் தங்களது தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தான். (Arab News Daily / Riyadh – India at Second Turning Point – Features Column – Sat, Aug, 16 – 1997)

இந்தியாவும், குடும்பக் கட்டுபாட்டுத் திட்டத்தின் பின் விளைவுகளால் கடுமையான சீரழிவுகளை சந்திக்கும் காலம் வெகு தொலைவு இல்லை. அந்தந்த தலைப்புகளினூடே இந்திய நிலையும், அதனால் ஏற்பட்ட வரும் சீர்கேடுகளையும் இங்கே சுட்டிக் காட்டியே உள்ளோம்.

## சமூக அவலங்கள்

### 1. சமூகச் சமநிலைச் சீர்கேடு :

பிரிட்டனின் தேசிய பிறப்பு விகித கணக்கெடுப்பு ஆணையம் நடத்திய ஆய்வில், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் - சமுதாயச் சமநிலையில் ஏகப்பட்ட மாற்றங்களைச் செய்து, சமநிலை விகிதத்தை சீர்கெடுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தனர்.

மேலும், குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்களை உபயோகிப்பதில் மேல் தட்டு வர்க்கமும், நடுத்தர வர்க்கமும் முன்னணியில் இருக்கக் கண்டார்கள். அடுத்து, கீழ்த்தட்டு மக்களிடத்தே குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்களை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவான நிலையில் இருப்பதை கண்டுபிடித்தனர். இந்தக் கீழ்த்தட்டு மக்களிடம் அதிக வசதியும் இல்லை. அவைகளை அடைவதற்கு அளவு கடந்த ஆசைகளையும் அவர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை. மேலும், ஆண்கள் சம்பாதிக்கவும், உழைக்கவும் பெண்கள் வீட்டுப் பொறுப்புக்களைக் கவனித்துக் கொண்டும், பழைய நாகரீக பண்பாட்டின்படி வாழ்ந்தும் வந்தனர். இந்த கீழ்த்தட்டு மக்களிடம் வசதியின்மையும், போதா வருமானமும், குடியிருக்கப் போதுமான இடவசதியின்மையும் போன்ற பிரச்னைகள் இருந்தாலும், அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை நாடவில்லை. தம் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள குடும்பத்தில் பிள்ளைகளின் எண்ணிக்கையை அவர்கள் குறைத்துக் கொள்ள முன்வரவுமில்லை. இதன் காரணமாக இந்த கீழ்த்தட்டு மக்களிடையே குழந்தைப் பிறப்பு விகிதம் அதிகரித்தும், அதே நிலையில் மேல்தட்டு வர்க்கம், அதிகப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதை நாகரீகமற்ற செயல் எனக் கருதியும் வந்ததால் அவர்களிடம் குழந்தைப் பேறு விகிதம் குறைந்து காணப்பட்டது.

அமெரிக்காவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பாளராக இருந்த பேராசிரியர் வாரன் எஸ். தாம்ஸன் என்பவர், பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளில் மக்கள் தொகையை அவர்களின் தொழில்களின் அடிப்படையில் பகுத்தாய்ந்து, கீழ்க்கண்ட முடிவுக்கு வந்தார்.

அதாவது, மக்கள் தொகையை, கூலி வேலை செய்பவர்ளாகவும், அலுவலக ஊழியர்களாகவும் பரித்து, அவர்களிடையே உள்ள குழந்தைப் பேற்றின் அளவைக் கணக்கெடுத்ததில், அலுவலக ஊழியர்களை விட, தொழிலாளர்களிடம் அல்லது கூலி வேலை செய்பவர்களிடம் குழந்தைப் பிறப்பு விகிதம் அதிகமாக இருந்தது. அடுத்து கைவினைக் கலைஞர்கள், விவசாயிகள் எனப் பிரித்து ஆய்வு செய்ததில், விவசாயிகளிடம் அதிகக் குழந்தைப் பிறப்பு விகிதம் இருப்பதைக் கண்டறிந்தார்.

இவர்களிடையே கல்வியைத் தரம் பிரிக்கும் அளவு கோலாகக் கொண்டு பார்த்ததில், அதிகம் குழந்தைப் பேறு உள்ளவர்களிடம் கல்வியும், குழந்தைகளைப் பள்ளிக் கூடம் அனுப்புவதும் குறைந்து காணப்பட்டது.

இதன் மூலம் வெள்ளைக் காலர் வர்க்கம், அதாவது உயர் மட்டம் - கல்வித் தகுதியைக் கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவாகவும், கல்வித் தகுதி குறைவாகப் பெற்ற சமூகம் அளவுக்கு அதிகமாகவும் காணப்படுவது என்பது சமூகத்தில் திறனுள்ள கல்வியறிவுள்ள தலைமையை, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் கணிசமான அளவு சிறுகச் சிறுக குறைத்தே வந்துள்ளது என்பதைக் கண்டறிந்தனர். உயர்ந்த கல்வித் தகுதியைக் கொண்ட சமூகம் அதிகம் பிள்ளை பெறுவதை அசிங்கமாகவும், நாகரீகமற்ற செயலாகவும் கருதி, தமது பிள்ளைப் பேற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டி, குடும்பக் கட்டுப்பாட்டு முறையைப் பின்பற்றியதேயாகும்.

மேலும், மரபு வழியாகக் கடத்தப்படும், பாரம்பரியக் குணாதிசயங்களை குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் நல்ல தலைமை உருவாக வேண்டிய சமூகத்தில், கல்வியறிவற்ற தலைமை உருவாக ஏதுவாகின்றது. இத்தகைய சமூக அமைப்பைக் கொண்ட சமூகமும் நாடும் சிறுகச் சிறுக, திறமையற்ற தலைமை மூலம் தம் புகழை இழக்க நேரிடலாம் என்ற எச்சரிக்கையை இந்த மேலைநாடுகள் மிகச் தாமதமாக உணரத் தலைப்பட்டனர்.

## 2. பொறுப்பற்ற மேல்தட்டு வர்க்கம்

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அதிகம் கடைபிடிக்கும் உயர்ந்த, நடுத்தர வர்க்கம் எந்தளவு தாம் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து ஒதுங்கி பொறுப்பற்ற நிலையில் இருக்கிறது என்பதைக் காண்போம்.

படித்த, பண வசதி உள்ள இந்த உயர்ந்த வர்க்கம் தான் வருங்கால தம் சந்ததியினருக்கு சீரான உயர் கல்வியையும், அதற்காகும் செலவினங்களைச் சரிவரச் செய்ய இயலக் கூடிய சமூகமாகும். ஏனெனில் இன்று நடுத்தர மற்றும் கீழ்தட்டு மக்களால் தங்கள் பிள்ளைகளுக்கு உயர் கல்வி பெற்றுக் கொடுக்கக் கூடிய பொருளாதார வசதியோ அல்லது தம் மக்களைப் பயிற்றுவிக்கக் கூடிய அளவுக்கு கல்வி அறிவையோமிகவும் குறைந்த அளவிலேயே பெற்றுள்ளனர்.

அப்படியே கல்வி அறிவைப் பெற்றிருந்தாலும், தமதுதொழில் வியாபாரத்தில் பள்ளி செல்லும் பிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டிய பொருளாதாரம் சார்ந்த நிர்ப்பந்த நிலையிலும் நடுத்தர மற்றும் கீழ்மட்ட வர்க்கம் உள்ளது என்பது நம் நாட்டைப் பொறுத்தவரை நிதர்சமான உண்மையாகும்.

ஆக பண வசதி, கல்வியறிவு உட்பட அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும் பெற்ற மேல்தட்டு மக்கள் தங்கள் மழலைகளின் எண்ணிக்கையை அதிமாக்கி, நல்லதொரு உயர்ந்த கல்வியறிவைப் பெற்ற சமூகத்தை உருவாக்க வேண்டிய நிலையிலிருந்து தவறி தம் சமூகப் பொறுப்பைத் தட்டிக் கழித்தே வந்து கொண்டிருக்கின்றது.

மேலும், இந்த உயர் வர்க்கத்தில் நாகரீகம் என்ற போர்வையில் சங்கம், கிளப் என்ற அந்தஸ்து எனும் போதையுணர்வு காணப்படுகின்றது. இச் சமூகத்தில் தாயும், தந்தையும் சமூக அந்தஸ்து வேண்டி பிள்ளைகளை ஆயாவிடம் ஒப்படைத்து விட்டு, சங்கம், கிளப் எனச் சென்று, குடும்பப் பொறுப்பை மறந்த நிலையிலும் குழந்தைப் பாரமாரிப்பு அற்ற நிலையிலும், தம் பிள்ளைகள் வளரக் காரணமாகி விடுகின்றனர்.

இதன் மூலம் தாயன்பு, கல்வி கொண்டு சீராட்டப்பட வேண்டிய வயதில் அது கிடைக்காத போது, அக் குழந்தைகளிடம் மன இறுக்கம் உண்டாகி இன்று போதை, மது, விபச்சாரம், கொலை போன்ற கொடிய குற்றங்களில் அதிகம் ஈடுபடுவது, இப்படி கேட்பாரற்று விடப்பட்ட குடும்பப் பராமரிப்பு இல்லாத குழந்தைகள் தாம் என்பது ஆராய்ச்சி முடிவு.

அதிலும் இந்த மேல்மட்டத்துப் பிள்ளைகளிடம் அதிகம் பணம் புழங்குவதும், இளம் வயதில் அவற்றை எப்படி செலவு செய்வது என்ற வகை தெரியாமல் அவற்றைத் தீய வழியில் செலவிட்டு தங்களை அழித்தும் கொள்கிறார்கள்.

### 3. அமெரிக்காவில் இளம் குற்றவாளிகள் உருவாகக் காரணம்

அமெரிக்காவில் நாள்தோறும் இளம் குற்றவாளிகள் அதிகமாகிக் கொண்டே வருகிறார்கள். 1970 ல் 54,596 ஆக இருந்த அளவு 1992 ல் 1,04,137 ஆக, இரண்டு மடங்கு கூடியுள்ளது. இளைஞர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள சமூகத்தில், கொலையின் அளவு 92 சதவீதம் கூடியுள்ளது. எந்த ஒரு சக்தி இவ்வளவு இளம் குற்றவாளிகளை ஏற்படுத்தியது? என ஆய்வு செய்ததில், சமூகத்தில் குடும்ப அமைப்பு முறை சரிந்ததும், அதனால் சமூகக் கட்டுப்பாடு சிதறியதும் காரணமாகும் என்ற உண்மையைக் கண்டறிந்துள்ளனர்.

ஒழுங்கான குடும்ப அமைப்பு தான் தங்களது பிள்ளைகளை கட்டுப்பாடுகளுடன் வளர்ந்து கொலை, மது, போதை விபச்சாரம் போன்ற படுபாதகச் செயல்களில் ஈடுபடாமல் தடுக்கும் அரணாக விளங்குகிறது. ஏனெனில் ஒழுங்கான குடும்ப அமைப்பு தான். தன் குழந்தைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டும் வழிதவறும் போது கண்டித்தும் வருவதால், இளம் வயதினர் குற்றவாளிகள் ஆவதிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். குடும்ப அமைப்பு ஒன்று இல்லாத நிலையில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மேற்பார்வை செய்வது எவ்வாறு? இதன் காரணமாக தங்கள் பிள்ளைகள் வழிதவறுவதலிருந்து, அவர்களை பாதுகாக்க இயலாமல், நாட்டில் இளம் குற்றவாளிகளை அதிகரிக்கச் செய்து விட்டது என்ற ஆராய்ச்சி முடிவுக்கு வந்துள்ளனர்.

மேலும், இளைஞர்களிடம் போதைப் பொருள் உபயோகம் அதிகமாகி இருப்பதும், இளம் குற்றவாளிகளை அதிகரிக்கச் செய்துள்ளது. மேலும், இதனூடே இனவாதமும், செக்ஸ் கலாச்சாரமும் தான் அமெரிக்காவில் அதிகக் குற்றம் நிகழக் காரணமாகின்றன.

### 4. பெறுப்பற்ற இந்திய மேல்மட்ட வர்க்கம்.

கீழே உள்ள தகவல் கதை அல்ல. கடந்த ஏப்ரல் 6-20, இந்தியா டுடே ல் வெளியான செய்தி இச் செய்தி இந்திய மேல்மட்ட வர்க்கத்தின் அவலத்தை தோலுரித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அன்புள்ள அம்மா!

நீ இல்லாமல் மிகவும் கஷ்டாயிருக்கிறது. அனிலும், நானும் அப்பாவைப் பார்க்கவே முடிவதில்லை. அவர் எப்பொழுதும் பயணம் செய்து கொண்டேயிருக்கிறார். இங்கே ரொம்ப போரடிக்கிறது. அம்மா! நீ தயவு செய்து குடிப்பதை நிறுத்தி விட்டால் நாம் எல்லோரும் ஒன்றாக வாழலாம். அது ரொம்ப ஜாலியாயிருக்கும். எனக்கு ஸ்கூலே பிடிக்கவில்லை. உடன் பதில் எழுது. - நிறைய அன்புடன் அஞ்சலி

இரண்டு வருடங்களாகக் கடுமையாகக் குடித்துக் கொண்டிருந்த தில்லி குடும்பத் தலைவியான பிரியா சிங்கை 11 வயது மகளின் இக் கடிதம் தான் மீட்டு வந்தது.

இப்பொழுது நாட்டின் பெரிய மருத்துவமனைகளில் இருக்கும் 10 நோயாளிகளில் 3 பேர் பெண்கள். பெங்களூரில் இருக்கும் மனநலம் மற்றும் நரம்பியலுக்கான தேசிய மையத்தில் (நிம்ஹான்ஸ்) ஐந்து வருடங்களுக்கு முன் 10 பெண்கள் தான் சிகிச்சைக்கு வருவார்கள். ஆனால் இப்பொழுது மாதம் 30-35 பேர் வருகிறார்கள். இவர்கள் அனைவரும் குடியால் பாதிக்கப்பட்டவர்கள்.

தில்லியில் இருக்கும் மனவியல் நிபுணர் டாக்டர் அவ்தேஷ் சர்மாவின் கூற்றுப்படி, புதிய யுகத்தின் அன்றாடப் பிரச்னைகளின் அழுத்தங்கள், வீட்டுப் பொறுப்பு, அலுவலக வேலை ஆகியவை தரும் அழுத்தங்களைச் சமாளிக்க இவர்கள் குடியை நாடுகிறார்கள். குடியால் வேலையும், குடும்பமும் மட்டுமே பாதிக்கப்படும் என்றில்லை. குடிப்பழக்கமுள்ள பெண்களுக்கு கருச்சிதைவு, பிறவிக் கோளாறு உள்ள குழந்தை பிறப்பது குறைப்பிரசவம் போன்றவை ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது.

மேற்கண்ட செய்தி மூலம் நாம் மேல்மட்டம் தன்னை அழித்துக் கொள்வதோடல்லாமல், தன் குழந்தைகளின் வாழ்வையும் சூனியமாக்கிக் கொண்டு வருகிறது என்றே புரிய முடிகிறது. இந்தியாவிலும் குடும்ப அமைப்பு முறை சிதைந்து வருவதையும், கல்வி அன்பு கொண்டு சீராட்டி வளர்க்க வேண்டிய பிள்ளைகளை இச் சமூகம், கிரிமினல்களாகவும் கல்வியை வெறுக்கும் குழந்தைகளாகவும் ஆக்கக் கூடிய சூழ்நிலையைத் தான் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது

### 5. நுகர்பொருள் ஆசையில் நடுத்தர வர்க்கம்

இன்றைய சமூக நிலையிலும், பொருளாதார நிலையிலும், மனநிலை சம்பந்தப்படட வகையிலும் நிம்மதியில்லாத வர்க்கம் எது என்றால், இந்த நடுத்தர வர்க்கம் தான். இது தன்னை கீழ்த்தட்டு வர்க்கமாக ஆகி விடாமல் இருக்க ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டு, அதே வேளையில் தன்னை உயர்தர, மேல்தட்டு வர்க்கமாக காட்டிக் கொள்வதிலும் சளைப்பதில்லை.

இந்த நடுத்தர வர்க்கமானது, தான் கொண்ட நுகர் பொருள் ஆசையின் காரணமாக, அதாவது தன்னை மேல்தட்டு மக்களாக சமூகத்துக்கு காட்ட வேண்டும் என்ற பேராசையில், அதிகமான பொருளாதாரச் சுமையை தன்னில் ஏற்றிக் கொள்கிறது.

இதன் மூலம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க கணவனம், மனைவியும் சம்பாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டு, குடும்பப் பொறுப்பை அடுத்து, பொருளாதாரம் என்ற இரண்டாவது சுமையைத் தாங்க மாட்டாமல், தமது மழலைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்கிறது.

இதற்காக குடும்பக் கட்டுபாட்டையும் அல்லது குழந்தைப் பேற்றைத் தள்ளி வைக்க இந்த வர்க்கம், கட்டாய முடிவுக்கு தள்ளப்பட்டு விடுகிறது. இதன் மூலம், தான் வலிய ஏற்றுக் கொண்ட நுகர்பொருள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள குழந்தைகளைப் பாரமாக - செலவினமாக கருதத் தலைப்பட்டு விடுகிறது.

### 6. நுகர்பொருள் ஆசையில் இந்திய நடுத்தர வர்க்கம்

கூட்டுக் குடும்பங்கள் பிரிந்து இளம் தலைமுறை கணவன்-மனைவி உழைக்கத் தயாராகிறார்கள். ஆக, நவீன காலப் போக்கின் விளைவு : இரண்டு பேர் சம்பாதிக்கும் குடும்பங்கள். நகர்ப்புற நடுத்தர வர்க்கக் கூட்டுக் குடும்பங்களுக்குக் கூட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் சம்பளம் வந்து சேர்வதில் ஒரு கண். இந்தியா-டுடே மார்க் சர்வே காட்டுவது போல 88 சதவீதம் பேர் அது அவசியமாகி விட்டதாகவும் சொல்கிறார்கள்.

எக்ஸைஸ், சுங்கத் தீர்வை குறைப்பும், போட்டியுமாக சந்தையில் நுகர் பொருள்களைச் கொண்டு வந்து சாய்த்திருப்பதால் இந்திய நடுத்தர வர்க்கம் பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இருந்தும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எதையும் வாங்கிப் போடுவதில், குழந்தை கூட குறுக்கே நிற்காது, என்கிறார் அனுபாமா. (இந்தியா டுடே - மார்க் பேட்டி கண்ட நபர்).

கனவுகள் கொண்ட இந்தியாவின் நடுத்தர வர்க்கம் தான் பன்னாட்டு, உள்நாட்டு முதலீட்டின் தூண்டில், ஆனால் நடுத்தர வர்க்கமோ நான்கு வருடமாக வாங்கும் திறன் வற்றி வாழ்க்கைத் தரம் சரிந்திருக்கிறது.

கேரள அரசின் வனத்துறை ஊழியரான விஸ்வாம்பரனின் மாதச் சம்பளம் ரூ. 2,300.00. இந்தச் சம்பளத்தில் தான் மனைவி, மூன்று பள்ளி செல்லும் குழந்தைகள், மாமனார், மாமியார், தம்பி, தம்பியின் மனைவி எல்லோரையும் காப்பாற்றியாக வேண்டும். பிள்ளைகளுக்கு டியுசன் வகையில் 250.00 ரூபாய் செலவாகிறது. படிப்பு நம் பண்பாட்டின் பிரதானம். ஆனா அது இன்னொரு சுமையல்லோ? என்கிறார் அவர் மனைவி வசந்தி. பிராவிடண்ட் பண்டில் ரூபாய் 10 ஆயிரம் கடன், வீடு கட்ட ரூபாய் 25 ஆயிரம் கடன். இவ்வளவையும் தன் சம்பளம், தன் மனைவியின் தையல் வருமானம் மூலம் சரிக்கட்டி வாழ்க்கையை நடத்துகிறார். மேற்கண்ட கடனெல்லாம் முடிந்ததும் கறுப்பு வெள்ளை டி.வி. வாங்கத் திட்டம்.

தான் கொண்ட நுகர் பொருள் ஆசைக்கு தன் குழந்தை கூட குறுக்கே நிற்காது என ஒரு குடும்பமும், தன் பிள்ளையின் கல்வித் தேவைக்கு செலவு செய்வதைச் சுமையாகக் கருதும், அதே வேளையில் டி.வி. வாங்குவதை ஒரு லட்சியக் கனவாக எண்ணிச் செயல்படும் ஒரு குடும்பமும் தான், இன்றைய நம் இந்திய நடுத்தர வர்க்கத்தின் நிலைக்கு சரியான எடுத்துக்காட்டுகள்.

### 7. சமுதாயச் சமநிலை பாதிப்பும் அதன் விளைவுகளும்.

நல்ல உயர்ந்த பண்புள்ள, அறிவுள்ள, திறமையுள்ள கல்வியாளர்களை,அறிஞர்களை, ஆட்சியாளர்களைச் சமூகத்திற்குத் தர வேண்டிய வாய்ப்புகளைப் பெற்றுள்ள மேல்தட்டு வர்க்கம் தம் பொறுப்பை மறந்து போனதால் இன்று அரசியலிலும், உயர் பதவிகளிலும் நல்ல ஆரொக்யமான பண்புள்ள அரசியல்வாதிகளுக்கும் அதிகப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. எவ்வாரெனில் மனசாட்சி மற்றும் சுயக் கட்டுப்பாடு, ஒழுக்கம் நிறைந்த அதிகார வர்க்கம் இன்று மிகவும் அரிதாகிவிட்டது. எங்கு

திரும்பினும் கொலை, கொள்ளை, லஞ்சம், மோசடி போன்றவற்றில் ஈடுபடும் சமூகத்தைத் தான் காண முடிகிறது.

இதையே அமெரிக்காவின் குற்றவியல் அறிஞர் எட்வின் H. சுதர்லேண்ட் (1885-1956) என்பவர் "WHITE COLLAR CRIME", என்கிறார். அதாவது மேல்மட்ட வர்க்கம் புரியும் குற்றங்கில் லஞ்சம், ஊழல், மோசடி, பொதுமக்கள் தொலைபேசியை ஒட்டுக் கேட்பது, போலிஸ் அடக்குமறை மூலம் மக்கள் உரிமையைப் பறிப்பது, பொருள்களுக்க அதிக விலையை நிர்ணயிப்பது, தொழிற்சாலையை மாசுகளை கவனியாது விட்டு விடுதல் போன்றவை அடங்கும். இது போன்ற குற்றங்களுக்குத் துணை போவதுடன், தமது ஆளகையின் போது தம் நிலையை மேலும் நிலைநிறுத்திக் கொள்ள, சமூகத்தில் பொருளாதார அந்தஸ்து வேண்டி சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்தி, கிரிமினல் நடவடிக்கைகளில் இறங்குகிறது. இவர்களின் இந்தக் குற்றங்கள் தான் நாட்டின் பொருளாதார அடிப்படையை மிகவும் பாதிக்கக் கூடியது என்கிறார் அறிஞர் எட்வின் H. சுதர்லேண்ட்.

உண்மையிலேயே இந்த மேல்தட்டு வர்க்கம் தம் சமூகப் பொறுப்பை உணர்ந்து, தம் மரபு வழிக் கடத்தப்படும் குணாதிசயங்களைக் கொண்ட குழந்தைகளை குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தாமல் இருந்திருந்தால், பெற்ற பிள்ளைகளை சரிவர கண்காணித்து பராமரித்தும் இருந்திருந்தால், நல்ல கல்வியாளர்களை, ஒழுக்கமுள்ள, திறமையான, அதிகார வர்க்கத்தை நாடு அதிக அளவில் பெற்றிருக்கும்.

நடுத்தர வர்க்கம் தன்னுடைய நுகர் பொருள் ஆசையை, தன்னை மேல்தட்டு மக்களாக சமூகத்துக்குக் காட்ட வேண்டும் என்ற பேராசையை விட்டொழித்து, தாயும் தந்தையும் வேலைக்குச் செல்லாமல், தந்தையின் வருமானம் அறிந்து தாய் செலவ செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்பட்சத்திலும், தாய் தன் குடும்பப் பொறுப்புணர்ந்து, வீட்டிலிருந்து குடும்பப் பொறுப்ப, குழந்தைப் பராமரிப்பு ஆகியவற்றில் தம் கவனத்தைச் செலுத்தி இருந்தால், நல்ல கல்வியறிவுள்ள, ஒழுக்கமுள்ள குழந்தைகளை நாட்டுக்குத் தந்திருக்க முடியும். தேவையற்ற குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நாட வேண்டிய நிர்ப்பந்த நிலை நேர்ந்திருக்காது.

இதற்கு நேர்மாறாக கீழ்த்தட்டு மக்கள் அதிகம் பிள்ளைகளைப் பெற்று, அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி போன்றவற்றில் சரிவர அளிக்க இயலாமல், மேற்படி உயர்தர, நடுத்தர மக்களை அண்டி, உணவு, உடை, பொருள், இருப்பிடம் வேண்டி எதையாவது செய்து அவற்றை அடைய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் மேற்படி மேல்தட்டு, நடுத்தர மக்களை, பொருளாதாரம் சார்ந்து வாழ வேண்டிய நிர்ப்பந்த நிலையில் நல்லதோ, கெட்டதோ எதுவானாலும், இவர்கள் இடும் கட்டளைக்கு ஆமாம் போடும் கூட்டங்களாகவும், சுய சிந்தனையற்ற கூட்டமாகவும் வளர்ந்து வருவதை இன்றைய நமது அரசியல்வாதிகள் பின்னால் திரியும் கூட்டத்தை வைத்தே நாம் கணித்து விட முடியும்.

மேலும், இன்றைய நமது அரசியல் அமைப்பில், தலைகளின் எண்ணிக்கை தான் தலைமையை, அதிகார வர்க்கத்தை நிர்ணயம் செய்கிறது, ஒருவனது கல்வி, ஒழுக்கம், அறிவு ஆகிய பண்பகளை வைத்து, தலைமைப் பொறுப்புக்கு அவனைத் தேர்ந்தெடுப்பதில்லை.

ஒவ்வொரு சமூகமும், இனமும், தான் தான் தலைமைப் பொறுப்புக்கு வர வேண்டும், அதிகாரத்திற்கு வர வேண்டும் என்று துடிக்கும் அரசியல் அமைப்பில், இந்த கல்வி அறிவு குறைந்த, அதிக எண்ணிக்கையில் உள்ள கீழ்மட்டம் தான் தலைமையை நிர்ணயிக்கும் தகுதிக்கு வந்து விடுகிறது. ஏனெனில், வாக்கு வங்கியே அவர்கள் தானே. இந்த தகுதியற்ற சமூகம் நிறுவும் தலைமையும்,

ஆட்சியும் எவ்வாறு இருக்கும் என்பதை இன்றைய நம் இந்தியாவின் அரசியல் களமே சிறந்த உதாரணமாகும்.

இந்தச் சமுதாய சமநிலைச் சீர்கேட்டுக்கு யார் காரணம்? என்பதை இந்த குடும்பக் கட்டுப்பாடு, ஆதரவுக் கூட்டம் சிந்திக்கட்டும்!

19 ஆம் நூற்றாண்டை அடுத்து, 20 ம் நூற்றாண்டுகளில் தொழிற் புரட்சியும், முதலாளித்துவம் மற்றும் கம்யூனிஸக் கொள்கைகளும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊட்டி வளர்த்ததன் மூலம், 20 ஆம் நூற்றாண்டுக்குப் பின் அறிவாளிகள் பஞ்சத்தைத் தான் ஏற்படுத்தியது. அதே நேரத்தில் எழுத்தறிவில்லாத, கல்வியறிவற்ற, ஒழுக்கமற்ற சமுதாயத்தின் அளவு கூடியே வந்து கொண்டு இருக்கிறது.

பிரிட்டனின் மிகப் பெரிய அறிஞராக இருந்த, பெர்ட்ராண்ட ரஸ்ஸல் (Mr. BERTRAND RUSSELL) என்பவர் சமுதாயச் சமநிலைப் பாதிப்பின் அவலத்தை இவ்வாறு விளக்குகிறார்.

சமுதாயத்தில் படித்த உயர்வர்க்கத்தின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. அதே வேளையில் படிப்பறிவற்ற, ஏழை, குடிகார, பலவீனமான ஆண்களும், பெண்களும் கொண்ட அடிமட்ட சமூகம் அளவில்லாமல் கூடிக் கொண்டே வருகிறது.

இதன் மூலம் பரம்பரை பரம்பரையாக கடத்தப்படும் உயர் குணாதிசயங்களும் சிறுகச் சிறுக, மகப்பேற்றைக் குறைத்துக் கொள்வதன் மூலம் வடிகட்டப்பட்டுக் கொண்டே வந்து கொண்டிருக்கின்றது. வருங்காலத்தில் இன்று இருக்கும் அறிவாளிகள் எண்ணிக்கை கூட நாளை மிஞ்சி இருக்குமா என்பது சந்தேகமே என்கிறார்.

மேலும், இன்று இவர்கள் உற்பத்தி செய்திருக்கும் கிரிமினல்கள், குற்றவாளிகள், கல்வி அறிவற்ற, குடிகார, பலவீனமான மனதுள்ள குழந்தைகள் தான் நாளைய பெற்றோர்கள்.

இன்றைய ஐரொப்பிய உலகம் இந்த சமுதாயச் சமநிலை வீழ்ச்சியிலிருந்து விடுபட வேண்டுமானால், பெண்கள் மற்றும் குழந்தைகள் விசயத்தில் புதியதொரு கொள்கை முறையை உருவாக்க வேண்டும். அதாவது, பழைய முறைப்படியான திருமண பந்தங்கள் பின்பற்றப்பட வேண்டும். பெண்கள் குழந்தைப் பேற்றை சமூகத்துக்கு செய்யும் கடமையாகக் கருத வேண்டும். இதன் மூலம் குழந்தை இல்லாத தன்மையும், அதற்கு மறைமுகமாத் தூண்டும் காரணிகளையும் களைய வேண்டும்.

பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் அவர்களின் கூற்று, ஐரொப்பிய சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் அவலத்தைக் கோடிட்டுக் காட்டிய விதத்தின் மூலம், சமுதாயச் சமநிலைச் சீர்கேட்டின் பாதிப்பை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

## 8. சமுதாயச் சமநிலைப் பாதிப்பில் இந்தியா

இந்தியாவில் வருமான விகித அடிப்படையில் மக்களைத் தரம் பிரித்தால், மேற்கத்தியமயமான மேல்தட்டு குடும்பங்கள் 1.2 கோடி. (ஒரு குடும்பத்திற்கு 5.5 நபர்கள் என்பது சந்தை ஆய்வு அமைப்புக் கணக்கு). அடுத்து நடுத்தர வர்க்கம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஏறுமுக வர்க்கம் 5 கோடிக் குடும்பங்கள், அடுத்த நாடும் வர்க்கம், நிராதரவு வர்க்கம் 4 கோடிக் குடும்பங்கள். நாடும் நிலைக்கு கீழ்மட்ட எல்லோருமே நடுத்தர வர்க்கத்தினர் எனக் கொள்ளலாம் என்கிறார், இந்திய பொருளாதார நிபுணர் குழு (NCAER). அதாவது சுமார் 67 கோடிப் பேர்: இந்திய மக்கள் தொகையில் 80 சதவீதம்.

மீதமுள்ள 20 சதவீதத்தினர் நகர்ப்புற, கிராமப்புற நிராதரவுப் பிரிவினர். பிழைப்புக்கே மல்லுக்கு நிற்க வேண்டியவர்கள். விலை ஏற்றத்தினால் நடுத்தர வர்க்கத்தினர் ஒட்டு மொத்தமாக அதிக வசதி படைத்தவர்களாகிற அதே நேரத்தில் மக்கள் தொகையின் அடிமட்ட பிரிவினர் எண்ணிக்கை பெருகும் ஆபத்தும் உள்ளது. NCAER புள்ளி விபரப்படி மேல்தட்டு வர்க்கத்தில் கூடுதலாகச் சேர்ந்த குடும்பங்கள் 16 லட்சம் தான். ஆனால் ரூ 18 ஆயிரத்திற்கும் குறைந்த வருமானமுள்ள கீழ்மட்டப் பிரிவில் கூடுதலாக 70 லட்சம் குடும்பங்கள் சேர்ந்து விட்டன. (ஏப்ரல் 6-20, 1995 இந்தியா டுடே.)

ஆக, இந்தியாவிலும் சமுதாயச் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. புதிதாகத் திறந்து விடப்பட்ட பன்னாட்டு முதலீடுகள், திறந்த சந்தைப் பொருளாதாரத்தால் தன் நுகர் பொருள் ஆசையில் நடுத்தர வர்க்கத்தின் வாழ்க்கை வசதி கூடி இருந்தாலும், அந்த வாழ்க்கை வசதி கடன் மூலமாகவோ அல்லது தவணை முறையில் பெறப்பட்ட பொருள்களின் மூலமாகவே ஏற்படுத்திக் கொண்டது. இதன் மூலம் இந்த நடுத்தர வர்க்கம் தான் நிம்மதியைத் தொலைத்து விட்டது. இருப்பினும் அது தன் நுகர்பொருள் ஆசையைக் கை விட்டதா? இல்லையே! மாறாக குழந்தையையும், குழந்தையின் படிப்புச் செலவையும் பாரமானதாக எண்ணத் துவங்கி விட்டது.

மேலும், கீழ்மட்ட மக்களை மேலும் அதள பாதாளத்தில் தள்ளி விட்டுள்ளதால், அந்த சமூகம் செய்வதறியாது நிற்கிறது. இந்த கீழ்மட்ட சமூகம் முன்னேற அரசு என்ன தான் சலுகைகள் செய்தாலும் அவர்கள் உயர்வதற்கு பல பத்தாண்டுகள் ஆகலாம் என்கிறது ஆய்வு. ஏனெனில், உணவுப் பொருள் விலையேற்றம் இவர்களை முன்னேற விடாது.

ஆக, இந்திய மேல்தட்டு வர்க்கத்தில் ஆணும் பெண்ணும் குடியும், குடித்தனமுமாகவும், குடும்பத்தை விட தொழிலும், பொது நல மன்றங்களும் பெரிது எனவும், குடும்பத்தை மறந்தும் குழந்தைகளை பாராமாகக் கருதியும், மேல்தட்டு மக்களின் குழந்தைகள் அன்புக்கு ஏங்கியவர்களாகவும், கல்வியை வெறுப்பவர்களாகவும், கிரிமினல்களாகவும் ஆகும் நிலையிலும் அடுத்து நடுத்தர வர்க்கம் தனது நுகர்பொருள் ஆசையில் குழந்தைகளைப் பாரமாகவும், குழந்தைக்கு ஆகும் கல்விச் செலவுகளை அதிகப்படியான செலவுகளாகவும், கீழ்மட்டமோ உண்ண உணவுக்கே தடுமாறித் திரியும் போது குழந்தைப் பராமரிப்பாவது கல்வியாவது என்ற ரீதியில் இந்தியச் சமூகம் சென்று கொண்டிருக்கின்றது. இதன் மூலம் கல்வி என்பது அனைத:து மட்டத்திலும் மறுக்கப்பட்ட ஒன்றாக ஆகி விடுவதாலும், தனம் பொறுப்புக்களை உணர்ந்து மேல்தட்டு மட்டமும் மற்றும் நடுத்தர வர்க்கமும் தம் குழந்தைகளின் வாழ்வில் கல்வியில் ஒழுக்கத்தில் அக்கறை செலுத்தாததாலும், சமுதாயத்தில் கல்வியாளர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. ஆக, மேல்மட்ட மக்கள் தங்கள் நாகரீக விளையாட்டுக்கு குழந்தை பாரமாக இருப்பதாலும், நடுத்தர மக்களுக்கு நுகர்பொருள் ஆசை மோகத்தால் குழந்தை செலவினமாகக் கருதப்படுவதாலும், குடும்பக் கட்டுப்பாட்டு முறையையும், அதன் சாதங்களையும் நாடி தம் மகப்பேற்றைக் குறைத்துக் கொள்கிறது. கீழ் மட்டம்உண்ண உணவில்லா விட்டாலும், ஏதோ வாழ்க்கைப் போரட்டத்தை நடத்திக் கொண்டே, இந்திய சமூகத்தில் தன் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டே வந்து கொண்டிருக்கிறது. மேலும், பொருளாதார தாராளமயமாக்கல் நாட்டின் மொத்த வருமானத்தைக் கூட்டி வந்தாலும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களை அதிகப்படுத்திக் கொண்டே வந்து கொண்டிருக்கிறது என்பதை முன்னரே பார்த்தோம். இந்தியாவில் 65 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்றார்கள்.

940 மில்லியன் மக்கள் தொகையில் பாதிப்பேர் ஏழைகள். 60 சதவீதம் கல்வியறிவு இல்லாதவர்கள். 25 சதவீத மக்கள் மாதம் ஒன்றிற்கு 25 டாலர்களுக்கும் குறைவாகவே சம்பாதிக்கின்றார்கள். (Arab News – Riyadh – Aug 15 1997).

ஆக, இந்திய மேல்தட்டு வர்க்கம் செய்ய வேண்டியது என்னவென்றால், நாகரீக மோகத்தில் தான் கடைபிடித்து வரும் குடும்பக்கட்டுப்பாட்டு முறையைக் கைவிட்டு, நாட்டுக்கு கல்வியறிவுள்ள சந்ததியை அதிகம் உருவாக்கித் தர வேண்டும். நடுத்தர வர்க்கம் தன் நுகர்பொருள் ஆசையை விட்டொழித்து, குழந்தைப் பேற்றை அதிகமாக்கி, தாய் தன் பொறுப்புணர்ந்து, வீட்டிலிருந்து குடும்பப் பொறுப்பு, குழந்தைப் பாராமரிப்பு ஆகியவற்றில் தம் கவனத்தைச் செலுத்தி, நல்ல திறமையான, ஒழுக்கமுள்ள, கல்வியறிவுள்ள, குழந்தைகளை நாட்டுக்கு உருவாக்கித் தருவதன் மூலம், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் கீழ்த்தட்டு மக்களின் தொகையை விட, படித்த கல்வியறிவுள்ள, ஒழுக்கமுள்ள மக்களை அதிகப்படுத்த முடியும். இதன் மூலம் நல்ல ஒழுக்கமுள்ள,பண்புள்ள ஆட்சியாளர்களையும், அதிகாரிகளையும் காண முடியும். இதன் பின்னணியில் நாடு சுபிட்சமடைந்து, நமது கீழ் மட்ட சகோதரர்களையும் மேல்மட்டத்திற்கு இணையாக கொண்டு செல்ல முடியும்.

இனிமேலும், நம் சமூகம் தம் பொறுப்புணர்ந்து செயல்படவில்லையானால், நாட்டில் நரசிம்மராவ்களுக்கும், ஹர்ஷத் மேத்தாக்களுக்கும், ஜெயலலிதா போன்றோர்களும், பிரேமானந்தாக்களும், அத்வானிகளும், சந்திராசுவாமிகளும் தான் மிகுந்திருப்பார்கள்.

## 9. வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இதுவரை சமூகச் சமநிலையில், தெளிவற்ற விகிதாச்சாரமும், உயர்மட்ட, நடுத்தரக் குடிமக்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை கடைபிடித்ததன் மூலம் ஆரொக்கியமான, துடிப்புள்ள, ஒழுக்கமுள்ள, கல்வி அறிவுள்ள சமூகம் சிறுகச் சிறுக வடிகட்டப்பட்டுக் கொண்டே வந்து கொண்டே இருக்கின்றது. அதே நேரத்தில், கல்வி அறிவு குறைவாகவோ, இல்லாமலோ இருக்கும் கீழ்மட்டம் மிகுதியாக உருவாகி வருவதையும் அதன் பாதிப்புகளையும் கண்டோம்.

இனி, இந்த குடும்பக் கட்டுப்பாட்டின் எதிரொலியாக குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் இடையே உள்ள சமநிலையிலும் மாற்றம் ஏற்பட்டு. அந்த மாற்றம் உலகின் வளர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிப்படையச் செய்து கொண்டிருக்கின்றது என்பதை இப்பொழுது காண்போம்.

அதாவது, குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை அதி தீவிரமாக செயல்படுத்தியதன் மூலம், நாட்டில் வயதானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் இருக்க வேண்டிய சீரான விகிதாச்சார அளவு பாதிக்கப்பட்டது. குழந்தைப் பிறப்பு கணிசமான அளவு குறைக்கப்பட்டு விட்டதால், நாட்டின் துடிப்பான செயல்களுக்கு வேண்டிய இளைய ரத்தம் தடைபட்டுப் போன அதே வேளையில், அதுவரை பெற்றோர்களாய் இருந்த இளைஞர்கள் முதியோர்களாகி, தாம் துடிப்புடன் வாழ்ந்த காலத்தில் தமது எண்ணிக்கையைப் போல அல்லது தமது எண்ணிக்கையை விட அதிகமான குழந்தைகளை நாட்டுக்குப் பெற்றுத் தராததால், இந்த வயதானவர்களின் எண்ணிக்கை ஆண்டுகள் கடக்கக் கடக்கக் கூடிய அதே வேளையில் குழந்தைப் பிற்பபும் அதே அளவில் கூடாததன் விளைவு, இன்றைய மேலைநாட்டுச் சமூகத்தில் சமூக, பொருளாதார அளவில் பெரும் வேறுபாடுகளையும், அழிவையும் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

ஒரு மனிதன் தன் இளமைக் காலத்தில் தான் மிகவும் துடிப்புடன் செயல்பட முடியும். அது போலத்தான் நாடும். துடிப்புள்ள இளம் இரத்தங்கள் தான் அந்த நாட்டைப் பொருளாதார அளவிலும் சமூக அளிவிலும் பாதுகாக்கும் தூண்கள். மேலும் நாட்டில் குழந்தைகளின் சதவீதம் குறையக் குறைய இதுவரை உற்பத்தி செய்து வரும் பொருள்களின் அளவையும் குறைக்க வேண்டி வரும். உபயோகிப்பாளர் எண்ணிக்கை குறையும் போது ஏற்படும் உற்பத்திக் குறைவு, நாட்டில்

வேலைவாய்ப்பைக் குறைப்பதோடு, பொருளாதாரப் பின்னடைவையும் அதிகப்படுத்தும். இறுதியில் அது நாட்டின் பொருளாதாரத்தின் ஊற்றுக் கண்ணையே அடைத்து விடும்.

ஒரு நல்ல சமூகத்துக்கு உயிரூட்டக் கூடியது இளைஞர்களின் பங்கெடுப்பேயாகும். ஏனெனில் இளைஞர்கள் நிறைந்த பணிமனைகள், இராணுவம், தொழிற்சாலை, போன்றவற்றில் தான் அதிக திறமையையும், உற்பத்தியையும், நேர்த்தியையும் காண முடியும். ஏனெனில், இளைஞர்களால் மட்டுமே கடினமான சவால்கள் நிறைந்த பணிகளைத் திறம்பட மன உறுதியுடன் செயல்படுத்த முடியும். அதைச் சமாளிக்க இளைஞர்களின் உடல் பலமும், வாலிபமும், மன நிலையும் ஒத்துழைக்க வேண்டும். அதுவல்லாமல், வயதான சமூகம் மூலம் உற்பத்தியையோ கடினமான பணிகளையோ எதிர்பார்க்க முடியாது. அதற்கு அவர்களது வயயோதிகம் இடமளிப்பதில்லை. எனவே, பொருளாதாரம் என்பதன் அடிப்படையில் அவர்கள் குடும்பத்தையோ அல்லது நாட்டையோ சார்ந்த வாழ வேண்டிய நிலையில் உள்ளவர்கள். மேலும், இந்த மேலை சமூகங்களில் குடும்ப அமைப்பு சிதறியதன் காரணமாக, இத்தகைய வயோதிகர்கள் தனிமையாகவும், அல்லது முதியோர் இல்லங்களிலும் வாழ வேண்டிய நிலையில், அதற்காகும் செலவினங்களை தமது ஓய்வூதியம், சேமிப்புள் மூலம் மட்டுமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். மேலும் வயதானவர்கள் எண்ணிக்கை கூடக் கூட அவர்களுக்கு அளிக்கும் பென்சன் தொகையின் மொத்த அளவு கூடிக் கொண்டே வருகிறது. மேற்படி ஓய்வூதியம் அல்லாது, இந்த வயதானவர்கள் தமது சேமிப்பையும் காலி செய்வதால், நாட்டின் பொருளாதாரம் சொல்ல முடியாத அளவு வீழ்ச்சியைச் சந்திக்கும் நிலைக்க தள்ளப்பட்டு வருகிறது.

மனிதன் இறைவன் வழங்கிய அருட்கொடையில் கை வைத்ததன் விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். இயற்கையை.. அதை இயக்கும் இறைவனை எதிர்த்து போரிடத் துணிந்த மனிதன், அதன் பின் விளைவுகளை இறைமறை சுட்டிக் காட்டியும் கேளாததால் அவன் அடைந்து கொண்டிருக்கும் அவலங்களை, நாடகளின் நிலமைகளை இனி விரிவாகக் காண்போம்.

முதலில் நாம் பார்க்கப் போவது நாகரீகத்தின் தொட்டில்? அமெரிக்காவின் அவல நிலை!!!

## அமெரிக்கா :

1990 ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, நியூயார்க் நகரில் மட்டும் 65 ம் அதற்கு மேலும் வயதானவர்களின் எண்ணிக்கை 3,50,000 ஆகும். 2050 ம் ஆண்டில் அமெரிக்காவில் 90 ம் அதற்கு மேலும் வயதானவர்களின் எண்ணிக்கை 48 மில்லியமைத் தாண்டி விடும் என எதிர்பாாக்கப்படுகின்றது.

(The New York Times – Sunday Feb 23 1997. The News Given By> Executive Director, of DOROT, Mr. Vivian Fenster Ehlich – DOROT. A Service Agency For Aged).

அடுத்து அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் மட்டும் இன்னும் 25 வருடங்களில் வயதானவர்களின் எண்ணிக்கை 1.1 மில்லியன் ஆகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அரிசோனா மாநிலத்தில் உள்ள ஓய்வு பெற்ற வயதானவாகள் 1995 ல் செலவழித்த தொகையின் அளவு 13.6 பில்லியன் டாலர்கள் என்று மாநில பொருளாதார ஆணையத்தின் முக்கிய அதிகாரி கூறினார். (The New York Times – National Report . Sunday Feb, 16, 1997).

அமெரிக்காவின் குழந்தைப் பிறப்பு விகிதம் :

1995 ல் -- 2.05

2025 ல் -- 1.61

அதாவது, 1995 ல் ஒரு குடும்பத்திற்கு, ஒரு தம்பதியருக்கு 2.05 குழந்தைகள் இருந்தது எனில், 2025 ல் இது 1.61 ஆகக் குறைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பிரிட்டன் :

பிரிட்டனில் 65 மில்லியன் மக்கள் தொகையில் 10 ல் ஒரு நபர் அதாவது 6.5 மில்லியன் நபர்கள் 70 ம் அதற்கு மேலும் வயதானவர்கள். இதே அளவு 2030 ல் இநத மக்கள் தொகை 10 மில்லியன் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது 4 ல் ஒரு நபர் 85 ம் அதற்கு மேலும் வயதானவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

1970 ல் 4,021 ஆக இருந்த முதியோர் இல்லங்கள் இன்று 17,065 ஆகப் பெருகி உள்ளன. இந்த எண்ணிக்கை 20,000 ஆகவும் இருக்கலாம் எனவும் இதில் மட்டும் 50,000 முதியோர்கள் வசிக்கின்றார்கள். இது அல்லாது முதியோர்கள் இல்லம் அல்லாது தினமையில் வசிக்கும் முதியோர்களின் எண்ணிக்கையைச் சேர்த்தால் இன்னும் அதிகமான அளவில் இருக்கும். மேலும், இந்த பணிமூப்புப் பெற்ற முதியோர்கள் தங்கள் குடும்பங்களைப் பிரிந்தோ அல்லது குடுமபச் சூழ்நிலை இல்லாத நிலையிலோ தான் முதியோர் இல்லங்களை நாடுகின்றனர். மேலும் இநத முதியோர் இல்லங்களில் புழங்கும் ஒரு வருடத்தைய பண மதிப்பு எவ்வளவு தெரியுமா? 8 பில்லியன் பவுண்டுகளாகும்.

மேலும். இந்த பெருகி வரும் இல்லங்களில், பணத்தைப் பெற்றுக் கொண்டு தங்களைக் கவனிக்க நாதியில்லாமல் தங்களை மோசடி செய்து வருவதாக எழுந்த புகார், இன்னும் அரசுக்கு பெரும் தலைவலியாக மாறி விட்டது. இதில் நடக்கும் உழல், மோசடி, பணத்தைப் பெற்றுக் கொண்டு முதியோர்களைக் கவனிப்பாரற்று விட்டு விடுவது போன்றவற்றை ஆராய அரசு ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்துள்ளது. (The Sunday Times, 31 Aug 97. How the Elderly Suffer Abuse from Carers and Exposed; Homes that fail the old)

### சிங்கப்பூர்

வெற்றிகரமான? குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டதின் மூலம் சிங்கப்பூர் ஆசிய நாடுகளிலேயே அதிக வயதான முதியோர்களைக் கொண்ட நாடாக இருக்கும். இன்னும் 25 வருடங்களில் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கால்வாசிப் பேர் 60 ம் அதற்கு மேலும் வயது வந்த முதியோர்களாக இருப்பார்கள். சிங்கப்பூரின் இன்றைய மக்கள் தொகை 3 மில்லியன் ஆகும்.

மேலும், சமூக கட்டுமானத் திட்டம் (SOCIAL ENGINEERING PROGRAMME) தற்பொழுது இரண்டுக்கு மேல் வேண்டாம் என்ற கோஷத்தை விட்டு விட்டு, முடிந்ததைப் பெற்றுத் தள்ளுங்கள் என்ற கோஷத்தை எழுப்ப ஆரம்பித்துள்ளது.

### பிரேசில்

பிரேசிலின் மக்கள் தொகை 158 மில்லியன்களாகும். இதில் 32 மில்லியன் மக்கள் 2020 ம் ஆண்டில் 60 ம் அதற்கு மேலும் வயதானவர்களாக இருப்பார்கள்.

உலக மக்கள் தொகையில் வயதானவர்களின் எண்ணிக்கையில் 13 சதவீதம், உலக அளவில் வயதானவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ள நாடுகளின் வரிசையில் 5 வது இடத்தையும் பிரேசில்

பிடிக்க இருக்கிறது. தற்பொழுது 158 மில்லியன் மக்கள் தொகையில் 8 சதவீதம் நபர்கள் 60 ம் அதற்கு மேலும் வயதான நிலையில் உள்ளனர்.

1950 ல் பிரேசிலின் சராசரி ஆயட்காலம் 54.2 லிருந்து 63.5 ஆக உயர்ந்ததும் காரணமாகும். 1970 ல் ஒரு பெண் சராசரியாக 5.8 குழந்தைகளையும், அதே அளவு இன்று 2.4 ஆகக் குறைந்து விட்டதை உலகப் பொது சுகாதார அமைப்பு (WHO) இது குறித்து பிரேசிலை எச்சரித்துள்ளது. இப்பொழுதே தகுந்த நடவடிக்கை எழுக்கவில்லை எனில், நாட்டின் சுகாதாரம், பொருளாதாரம், பாதுகாப்பு இவற்றில் பின்னடைவைச் சந்திக்க வேண்டி வரும் என தனது WHO அறிக்கையில் கூறி உள்ளது. (ARAB NEWS – RIYADH – JAN 01-1997).

ஜப்பான்

(குழந்தைப் பிறப்பு இறங்கு முகம் - வயதானவர்களின் எண்ணிக்கை ஏறுமுகம்)

ஜப்பானில் குழந்தைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. போர்க்கால அடிப்படையில் குழந்தைப் பிறப்பை அதிகப்படுத்த வேண்டிய அவசியத்தை கொள்கை வகுக்கும், திட்டமிடல் அதிகாரிகள் அரசுக்கு ஆலொசனை கூறி இருக்கிறார்கள்.

இதில், தாய்மாாகள் குழந்தைப் பேற்றை அடையும் போது ஏற்படும் சில அசௌகரியங்களை அறிந்து இவற்றைக் களைய வேண்டும், அதற்காக அரசு கொள்கை விதிகளை வகுக்க வேண்டும் என்று அட்சுகோ முராகி (ATSUKO MURAKI) என்ற பிரதமர் அலுவலகத்தின் பாலியல் சமத்துவம் (GENDER EQUALITY) அலுவலகப் பொறுப்பு அதிகாரி அரசுக்கு ஆலோசனை வழங்கி உள்ளார்.

பெண்களுக்கு வழங்கப்பட்ட கல்வி, அதனால் பெறப்பட்ட வேலைவாய்ப்புகள் போன்றவை தான் குழந்தைப் பிறப்பை அதன் சதவீதத்தைக் குறைத்துள்ளன. பணிக்குச் செல்லும் பெண்கள் திருமணம் செய்யாமலும், திருமணம் செய்ய தாமதிப்பதாலும், திருமணம் ஆனாலும் குழந்தைப் பிறப்பை பாரமான செயலாக இடையூராகக் கருதுவதாலும் குழந்தைப் பிறப்பு குறைந்துள்ளது.

குறிப்பு : இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜப்பானில் கடுமையான குடும்பக் கட்டுப்பாடு இருந்தது என்பதை நினைவில் கொள்க)

இப்பொழுது இந்தப் பிரச்னையைத் தீர்க்க இது ஒன்றே வழி. பெண்கள் எந்த வேலையும் செய்யாமல், வீட்டில் இருந்து கொண்டு குழந்தைகளை தேசத்துக்குப் பெற்றுத் தந்தால் போதுமானது. இதில் உள்ள சிரமங்களை, தடைகளை நீக்கி, குழந்தை பெற்றுக் கொள்வதை எளிமையான, ஒரு தேவையான செயல் என்பதை மக்களிடம் கருத்து உருவாக்க அதற்கான சூழ்நிலைகளை நாம் ஏற்படுத்த வேண்டும் என்கிறார், யூரிகோ ஆசினோ என்ற குடும்பக் கட்டுப்பாட்டு ஆணையத்தின் உதவி இயக்குநர்.

சுகாதார மற்றும் மக்கள் நல்வாழ்வு அமைச்சகத்தின் புள்ளி விபரம் தான் இவர்கள் இவ்வாறு சிந்திக்க வைத்தது. அதாவது 2015 ல் 4 ல் ஒரு நபர் 65 ம் அதற்கு மேலும் அதிக வயதுடையோராக இருப்பார். இதே அளவு 2049 ல் மூன்றில் ஒருவர் 65 ம் அதற்கு மேலும் அதிக வயதுடையோராக இருப்பார்.

ஏற்கனவே பட்ஜெட்டில் துண்டு விழுந்து கொண்டே வந்து கொண்டிருக்கும் நிலையில், முதியோர்களுக்கான பென்சன் தொகையின் அளவு அதிகரிக்கும் போது, நாட்டின் பொருளாதாரத்தை அது பாதிக்கும் என அரசு கருதுகிறது.

ஜப்பானின் இன்றைய பிறப்பு விகிதம் சமூக நல வாழ்வையும், பொருளாதாரத்தையும் பாதிக்கக் கூடியது மட்டுமல்ல, பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தடை செய்யும் சமூகம் ஒரு உயர்ந்த அறிவான சமூகமாக இருக்காது என்கிறார் நிகோன் கெய்ஸய் ஷிம்பன், இவர் FINANCIAL DAILY என்ற பத்திரிக்கையின் எடிட்டர் ஆவார்.

மேலும் இந்தப் பிரச்னையில் தலையிட்டு நாம் அதை நிவர்த்தி செய்யவில்லையானால், ஜப்பான் ஒரு மிகப் பெரிய பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கும் என அமைச்சர் கொய்சும், இதன் தீவிரத்தைச் சுட்டிக் காட்டி அரசை எச்சரித்துள்ளார்.

மேலும், ஜப்பானிய சமூகத்தில் குழந்தை பெற்றுக் கொள்வது மட்டுமல்ல, திருமணம் செய்து கொள்வது கூட மிகச் சிக்கலான விசயமாக உள்ளது. ஜப்பானியப் பெண்களில் 20 ம் அதற்கு சிறிது குறைவான வயதுடைய பெண்களில் பாதிப் பேர் இன்னும் திருமணம் செய்யாமலும், 30 ம் அதற்கும் சற்றுக் குறைவான வயதுடைய பெண்களில் 20 சதவீதம் பெண்கள் திருமணம் இன்றி தனிமையில் வாழ்கிறார்கள் என்ற புள்ளி விபரக் கணக்கு, ஜப்பான் அரசை மேலும் சிக்கலாக்கி உள்ளது.

(குறிப்பு : மேற்கண்ட ஜப்பானின் அவலங்கள் ஏனைய நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, பிரேசில், இந்தோனேஷியா, (பிறப்பு விகிதம் 0 சதவீதம் இருப்பதாக செய்திகள் கூறுகின்றன) ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், சீனா மற்றும் ஏனைய ஐரொப்பிய நாடுகளின் நிலையும், ஜப்பானின் நிலையை ஒத்திருக்கின்றது).

## 10. நிவாரணத்திற்குப் பின் வேதனை

ஒரு தவறான கொள்கைதயினாலும், மாறுபட்டுப் பொன சீர்குலைந்து போன சமூக அமைப்பினாலும் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவு இவ்வளவு வயோதிகர்களை, இந்த நாடுகளில் ஏற்படுத்தி உள்ளது. அதே நேரம் இளைஞர்களின் சதவீதம் குறைந்து கொண்டே வந்து கொண்டிருப்பதால், துடிப்பான செயல்களுக்கும், அறிஞர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் இந்த நாடுகளில் ஏகப்பட்ட பஞ்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, தான் இந்த நாடகள் மற்ற வளரும், இரண்டாம் உலக நாடுகளின் அறிஞர் பெருமக்களுக்கு அதிக ஊதியத்தைக் காட்டி, அவர்களின் குடியேற்றத்திற்கு பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்கிறது. அதாவது, சட்டப்படி குடியேறுவோர் மற்றும் திருட்டுத்தனமாக குடியேறுவோர் கனிசமான அளவு இருந்தும், இவை போதாமல்.. அமெரிக்கா வருடத்திற்கு 55 ஆயிரம் வெளிநாட்டவர்களை குலக்கல் முறையில் தேர்ந்தெடுத்து, வெளிநாட்டு மக்களைத் தேர்ந்தெடுத்துக் குடியமர்த்திக் கொள்கிறது. இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களுக்கு பிரஜைகளுக்கு நிகரான தகுதியை (GREEN CARD) வழங்குகிறது.

இதில் கனடா நாடானது, குறிப்பாக அறிஞர்கள், படித்த பட்டாதாரிகள், வியாபாரிகள் போன்றவர்கள் குறிப்பிட்ட அளவு தொகைகளை கனடா வங்கியில் முதலீடு செய்து விட்டு, கனடாவில் தங்கி தொழில் செய்யவும் வேலை வாய்ப்புப் பெறவும் அனுமதிக்கிறது.

தன் நாட்டு மக்களின் சதவிகிதம் சமநிலை பெற்றிருப்பின், இத்தகைய நாடுகள் ஏன் வெளிநாட்டவரை அதிலும் குறிப்பாக படித்த அறிஞர் பெருமக்களின் குடியேற்றத்தை அது நாட வேண்டும். ஏனெனில், அவர்களின் பழைய கணக்கெடுப்பும், ஆண்டாண்டு காலமாக அவர்கள் கடைபிடித்து வரும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளினாலும், குழந்தைகளின் பிறப்பைக் குறைத்து, அதன் மூலம் நல்ல ஒழுக்கமுள்ள, கல்வியாளர்களின் எண்ணிக்கையையும் குறைத்து வருவதும், அதனூடே வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், ஆக.. இந்த நாடுகளில் அறிவாளிகளுக்குப் பஞ்சம்

ஏற்பட்டதன் காரணமாக, இந்த மேலை நாடுகள், இரண்டாம் உலக நாடுகளின் அறிவாளிகளைக் குடியமர்த்தின் கொள்வதன் மூலம், தம் நாட்டை சமூக மற்றும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றி வருவதை நாம் இன்றும் கண்டு வருகின்றோம்.

இதையோ தாம்ஸன் என்பவர், இது பற்றி தமது ஆழ்நத ஆராய்ச்சியின் முடிவில், இந்த வயதானவர்களின் வயது உயர்ந்திருப்பதும், அவர்களின் எண்ணிக்கை இதனால் அதிகரித்திருப்பதும் நாம் குறிப்பிட்டு நோக்க வேண்டிய அம்சங்களாகும். ஏனெனில், ஒரு ஒழுங்கற்ற சமநிலையற்ற மாறுபாட்டினால், இறப்பு விகிதமும், பிறப்பு விகிதமும் மாறுபட்டு, இளைஞர்களின் எண்ணிக்கையைக் குறைத்தும், வயதானவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தும் இருப்பது, பொருளாதாரத்தைப் பாதிக்கக் கூடியது. வயதானவர்களிடம் எந்த வித பொருளீட்டலையோ, உழைப்பையோ எதிர்பார்க்க முடியாது. பொருளாதாரம் ஈட்டுவதில் அவர்களால் குறைந்த அளவே ஈடுபட இயலும்.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட மேலை நாடுகள், பிற நாட்டு மக்களை தன் நாட்டில் குடியமர்த்தியதன் விளைவு எவ்வாறு இருக்கின்றதெனில், அமெரிக்கா போன்ற அந்நிய நாட்டில் வாழும் யூதர்கள், முக்கியமாக பதவிகள் போன்றவற்றில் தமது இடைத்தைத் தக்க வைத்துக் கொண்டு, மொத்த மக்கள்தொகையில் அற்ப சதவீதமே இருந்து கொண்டு, அந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தில், தலைமைப் பதவியில் இல்லை எனினும் அவர்களது சொல்லுக்கு ஆடுகின்ற, பணிய வைக்கின்ற நிலைமையை உருவாக்க முடிகின்றது. அரசியலிலும் தங்களது செல்வாக்கை தக்க வைத்துக் கொள்ள முடிகின்றது.

மேலும், குடியேறும் மக்களின் கலாச்சாரம், மதம் போன்றவை சொந்த நாட்டு மக்களின் கலாச்சாரங்களோடு வேறுபடுவதால், குடியேறும் வெளிநாட்டவர்கள், சொந்த நாட்டு மக்களால் அதிகமான தாக்குதல்களுக்கும், குடியேறுபவர்களை எதிர்த்து அவர்களை நாட்டை விட்டே வெளியேற்றக் கோரியும் போராடும் நிலையும் உருவாகி வருகிறது. இதன் மூலம் மேலை நாடுகளில் அரசியல் போன்றவற்றில் ஸ்திரத்தன்மையை குலைக்கும் நிலையும் உருவாகி உள்ளது. குறிப்பாக இந்த எதிர்ப்பு இன அடிப்படையிலும், மோதல்களை உருவாக்கி வருகிறது.

உதாரணமாக, சமீபத்தில் பிரான்ஸ் நாட்டு மக்கள் வெளிநாட்டவர்களை வெளியேற்றக் கோரி நடத்திய போரட்டத்தைக் கூறலாம். அடுத்து, அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நடக்கும் போராட்டங்களும், தாக்குதல்களும் எதை உணர்த்துகின்றதென்றால், குடும்பக் கட்டுப்பாட்டின் மூலமும் அது சார்ந்த சாதனங்களைப் பயன்படுத்தியதன் மூலமும், விளைந்த சமூகம் சமநிலையை நிவர்த்தி செய்யும் பொருட்டு வெளிநாட்டவர்களை குடியமர்த்தியதன் விளைவாக ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பம் எனலாம்.

இறுதியாக, ஏன் இந்த மேலைநாடுகள் இவ்வளவு பெரிய அவலநிலையை ஏற்படுத்திக் கொண்டன என்பதை ஆராய்ந்தால், மிக முக்கியமான நான்கு காரணங்கள் நமக்குத் தெளிவாகும்.

பிறப்பு விகிதம் கணிசமான அளவு குறைந்தே வந்ததும்

அதிகப் பெண்கள் கருத்தடை சாதனங்களையும், மருந்துகளையும் பயன்படுத்தியதும், கருத்தடை செய்து கொண்டதும்.

பெண்கள் திருமணம் இன்றியும், திருமணம் செய்தும் குழந்தை பெறுவதை இடையூராக, பாரமாக எண்ணியதும் திருமண வயது வரம்பு கடந்து திருமணம் செய்தலும்

பொதுவாக உலகில் ஏற்பட்டுள்ள மருத்துவ முன்னேற்றமும் சராசரி மனிதர்களின் வயது வரம்பை அதாவது ஆயட்காலத்தை அதிகப்படுத்தி இருப்பதும்

போன்ற முக்கிய காரணங்களாகும்.

உதாரணமாக, வயது வரம்பு உயர்ந்திருப்பதற்கு நமது இந்தியாவை எடுத்துக் கொண்டால்,

1950 ல் சாராசரி ஒரு இந்தியனின் ஆயுட் காலம் ஆண் 32.4 ஆகவும், பெண் 31.7 ஆகவும் இருந்தது. 1992-93 கணக்கெடுப்பின்படி, ஆண் 60.4 ஆகவும், பெண் 61.2 ஆகவும் உயர்ந்துள்ளது.

அதே நேரத்தில் 1950 ல் இந்தியாவின் குழந்தைப் பிறப்பு விகிதம் 39.9 (1000 பேருக்கு) இந்த விகிதம் 1995-96 புள்ளி விபரப்படி 28.3 (1000 பேருக்கு). பிறப்பு விகிதம் குறைந்திருப்பதும், இறப்பு விகிதம் குறைந்திருக்கும் அதே வேளையில், சராசரி இந்தியனின் ஆயுட் காலமும் கூடியுள்ளது.

இறப்பு விகிதம் :

1950 - ல் 27.4 (1000 பேருக்கு)

1995 - 96 –ல் 9.0 (1000 பேருக்கு) என்ற அளவில் குறைந்துள்ளது.

இந்த மாறுபட்ட விகிதம் இந்தியாவிலும் அதிக வயதானவர்களை ஏற்படுத்தி இருக்கும் என அறிய முடிகின்றது. ஏனெனில் நம் நாட்டிலும் இதன் அவலங்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன என்பதை அதிகரித்து வரும் முதியோர் இல்லங்களை வைத்தும், அதில் நாள்தோறும் கேட்பாரற்று விடப்படும் முதியோர்களின் எண்ணிக்கை கூடி வருவதும், நம் நாடு கடைபிடிக்கும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும், அதன் சாதனங்களும், தன்னுடைய சீரழிவை சிறுகச் சிறுக அழிவை ஏற்படுத்தி வருகின்றன என்பதையும் அறிய முடிகின்றது.

இறப்பு விகிதக் குறைவும், பிறப்பு விகிதக் குறைவும், நாட்டில் வயதானவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதோடு, பிறப்பு விகிதக் குறைவு இளைஞர்களின் எண்ணிக்கையை குறைத்து விடும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

## 11. குறைந்து போன பிறப்பு விகிதம் - பெண் சிசுக் கொலை

சிங்கப்பூர் மக்கள் தொகை குறைந்து வருகின்றது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கையால் வருடத்திற்கு 46,700 குழந்தைகள் பிறக்கின்றன. ஆனால், 56,400 குழந்தைகளாவது பிறக்க வேண்டும். (உணர்வு - செப் 26 - அக் 02 - 1997).

சீனாவில் பெண் குழந்தைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. 50 மில்லியன் பெண் குழந்தைகள் பற்றாக்குறையை சீனா கண்டுள்ளது. குறிப்பாக பெண்கள் கருவுற்ற பின் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என ஸ்கேன் முறை மூலம் கண்டறிந்து, பெண்ணாக இருந்தால் கருவிலேயே அழித்து விடும் செயல் அதிகரித்து உள்ளது. எனவே, அத்தகைய ஸ்கேன் பரிசோதனை முறையைத் தடை செய்ய சீனா யோசனை செய்து வருகிறது. (லண்டன் பிபிசி வானொலிச் செய்தி அக்டோபர் 01-1997).

அதிக முஸ்லிம்களைக் கொண்ட நாடு இந்தோனேசியா. இந்நாட்டின் குழந்தைப் பிறப்பு விகிதம் 0 ஆகி உள்ளது. ஏனெனில், மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டை கடைபிடிப்பதாலும், நிரோத் மற்றும் கருத்தடை மாத்திரைகளை அதிகம் உபயோகிப்பதாலும், பிறப்பு விகிதம் சுத்தமாகக் குறைந்துள்ளது. (ISLAMIC VOICE – DEC 1996. By Dr. R.S.GUPTA. MO; BALDIYA – GUJARAT).

கடந்த வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, எனும் தலைப்பில் இடை இடையே அந்தந்த நாடுகளின் பிறப்பு விகிதம் குறைந்து இருப்பதைக் கண்டோம். அதாவது,

குழந்தைப் பிறப்பு விகிதம் :

நாடுகள் ஆண்டு விகிதம்%

அமெரிக்கா 1919 4.7

1955 2.4

1995 2.05

2025 1.61

ஜப்பான் 1995 1.42

1.38

பிரேசில் 1970 5.8

2.4

இந்தியா 1950 3.99

1995-1996 2.83

இன்றைய நிலையில் ஒரு குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகள் என்ற விகிதத்தில் இருந்தாலும், அவர்களில் இந்த விகிதத்தில் நடைபெறும் ஒவ்வொரு திருமணமும் அதன் மூலம் பெறக் கூடிய குறைந்த அளவிலான குழந்தைகளின் அளவும், மனித இனததை சிறிது சிறிதாக அழிக்கக் கூடியனவாகத் தான் அமையும். 30 வருட விகிதத்தில் ஒவ்வொரு பரம்பரை கடக்கும் போதும், மக்கள் தொகையில் குறிப்பிட்ட அளவு குறைந்து கொண்டே வருவதை நாம் காண்கிறோம். உதாரணமாக, இரண்டு குழந்தைகளுக்கு மேல் வேண்டாம் எனக் கோஷம் எழுப்பும் நாட்டின் மக்கள் தொகை 1000 எனில், 30 வருடங்களில் இந்த 1000 மக்கள் தொகை பெற்றெடுக்கும் மக்கள் தொகை 621 ஆகம். இது 60 ஆண்டுகளில் 386 ஆகவும், 150 வருடங்களில் 92 ஆகவும் குறைந்து விடும்.

உதாரணமாக இன்றைய ஜப்பானின் பிறப்பு விகிதம் 1995 புள்ளி விபரப்படி 1.42 ஆக 1000 ம் பேர் கொண்ட சமூகமாகக் கணக்கிட்டால் 500 தம்பதியர். இந்த 500 தம்பதியினர் பெற்றெடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 500X1.42 = 710 ஆகும். இந்த 710 ம் 355 தம்பதியினரானால், 355X1.42 = 504 ஆகும். ஆக, மக்கள் தொகை படிப்படியாகக் குறைந்து, இறுதியில் சுய அடையாளம் இல்லாத சமூகமாக மாறி விடும் என்பது தான் உண்மை.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பாளர்களும், பொருளாதார அறிஞர்களும் மக்கள் தொகை வளர்ச்சியின் புள்ளி விபதங்களை மட்டும் வைத்து, மக்கள் தொகையின் வளர்ச்சி நிலையைத் தீர்மானிப்பதில்லை. மாறாக, அதை ஒட்டி எழக் கூடிய சதாக பாதகங்களையும், மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியையும் கணக்கிட்டு, மொத்த விகிதாச்சாரத்தைக் கணக்கிடுகிறார்கள்.

உதாரணமாக, மொத்த உள்பத்தித்திறன் என்பது 1 புள்ளி எனில், அது நிலையான மக்கள் தொகை விகிதம். 1 க்கு மேல் 2 புள்ளி எனில், அது மக்கள் தொகைப் பெருக்கம். 1 புள்ளிக்கும் குறைவு எனில் மக்கள் தொகை வீழ்ச்சி. ஆனால் மேலே நாம் பார்த்த நாடுகளின் மக்கள் தொகை உற்பத்தியில் வீழ்ச்சியைத் தான் கண்டோம். அதாவது கணவன், மனைவி என்ற குடும்பம், இரண்டு

நபர் எனில் 2 புள்ளி. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை இரண்டு, 2 புள்ளி. ஆக மொத்த விகிதம் 2:2. இது நிலையான புள்ளி விகிதம்.

ஆனால் ஜப்பானின் இன்றைய ஒரு குடும்பத்தின் பிறப்பு விகிதம் 1.42 எனில், மொத்த பிறப்பு விகிதம் 2:1.42 எனக் கணக்கிட்டால், ஒரு சந்ததிக்கும் இன்னொரு சந்ததிக்கும் இடையே 0.58 சதவீதம் புள்ளி துண்டு விழுகின்றது. இதே நிலை நீடித்தால், அது மனித இன வளர்ச்சியின் அறிகுறியா? அல்லது அழிவின் அறிகுறியா? என்பதை சநிதித்துக் கொள்ள வேண்டியது அறிவு ஜீவிகளின் பொருப்பாகும்.

## பெண் சிசுக் கொலை

### சீனா :

பெண் சிசுக் கொலையில் நம்மையும் மிஞ்சி விட்டது சீனா. ஏனெனில், அங்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை வீதம் மட்டுமே பெற்றுக் கொள்ள அனுமதி உண்டு. அதற்கு மேல் அவர்கள் குழந்தை பெற்றால், அரசாங்க வேலைவாய்ப்பு பறிபோகும், வரி அதிகம் கட்ட வேண்டி வரும். இத்தகைய பாதகமான நடைமுறைகளினால், மக்கள் விரும்பியோ விரும்பாமலோ குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கடைபிடித்து வருகின்றனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அந்த ஒரு குழந்தையும் ஆண் குழந்தையாகவே வேண்டும் என்று ஆசைப்பட்டதன் விளைவு, கர்ப்பத்தில் இருக்கும் சிசு பெண் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் அதை அழித்து விட நாடுகின்றனர். இதனால் சீனாவில் தற்பொழுது 50 மில்லியன் பெண் குழந்தைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய விபரீத விளைவுகள், நாட்டின் சமூக அமைப்பைப் பாதிக்கும் என அறிந்த சீனா அரசு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக, கருவில் இருக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா எனக் கண்டறியக் கூடிய, ஸ்கேன் பரிசோதனை முறையைத் தடை செய்யலாமா? என யோசனை செய்து வருகிறது.

இதன் விளைவு குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தால் விளைந்த மரண அடியாகும்.

### இந்தியா :

இந்தியாவிலும், பெண் குழந்தைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது என்பதை, பிரதமரின் 50 வது சுதந்திர விழா உரையின் மூலம் அறிய முடிகின்றது. மேலும் இந்தியாவில் அதிகமான வரதட்சணைக்கொடுமை இருப்பதாலும், வறுமையில் பெண் பிள்ளைகளை வளர்த்தல், கல்வி மற்றும் திருமணம் போன்றவற்றிற்கு அதிகப்படியான செலவுகள் ஆவதால், பெற்றோர்கள் பெண் குழந்தைகளை விரும்புவதில்லை. எனவே, தாய் கர்ப்பம் ஆனவுடன், ஸ்கேன் முறையில் பரிசோதனை செய்து, குழந்தை ஆணா, பெண்ணா எனக் கண்டறிந்து, பெண் குழந்தையாக இருந்தால், அக் கருவை அழித்து விடும் கொடுமை நிகழ்கிறது. எனவே, இத்தகைய பரிசோதனை செய்வதை அரசு தடை செய்ய முன் வந்துள்ளது. மேலும், இத்தகைய பரிசோதனைகளை டாக்டர்கள் செய்வதை, சட்டமுறைப்படி தடை செய்வதற்கு அரசு முயன்று வருகிறது.

லண்டன் பிபிசி செய்தி நிறுவனத்தின் ஆய்வின்படி, இந்தியாவில் நாள் ஒன்றுக்கு 3000 பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுகின்றன. மேலும் வருடம் ஒன்றுக்கு 1 மில்லியனுக்கும் அதிகமான பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுகின்றன.

From Dr. Zakir Naik Speech –" Religious Fundamentalism Astoumbling Block The Freedom of Expression" – Bombay Press Club Debate.

மேலும் தமிழ்நாட்டில் பிறக்கும் 10 பெண் குழந்தைகளில் 4 பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுகின்றன.

மேலும் கடந்த 8-8-1997 தினமணியில், பெண்கள் மீதான கொடுமை அழிவது எப்போது?, இன்று ஒரு தகவல் எனும் தலைப்பில், ஆறுபாதி புகழேந்தி என்பவர் எழுதிய கட்டுரையில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

அதாவது, கருச்சோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட 1000 பெண் சிசுக்களில் 995 சிசுக்கள் அழிக்கப்பட்டு விட்டன.

1981 இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, ஆண், பெண் விகிதமானது 1000 க்கு 934 ஆக இருந்தது. 1991 ல் 1000 ஆண்களுக்கு 929 பெண்கள் எனக் குறைந்துள்ளது.

மேலும் தமிழகத்தில் 1971-81 ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 17.50 சதமாக இருந்த மக்கள் தொகை வளர்ச்சி 1981-1991 ஆம் ஆண்டுகளில் 14.94 சதமாகக் குறைந்துள்ளது.

கருத்தடைச் சாதனங்கள் எதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டனவோ அவற்றை நிறைவேற்றப் பயன்படவில்லை. மாறாக, வேண்டாத கர்ப்பத்தைக் கலைக்கவும், பெண் சிசுக் கொலைக்கும் தான் பயன்படுகிறது எனில், அத்திட்டம் செயல்படுவதன் நோக்கம் சந்தேகத்திற்கு இடமளிப்பதாக உள்ளது.

## 12. குழந்தை இல்லாத் தாம்பத்யமும், மணவிலக்கும்

மேலைநாடுகளில் குடும்பக்கட்டுப்பாட்டுத் முறையானது குடும்பப் பாசப்பிணைப்பை அறுத்தெறியும், மண வாழ்வைச் செயலிழக்கச் செய்யும் கருவியாகச் செயல்படுகிறது.

ஒரு குடும்பத்தில் குழந்தை என்பது, கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பாச் பிணைப்பை உருவாக்கக் கூடிய மாபெரும் சக்தியாகச் செயல்படுகிறது. மேலும் குழந்தைப் பேறு இல்லாத குடும்பத்தில், கணவன் மனைவியை விட்டும், மனைவி கணவனை விட்டும் எளிதில் பிரிந்து, மணவிலக்குப் பெற்றுக் கொள்வதற்கு எளிதான வழியாக இருக்கிறது.

மணவிலக்குப் பெ நீதிமன்றங்களை அனுக வேண்டி வரும் பொழுது, 1 நிமிடத்திற்குக் குறைவான நேரத்தில் 115 மண விலக்குகள் நடந்த நிகழ்வுகள் லண்டனில் நடந்துள்ளன. இத்தகைய மணவிலக்குகள் எத்தகைய பிரதிவாதம் எதுவும் இல்லாமல், குழந்தைப் பேறு இல்லை என்ற காரணத்தை மட்டுமே காட்டி நடக்கும் மணவிலக்குகள் அதிகரித்துள்ளன. இது எதனால் விளைந்தது எனில், நிச்சயமாக குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்கள் ஏற்படுத்திய மனநிலை மாற்றம் தான் எனலாம்.

ஏனெனில் அதிகம் குழந்தை பெற்றுக் கொள்வதை நாகரீகம் என்ற போர்வையில் விரும்பாததும், மேலும் குழந்தை பெற்றுக் கொள்வது தம் அழகுக்கும், நாகரீக வாழ்க்கைக்கும் இடையூறாக அமையும் என்ற மனநிலை கொண்ட சமூகம், குழந்தைப் பேற்றை கருத்தடை மாத்திரை மற்றும் சாதனங்கள் மூலம், பிற்படுத்துகிறது. அல்லது தவிர்க்கிறது. இதனிடையே கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்படும்

சிறு சலசலப்பும் மணவிலக்கில் முடிவடைகிறது. ஆக, குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமும், அதன் சார்பு சாதனங்களும் இன்னுமொரு சமுதாய சீரழிவு நோய்க்கு மக்களை இட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

Dr. BERNARD A. BAUER என்ற மகப்பேறு மருத்துவர் குழந்தைப் பேறு இல்லாமை பற்றிக் கூறும் பொழுது :

ஒவ்வொரு தாயும் குழந்தைப் பேற்றை ஒரு மிகப் பெரிய சாதனையாக எண்ணிச் செயல்பட வேண்டும். அது அவளால் மட்டுமே நிகழ்த்தக் கூடிய அற்புதமாகும். ஒவ்வொரு தாயும் குழந்தைப் பேற்றை தம் தார்மீகக் கடமையாகக் கருத வேண்டும். அது இயற்கை உங்களுக்கு இட்ட கட்டளையாகும். தாய்மை மட்டுமே குழந்தைப் பேறு என்ற அற்புதத்தை நிகழ்த்த முடியும். ஒரு பெண்ணானவள் ஆணிடம் இருந்து சுதந்திரம், குழந்தையிடம் இருந்து சுதந்திரம் எனும் முழக்கங்களை பெரிய அளவில் முழங்குவதை விட்டு விட்டு, என் வாழ்வும் வளமும் அனைத்தும் குழந்தைக்கே என்ற தார்மீக மந்திரத்தை உச்சரிக்கும் போக்கைக் கைக் கொள்ள வேண்டும்.

மேலும் குழந்தையற்ற மணவாழ்வு ஒரு நிலையற்ற மணவாழ்வு தான். தம்பதிகளிடையே ஈருடலை ஒன்றாக்குவதும், கணவனும் மனைவியும் தமது உணர்வுகளை ஒருவருடன் ஒருவர் பகிர்ந்து ஒருவர் மற்றவருக்காக தமது வாழ்வை அனைத்துக் கொள்வதும் ஆன பண்புகளை முழுமையடையச் செய்வது அத்தம்பதியினரின் மழலைச் செல்வங்களே! ஒரு பெண்ணின் மகப்பேறு மட்டுமே அவளின் இதயப் பூங்காவை பூத்துக் குலுங்கச் செய்யும் மந்திரமாகும்.

மேலும, சமூகவியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி, தம்பதிகளிடையே குழந்தையில்லாத் தன்மை தான் அவர்களிடையே மணவிலக்கு அதிகரிக்க முக்கிய காரணமாக விளங்குகிறது என்கிறார்கள்.

Mr.பேர்னஸ் (BARNES), Mr.ரூடி (REUDI ) என்ற இரு அறிஞர்களின் கூற்றுப்படி, விவாகரத்து நடைபெறும் சதவீதத்தில் மூன்றில் இரண்டு விவாகரத்து குழந்தையில்லாத் தம்பதிகளிடையேயும், ஐந்தில் ஒரு விவாகரத்து ஒரே ஒரு பிள்ளையைப் பெற்ற தம்பதிகளிடையேயும் நடைபெறுகிறது. இதன் மூலம் மணவிலக்குக்கும் குழந்தைப் பேற்றுக்கும் இடையே ஏதோ மறுக்கவியலாத தொடர்பு உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

Dr.ஃபிரீட்மேன் (Dr.Freed Man) என்பவரது கூற்றுப்படி, குழந்தை அதிகமுள்ள தம்பதியினரைக் காட்டிலும், மிகக் குறைந்த பிள்ளைகளும் அல்லது பிள்ளைகளே இல்லாத தம்பதிகளிடையேயும் தான் அதிகமான விவாகரத்துகள் நடைபெறுகிறது.

மேலும், பேராசிரியர் சொரோகின் என்பவரது கூற்றுப்படி, குழந்தையில்லாத் தாம்பத்யம் என்பது ஒரு துண்டிக்கப்பட்ட இணைப்புகளுக்குச் சமமானது. அவர்கள் மனித இன விருத்தியின் பொறுப்புகளிலிருந்து மட்டும் தவறவில்லை. அதற்கும் மேலாக, பாரம்பரியமாகத் தொடரக் கூடிய குடும்ப அமைப்பையும், கலாச்சார பாரம்பரியத்தையும், பரம்பரைக் குணாதிசயங்களையும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மூலம் சிரைக்கிறார்கள். மேலும், குழந்தை இல்லாத் தாம்பத்யம் ஒரு மகிழ்ச்சியான மண வாழ்வைக் கொடுப்பதில்லை. குறிப்பாக வயதான காலத்தில் இத்தகைய தம்பதியினர் தனிமையையும், ஒரு முழுமையற்ற தன்மையையும், சமூகத்தில் பூரணமற்ற ஒரு வெற்றிட வாழ்க்கையையும் அவர்கள் அடைய நேரிடுகிறது.

மேலும், குழந்தை அதிகமாக உள்ள தம்பதியினரிடையே தான் பாசப் பிணைப்பையும், அந்த பந்தத்தையும் உறுதி செய்யக் கூடிய இணைப்புப் பாலமாக அக் குழந்தைகள் திகழ்வதால், இத்தகைய தம்பதியினரிடையே விவாகரத்து, தற்கொலை மனப்பான்மை போன்றவை குறைந்து காணப்படுகிறது.

எந்த நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தீவிரமாக கடைபிடிக்கப்படுகிறதோ அங்கு விவாகரத்தின் அளவும் திடுக்கிடச் செய்யும் அளவிலேயே உள்ளதைக் காணலாம்.

உதாரணமாக, பிரிட்டனின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் 1910 ல் 16 சதவீத திருமணமானவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தார்கள். ஆனால் 1940-42 ல் இது 74 சதவீதமாகக் கூடியது.

ஓஸ்வால்ட் ஸ்வன்ஸ் அவர்கள் பிரிட்டனைப் பற்றிக் கூறும் போது,

கடந்த அரை நூற்றாண்டுகளில் விவாகரத்து என்பது வைரஸ் நோய் போல சமூகத்தில் புரையோடிப் போயுள்ளது.

பிட்டனின் விவாகரத்து அளவு :

ஆண்டு விவாகரத்து எண்ணிக்கை

1914 814

1924 3522

1928 4000

1946 35,874

மேலும் குடும்பவியல் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்பட்ட விவாகரத்து எண்ணிக்கை :

1936 4057

1939 7955

1947 60754

மேற்கண்டவை பழைய புள்ளி விபரங்கள். இனி புதிய விபரங்களையும், பிரிட்டன் உள்ளிட்ட ஏனைய ஐரோப்பிய நாடுகளின் நிலையையும் காண்போம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 நாடுகளில் ஒவ்வொரு மூன்று திருமணத்தில் ஒன்று விவாகரத்தில் முடிகின்றது. குறிப்பாக பெல்ஜியம், சுவீடன், ஆகிய இரு நாடுகளில் திருமணம் ஆகும் தம்பதிகளின் எண்ணிக்கையில் பாதி விவாகரத்தில் முடிகின்றது என்று 1995 ன் ஐரோப்பிய ஒன்றியத்தின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலகம், வெளியிட்ட அறிக்கை கூறுகின்றது. விவாகரத்து அதிகம் ஆகும் நாடுகளின் புள்ளி விபரம் :

பின்லாந்து 49 %

பிரிட்டன் மற்றும் வேல்ஸ் 45 %

டென்மார்க் 41 %

இத்தாலி 10 %

கிரீஸ், ஸ்பெயின், போர்ச்சுக்கல் (தலா) 10 %

அயர்லாந்து பிப்ரவரி 27, 1997 ல் தான் விவாகரத்து அனுமதி சட்டமாக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்க.

கடந்த 30 ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் விவாகரத்து ஆகும் அளவு கூடிக் கொண்டே வந்து கொண்டிருக்கின்றது. எனினும் இந்த சதவீதம் எல்லாம் அமெரிக்காவின் சவீதத்துடன் பார்த்தால், ஒரு படி கீழே தான். (By Arab News Daily, K.S.A. oct. 01, 1997).

## 13. அமெரிக்காவில் விவாகரத்து நிலமை :

அமெரிக்காவில் 1890 ல் 10 திருமணத்திற்கு 1 விவாகரத்து (1:10) என்ற நிலை இருந்தது. இதேநிலமை 1949 ல் 1:1:58 ஆக மாறியது. இதே நிலமை 1949 ல் 1:1.58 ஆக மாறியது. திருமணத்துக்கும் விவாகரத்திற்கும் இடையே உள்ள விகிதமானது, விவாகரத்து அதிகமானதால் 1890 ல் இருந்த நிலமையைக் காட்டில் இன்று சதவீதத்தில் அதிக மாற்றத்தைக் காண முடிகிறது. இதன் மூலம் 1870 ல் 33.7 திருமணத்திற்கு ஒரு விவாகரத்து நடைபெற்றது. 1915 ல் 10.12 திருமணத்திற்கு ஒரு விவாகரத்தும், 1940 ல் 6 திருமணத்திற்கு 1 விவாகரத்தும், 1958 ல் 3 திருமணத்திற்கு ஒரு விவாகரத்தும், இப்பொழுது 1995 ன் புள்ளி விபரப்படி, நடைபெறும் இரண்டு திருமணத்தில் ஒன்று விவாகரத்தில் முடிகின்றது.

அதாவது, இந்த 1995 இன் அரசின் புள்ளிவிபரப்படி, இரண்டு திருமணத்தில் ஒன்று விவாகரத்தாகும் நிலை தவிர்ந்து தாங்களாகவே பிரிந்து வாழும் தம்பதியினரைக் கணக்கில் கொண்டால், திருமணம் என்ற பந்தமும், குடும்பம் என்ற அமைப்பும் அங்கு இன்னும் உயிரோடு இருக்கின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

மேலும், ஃபுல்டன் ஜே. சீன் என்ற அறிஞரின் கூற்றுப்படி 30 பெருநகரங்களில் விவாகரத்து விகிதம் பற்றி ஆய்வு செய்ததில், ஒவ்வொரு இரண்டு திருமணத்தில் ஒன்று விவாகரத்தில் முடிகிறது. நாடு தழுவிய விவாகரத்து விகிதாச்சாரம் என்னவெனில், ஒரு வருடத்தில் நடந்த 2,285,500 திருமணங்களில் 600,000 விவாகரத்துகள் நடைபெற்றுள்ள நிகழ்வானது எதைக் காட்டுகிறதெனில் சந்தேகமற்ற வகையில், தனது தவறான கொள்கைத் திணிப்பால் குடும்பக் கட்டுப்பாடும், அதன் சாதனங்களும், இதனிடையே எழுந்த மக்களின் மனநிலையும், அமெரிக்க தேசத்தைச் சமுதாயச் சீரழிவால், தனக்குள்ளே அழுகி நாற்றமெடுத்துக் கொண்டிருக்கிறது.

இன்னும் இந்த அமெரிக்க தேசமானது, கணவன் - மனைவி என்ற உறவையும், பெற்றோர் – குழந்தைகள் என்ற பந்தத்தையும் பேணிப்பாதுகாக்கவில்லையானால், அது இரு புறமும் பற்ற வைக்கப்பட்ட மெழுகுவர்த்திக்குச் சமமாகும். எவ்வாறு மெழுகு தன்னைத் தானே அழித்துக்கொள்கிறதோ, அது போல இவர்களும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த அழிவானது இவர்களுக்கு மட்டுமல்ல, நாளைய சந்ததிகளின் கலாச்சாரச் சீர்கேட்டுக்கும், ஏன் அந்த தேசத்தின் அழிவும் அதில் தான் உள்ளது.

மேலும் மக்கள் தொகைப் புள்ளிவிபரப்படி, 1,096,000 திருமணமான ஆண்கள் மனைவி இன்றியும், 1,526,000 பெண்கள் கணவன் இன்றியும் வாழ்கிறார்கள். திருமணமான பெண்களில் 4 சதவீதப் பெண்கள் கொடுமையான வாழ்வு வாழ்கிறாள். ஆண்டு ஒன்றுக்கு விவாகரத்து வகை வழக்குகளுக்கு மட்டும் இந்த தேசம் 250 மில்லியம் டாலர்கள் செலவு செய்கிறது.

மேலும், இது தொடர்பான விவாகரத்தின் விளைவாக அமெரிக்காவில் உள்ள மொத்தக் குழந்தைகளில் 25 சதவீதக் குழந்தைகள் பெற்றோர்களின் உண்மையான அன்பு கிடைக்காதவர்களாக உள்ளனர். ஏனெனில், இந்தக் குழந்தைகள் ஒன்று தாயைப் பிரிந்தோ அல்லது தந்தையைப் பிரிந்தோ வாழ்கின்றனர். இதன் மூலம் சரியான அன்பு பராமரிப்பு கிடைக்காததால், இக்குழந்தைகள் தவறான

பாதையில் செல்லக் கூடிய சமூகமாக மாறி வருகின்றனர். மேலும் இந்தப் பிரச்னையானது, நவீன நாகரீகம் எற்படுத்திய கொள்ளை நோய் போல் உள்ளது.

## 14. பாலியல் குற்றங்கள், கொலைகள், நோய்கள்

ஒரு சமூகம் அமைதியடனம், நிம்மதியுடனும் ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டுமெனில், அந்தச் சமூகம் இயைச்சம் கொண்டதாகவும், தாம் செய்யும் செயல் அத்தனைக்கும் மறுமை நாளில் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்ற கொள்கையையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

மேலைநாடுகளில், நம் இந்தியாவிலும் கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்க வேண்டிய இறையச்ச உணர்வு என்பது ஒரு பழமைவாதப் பண்பாக, கொள்கையாக அவற்றைக் கருதத்தலைப்பட்டதன் விளைவு, எதுவரை வாழ்வின் இன்பங்களை அனுபவிக்க முடியுமோ அவற்றை எந்தவழியிலேனும் பெற்றுஅவற்றை அடைய மனிதனுக்கு மட்டும் இறைவன் வழங்கியுள்ள அந்தத் தனிச் சிறப்பு அம்சமான அந்த வெட்க உணர்வைக் கூட உதறித்தள்ளி விட்டது இன்றைய சமூகம்.

குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டமும்,அது சார்ந்த குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களும், ஒரு குடும்பத்தின் குழந்தைகளின் அளவைக் கட்டுப்படுத்த மட்டும் பயன்படவில்லை. மாறாக, தனது கூடா ஒழுக்கத்தை, தவறான உடலுறவினால் ஏற்படும் கர்ப்பம் தரித்தல், பாலியல் நோய்கள் போன்றவற்றிலிருந்து தன்னைப் பாதகாத்தல்? போன்றவற்றிற்குப் பயன்படுத்தவும் தான் அந்த சாதனங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கள்ளத் தனமான விபச்சாரம் செய்யவும், அதன் மூலம் ஏற்படும் பால்வினை நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றிடவும், குடும்பக்கட்டுப்பாட்டு சாதனங்களைப் பயன்படுத்துமாறு, வெட்கம் கெட்ட அரசுகள் மக்களிடம் விளம்பரம் கூடச் செய்கின்றன.

கேடுகெட்ட விபச்சாரம் மூலம் தான் இந்நோய் பரவுகிறது எனத் தெரிந்திருந்தும், அந்த விபச்சாரத்தை தன் இரும்புக் கரம் கொண்டு அடக்க வக்கில்லாத அரசுகள், ஆண்களை நிரோத் உபயோகித்து விபச்சாரத்தில் ஈடுபடுமாறு, அறிவுரை கூறி அரசுகள் விளம்பரம் செய்து, அந்தச் சாதனம் மிக இலகுவாகக் கிடைக்க வசதியும் செய்து தந்துள்ளன. மேலும், இது வரை ஆண் மட்டும் நிரோத் அணிந்தது போக, பெண்ணும் அணிந்து கொள்ள ஏற்ற வகையில் நிரோத் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்தால், அந்த பெண் உறையின் விலை ரூபாய் 260 ஆகுமென்று, சென்னையிலேயே ஒரு நிறுவனம் அந்தப் பெண் உறையைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளதால், அதன் அடக்கவிலை ரூபாய் 6 க்குக் கிடைக்குமாம். மேலும், இதை 15 பெண்களுக்குக் கொடுத்து சோதனை வேறு நடந்து கொண்டிருக்கின்றதாம். நாடு தொழிற் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்கிறார்களே, அது இது தானா என்ற சந்தேகம் ஒவ்வொரு குடிமகனுக்கும் எழுகிறது. தகவல் : விடியல் வெள்ளி ஏப்ரல்-மே 1997.

மேலும், இன்றைய நாகரீகப் பெண்ணுக்கும், ஆணுக்கும் இரவுக் கேளிக்கைகள், நடன அரங்குகள், தியேட்டர், இசை, நட்சத்திர ஹோட்டல் வாசம், டிஸ்கோத்தே போன்றவைகள் எல்லாம் நவீன கலாச்சார யுகத்தின் அத்தியாவசியங்களாக மாறி விட்டன. இவற்றில் ஈடுபடும் ஆணும் பெண்ணும், தங்கள் கூடா உடலுறவை மறைக்க மேற்கண்ட குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களையும், அதற்கான மருந்துகளையும் நாட வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதில் அதிகம் பாதிக்கப்படுவது பெண் இனம் தான். ஏனெனில், மகப்பேறு என்ற அற்புதத்தை இறைவன் பெண்ணின் தனிச் சொத்தாக வழங்கியுள்ளதால், பெண் தான் செய்யும் தவறை மனதளவில் மறைத்தாலும் நான்கு மாத கர்ப்பம் அவளைக் காட்டிக் கொடுத்து விடும். கர்ப்பம் தரிப்பைத்

தடுப்பதற்காக, குடும்பக் கட்டுப்பாட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட மாத்திரைகள் மற்றும் அபார்ஷன் கிளினிக்குகளை நாட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதன் மூலம் உடல்கூறு, மனநலம் போன்றவற்றில் ஏற்படும் மாறுதல்கள், பெண்ணின் உடல்நலத்தை பின்னாளில் வெகுவாகப் பாதிப்படையச் செய்கின்றது. மேலும், பால்வினை நோய்கள், எய்ட்ஸ் போன்ற நோய்களுக்க ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேலும், நிலைத்து விட்ட கர்ப்பத்தை கலைக்க வழி இல்லாமல், திருமணமாகாமலேயே கள்ளக் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

மேலும், இந்தக் குடும்பக் கட்டுபாட்டு சாதனங்கள் இளைஞர்களை அதிக அளவில் வழி கெடுத்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில், அவை புழக்கத்தில் தாராளமாகக் கிடைப்பதாலும், சினிமா, வீடியோ, இணையத் தளங்கள், பத்திரிக்கை போன்ற ஊடகங்கள் இள உள்ளங்களின் மனதில், வக்கிரமமாக பாலியல் ஆசைகளைத் தூண்டி விடுவதன் காரணத்தாலும், இளமையின் வேகத்தில், அந்த இளைஞன் அல்லது இளம் பெண் தன் உணர்ச்சிகளுக்கு வடிகால் தேடி, அந்த இன்பத்தை அடைய வேண்டும் என்ற உணர்ச்சியின் உந்துதலால், விபச்சாரத்தை நாடிச் செல்ல வேண்டிய, அதில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலை கல்லூரி செல்லும் பெருநகர மாணவ மாணவியரிடையே அதிகம் காணப்படுகிறது. மேலும், வயதானவர்களை விட இளைஞர்களிடம் தான் இ ந்தப் பாலியல் நோய்கள் அதிகம் காணப்படுவதும் இதன் காரணங்களேயாகும்.

இது சம்பந்தமான ஆய்வுகளில் முதலில் பிரிட்டனைப் பார்ப்போம்.

## கள்ளக் குழந்தைகள் (Illegitimate Childrens)

### பிரிட்டன் :

பிரிட்டனில் ஒவ்வொரு ஆண்டும் 80,000 க்கும் அதிகமான கள்ளக் குழந்தைகள் பெற்றெடுக்கப்படுகின்றன. பிறக்கும் எட்டுக் குழந்தைகளில் ஒன்று கள்ளக் குழந்தை. ஒரு வருடத்தில் 1 லட்சம் பெண்கள் திருமணமாகாமலேயே கர்ப்பம் தரிக்கின்றார்கள். தினமும் 200-800 கருக்கலைப்பு நடைபெறுகிறது. மேற்கண்ட தகவல் 1947 ல் உள்ள நிலமை. 1963 புள்ளி விபரப்படி பிறக்கும் குழந்தைகளில் 6.6 சதவீதக் குழந்தைகள் கள்ளக் குழந்தைகள். இதில் 5 சதவீத கள்ளக் குழந்தைகள் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளாலும், 13 சதவீத கள்ளக் குழந்தைகள் 20 வயதுக்குட்பட்ட பெண்களாலும் பிரசவிக்கப்படுகின்றன.

சமீபத்தில், பிரிட்டனில் 15 வயதுப் பெண் கருவுற்றதை அறிந்து, அவள் கருவுற்றதற்குக் காரணமானவர் யார் என அறிய முற்படும் போது, அவளது வீட்டிற்கு அடுத்த வீட்டில் வசிக்கும் 11 வயதுச் சிறுவன் தான் என்பதை அறிந்தனர். அச்சிறுமியின் கர்ப்பத்தை, அவளது பெற்றோர்கள் கலைக்கவில்லை. அந்தச் சிறுமியிடம் பேட்டி காணும் போது, குழந்தையைப் பெற்றெக் கொடுத்து விட்டு, நான் பள்ளிக் கூடம் செல்ல இருக்கிறேன். மேலும் அச்சிறுவன் எனது குழந்தைக்கு நல்ல தந்தையாக இருப்பேன் என்று பேட்டியளித்துள்ளனர்.

என்ன நாற்றமெடுத்த நிலை பார்த்தீர்களா? இது நாகரீகத்தின் வெளிப்பாடோ?

### அமெரிக்கா

அமெரிக்க நிலையே மிகவும் பரிதாபமானது. இந்தக் கள்ள உடலுறவு விவகாரம் அமெரிக்காவின் சமூக ஒழுங்கின் ஆணிவேரையே அசைத்துள்ளது.

47 சதவீத ஆண்களும், 50 சதவீதப் பெண்களும் கள்ள நட்புக் கொண்டு உடலுறவிலும் ஈடுபடுகின்றார்கள்.

திருமணத்திற்கு முன் கள்ள உடலுறவு :-

ஆண் - 27-87

பெண் - 7-50

திருமணத்திற்குப் பின் கள்ள உடலுறவு :-

ஆண் - 10-45

பெண் - 5-26

## கருக்கலைப்பு

ஒரு வருடத்திற்கு 33,000 - 1,000,000. மேலும், இதே விகிதத்தில் ஆணும், பெண்ணும் திருமண பந்தத்திற்கு முன்பே தம் கள்ளத் தன்மையை இழந்து விடுவார்களானால், வருங்காலத்தில் கன்னித் தன்மை என்பதே ஒரு அதிசயமானதொரு விசயமாகப் போய் விடும் என்கிறார், மேற்கண்ட புள்ளி விபரத்தைச் சேகரித்த டாக்டர். பிட்ரிம் ஏ.செரோகின். இதே போல் திருமணத்திற்கு முன்பே ஏற்படக் கூடிய கள்ள உறவானது. ஒருவனுக்கு ஒருத்தி (இஸ்லாத்தைப் பொருத்தவரை ஒருத்திக்கு ஒருவன் என்ற கோட்பாடே சரியானது) என்ற கொள்கையைத் தவிர்த்து, பல் ஆண்களுடன் சேர்ந்து வாழக் கூடிய பாஞ்சாலி வாழ்க்கையையும், ஓரினச் சேர்க்கையையும் சமூகத்தில் மலிந்து விடுவதைப் பின்னாளில் காண முடியும் என்கிறார்.

மேலும், கின்ஸி என்பவரது, புள்ளி விபரப்படி, பிறக்கும் 5 குழந்தைகளில் ஒரு குழந்தை கூடா நட்பில் பிறந்த குழந்தை (Illegitimate Child) . பிறக்கும் குழந்தைகளில் 4 சதவீதக் குழந்தைகளைக் கன்னிப் பெண்கள் பெற்றெடுக்கின்றனர். கருவாகக் கூடிய 4 கற்பங்களில் 1 கரு கருக்கலைப்பு செய்யப்படுகின்றது.

## அமெரிக்கக் கல்லூரி நிலவரம்

ஆணும், பெண்ணும் சேர்ந்து பயிலும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் 15-20 சதவீதமானோர் மட்டுமே உடலுறவு விசயத்தில் ஈடுபடாதவர்களாக உள்ளனர். கடந்த 15 ஆண்டுகளில் கல்லூரிப் படிப்பு முடியுமுன்பே உடலுறவுப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாகக் கூடியள்ளது. மாணவிகளின் எண்ணிக்கை 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகக் கூடியுள்ளது.

இத்தகைய கள்ள உடலுறவில் ஈடுபடும் மாணவிகள், கருத்தடை மாத்திரைகளை உட்கொண்டு, கருக்கலையாமல் பிரசவித்த குழந்தைகளின் சதவீதம் 1940 ல் 8.4 ஆகும். அதே 1961 ல் 16 சதவீதமாகக் கூடியுள்ளது. - Birth Control BY Mawdhudhi.

## குற்றங்கள்

குடும்ப அமைப்பு என்பது தனது வருமானத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சி என்ற கருத்தைக் கொண்ட சமூகத்தில், தன் உடல் பசியை விபச்சாரம் மூலமும், கள்ள உடலுறவு மூலமும், ஆணும் பெண்ணும் தீர்த்துக் கொள்ள முனையும் போது, தன் உடல் பசிக்கு இணங்காத பெண்ணை ஆணும், ஆணைப் பெண்ணும் பாலியல் பலாத்காரம் செய்யக் கூடிய நிலை உருவாகி, கொலைகளில் கூட இந்த விவகாரம் முடிவதுண்டு.

கணவர்களாலும் காதலர்களாலும் அடிக்கப்படுவதே அமெரிக்கப் பெண்கள் காயப்படுத்தப்படுவதற்கு முழு முதற் காரணமாகும். (Surgeon General Report)

ஒவ்வொரு 18 வினாடிகளிலும் பெண்கள் நையப்புடைக்கப்படும் சம்பவம் நடக்கிறது. கொல்லப்படும் பெண்களில் 30 சதவீதம் பேர் கணவர்களாலோ அல்லது காதலர்களாலோ கொல்லப்படுகின்றனர் என குடீஐ கூறுகிறது.

1991 ம் ஆண்டு, வீட்டில் 11 லட்சம் பெண்கள் தாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது என 1992 அக்டோபரில் செனட் நீதி கமிட்டி கண்டறிந்தது. இது போன்ற சுமார் முப்பது லட்சம் குற்றங்கள் புகார் செய்யப்படாமலேயே விடப்பட்டுள்ளன என கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ராணுவத்தில் பணியாற்றும் பெண்களில் 42 சதவீதம் பேர் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

நான்கு பெண்களில் மூவர் மீது கொடூரமான குற்றம் இழைக்கப்படுகிறது. ஐவரில் ஒருவர் தன் வாழ்நாளில் ஒரு முறை கற்பழிக்கப்படுகின்றார்.

ஒவ்வொரு அமெரிக்கப் பெண்ணும், தனது வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒரு முறையாவது கற்பழிப்பு முயற்சியைச் சந்திக்கின்றார்.

கற்பழிப்புக்குள்ளாகும் 13 வயதுப் பெண் பிள்ளைகளுக்குக் குறைவில்லை. அது போல் பாதிக்கப்படும் 8 வயது குழந்தைகளுக்கும் கூட குறைவில்லை. (நியூ யார்க் டைம்ஸ். 13-06-1989)

கொல்லப்படும் பெண்களில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேல் இந்நாட்டில் கணவர்கள் அல்லது காதலர்களின் கரங்களாலேயே சாகின்றனர். மேலும் வீட்டில் நடக்கும் கொடுமை தான் இந்நாட்டில் பெண்களுக்கு அதிகம் ஆபத்து விளைவிக்கும் கொடுமைகளாகும். பெண்களுக்கு நகர தெருக்களை விட வீடு அதிக ஆபத்தானது. US Surgeon General Dr.Antonia C.Novello. 20 Oct 1991.

1985-1990 ஆம் ஆண்டுகளுக்கிடையே 18-19 வயது பெண்கள் பெற்ற குழந்தைகளில் பாதிக்கு மேல் திருமண உறவின்றி பெறப்பட்ட குழந்தைகளாவர். Census Bureau Report, N.Y.Times 4 Dec 91.

தற்காலத்தில் நடைமுறையிலிருக்கும் ஒழுக்கம் சம்பந்தமான மாற்றங்களின் விளைவாக நம் இளைய சமுதாயத்தினர் ஒரு காலத்தில் விபச்சாரிகளை உபயோகித்துக் கொண்டிருப்பது போல் இப்போது செய்யத் தேவையில்லாமலாகி விட்டது. A Government Report about Vienna, relayed by Reuters, Dawn, Karachi, 7 Jan 1952.

## நோய்கள் :

சுதந்திரமான உடலுறவுப் பழக்கங்களினால், உலகின் உயர்தர மருத்துவ வசதி, ஆணுறைகள், குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்கள், அது சார்ந்த மருந்துகள் இருந்தும் கூட, மேலைநாடுகளில் பாலியல் நோய்களின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகிறது. உதாரணமாக அமெரிக்காவில் நிகழும் நான்கு மரணங்களில் ஒன்று சிபிலிஸ் எனும் பாலியல் நோயின் காரணமாக நிகழ்கிறது என ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும், பாலியல் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் பாதிப்பேர் இளைஞர்கள் ஆவார். எங்கே இருந்து இந்தப் பாலியல் நோய்கள் வெளிக்கிளம்புகின்றன என்ற ஆராய்ச்சியை நாம் தொடர வேண்டிய தேவையில்லை. ஏனெனில் எங்கெல்லாம் விபச்சாரம் கொடி கட்டிப் பறக்கிறதோ, அங்கெல்லாம் பாலியல் நோய்கள் எய்ட்ஸ், சிபிலிஸ், கொனோரியா போன்றவைகள் அதிகரித்துக் கொண்டே தான் இருக்கும்.

1948-60 ல் எடுத்த புள்ளி விபரப்படி, கொனோரியா எனும் கொடிய பாலியல் நோயல் பாதிக்கப்பட்டவர்களில் 36 சதவீதம் ஆண்களும், 28 சதவீதம் பெண்களும் இருந்தனர். இவர்கள் 18-19 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. லிவர்பூல் எனும் நகரில் இந் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பாதிப்பேர் 14-21 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

பாலியல் நோய்களுக்குக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் தம் வீரியத்தை இழக்க ஆரம்பித்து விட்டன. அதன்பின் 1970 களில் எய்ட்ஸ் க்கான முதல் அறிகுறி தென்பட ஆரம்பித்தது. பின் 1981 ல் அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கை உடைய நபர்களிடம் இந்த நோய் அதிகம் பரவி இருப்பதை, அமெரிக்காவின், நோய் பரவல் கட்டுப்பாட்டு மையம் (Disease Control Centre) கண்டறிந்தது. அதன் பின் 20-49 வயதுடையவர்களிடம் இந்த எய்ட்ஸ் வைரஸ் கிருமிகள் அதிகம் பரவி இருப்பதை கண்டறிந்தனர். மேலும் இந்த நோய் குழந்தைகளையும் கூட விட்டு வைக்கவில்லை என்ற கொடுமையையும் கண்டுபிடித்தனர்.

## எய்ட்ஸ் பரவியதன் மூன்று காரணிகள்

HIV நோய்க் கிருமிகள் தொற்றுதல்

AIDS நோயின் பரவல்

சமூக, காலச்சார, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்தின் விளைவுகள், மேலுள்ள இரண்டு காரணங்களுக்கும் பொறுப்பாகும். CIMS – Sep-Dec-1993.

இந்தியாவிலிருந்து வெளிவரும் ஊஐஆளு (Current Index of Medical Specialities) குறிப்பிடும் இந்த மூன்றாவத காரணத்தைச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எந்த சமூகம் தனது காலச்சார விழுமங்களை நல்ல ஒழுக்கத்தின்பால் அமைத்துக் கொள்ளவில்லையோ அந்த சமூகம் வீழ்ச்சியைச் சந்திக்கும் என்பத உறுதி. அந்த வகையில் மேலைநாடுகளில் குடும்ப அமைப்பு சிதறியது, சமூக அமைப்பு சிதைந்து ஒழுக்கம் அதள பாதாளத்தை அடைந்தது. இதனால் விபச்சாரமும், ஓரினச் சேர்க்கையும் இதனூடே குடும்பக் கட்டுப்பாடும் அதன் சாதனங்ளும், சமூகத்தில் மனிதர்களின் மனங்களில் மாற்றத்தின் விளைவு, மனிதர்களிடமும் இருந்த, இருக்க வேண்டிய கூச்ச சுபாவத்தைக் கூட சுத்தமாக துடைத்தெறிந்து விட்டது எனலாம். அதனால் ஏற்பட்ட யுஐனுளு போன்ற பாலியல் நோய்களின் தாக்கத்தின் விளைவு, மனித இனத்தை அழிவுப் பாதையின் பால் இட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

## எய்ட்ஸ் பரவல் உலக அளவில்

### 1. உடலுறவு மூலம்

பெண்களின் மூலம் 60 சதவீதம்

ஆண்களின் மூலம் 15 சதவீதம்

### 2. இரத்தம் மூலம்

இரத்தம் செலுத்துதல் 5 சதவீதம்

ஊசிகள் 10 சதவீதம்

பச்சை குத்துதல் சிறிதளவு

### 3. தாய் மூலம் குழந்தைக்கு..! 10 சதவீதம்

கடந்த ஜு லை 1992 ல் உலக சுகாதார அமைப்பு **(WHO)** வெளியிட்ட அறிக்கையின்படி, உலகில் 168 நாடுகளில் 5 லட்சம் மக்கள் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த அளவு 1.7 மில்லியனாக இருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. இதில் 6 லட்சம் குழந்தைகள் எய்ட்ஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1993 நிலவரப்படி 10-12 மில்லியன் மக்களும், 1 மில்லியன் குழந்தைகளும் எய்ட்ஸ் நோயால் பாதிப்படைந்துள்ளனர். மேலும் 1995 ல் 4 மில்லியன் நோயாளிகள் அதிகமாகுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

மேலும், ஹார்வர்ட் என்ற அகில உலக சுயநிதி அமைப்பு மற்றும் மக்கள் நல வாழ்வுத்திட்ட ஆய்வு மையத்தின் ஆய்வு முடிவின்படி, 1995 ல் உலகம் முழுவதும் எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அளவு 20 மில்லியன்களாகவும், மேலும் இந்த அளவு 2000 ம் ஆண்டில் 40-110 மில்லியனாகவும் ஆகும் எனவும், இத்துடன் 10 மில்லியன் குழந்தைகளும் எய்ட்ஸ் நோயாளிகளாகக இருக்கக் கூடும் என மதிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் வளர்ந்த நாடுகளின் தர அளவுக்கு எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சைக்குச் செலவாகும் தொகை மட்டும் 9-15 லட்சம் ரூபாய்களாகும். இவ்வளவு செலவழித்தாலும் எய்ட்ஸ் கிருமிகளின் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுதலைடைய முடியாது.

மேலும் உலக எய்ட்ஸ் நோயாளிகளில் 21 சதவீதம் வயது வந்தோர், 42 சதவீதம் பெண்கள், பல மில்லியன் குழந்தைகள் ஒவ்வொரு வினாடிக்கும் ஒரு புதிய எய்ட்ஸ் நோயாளி உருவாகின்றார். னுச. நவநச ீைைடழவ. ருே யுஐனுளு – சமரசம்.

## எய்ட்ஸ் இந்திய நிலவரம்

2000 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 50 லட்சம் ஆகும். இந்த அளவு

டிசம்பர், 31, 1996 வரை பரிசோதிக்கப்பட்ட சாம்பிள்கள் : 29,37,345

உறுதி செய்யப்பட்ட சாம்பிள்கள் : 49,527

எய்ட்ஸ் பாதிக்கப்பட்ட நபர்கள் : 3,080

பாசிடிவ் விகிதம் 1992 ல் 7.1 சதவீதம் - 1000 பேருக்கு

1996 ல் 16.9 சதவீதம் - 1000 பேருக்கு

எய்ட்ஸ் ன் தலைநகர் பம்பாயின் நிலவரம் :

மராட்டிய சுகாதார மையம் தரும் புள்ளி விபரம் :

எய்ட்ஸ் நோயுள்ள விலைமாதர்களிடம் தொடர்பு கொள்ளும் ஆண்கள் 6 கோடியே 62 லட்சம்.

1 கோடியே 48 லட்சத்து 58 ஆயிரம் பேர் மும்பை சிவப்பு விளக்குப் பகுதிக்கு வந்து எய்ட்ஸ் நோயாளிகளாகத் திரும்புகிறார்கள்.

பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியில் உள்ள பெண்களில் 70 ஆயிரம் பேருக்கு எய்ட்ஸ் உள்ளது. அதாவது 80 பெண்களில் 61 பெண்களுக்கு எய்ட்ஸ் உள்ளது.

மும்பையில் மட்டும் மணிக்கு 8 ஆண்கள் வீதம் நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

உலக நாடுகளில் எய்ட்ஸ் பாதிப்பு இந்தியாவில் அதிகம். மும்பையில் மட்டும் ஒரு நாளைக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் பேர் HIV வைரஸால் பாதிக்கப்படுகின்றனர்.

மும்பையில் உள்ள 80,000 விலைமாதர்களில் 40,000 பேர் எய்ட்ஸ் நோயாளிகள். உலகமெங்கும் 150 லட்சம் ஆண்களும், 120 லட்சம் பெண்களும் எய்ட்ஸ் நோயாளிகளாக இருக்கின்றார்கள். - மும்பையில் உள்ள வாடியா மகப்பேறு மருத்துவமனை டாக்டர். குமுத் இங்கில் வெளியிட்ட புள்ளிவிபரம்.

தீர்வுகள் பலவிதம் :

டாக்டரின் தீர்வு :

பாலியல் கல்வியைப் பற்றி மக்களுக்கு போதிப்பது - டாக்டர் குமுத் இங்கில்

அரசின் தீர்வு :

மக்களுக்கு நிரோத்தை பயன்படுத்த விளம்பரம் செய்வது. அவற்றை மக்களுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்வது

ஆணுக்கு மட்டுமா? பெண்ணுக்கும்?!!

ஆண்களுக்கு மட்டும் தான் நிரோத் (ஆணுறையா?!) பெண்களுக்கும் பாதுகாப்பு உறை வந்து விட்டது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்தால் ஒரு உறைக்கு ரூ. 260 ஆகின்றது. ஆனால் இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதால் ரூ. 6.00 க்குக் கிடைக்கச் செய்ய முடியும். - எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மகளிர் அணியினர். விடியல் வெள்ளி ஏப்ரல்-மே 1997.

அரசின் திட்டங்களும், மருத்துவர்களின் ஆலோசனைகளும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பின் தீர்வுகளும் எய்ட்ஸ் நோயைத் தடுக்க பயன்படாது என்பது தெளிவு. மேலும், இவர்கள் சொல்லும்

பாலியல் கல்வியும், குடும்பக்கட்டுபாட்டு சாதனங்களாகப் பயன்படும் ஆண் நிரோத் - ம், பெண் பாதுகாப்பு உறைகளும், இற்றைப் பயன்படுத்துவதால் எய்ட்ஸ் கிருமிகளிலிருந்து பாதுகாப்புப் பெறலாம் எனில், இந்தக் குடும்பக் கட்டுபாட்டு சாதனங்களின் பயன்பாடு தான் என்ன? எதற்கோ பயன்பட வேண்டிய ஒன்று, சமூகத்தில் விபச்சாரப் பரவலுக்கும், சமூகச் சீரழிவுக்கும் தான் அதிகம் பயன்பட்டுக் கொள்டிருக்கின்றது எனலாம்.

இவ்வளவு விளம்பரங்களும், நிரோத் உறையை எளிதாகக் கிடைக்கச் செய்தும், எய்ட்ஸ் நோயின் பரவலைத் தடுக்க முடிந்ததா? எல்லாம் தோல்வி மயம்!

## 15. வளர்ந்த நாடுகளுடன் போட்டி போடும் இந்தியா?!

இன்னும் சில ஆண்டுகளில் இந்தியா வளர்ந்த நாடுகளின் பட்டியலில் இடம் பிடித்து விடும்? ஆம்!

பிரிட்டனும், பிலிப்பைன்ஸ் நாடும் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. அதாவது, சிறுமிகளிடம் செக்ஸ் வைத்துக் கொள்வதற்காகவே, பிரிட்டனிலிருந்து உல்லாசப் பயணிகள் பிலிப்பைன்ஸ் நோக்கிப் படையெடுப்பதைக் கட்டுப்படுத்தவும், சிறுமிகளிடம் (செக்ஸ்) உடலுறவு கொண்டு, விபச்சாரம் செய்ய வரும் பிரிட்டன் பயணிகளை கண்டுபிடித்து, கைது செய்து தண்டனை வழங்கவும் இரு நாடுகளும் கூட்டாக, ஒப்பந்தம் செய்துள்ளன. இதற்காக இரு நாடுகளிலும் துப்பறியும் நிபுணர்களை பரிமாறிக் கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது.

அடுத்து ஜப்பான், சிறுமிகளிடம் உல்லாசம் காண வாருங்கள் என பொது இடங்களில் விளம்பர போர்டே மாட்டி வைத்து, விபச்சாரம் செய்ய அழைக்கிறது.

இந்த வளர்ந்த நாடுகளின் அளவுக்கு இந்தியாவும் வளர வேண்டாமா?

சுற்றுலாப் பயணிகளின் காமப்பசிக்கு 40,000 சிறுமிகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

இந்தியக் குற்றவியல் சட்டம் 18 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளை விலைக்கு வாங்குவதும், விற்பதும், விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதும் தண்டனைக்குரிய குற்றம் என்கிறது. இருந்து என்ன செய்ய? வளர்ந்த நாடுகளுடன் நாமும் போட்டி போட வேண்டாமா? என்ன?!!

## குடும்பக் கட்டுபாட்டு முறைகளும், அதனால் ஏற்படும் மனநிலை, உடல்நிலை பாதிப்புகளும்

---

இறைவன் தன் படைப்புகள் அத்தனையையும் ஆண் என்றும், பெண் என்றும் இரு வேறு பாலியல் தன்மை கொண்டவர்களாகப் படைத்துள்ளான். இறைவனது படைப்பின் நோக்கமே, மனிதனும் ஏனைய ஜீவராசிகளும் தமது சந்ததிகளைப் பெருக்கி, அந்தப் படைப்பினங்கள் யாவும் இப் பூவுலகில் நிலை பெற்றிருக்க வேண்டும் என்பதேயாகும்.

ஏனெனில், மனிதனைப் பற்றி இறைவன் குறிப்பிடும் போது, பூமியில் பிரதிநிதியாக மனிதனைப் படைத்துள்ளேன் என்கிறான். அத்தகைய பிரதிநிதியின் வாழ்வு தேக்கமில்லாமல் நடைபெறவே சூரியனும், சந்திரனும், ஏனைய கோள்களும், அவற்றினூடே காற்றும், மழையும், வெப்பமும் மற்றும்

தாவரங்களையும் அதன் மூலம் உணவு வகைகளையும், விலங்கினங்களையும், பறவை இனங்களையும் இறைவன் படைத்துள்ளான்.

மேலும், நூஹ் நபி காலத்தில் வெள்ளத்தைக் கொண்டு இந்தப் பூமியில் வாழ்ந்த மனிதர்களை அழிக்க நாடிய போது கூட, தன்னுடைய பிரதிநிதியாக உண்மையாகச் செயல்பட்டவர்களையும், அவர்களின் வாழ்வு தேக்கமின்றி நடைபெறவும், எல்லா விலங்கினங்களிலும், தாவரங்களிலும் அதனதன் ஜோடிகளை கப்பலில் ஏற்றிக் காப்பாற்றினான் இறைவன்.

அதன் மூலம் இப்பூமியில் மனிதனும் ஏனைய ஜீவராசிகளும், தமது சந்ததிகளைப் பெருக்கி நலை பெற்றிருக்க வேண்டும் என்பதே இறைவனின் நோக்கம். இதில் பெண்ணை மென்யானவளாகவும், குழந்தைப் பேற்றைச் சுமப்பவளாகவும், தாம் பெற்ற குழந்தைகளைத் தனிக் கவனத்துடன் தன் அன்பைப் பொழிந்து, அது தரும் சிறிய மற்றும் பெரிய தொந்தரவுகளை கசித்துப் பராமரிக்கும் பண்பைப் பெற்றவளாகவும், இறைவன் படைத்துள்ளான். அதற்கேற்றவாரே அவளது உடலும், மனமும், இன்ன அமைப்புகளும் இயற்கையாகவே அமைந்துள்ளது.

மேலும், ஆணுக்குரிய ஆண்மை, ஆளுமை மற்றும் பெண்ணுக்குரிய பெண்மை,தாய்மை போன்ற பண்புளில் செயற்கையாக ஏதேனும் தடையை ஏற்படுத்தும் போது, தேவையில்லாத சில பிரச்னைகளை அது உடல் அளவிலும் மன நிலையிலும் ஏற்படுத்தி விடுகிறது.

இது போல கருத்தடை மற்றும் குடும்பக் கட்டுபாட்டுச் சாதனங்களின் பங்கும், அதாவது, குடும்பக் கட்டுபாட்டுக்காகப் பயன்படுத்தப்படும் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் ஆணினுடைய அந்த ஆளுமையை, ஆண்மையைப் பாதிக்கிறது. மேலும் இந்தப் பாதிப்பு தற்காலிக மலட்டுத் தன்மையை ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றது. அதாவது, ஆணுறை அணிந்து ஒரு ஆண் தன் மனைவியுடன் கூடும் போது, அவன் எதிர்பார்க்கும் அந்த முழு திருப்தியை, அந்த ஆணுறை தடுத்து விடுகிறது.

இதையே 1927 ல் பிரிட்டனின், தேசிய குடும்பக்கட்டுபாட்டு ஆணையம் வெளியிட்ட அறிக்கை உறுதி செய்கிறது. ஒரு ஆண் தன் மனைவியிடம முழுத் திருப்தியை அவன் அடையவில்லை எனில், அவனது உணர்ச்சிக்கு, இயற்கையானதொரு வடிகால் கிடைக்கவில்லை எனில் அங்கே அவனது திருமண பந்தம் என்ற அமைப்பில், அவனது எதிர்பார்ப்பு கொள்ளையிடப்படுகிறது. இதன் மூலம் திருப்தியற்ற ஆண், தன் உணர்ச்சிக்கு சரியான வடிகால் நாடி, பிறமனை நோக்க வேண்டிய, அதாவது விபச்சாரம் நாடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன் மூலம் அவன் தன்னைப் பாலியல் நோய்களுக்கு உட்படுத்தி விடுகின்றான்.

அதுபோல பெண்ணுக்கு, மருத்துவ நோக்கில் கருத்தடை சாதனங்களை - மருந்துகளைப் பயன்படுத்தும் போது அவளது உடல்நலம் பேணப்படுகிறது. அதுவல்லாத குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி மட்டும் பயன்படுத்தும் போது, அவளது முழு உடல் தொகுதியும், நரம்பு மண்டலங்களும் பாதிப்படைகின்றன. இதன் மூலம் கொடிய நோய்களுக்கும், மன வியாதிகளுக்கும் அவள் ஆளாக நேரிடுகிறது. உண்மையிலேயே அவளது கணவனுடன் கிடைக்க வேண்டிய தாம்பத்ய இன்பத்தையும் அவள் இழந்து விடுகின்றாள்.

மேலும், குடும்பக்கட்டுப்பாட்டு சாதனங்களைப் பயன்படுத்து போது குழந்தைப் பிறப்பு தடுக்கப்படுகிறது. அதையடுத்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்க வேண்டிய தார்மீகப் பண்பு, பாசம், இயற்கையான தாம்பத்ய அமைப்பு போன்றவற்றை மழுங்கடித்து விடுகிறது. மேலும் உடல் சுகமே பிரதானம் என்ற மனநிலையை இருவரிடமும் தோற்றுவித்து விடுகிறது. அதுபோலவே, பெண் மகப்பேறு எய்துவதும், அதன் மூலம் அவளது தாய்மைப் பண்புகள் பூரிப்படைந்து, தாய்மை பெறுவதன் மூலம் அவளது பெண்மை முழுமையடைவதும், அந்தக் காலங்களில் கணவனும் மனைவியும் பரஸ்பரம் தங்கள்

சுகங்களை வளரும் சிசுவுக்காக தியாகம் செய்வதும், குழந்தை பிறந்த பின்ப, அக் குழந்தை மீது அன்பு பொழிவதும், தங்களது நலன்களை, சுகங்களை அந்த குழந்தைகளுக்காகத் தியாகம் செய்வதும் ஆகிய மனிதப் பண்புகளை, இந்தக் குடும்பக் கட்டுபாட்டு சாதனங்கள் துடைத்தெறிந்து விடுகின்றன. குடும்பக் கட்டுபாட்டு சாதனங்களைப் பயன்படுத்தும் ஆணிடமும், பெண்ணிடமும் உடல் நெருக்கம் இருக்கும் அளவுக்கு மன நெருக்கம் இருக்காது என்பது ஆய்வுகள் கூறும் உண்மையாகும்.

மேலும், இன்று நடைமுறையில் புழக்கத்தில் இருக்கும் குடும்பக்கட்டுபாட்டு சாதனங்கள், மருந்துகள் எதுவாக இருப்பினும் அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தும் போது அதைப் பயன்படுத்துபவரின் அந்திம காலத்தில் மிகப் பெரிய நரம்பியல் பாதிப்புகளுக்கு அது வழி வகுத்து விடும். மேலும் மன இறுக்கம், எளிதில் கோபடைதல், மன அமைதியின்மை, குறைந்த இரத்த அழுத்தம், தூக்கமின்மை, இருதய பலவீனம், மூளைக் கோளாறு, முறையற்ற மாதவிடாய் போன்ற 28 வித நோய்களுக்கும், மேலும் கருத்தடை சாதனங்களை அதிகம் பயன்படுத்தும் போது, கர்ப்பப்பை செயலிழந்தும் மற்றும் ஞாபகமின்மை, வலிப்பு நோய், இரத்த ஒழுக்கு போன்ற நோய்களும் ஏற்பட காரணமாக அமைந்து விடும். மேலும், பெண்ணின் உடலியல் தொகுதியில் ஏற்படும் மாற்றம் தாய்மை அடையும் தன்மையையும் அவளது கருப்பை இழப்பதோடு, அப்படியே கர்ப்பம் தரித்தாலும், பிரசவ நாளில் அவள் கடுமையான வலியையும், சுகவீனத்தையும் அடைய நேரிடும்.

ஒரு பெண் தனது இளமைப் பருவம் கடந்து, பெண் எனும் அந்தஸ்தை அடையும் போது அவளது அத்தனை நரம்புத் தொகுதிகளும், நாளமில்லாச் சுரப்பிகளும், அவளைத் தாய்மை எனும் பண்புக்குத் தயார் செய்கின்றன. இந்த செயல்பாடுகள் அவள் தாயாகும் தகுதி கொண்ட காலம் வரை ஒரு சங்கிலித் தொடர் போல், மருத்துவக் கணக்குப்படி 28 நாள் கொண்ட ஒரு சுழற்சியாக செயல்பாட்டில் இருந்து கொண்டே இருக்கும்.

இந்த இரசாயனச் செயல்பாட்டில், மனிதன் வேண்டுமென்றே ஒரு செயற்கையான தடையை உண்டு பண்ணும் போது, அத்தனை ரசாயனத் தொகுதிகளும் முழு மாற்றம் அடைவதுடன் தேவையில்லாத எதிர் விளைவுகளை ஏற்படுத்த காரமாகிறது. சீரான வேகத்தில் செல்லும் ரயில் தடையேதும் இல்லாத வரை பாதுகாப்பானது, இடையே 1 முழ இரும்புத் துண்டு குறுக்கிட்டாலும், மொத்த ரயிலும் விபத்துக்குள்ளாவது போலத் தான், இந்த மனிதனின் நரம்புத் தொகுதியும் பாதிப்படையும் என்பது உண்மை.

மேலும், மனிதனுக்குத் தேவையான செக்ஸ் தன்மையை மட்டும் இந்த நாளமில்லாச் சுரப்பிகள் சுரப்பதில்லை. மாறாக, மனிதனுக்கு ஆளுமையையும், சுறுசுறுப்பையும், வசீகரத்தையும், அழகையும் அவை தருகின்றன. இந்த நாளமில்லாச் சுரப்பிகளின், அவற்றிற்கேயுரிய செயல்பாடுகளை முழு அளவில் செய்ய விடாது, தடையை ஏற்படுத்தும் போது, அவற்றின் பயன்பாடே அர்த்தமில்லாத ஒன்றாகி விடுகிறது.

1. குடும்பக்கட்டுபாட்டு முறைகள்

1 தற்காலிக கருத்தடை முறை (Reversible Method)

2 நிரந்தரக் கருத்தடை முறை (Irreversible Method)

### தற்காலிக கருத்தடை முறைகள் :

கழுவும் முறை (Douche)

மாதவிடாய் நாளைக் கணக்கிட்டு உடலுறவு கொள்ளும் முறை (Rhythm Method)

உடலுறவின் உச்சத்தில் ஆண்குறியை வெளியில் எடுத்து, பெண்ணின் உறுப்புக்கு வெளியே விந்தை வெளியேற்றுதல் (Withdrawal or Coitus Interptus – in Arbic "AZL")

பெண்ணின் உறுப்பில் பாயும் விந்தை அழிக்கும் மாத்திரைகள் (Spermicides, Suppositories, Foaming Tablets etc.,)

நிரோத் அல்லது ஆணுறைகள் (Condoms)

பெண்ணுறை (Diaphragm)

கர்ப்பப்பைகளில் பொருத்தக் கூடிய கருத்தடை சாதனங்கள் (Intra – Uterus Devices (IUD), eg : Loop, Coil etc.,)

புரோஜெஸ்டோஜன் மாத்திரைகள் (Projestogen Pills)

புரோஜெஸ்டோஜன் ஊசி மருந்து (Projestogen Injection)

ஏனைய மாத்திரைகள் (The Pills)

## கழுவும் முறை (Douche)

இது நடைமுறையில் இல்லை.

## மாதவிடாய் நாளைக் கணக்கிட்டு உடலுறவு கொள்ளும் முறை (Rhythm Method)

இம்முறைப்படி மாதவிடாய் ஆனதன் பின் உள்ள ஒரு வாரமும், மாதவிடாய் ஆரம்பிக்கு முன் உள்ள ஒருவாரமும் உடலுறவு கொள்ள பாதுகாப்பான காலங்களாகும். இந்த காலங்களில், மாதவிடாய ஆன பின் உள்ள ஒரு வாரத்தில் சினை முட்டை, விந்துடன் சேர்ந்து கருத்தரிப்பதற்கு தகுதியற்ற நிலையில் இருக்கும். அதாவது, அப்பொழுது தான் கரு முட்டையானது வளர்நிலையில் இருக்கும். அடுத்து, மாதவிடாய்க்கு முன் உள்ள ஒரு வாரத்தில் சினை முட்டையானது முற்றிலும் முதிர்வடைந்து, கருத்தரிப்பதற்குண்டான தகுதியை இழந்திருக்கும். எனவே, மருத்துவ நோக்கில், இந்த காலங்களில் உடலுறவு கொள்ளும் போது, கருத்தரிப்பதற்கு வாய்ப்பு அதிகம் இல்லை என்று சொல்லலாமே தவிர, கருத்தரிப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று கூறி விட முடியாது. இந்த இரு வாரங்களுக்கும் இந்த இரு வாரங்களுக்கும் இடைப்பட்ட நாட்கள் கருத்தரிப்பதற்கு அதிகம் வாய்ப்பு உள்ள நாட்களாகும்.

இந்த முறை ஆணுக்கும், பெண்ணுக்கும் பாதுகாப்பானது. ஆனால் அந்த பாதுகாப்பான நாட்களை கணக்கிடுவது என்பது இயலாத ஒன்று. மேலும் இந்த முறையில், இறைவன் விதித்ததை யாராலும் மாற்ற இயலாது.

## வெளியேற்றுதல் (Withdrawal or Coitus Interptus – in Arbic "AZL")

இந்த முறை இஸ்லாத்தில், பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களால் அனுமதிக்கப்பட்ட முறை என்பதை கவனத்தில் கொள்க.

இந்த முறைப்படி, உடலுறவின் உச்சத்தின் பொழுது வெளியேறும் விந்தை பெண்ணின் பிறப்புறுப்பிற்கு உள்ளே செலுத்தி விடாமல், பெண்ணின் உறுப்பிலிருந்து ஆண் குறியை வெளியில் எடுத்து, விந்தை வெளியில் கொட்டி விடுவதாகும். இந்த முறை ஆணுக்கும் பெண்ணுக்கும் மிகப் பாதுகாப்பான முறையாகும்.

### பெண்ணின் உறுப்பில் பாயும் விந்தை அழிக்கும் மாத்திரைகள் (Spermicides, Suppositories, Foaming Tablets etc.,)

இந்த வகை மாத்திரைகளை உடலுறவுக்கு முன் பெண் உறுப்பின் உள்ளே செலுத்தி விடும் போது, உடலுறவின் பொழுது வெளியாகும் விந்தை, இந்த மாத்திரைகளில் கலந்துள்ள இரசாயனப் பொருள், விந்தில் கலந்துள்ள உயிரணுக்களைக் கொன்று விடுகின்றது. இதன் மூலம் பெண் கருவுறாமல் தடை செய்யப்படுகின்றது.

ஆனால் இத்தகைய மாத்திரைகள் பெண் உறுப்பில் நமைச்சலையும், அரிப்பையும், சில நேரங்களில் தீச்சுட்டால் ஏற்படும் எரியும் உணர்வையும் (Burning Sensation) கொடுக்கும்.

### நிரோத் அல்லது ஆணுறைகள் (Condoms)

இது ஆண்கள் அணியக் கூடியது. இது உடலுறவின் போது, வெளியிடும் விந்தை ஆண் உறுப்பில் அணிந்திருக்கும் உறை தடுத்து தன்னுள் சேமித்துக் கொள்வதால், பெண் கருவுறுவது தடுக்கப்படுகிறது.

மேலும், ஆணுறை அணிந்து உடலுறவு கொள்வதால், ஆணுக்கும், பெண்ணுக்கம் கிடைக்க வேண்டிய முழு திருப்தியைத் தடை செய்து விடுகின்றது. மேலும், இவற்றை அதிக அளவில் பயன்படுத்தும் போது, மனரீதியாக ஆணும், பெண்ணும் சில மாறுபாடுகளையும், வழி தவறல்களையும் சந்திக்க நேரிடும் என்பதை முன்னரே விளக்கியுள்ளோம்.

### பெண்ணுறை (Diaphragm)

இது ரப்பரால் செய்யப்பட்ட, நெகிலும் தன்மை கொண்ட, தலைக்கு அணியும் தொப்பி போன்ற அமைப்பைக் கொண்டது. இதை பெண்ணின் உறுப்பில், உடலுறவுக்கு முன் அணிவிக்கக் கூடிய கருத்தடை சாதனம் ஆகும். மேலும், உடலுறவின் போது வெளியிடும் விந்தை, பெண் உறுப்பில் அணிந்திருக்கும் இந்த சாதனம் தடுத்து, பெண் கருவுறுவதைத் தடை செய்கிறது. ஆனால் உடலுறவுக்குப்பின் குறைந்தது 6 மணி நேரமாவது அணிந்திருத்தல் வேண்டும். மேலும், இதை அணிவிக்க மருத்துவர் அல்லது நர்ஸ் ஆகியோருடைய உதவி அவசியம்.

மேலும், இப்பொழுது நவீன பெண்ணுறை சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, விரைவில் மக்களின் உபயோகத்திற்கு வரவிருக்கின்றன.

மேலும் இதுவரை பார்த்த ஆறு விதமான கருத்தடை முறைகளும் பயன்பாட்டில் பல்வேறு விதமான முறைகளைக் கொண்டாலும், கர்ப்பப்பையில் விந்து சேர்ந்து கருத்தரிப்பதைத் தடை செய்யக் கூடிய

முறைகளான இவற்றை வைத்து நோக்கும் போது, நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதித்த சம்மதம் தந்த நடைமுறையான அஸ்ல் (3 வது முறை) ஐ ஒத்து இருக்கிறது.

ஏனெனில், அஸ்ல் முறையில் பெண்ணின் கரு முட்டையும், ஆணின் விந்தணுவும் சேர்ந்து கருத்தரிப்பதற்கு முன்பே, விந்தணுவானது பெண்ணின் உறுப்புக்கு வெளியே வெளியேற்றப்படுகிறது.

இதே முறையில் தான் மேற்சொன்ன ஆறு முறைகளும் அமைந்துள்ளன. எனவே, மேற்சொன்ன இந்த முறைகள் செயல்பாட்டில் வேறு வேறு விதமாக அமைந்திருந்தாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழி முறையான அஸ்ல் க்கு ஒப்பாக அமைந்துள்ளது எனலாம்.

## கர்ப்பப்பைகளில் பொருத்தக் கூடிய கருத்தடை சாதனங்கள் (Intra – Uterus Devices (IUD), eg : Loop, Coil etc.,)

கருப்பையில் பொறுத்தக் கூடிய இந்த சாதனங்கள் கருத்தரிப்பதை தடை செய்கின்றன. பெண் முட்டையும், ஆண் விந்தும் சேர்ந்த பின் கருத்தரிப்பதையும், கர்ப்பப்பையில் நிலை கொள்வதையும் தடை செய்கிறது. மேலும், இந்த சாதனங்களிலிருந்து வெளியாகிக் கொண்டிருக்கும் இராசாயனம் (Chemical Compound) விந்தணுவை செயலிழக்கச் செய்கிறது.

சிலவேளைகளில் இதையும் மீறி கர்ப்பம் ஏற்பட்டு விடுவதுண்டு. இவ்வாறு கர்ப்பம் ஏற்படும் போது, கருவானது கருவறைக்கு வெளியே வளர ஆரம்பிக்கின்றது. இதற்கு ECTOPIC (at a site outside of womb) PREGNANCY என அழைக்கப்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் கர்ப்பங்கள், 4-6 மாதங்களில் கருச்சிதைவு உண்டாவதற்கு அதிகமான சந்தர்ப்பங்கள் உண்டு. கரு உண்டாகாமல் இருப்பதற்காகவே அணியப்பட்ட சாதனங்கள் அதன் வேலையை சரிவரச் செய்யாமல், கருவையும் உண்டாக்கி, கருச்சிதைவையும் ஏற்படுத்துமானால், அதன் பயன்பாடு என்ன என்பது ஒரு கேள்விக் குறியானதொன்று!*

* Abortion, Birth Control & Surrogate Parenting. By Abul Fadl Mohsin Ebrahim (Quoted from South African Family Medical Advisor, Cape Town, The Reader's Digest Association of South Africa (pty) Limited., 1983, 254)

மேலும், இந்தக் காப்பர் டி என்ற கருத்தடைச் சாதனமானது என்ற சிறு உலோகக் குச்சியுடன் கொண்டது. மேலும், இந்த சாதனம் கர்ப்பப்பையில் இருக்கும் போது, கர்ப்பப்பையில் இருக்கும் திரவத்துடன் இணைந்து காப்பர் திரவத்தை மெதுவாக வெளியேற்றிக் கொண்டிருக்கும். இதனால் கர்ப்பப்பையில் காப்பர் திரவம் சூழ்ந்திருக்கும் போது, உடலுறவின் போது வெளியேறும் விந்தில் உள்ள அணுக்களை இந்த காப்பர்திரவம் அழித்து விடுகின்றது.

மேலும், இது ஒரு உலோகக் குச்சியால் செய்யப்பட்டிருப்பதால், கர்ப்பப்பையில் புண் ஏற்படுத்தி துறைகளை உண்டாக்க நிறைய சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால், கர்ப்பப்பையிலிருந்து இரத்தம் வெளியேறி, இரத்த ஒழுக்கு ஏற்பட அதிகம் வாய்ப்பு உண்டு.

எனவே, இத்தகைய கருத்தடைச் சாதனங்கள், பெண்ணுக்கு எந்தவித தீங்கையும் விளைவிக்காது என அறுதியிட்டுச் சொல்ல முடியாது. இதன் பயன்கள் அதிகம் இருந்தாலும், குறைவான எதிர்விளைவு கூட மிகுந்த ஆபத்தானதொன்றாகவே உள்ளது. மேலும், இச்சாதனங்கள் அணிந்தும், கர்ப்பம் தரிப்பது என்பது 2 - 3 சதவீதம் தான் இருக்கும் எனலாம். அது 1 சதவீதம் இருந்தாலும் கூட,

பாதிப்பு என வரும் போது, அது பெண்ணுக்கு மிகுந்த ஆபத்தை தரவல்லதாகவல்லவா அமைந்து விடுகிறது. 4-6 மாதங்களில் கர்ப்பம் கலையும் போது, அவள் மிகுந்த சிரமத்திற்கும், அதிகமான இரத்த ஒழுக்கு, இதுமட்டுமல்ல அவளது உயிருக்கே கூட அது ஆபத்தாக முடியலாம்.

மேலும், காப்பர் டி ஏற்படுத்தும் புண், இனி அவள் தாய்மை அடைவதை நிரந்தரமாகத் தடுக்கக் கூடிய ஒன்றாக அல்லவா அமைந்து விடும்.

எனவே, இவையும் இஸ்லாம் எதிர்பார்க்கும் அந்த தகுதியை எட்டவில்லை என்றே சொல்லலாம்.

## புரோஜெஸ்டோஜன் மாத்திரைகள் (Projestogen Pills) மற்றும் புரோஜெஸ்டோஜன் ஊசி மருந்து (Projestogen Injection)

இன்று கருத்தடைக்காக அதிக அளவில் பயன்படுத்தப்படுவது, இந்த மாத்திரைகளைத் தான். ஆனால் இந்த மாத்திரைகள் மற்றும் ஊசிகளின் பின்விளைவுகளை அதிகம் பேர் அறிய வாய்ப்பில்லை. மேலும், இன்று நடைமுறையில் இருக்கும் கருத்தடை மாத்திரைகளும் ஊசிகளும் 100 சதவீதம் கருத்தடைக்கு உத்தரவாதம் தர இயலாத காரணத்தால் அவற்றைப் பயன்படுத்தியும், அவற்றையும் மீறி கரு உண்டாகி விட்டால், ஏற்பட்ட கர்ப்பத்தைக்கலைப்பதற்கு, மருத்துவமனைகளை நாட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அது அவசியத்திலும் அவசியமும், அவசரமும் கூட. அவ்வாறு கருக்கலைப்பு செய்யவில்லை எனில், பிறக்கும் குழந்தை ஊனமுடனும், அதிக குறைபாடுகளுடனும் பிறக்கக் கூடிய வாய்ப்பு அதிகம் உண்டு.

### கருத்தடை மாத்திரை செயல்படும் முறை :

வயது வந்த பெண்ணினுடைய மாதவிடாய்க் காலமான 28 **(+ or - 2)** நாள் சுழற்சியில், மாதவிடாய் ஏற்பட்ட 14 வது நாள் தாய்மை அடைய அதிகம் வாய்ப்புள்ள நாட்களாகும். இந்த மாதவிடாய்ச் சுழற்சியின் போது பிட்யூட்ரி (Anterior Pitutory) என்ற நாளமில்லாச் சுரப்பியிலிருந்து வெளியாகும் FSH (Follicle Stimulating Hormone) என்ற ஹார்மோன், பெண்ணின் இன விருத்தி உறுப்பின் ஒரு பாகமான கிராஃபியன் பாலிக்கில் (Graffian Follicle) - ஐ முதிர்வடையச் செய்கிறது. மேலும் பிட்யூட்ரி (Anterior Pitutory) என்ற நாளமில்லாச் சுரப்பியிலிருந்து வெளிவரும் இன்னும் ஒரு ஹார்மோனான LH (Leutenizing Hormone) என்ற ஹார்மோன் கரு உண்டாகும் நேரத்தில், இந்த கிராஃபியன் ஃபாலிக்கிலை (Graffian Follicle) த் தூண்டி, கரு வளர்ச்சி அல்லது சினைப் பிடித்தலை விரைவாக்குகிறது. மேலும் Fallopian Tube ல் இருக்கும் கருமுட்டையை விந்தணுவானது அடைந்து, கருக்கொள்கிறது. கருக்கொண்ட முட்டையானது, பின் என்ற நிலையை அடைந்து, கருவுற்ற நாளிலிருந்து 21-23 வது நாள் கருப்பையில் நிலை கொள்கிறது. இந்த நிலை கொள்ளும் படி நிலை 35ம் நாள் முடிவடைகின்றது.

மேற்கண்ட கரு வளர்நிலைகளைத் தடை செய்வதே கருத்தடை மாத்திரைகள் பங்காகும். இந்த கருத்தடை மாத்திரைகளில் என்ற இரு வேதிப் பொருள்கள் இருக்கும். இவை கருத்தரிப்பைத் தடை செய்யக் கூடிய மருந்துகளாகும்.

இந்த மாத்திரைகள் இருவித நிலைகளில் கருத்தரிப்பைத் தடை செய்கின்றன. அவையாவன :

1. Combination Method

2. Sequential Method

Combination Method ன் படி இந்த மாத்திரைகள், FSH, (Follicle Stimulating Hormone) ஹார்மோன் சுரப்பை அதிகப்படுத்துவதன் மூலம், பெண்ணின் இன விருத்தி உறுப்பில் ஒன்றான கிராஃபியன் பாலிக்கில் (Graffian Follicle) ஐ முதிர்வடையச் செய்யும் அதேவேளையில், சினைப் பிடிப்பதற்கு வேண்டி சினை முட்டையைத் தூண்டும் LH (Leutinizing Hormone) ன் சுரப்பை மட்டுப்படுத்துவதன் மூலம், சினை முட்டை முதிர்வடையும் செயலை துரிதப்படுத்தியும் விந்தும், பெண்ணின் கரு முட்டையும் இணைந்து கருத்தரிப்பதற்குத் தேவையான தகுதியை கரு முட்டை பெறாததால், கருத்தரிப்பு நிகழ்வது தடைபடுகிறது. இதன் மூலம் கருத்தடை நிகழ்கிறது.

அடுத்து, Sequential Method படி, எஸ்ட்ரோஜன் (Estrogen) ஆனது, FSH (Follicle Stimulating Hormone) ஹார்மோனுடைய சுரப்பை மட்டுப்படுத்துகிறது. அதேவேளையில் LH (Leutinizing Hormone) ஹார்மோனுடைய சுரப்பை அதிகப்படுத்துகிறது. FSH ஹார்மோனுடைய சுரப்பு குறைவதனால் பெண்ணின் இன விருத்தி உறுப்பில் ஒன்றான, Graffian Follicle ன் வளர்ச்சி குறைகிறது. இதன் மூலம் சினை முட்டையில் முதிர் வளர்ச்சி தடைபடுவதால், கருத்தடை நிகழ்கிறது.

மேலும் இந்த மாத்திரைகளின் முக்கிய பங்கு என்னவெனில், பிட்யூட்ரி (Anterior Pitutary) என்ற நாளமில்லாச் சுரப்பியிலிருந்து, பெண்ணின் இன விருத்திக்கு இனவிருத்தி உறுப்புகளைத் தயார் செய்யக் கூடிய FSH மற்றும் LH ஹார்மோனுடைய சுரப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதே. இவற்றைத் தொடர்ந்து ஒரு பெண் உபயோகப்படுத்தும் போது, அவள் கீழ்க்காணும் நோய்களுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேலும்,இ ந்த கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தியும், கருத்தரித்து விட்டால், அக் கருவை வளர விடுவதை விட அழித்து விடுவதே மேலானது என்பதே மருத்துவர்களின் ஏகோபித்த கருத்தாகும். ஏனெனில்,அப்படிப் பிறக்கும் குழந்தைகள், ஊனத்துடன் பிறக்க அதிகம் வாய்ப்புள்ளது என்பது தான் அதன் காரணமாகும்.

மேலும், இந்த கருத்தடை மாத்திரைகள், உபயோகிக்கும் பெண்ணுக்கு கீழ்க்காணும் நோய்களுடன் மொத்தம் 28 ம் அதிகமான நோய்களை ஏற்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதய நோய்கள்

மன இறுக்கம்

ஈரல் நோய்கள்

பெண் இன உறுப்பிலிருந்து அதிகம் இரத்தம் வெளியேறுதல்

வலிப்பு நோய்கள்

ஒற்றைத் தலைவலி

உடலில் புரோட்டீன் அளவில் மாறுபாடு ஏற்படுதல்

வாந்தி

சிறுநீர் அதிகம் பிரிதல்

முறையற்ற மாதவிடாய்

மேலும் பாலூட்டும் தாய்மார்கள், இம் மாத்திரைகளை உபயோகிக்கும் போது, பால் சுரப்பினுடைய அளவு குறைவதுடன், உட்கொள்ளும் மாத்திரைகளில் கலந்துள்ள எஸ்ட்ரோஜன், மற்றும் புரோஜஸ்டிரோஜன் ஆகிய வேதிப் பொருள்கள் சிறிதளவு பாலுடன் கலந்து சுரக்கக் கூடிய நிலையும்

உருவாகலாம். இதன் மூலம் பால் அருந்தும் குழந்தைக்குப் பின் விளைவுகள் உண்டாக வாய்ப்புள்ளது.

## 2. நிரந்தர கருத்தடை முறைகள் :

நிரந்தர கருத்தடை முறைகள் பற்றி இனிக் காண்போம்.

**ஆண் :**

1. வாஸக்டமி (Vasectamy)

**பெண் :**

1. முடிச்சிடுதல் அல்லது பிணைத்தல் (Tubal Ligation)
2. கர்ப்பப்பையை நீக்குதல் (Hysterectomy)
3. லேப்ராஸ்கோபிக் (Laprascopy)

### வாஸக்டமி : (ஆண்)

ஆணின் இன விருத்திக்கு தேவையான விந்தணுக்களை உற்பத்தி செய்யும் உறுப்புக்களுக்கு விதர் (Testis) என்று பெயர் இந்த விதரானது, ஆணின் மர்ம உறுப்பிற்குக் கீழே பலாக் கொட்டை வடிவில் இருக்கும் இந்த விதருக்கும், ஆணின் மர்ம உறுப்பிற்கும் இடையே வாஸ் டிபரன்ஸ் என்ற குழாய் இருக்கிறது. இந்த வாஸ் டிபரன்ஸ் (Vas Deferens) தான் விந்தணுவை விதரிலிருந்து, ஆணின் மர்ம உறுப்பிற்கு எடுத்துச் செல்லும் குழாயாகச் செயல்படுகிறது. இந்த Vas Deferens குழாயைத் துண்டித்து விடுவதன் மூலம், ஆணின் விதரிலிருந்து கடத்தப்படும் விந்தணு தடைபடுவதன் மூலம் ஆண் நிரந்தர மலட்டுத் தன்மையை அடைய முடிகிறது.

ஆனால், இன்று துண்டிக்கப்பட்ட அந்த வாஸ்டிபரன்ஸ் (Vas Deferens) குழாயை மீண்டும் இணைத்து நிரந்தர மலட்டுத் தன்மையை போக்குவதில் ஒரு சில மருத்துவர்கள் வெற்றி கண்டுள்ளார்கள்.

மேலும், வாஸக்டமி செய்து கொள்வதால், உற்பத்தி செய்யப்படும் விந்தணுவானது, கடத்தப்பட வழி இல்லாமல் கெட்டியாகி, (SPERM GRANULOMA) என்ற நோயை உண்டாகும்.

**பெண் :**

### முடிச்சிடுதல் அல்லது பிணைத்தல்

பெண்ணின் இன விருத்தி உறுப்புக்களில் ஒன்றான ஃபெல்லோபின் குழாயை முடிச்சிடுதல் அல்லது பிணைத்தல் அல்லது துண்டித்தல் மூலமாக, பெண்ணின் கருமுட்டை உற்பத்தியை தடை செய்யப்படுகிறது அல்லது உற்பத்தியை நிரந்தரமாக இல்லாமலாக்கப்படுகிறது.

பெண்ணின் மாதவிடாய் முடிந்தவுடன் கருப்பையிலிருந்து உற்பத்தியாகும் கரு முட்டைகள் இந்த ஃபெலோபியன் குழாய் வழியாக கர்ப்பப் பைக்கு கடத்தப்படுகிறது. இங்கு இந்த கருத்தடை முறை மூலம், ஃபெலோபியன் குழாயை முடிச்சிடுதல் அல்லது துண்டித்தல் (இந்த முறைகள் குழந்தை பிறந்தவுடன் செய்யப்படுகிறது) மூலம், விந்தானது பெலோபியன் குழாயை அடைந்தாலும், அங்கு கரு முட்டைகள் இல்லாததால், கருத்தரிப்பது தடைபடுவதன் மூலம் கருத்தடை நிகழ்கிறது.

சில வேளைகளில், துண்டிக்கப்பட்ட இந்த பெலோபியன் குழாய்கள், அற்புதமான முறையில் மீண்டும் இணைந்து கருத்தரிப்பிற்குத் தயாராகி விட்ட நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பெலோபின் குழாய் நீக்கப்பட்ட பின்பு மீண்டும் கருத்தரித்ததன் காரணமாக, சிகிச்சை அளித்த மருத்துவர்கள் வழக்குகளைச் சந்திப்பதும் உண்டு.

### கர்ப்பப்பையை நீக்குதல்

இந்த முறை மூலம் முழு கர்ப்பப் பையையம் நீக்கப்படுகிறது. ஆனால் இந்த முறை மிக நீண்ட அறுவை சிகிச்சையையும், இரத்தப் போக்கு போன்ற ஆபத்தான நிலைகளையும் கொண்டது. எனவே, இதற்கு அநேகம் பெண்கள் சம்மதிப்பதில்லை. இருந்தும் இப்பொழுது மருத்துவ காரங்களைக

மாறாக, கர்ப்பப்பையில் புண் அல்லது கட்டி போன்றவற்றில் நிரந்தர துன்பங்களை அடைபவர்களுக்கு மட்டுமே இந்த அறுவை சிகிச்சை பயனுள்ளதாகும்.

ஆனால் இன்று சில கல் நெஞ்சம் கொண்ட மருத்துவர்களால், நோயாளிகளிடம் பணம் கறக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்த அறுவை சிகிச்சை உபயோகப்படுத்தப்படுகிறது. கர்ப்பப்பையில் புண், சிறிது சிகிச்சை எடுத்துக் கொண்டால் குணப்படுத்த இயலக் கூடிய நோய்களையும், இந்த சில மருத்துவர்கள், பாதிக்கப்பட்ட பெண்ணை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தி, பணம் பண்ணிக் கொள்கிறார்கள். மேலும், இந்த அறுவை சிகிச்சை முதியோர்களுக்கு செய்தால் ஓரளவு பாதிப்பே ஏற்படும். ஆனால் இளம் பெண்களுக்குச் செய்யும் போது, அவனது, நாளமில்லாச் சுரப்பிகளின் பயன்பாட்டில் தடை ஏற்படுத்துவதால், அவள் நிரந்தர நரம்பியல் நோய்களுக்கும், அதிகமான உடல் உபாதைகளுக்கும் உட்பட வேண்டி வரும்.

### லேப்ராஸ்கோபி (Laprascopy)

இந்த முறைப்படி, ஃபெலோப்பியன் குழாயானது சக்தி வாய்ந்த கதிர்களால் சுடப்பட்டு, கரு முட்டை செல்லும்பாதையானது மூடப்படுகிறது. இந்த முறை மிக எளிதான முறை எனலாம். கரு முட்டையின் உற்பத்தியிலும், அவற்றை வெளியேற்றுவதிலும் பாதை தடைபடுவதாலும், நாளமில்லாச் சுரப்பிகளின் பங்கில் மறைமுகமானதொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன எனலாம்.

மேலே நாம் கண்ட ஆனுக்குரிய வாஸக்டமி, பெண்ணுக்குரிய முடிச்சிடுதல் அல்லது பிணைத்தல், கர்ப்பப்பையில் நீக்குதல், லேப்ராஸ்கோபிக் முறைகள் ஆகிய அனைத்தும் ஏதேனும் ஒரு வகையில், உடல்கூறில் நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாட்டில், ஏதேனும் ஒரு தடையை, தாக்கத்தை ஏற்படுத்துபவைகளாகவே உள்ளன எனலாம்.

எந்தவித பின்விளைவுகள் மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாட்டில் தடை இல்லாமல், கருத்தடை சாதனங்களும் அதன் மருந்துகளும் பங்காற்றுவதில்லை.

எனவே, கருத்தடை செய்து கொள்ளும் ஆனும், பெண்ணும் ஏதேனும் ஒரு வகையில் பாதிப்படைவது நிதர்சனம்.

### இஸ்லாம் வழங்கும் மருந்தியல் கொள்கை

முஸ்லிம் என்பவன் சுத்தமானவனாகவும், நோய் நொடியற்றவனாகவும், திடகாத்திரமுள்ளவனாகவும் இருக்க வேண்டும் என்று இஸ்லாம் விரும்புகிறது. இதற்காக, அவன் உட்கொள்ளும் மருந்துகள் எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும் எனவும் வரையறை செய்து காட்டியுள்ளது.

அதாவது, ஒரு மனிதன் தன் உடல் நலத்துக்காக உட்கொள்ள வேண்டிய மருந்தின் அடிப்படை குணாதிசயங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமெனில்,

1) அவனது உடல்நலத்தை அது பாதுகாத்தல் வேண்டும்

2) நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளிலிருந்து பாதுகாத்தல் வேண்டும்

3) அம் மருந்துகள் பின் விளைவுகளை ஏற்படுத்தாமல அவனைப் பாதுகாத்தல் வேண்டும்

(By Imam Ibn al Qayyim al Jawziyyah – Al Tibb al Nabawi)

இதற்காக, இமாம் இப்னுல் கைய்யிம் அல் ஜவ்ஸிய்யா அவர்கள் மூன்று குர்ஆன் வசனங்களை எடுத்துக்காட்டாக தருகின்றார்கள்.

அதாவது, ரமளான் மாதத்தில் நோன்பு நோற்க கடமையானவர், நோய் வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது பயணத்திலிருந்தாலோ அவர் நோயிலிருந்து நிவாரணம் பெற்றவுடனோ அல்லது பயணத்திலிருந்து திரும்பியவுடனோ விடுபட்ட நோன்புகளை அவன் பின்வரும் நாட்களில் பூர்த்தி செய்து கொள்ளட்டும் (2:185)

இந்த வசனம் மூலம், நோன்பு நோற்பது கடமை என்றிருந்தாலும், அவரது உடல்நலத்தையும், வலிமையையும் காக்கும் பொருட்டு. அவர் நோன்பு நோற்பதிலிருந்து இறைவன் விதிவிலக்கு அல்லது சலுகை அளித்துள்ளான். எனவே, நோன்பு நோற்றிருப்பவர் மேலும் நலிவடையாமலும், பயணத்தில் இருப்பவர் பசியின் மிகுதியால் உடல் தெம்பிழந்து, சோர்வுக்கு ஆட்படாமலும் இருக்க இந்த விதிவிலக்கு உதவி செய்வதால், அங்கே அவரது உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது.

இரண்டாவதாக,

ஹஜ் கிரியைகளில் தலை முடி நீக்குவது ஒன்றாகும்.

உங்களில் எவர் நோயாளியாகவோ அல்லது அவரது தலையில் (அவருக்கு) தொந்தரவளிக்கக் கூடியதோ இருந்தால் (அந்நிலையில் தலை ரோமத்தை களைந்து விடின்) அதற்கு (மூன்று) நோன்புகள் நோற்றல் அல்லது (ஆறு ஏழைகளுக்கு உணவு) தர்மம் செய்தல் அல்லது ஹத்யு (ஓர் ஆடு) கொடுத்தல் (ஏதாவது ஒன்று) பரிகாரமாகும். (2:196)

ஆக, தலைமுடி நீக்குவது என்பது இறைவனாலும், அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களாலும், நடைமுறைப்படுத்த ஏவப்பட்ட ஒன்றாக இருந்தாலும், நோய் வாய்ப்பட்டிருப்பவருக்கும், தலையில் புண், பொடுகு போன்றவைகள் இருந்தால், முடியை மழிக்கும் போது, ஏற்படும் தீங்கிலிருந்து அவருக்கு பாதுகாப்பு அளிக்கவும் இறைவனால் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தீங்குகள், நோய்கள் மேலும் ஏற்படாமல் பரவாமல் பாதுகாக்கப்படுகிறது.

மூன்றாவதாக,

ஒருவர் நோய் வாய்ப்பட்டிருப்பின், தண்ணீர் கொண்டு ஒளுச் செய்வதன் மூலம் அவரது நோய், மேலும் அதிகரிக்கும் எனில், அவர் தயம்மம் செய்து கொள்ளட்டும்.

நீர் என்பது ஒரு சுத்தமான பொருள். அது தானும் சுத்தமானது, அதைக் கொண்டு ஒருவர் ஒளுச் செய்யும் போது, ஒளுச் செய்பவரும் சுத்தமாகிறார். ஆனால் சுத்தப்படுத்தக் கூடிய நீரை நோயாளி பயன்படுத்தும்போது, எதிர் விளைவின் காரணமாகக மேலும் அவர் நலிவடையக் கூடும். மேற்கண்ட பின் விளைவுகளிலிருந்து மனிதனைப் பாதுகாக்கவே அத்தகைய நிலையில் உள்ளவர்களை, மண்ணைக் கொண்டு தயம்மம் செய்து, தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்ளும்படி இறைவன் சலுகை அளித்துள்ளான். ஆக, நீரின் மூலம் ஏற்படும் பின்விளைவுகளிலிருந்து அவனத உடல்நலம் பாதுகாக்கப்படுகிறது.

தொழுகை என்பது இறைவனால், முஸ்லிம்கள் மீது கட்டாயக் கடமையாக்கப்பட்ட ஒன்று. அத்தகைய தொழுகைக்கு முன் ஒருவர் தண்ணீர் கொண்டு ஒளுச் செய்து கொள்வது கடமையாகும்.

ஆனால் சுத்தப்படுத்தக் கூடிய தண்ணீரானது, நோயாளிக்கு மேலும் நோயை அதிகரித்துவிடும் எனும் நிலமை இருப்பின், அந்த நோயாளி மண் கொண்டு தயம்மம் செய்து கொள்ள இறைவனாலும், இறைத்தூதர் (ஸல்) அவர்களாலும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்த நோயாளி, மேலும் பாதிக்கப்படுவதிலிருந்து தவிர்ந்து கொள்கின்றான்.

இதன் மூலம் தன்னுடைய பிரதிநிதியாகிய இந்த மனித சமூகத்தின் மீது இறைவன் கொண்டுள்ள கருணையை அறிந்து கொள்வதோடு, தன்னை வணங்கும் தன் அடியான், எப்பொழுதும் ஆரோக்கியத்துடன், நோய் மற்றும் அதன் விளைவுகளிலிருந்து பாதுகாப்புப் பெற்றவனாகவும் இருக்க வேண்டும் என இறைவன் விரும்புவதை அறிந்து கொள்ளலாம்.

ஆனால், மனிதனால் கருத்தடைக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்கள், மருந்துகள், இஸ்லாம் விரும்பும் மருந்துகளின் அடிப்படைக் கொள்கை அல்லது பண்புகளிலிருந்தும் மாறுபட்டிருப்பதை நாம் இதற்கு முன் அவற்றின் தீங்குகளை நாம் விளக்கியவற்றிலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

எனவே, மனிதனுக்கு இந்த குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்கள் சமூக அளவிலும், உடல்நல வகையிலும் நன்மையை அளிக்கவில்லை. மாறாக, தீமைகள் தான் அதிகம் உள்ளன.

மேலும், இவற்றில் பயன்களும் உண்டே எனலாம். மருத்துவ நோக்கில், கருத்தடை செய்வதனால் செய்யப்படும் நபரும் உடல் நலம் பேணப்படும் எனில் இவ்வாறு செய்வதை இஸ்லாம் அனுமதிக்கிறது.

எவ்வாறெனில், முஸ்லிம்களுக்கு பன்றியின் இறைச்சியை உண்பதை இறைவன் தடுத்திருக்கின்றான்.

ஆனால் கடுமையான பஞ்சம் அல்லது உண்ண உணவில்லாமல் உயிர் போகும் நிலை அல்லது அவற்றை உண்தன மூலம் உயிர் பிழைத்துக் கொள்ளலாம் என்ற நிலை இருப்பினும் அல்லது நிர்ப்பந்தம் காரணமாக உண்ண நேரிட்டால் தவறு இல்லை, இறைவன் அதனைக் குற்றம் பிடிக்க மாட்டான் என்று திருமறை கூறுகின்றது.

எனவே, கீழ்க்கண்ட விதிப்படி, உயிர் பிழைப்பதற்காகவோ, மேலும் நோய் பரவாமல் தடுபபதற்காகவோ குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வது இஸ்லாத்தினால் ஆகுமாக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட ஒன்று.

ஆனால், இன்றைய குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார நோக்கில் அல்லவா செயல்படுத்தப்படுகின்றன. எனவே, இறைவன் இவற்றை அனுமதிப்பதில்லை.

மேலும்,

நபியே! இவர்கள் மதுவையும், சூதாட்டத்தையும் பற்றியும் வினவுகிறார்கள். நீர் கூறும், இவை இரண்டும் பாவமானவைகளாகும். மேலும் இவற்றில் சில நன்மைகளும் உள்ளன. ஆனால் அவற்றின் நன்மைகளைக் காட்டிலும் தீமைகள்தான் அதிகம் உள்ளன. (2:219)

எனவே, இந்தக் குடும்பக் கட்டுபாட்டுத் திட்டங்கள் அதன் துணை சாதனங்கள், மருந்துகள், உலகியல் நோக்கில் நன்மை தருபனவாக இருப்பினும், அது தரும் நன்மைகளை விட தீமைகள் தான் அதிகம் காணப்படுகின்றன என்பதை மேற்கண்ட ஆய்வுகள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும், இறைவன் தன் திருமறையில் கூறுகின்றான் :

மனிதர்களே! (உங்கள் இறைவன்) பூமியில் உங்களுக்கு அனுமதியளித்தவற்றிலிருந்து உண்ணுங்கள், பருகுங்கள். (2:168)

எனவே, இறைவன் அனுமதியளித்தவற்றிலிருந்து உண்பதும், பருகுவதும் உடல்நலத்துக்கு எவ்வாறு உகந்ததோ அதுபோலத்தான் ஏனைய காரியங்களும் இறைவன் அனுமதியளிக்காத நடைமுறைகள் அத்தனையும் சமூக மற்றும் மனித இன அழிவுக்கத் தான் மனிதனை இட்டுச் செல்லும் என்பது உறுதி. (இறைவன் நம்மைப் பாதுகாப்பானாக!)

## கருக்கலைப்பு அல்லது கருச்சிதைவு (ABORTION)

கருக்கலைப்பு அல்லது கருச்சிதைவு என்பது மிகப் பழமையானதொரு முறையாகும். அபார்ஷன் எனச் சொல்லப்படும் இந்தக் கருக்கலைப்பு முறை இரண்டு வகையாகும்.

D and C (Dilatation and Curretage)

Vacuum Aspiration Method ஆகியனவாகும்.

இந்த முறைகள் 20 வார கால அளவும், அதற்கும் குறைந்த கால அளவுள்ள கருவைக் கலைக்க மேற்கண்ட முறைகள் பின்பற்றப்படுகின்றன.

குறிப்பிட்ட கால அளவைத் தாண்டி விட்ட கர்ப்பத்தைக் கலைக்க கருப்பையைச் சுற்றியுள்ள Amniotic Fluid ஐ வெளியேற்றி, அதற்குப் பதிலாக உப்புநீர் கரைசலைச் செலுத்துவதன் மூலம், குறைப்பிரசவம் ஏற்பட்டு (Miscarriage) கருவானது பிண்டமாக வெளித்தள்ளப்படுகிறது.

மேற்கண்ட அபார்ஷன் (D and C (Dilatation and Curretage),Vacuum Aspiration Amniotic Fluid Removal) ஆகிய முறைகள் மூலம், அபார்ஷன் செய்யப்படும் பொழுது, பெண்ணுக்கு அதிக இரத்த ஒழுக்கு மற்றும் சிறுநீரக பாதிப்புகளும் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் அதிக இரத்தப் போக்கு, அப்பெண்ணின் உயிரைப் போக்கும் காரணியாகக் கூட அமையலாம்.

மேலும், திருட்டுத்தனமாகச் செய்து கொள்ளப்படும் டீன் ஏஜ் அபார்ஷன்கள், சரியான பராமரிப்பு இன்றி, அப்பெண்ணுக்கு நோய்க்கிருமிகள் தொற்றவும், மேலும் கருப் பிண்டம் வெளித்தள்ளப்பட்டபின், சரியான அளவில் இரத்தம் வெளியேறி சுத்தப்படுத்தப்படாமல் சரியாகக் கவனிக்கப்படாமல் விடப்படுமானால், பின்னாளில் அதுவே, அவளது தாய்மையைப் பறிக்கும் காரணியாகக் கூட அமையலாம்.

மேலும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் சாதனங்களும், மாத்திரைகளும் ஊசிகளும் கருக்கலைப்பின் (அபார்ஷன்) அளவைக் குறைத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் எங்கெல்லாம் குடும்பக் கட்டுபாட்டுத் திட்டம் கடைபிடிக்கப்படுகிறதோ மேலும், அதன் சாதனங்களும், மாத்திரைகளும் தாரளமாக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் கருக்கலைப்பின் அளவும் அதிகமாகத் தான் உள்ளது.

ஏனெனில், கருத்தரிக்காமல் தடுப்பதற்காகப் பயன்படும, முன்தடுப்பு மாத்திரைகளின்தன்மை பற்றி தகவல் (Pamphlet – Information List) சீட்டில், பின்விளைவுகள் (Contra-indications) பகுதியில், முதல் தகவலே கர்ப்பம் தரிக்க வாய்ப்புள்ளது என்பதேயாகும். எனவே, கர்ப்பம் தரிக்காமல் இருப்பதற்காக இவர்கள் பயன்படுத்தும் மாத்திரைகளையும் மீறி கர்ப்பம் தரித்து விடும் போது, அபார்ஷன் செய்து கொள்ள வேண்டியது கட்டாயமாகிறது.

மேலும், அமெரிக்காவில் 8 சத பெண்கள் திருமணத்திற்கு முன்னும் 20-25 சத பெண்கள் திருமணத்திற்குப் பின்னும் கருக்கலைப்பு செய்து கொள்கிறார்கள்.

ஜப்பானை எடுத்துக் கொண்டால், 1950 ல் 21.5 சதமாகவும், 1955 ல் 25 சதமாகவம், கருக்கலைப்பின் விகிதம் கூடியது. Prof. Sauvy அவர்களது கூற்றுப்படி 1.7 மில்லியன் குழந்தை பிறந்துள்ள அதே நேரத்தில் 1.2 மில்லியன் கருக்கலைப்பும் நடந்துள்ளது.

மேலும் என்ற தினப் பத்திரிக்கையின் ஆய்வின்படி, கருத்தடையைப் பயன்படுத்தும் குடும்பங்களில் தான் அதிக அபார்ஷன்கள் நடைபெறுகிறது. கருத்தடையைப் பயன்படுத்தாத குடும்பங்களை விட 6 மடங்க அதிகம் அபார்ஷன்கள், கருத்தடையை அல்லது குடும்பக்கட்டுப்பாட்டு முறையைப் பயன்படுத்தும் குடும்பங்களில் தான் நிகழ்கின்றது.

பிரிட்டனில் இந்த விகிதம் 8.27 மடங்கு அதிகம் உள்ளது.

### டீன் ஏஜ் கருக்கலைப்பில் இந்திய நிலை

இந்தியாவில் இப்பொழுது டீன் ஏஜ் பெண்களுக்கு இரவு டான்ஸ் பார்ட்டிகள், டேட்டிங்ஸ் எல்லாம் நாகரீகத்தின் வெளிப்பாடாகத் தோன்ற ஆரம்பித்துள்ளன. இந்தியாவில் திருமணத்திற்கு முன்பே கருத்தரிக்கும் 14 வயதுப் பெண்களின் எண்ணிக்கை, நகரங்களில் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இரண்டு மாதக் கருவைக் கலைத்துக் கொள்வது என்பது, இந்த நாகரீக மங்கைகளிடத்தில் தியேட்டரில் சினிமாவைப் பார்த்து விட்டுத் திரும்புவது போல காலையில் அபார்ஷன் செய்து விட்டு மாலையில் வந்து விடுகின்றார்கள்.

டில்லியில் 1991 ல் 278 ஆக இருந்த டீன் ஏஜ் அபார்ஷன் கடந்த 1994 ல் 676 ஆகக் கூடியது. நமது தமிழ்நாட்டையும் இது விட்டு வைக்கவில்லை. 1994 ல் சென்னையில் மட்டும் 16,000 அபார்ஷன்கள் நடந்ததில் 20 சதவீதம் திருமணமாகாத டீன் ஏஜ் பெண்கள்.

பம்பாயில் உள்ள பர்ல் சென்டர் என்ற கிளினிக்கில் ஆண்டிற்கு 25,000 கருக்கலைப்புச் செய்யப்படுகின்றன. இதில் 15 சதவீதம் திருமணமாகாத டீன்ஏஜ் பெண்கள்.

அசைட் என்ற ஆங்கிலப் பத்திரிக்கை நடத்திய ஆய்வில் கர்ப்ப பயத்தால் செக்ஸைத் தவிர்க்கவில்லை. கர்ப்பமானால் இருக்கவே இருக்கிறது அபார்ஷன் என்று அந்தப் பெண்கள் கூறியதாக, அசைட் ன் ஆய்வு கூறுகிறது.

மிகச் சங்கடமாக நிலையில் அபார்ஷன் ஒரு எளிய தீர்வாகத் தோன்றினாலும், உடல் ரீதியாகவும் உணர்வுப் பூர்வமாகவும் அது பல தழும்புகளை ஏற்படுத்தி விடுகிறது.

சென்னை மகப்பேறு நிபுணரான டாக்டர் நாராயண ரெட்டி, டீன் ஏஜ் ஆண், பெண்களிடம், செக்ஸ் உறவு வைத்துக் கொள்ளாதே எனச் சொல்ல நாம் யார்? (பின்னே, எப்படி பணம் சம்பாதிப்பது?! இத்தகைய கேஸ்களை நம்பித்தானே ஏராளமான கிளினிக்குகளும், மருந்துக் கடைகளும் பிழைப்பு நடத்துகின்றன. ஆ-ர்) ஆனால், அதற்குப் பதிலாக உடல் உறவு, கருத்தடை பற்றி சென்ஸ் கல்வி அளிக்கலாம் என்கிறார்.

தமது குடும்ப வாழ்க்கைக் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக, மேரி ஸ்டாப்ஸ் என்கிற குடும்ப நல கிளினிக்குகள், தற்காலிக கருத்தடை மாத்திரைகள், காண்டம்கள் (நிரோத்) பயன்படுத்தும் விதம் குறித்து விளக்குகின்றன. (இந்தியா டுடே - ஏப்ரல் 6-20, 1995)

என்ன அரிய சேவை?! காண்டோம்கள் (நிரோத்) கருத்தடை மாத்திரைகள் போன்றவற்றை உபயோகித்தும் டீன்ஏஜ் அல்லது திருமணமாகாத பெண்கள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்து வருவது

எதைக் குறிக்கிறது எனில், இந்தியாவம் தனது தவறான கொள்கையினால் குடும்பக் கட்டுபாட்டுத் திட்டம் மற்றும்அதன் சாதனங்களால் சீரழிவை எதிர்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமும், அது சார்ந்த மாத்திரைகளும், காண்டோம்கள் (நிரோத்) போன்றவைகள் மார்க்கெட்டில் தாராளமாகக் கிடைப்பதால், குடும்பக் கட்டுப்பாட்டிற்காக இவைகள் பயன்படுவதை விட விபச்சாரம் பெருகவம், டீன்ஏஜ் கர்ப்பங்கள் அதிகரிக்கவும் தான் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது உண்மையாகும்.

இந்திய அரசு, இனிமேலும் இந்த விவகாரத்தில் விழிப்புணர்வு காட்டவில்லை எனில், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வளர்ந்த நாடுகளின் வரிசையில் இந்தியாவும் மின இனச் சீரழிவில் முன்னணியில் நிற்கும் என்பது நிச்சயமாகி விடும்.

## பாகம் 2

## தவறான சித்தாந்தம்

இதற்கு முன் உள்ள தலைப்புகளில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் அது சார்ந்த மருந்துகளும் ஏற்படுத்திய சமுதாய மாற்றம், சமுதாய அழிவு போனற்வற்றை அதற்குரிய காரணங்களுடன் பார்த்தோம். மேலும், மால்த்தஸ் அபிமானிகளால் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும், மக்கள் தொகை பெருகப் பெருக உணவுப் பற்றாக்குறையும், இடப் பற்றாக்குறையும் ஏற்படும் என்பன போன்ற தவறான சித்தாந்தங்கள் பற்றி இனி நாம் காணப்போகும் அத்தியாயங்கள் மூலம் தெளிவாக்குவோம்.

அறிவியல் முறைப்படி ஆராய்ந்த அத்தனை ஆய்வுகளும், அதன் வெளிப்பாடாக அமையும் தீர்வு அல்லது கோட்பாடு (THEORY) கள் போன்றவைகள் மனித இனத்துக்கு நன்மை பயக்கும் என்றோ, மனிதனை மனிதனாக ஒழுக்க விழுமங்களை பேணச் செய்பவனாக உருவாக்கி விடும் என்றோ கூற இயலாது. 17 ம் நூற்றாண்டில் வாழ்ந்த மால்த்தஸ் என்று சொல்லக் கூடிய அறிஞன்? தன் வீட்டு அறையில் உட்கார்ந்து கொண்டு, கண்ணை மூடிக் கொண்டு போட்ட கணக்கை மட்டும் வைத்துக் கொண்டு, இந்த அறிவியல் மனிதன், ஓ! என ஓலமிடுகின்றான். அவன் தன்னைச் சுற்றியுள்ள பேரண்டத்தையும், தன்னைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் ஏனைய ஜீவராசிகளையும், படைத்து அத்தனைக்கும் ஒரு நியதியை வழங்கி, பராமரித்து வரும் ஏக இறையோனாகிய வல்ல அல்லாஹ்வின் ஆற்றலை அவனது ஊனக் கண் கணிக்கத் தவறி விட்டது. நேற்று தான் ஒரு இல்லாமையிலிருந்து அல்லது பூஜ்யத்திலிருந்து தோன்றியதையும், தன்னுடைய இவ்வளவு பெரிய உருவத்தை அற்ப விந்திலிருந்து வெளியாக்கி இருப்பதையும் மனிதன் கவனிக்கத் தவறி விட்டான்.

மனிதனின் எண்ணிக்கை இதே நிலையில் வளர்ந்து கொண்டே போனால், இனி மனிதன் வாழ இப்பூமியில் இடம் இருப்பது என்ற தவறான வாதத்தை எழுப்புகின்றான். அவன் எழுப்பும் வாதம் தவறானது!

மேலும், பல்கிப் பெருகும் மக்கள் தொகையால் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படுகிறது என்கிறான். இப்படிச் சொல்லிக் கொண்டே முதலாளித்துவமும், கம்யூனிஸமும் அவனிடம் தேவையற்ற நுகர்பொருள் ஆசையை உண்டாக்கி, அவனிடம் தேவையற்ற பணச்சுமையையும் அல்லது பொருளாதாரப் பற்றாக்குறையையும் அதிகப்படுத்திக் கொண்டே வருவதையும், மேலும் இந்தச் சுமைகள் யாவும்

இவனது நுகர்பொருள் ஆசையால் விளைந்தது என இவனை இந்த இயக்கங்கள் சிந்திக்கக் கூட விடுவதில்லை. மாறாக, இந்தச் சுமைகள் அதிகப்படியான குழந்தைப் பேற்றால் வந்தது எனச் சொல்லிக் கொண்டே, உண்மை நிலையை இந்த அறிஞர்கள் தெரிந்தும் மறைப்பது ஏன்?

மேலும், அதிகப்படியான மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்கிறான். இந்த வாதம் எவ்வளவு தவறானது!! இத்தனை பேரண்டத்தையும் படைத்து பரிபாலிக்கும் அந்த ஏக இறையோனாகிய அல்லாஹ்வின் வல்லமையில் அல்லவா இந்த அற்ப மனிதன் சந்தேகம் கொண்டு விட்டான். மனிதனது கணக்கு தவறானது!! உலகியல் நோக்குக் கொண்டது. மனிதன் தான் கொண்டுள்ள பகுத்தறிவைக் கொண்டு ஓரளவே விசய ஞானங்களை எட்ட முடியும் இந்த அரைகுறை விசய ஞானமுள்ள மனிதன் போடும் கணக்கு தவறானது. இறைவன் போடும் கணக்கின் முன் மனிதன் அற்பத்திலும் அற்பம். இறைவனின் அருட்கொடை இப் பேரண்டம் முழுவதும் பரவியுள்ளது. அதன் மூலம் மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளும் பயன்பெறுகின்றன. மனிதன் தவிர அனைத்து ஜீவராசிகளும் அதற்கென தவறாது நன்றி செலுத்துபவையாக உள்ளன. எனவே, அவை நிம்மதியோடு நாளை என்ன? எப்படி? என்ற சுமை இல்லாது வாழ்கின்றன. ஆனால் மனிதன் நன்றி மறந்தவனாகவும், ஏக இறைவனது நெறிமுறைகளினின்றும் பிறழ்ந்தவனாகவும், தன்னுடைய பிடிவாதத்தால், அகம்பாவத்தால் சீரழிவைத் தானே தேடிக் கொண்டான். அத்தகைய சீரழிவுகளில் ஒன்று தான் குடும்பக் கட்டுபாட்டுத் திட்டம்.

குடும்பக் கட்டுபாட்டுத்திட்டம், வெறும் பொருளாதார மருத்துவ நிலைகளில் மட்டும் மனிதனுக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அதிலும் மேலான மனித நாகரீகத்தில் ஒழுக்கக் கட்டுமானத்தில் அல்லவா பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இனி, இந்த அறிஞர்கள் கூறும், வாழ்வாதாரப் பற்றாக்குறை ஏற்படும் என்பது பற்றி பார்ப்போம்.

### அ) வாழ்வாதாரப் பற்றாக்குறை ஏற்படுமா?

மனிதன் வசிக்கும் இந்த பூமியின் வசிப்பிடமானது அல்லது கொள்ளவானது குறிப்பிட்ட அளவில் தான் உள்ளது. மேலும், அதில் உள்ள வளங்களும் குறிப்பிடட அளவே உள்ளன. மேலும், வளர்ந்து வரும் மக்கள் தொகையின் பெருக்கம், இந்த குறிப்பிட்ட அளவே உள்ள வளங்களை பங்கு போடும் போது, பற்றாக்குறை என்பது தவிர்க்க இயலாத ஒன்றாக ஆகி விடும் என்கின்றனர் இந்த அறிஞர்? பெருமக்கள். இதன் மூலம் ஒவ்வொரு மனிதனும் சில, பல சௌகரியங்களைச் சந்திக்க நேரிடும். இவ்வாறான முறையில் மனிதன் பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டுமெனில், வளரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்கின்றனர்.

இறைவன் கூறுகின்றான் :

நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் (நிர்ணயிக்கப்பட்ட) அளவின்படியே படைத்திருக்கின்றோம். (அல்குர்ஆன் 54:49)

இவ்வுலகையும், அதில் உள்ள ஜீவராசிகள் அத்தனையையும் படைத்துப் பரிபாலித்து வரும் ஏக இறைவன் தன் பணடைபகுளுக்கு என்ன என்ன வேண்டும், அவை எந்த அளவில் தேவை என்பன போன்ற வாழ்வாதார வசதிகளை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும் நாள் வரையும அவற்றுக்கான ஏற்பாட்டைச் செய்தே வைத்திருக்கின்றான். அந்த ஏக போக இறைவன் தான் இந்த முழுப் பேரண்டத்தின் சூத்திரதாரி. அவனது திட்டங்கள் செயல்பாடுகள், அனைத்தும் அனுவின் அனுவளவு கூட குறையற்றவை. அவனது அருட்கொடைகளை அறியாது, அதில் பொதிந்துள்ள பேருண்மைகளை

கவனியாமல், தன் மனம் போன போக்கில் வாழ்வானாகில், நஷ்டம் அடையப் போவது மனிதனேயன்றி வேறு யார்?

இறைவன் கணக்கற்ற உயிரினங்களை இந்த பூமியில் பரவ விட்டுள்ளான். அவற்றில் ஏதாவது ஒரு உயிரியை அல்லது சில உயிரினங்களை மட்டும், அவற்றின் உயிரினப் பெருக்கத்தில் எந்த அழிவையும் ஏற்படுத்தாது உற்பத்தி செய்ய விட்டோமானால் மட்டும் போதும், இந்த பூமி முழுவதும் அந்த குறிப்பிட்ட உயிரி அல்லது அதன் இனம் மட்டுமே இநத பூமி முழுவதும் நிறைந்திருக்கும்.

உதாரணமாக, தாவர இனத்தில் SISYMBRIUM SOPHIA என்ற தாவரத்தை எடுத்துக் கொள்வோம். இதன் ஒவ்வொரு கிளை இனமும் 3/4 மில்லியன் விதைகளைக் கொண்டது. இந்த இனத்தின், ஒரு கிளை இனத்தின் விதையை மட்டும் முறைப்பிக்கச் செய்வோமானால், மூன்று வருடத்தில் இப்பூமி முழுவதும் இந்த தாவரம் மட்டுமே நிறைந்திருக்கும்.

நட்சத்திர மீன் (STAR FISH) ஒரு தடவைக்கு இரு நூறு மில்லியன் முட்டைகளை இடுகிறது. அதே எண்ணிக்கையில் அத்தனை முட்டைகளும் குஞ்சுகளாகப் பொரிந்ததெனில், அதனது மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறையில் கடல்முழுப்பரப்பும் நட்சத்திர மீன் மட்டுமே நிறைந்திருக்கும்.

மனிதன் ஒரு முறை வெளியேற்றும் விந்து (SEMEN) ன் மூலம் 300-400 மில்லியன் பெண்களைக் கருத்தரிக்கச் செய்ய முடியும். இப்பூமி முழுவதும் மனிதர்களாக நிரம்ப பல நூறு மில்லியன் ஆண்கள் தேவையில்லை. மாறாக ஒரு ஆண் போதும். ஒரு சில வருடங்களிலேயே இப்பூமியை மனிதர்களின் கூட்டங்களாக நிரப்பி விடலாம்.

மேலும், பறவை இனங்கள், மற்றும் விலங்கினங்கள் போன்ற உயிரினங்கள் குறைந்த கால அளவில் நிறைந்த சந்ததிகளைப் பெருக்கக் கூடியவை. ஆனால், அவற்றின் உற்பத்தியின் அளவு ஒரு கட்டுக் கோப்புக்குள் தான் இருக்கின்றது. அவைகள் பல்கிப் பெருகுவதை வைத்து, மனிதன் கணக்கிட்டானேயானால், அவைகளும் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வர வேண்டி வரும்?!!

இத்தனையையும் ஒருங்கே கட்டுக்குள் வைத்திருப்பவன் ஏக இறைவன் அன்றோ!! அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் படைப்பாற்றலை கண் கொண்டு பார்க்க மறுக்கின்றான். அவனது சடவாதம் அவனது கண்ணை மறைத்து விட்டது. மனிதன் தன் பகுத்தறிவை வைத்து, குறிப்பிட்ட அளவே சிந்தனை மற்றும் திறனாய்வு செய்ய இயலும். அவனால் இயலாததை என்றுமே அவன் ஒப்புக் கொள்வதில்லை. அவனை மீறிச் செல்லும் நடைமுறைகளுக்கு இறைவனது வழிகாட்டுதலை நாடுவதில்லை. இறைவன் தன்னுடைய படைப்பினங்களுக்கு எது தேவை, எப்பொழுது தேவை, என்ன தேவை என்பனவற்றை அவன் நன்கறிந்தவன். பல டிரில்லியன் மக்கள் தொகையின் அளவுக்கு மக்கள் தொகை வளர்ச்சி எட்டினால் கூட அனைத்துக்கும் உணவு புகட்டக் கூடிய ரஹ்மான் அல்லவா அவன்!! அவன் தன் பிரதிநிதியாகிய இந்த மனிதனை பூமியில் நிலை பெற்றிருக்கச் செய்ய வேண்டிய காலமெல்லாம், இந்த மனித இனத்துக்கும், மற்ற ஏனைய படைப்புகளுக்கும் தேவையான அத்தனையையும் நிலை பெற்றிருக்கச் செய்வான்.

இனி பொருளாதாரமும், வாழ்வாதாரமும் மக்கள் தொகை வளர வளர எவ்வாறு வளர்ந்தே வந்துள்ளத என்பதைக் காண்போம்.

### ஆ) உலக மக்கள் தொகை வளர்ச்சியும், உணவு உற்பத்தியும், தனிநபர் வருமானமும்

ஆண்டு - மக்கள் தொகை (கோடியில்)

1650 - 50

1850 - 100

1930 - 200

1975 - 400

1995 - 573

கி.பி. 1650 முதல் 1995 பரை உள்ள 345 வருடங்களில் மக்கள் தொகையானது அபரிதமாக வளர்ந்துள்ளது. அதுவும் 1930 – 1995 க்கு இடைப்பட்ட காலத்தில் உள்ள 60 ஆண்டுகளில் 373 கோடியாக மக்கள் தொகை வளர்ந்துள்ளது.

இந்த அளவு உயர்ந்துள்ள மக்கள் தொகையினால் மட்டும், உலகில் வாழ்வாதாரம் கிடைக்காமல் உண்ண உணவு இல்லாமல், இருக்க இடம் இல்லாமல் மக்கள் செத்து மடிந்ததாகவோ அல்லது இட நெருக்கடியின் காரணமாக அசௌகரியங்களை அடைந்ததாகவோ நம்மால் அறிய முடியவில்லை. மேலும் இவ்வளவு பெரிய மக்கள் தொகைக்கு வசிப்பிடம் தந்தும், உணவு தந்தும் இன்னும் மனிதன் குடியிருக்க ஏகப்பட்ட நிலம் காலியாகவும், வருகின்ற நாட்களில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டாலும், நிம்மதியாகச் சாப்பிடக் கூடிய அளவுக்கு உணவு தானியக் கையிருப்பு பெரும்பாலும் அனைத்து நாடுகளிடமும் உள்ளதே. இந்தக் கையிருப்பு போக, ஏழை நாடுகளுக்கு உணவுகளைத் தானம் செய்யக் கூடிய நாடுகள் உள்ளது.

1995 ல் இந்திரா காங்கிரஸ் ஆட்சியின் பொழுது, நிதி அமைச்சர் மன்மோகன்சிங் கூறிய விவரங்களைக் கவனிக்க.

தற்போதைய உணவுப் பொருள் கையிருப்பு 3 கோடி டன்கள். 2 கோடி டன்கள் இருந்தாலே போதும் மேலும் 66 ஆயிரம் கோடி அந்நியச் செலவாணி கையிருப்பு உள்ளது. கடும் வறட்சியே வந்தாலும், விலையை கட்டுக்குள் வைத்திருக்க முடியும். (தகவல் : இந்தியாடுடே மார்ச் 21 - ஏப்ரல் 5, 1995)

மேலும் நமது இந்தியப் பிரதமர் 1997 கென்ய விஜயத்தின் பொழுது, பிரதமர் குஜ்ரால் அவர்கள் கென்யாவுக்கு 1000 டன் உணவுப் பொருட்களை, வறட்சி நிவாரண உதவியாகச் தருவதாக அறிவித்தார். இத்தகைய அளவில் ஒரு நாடு பாதிப்படையும் போது, மற்ற நாடுகள் தமது கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்களைக் கொண்டு உதவி வருவது இன்றைய உலகில் அதிகம் நடந்து வரும் நிகழ்வுகளாகும்.

மேலும், இன்றைய இந்திய மக்கள் தொகை 100 கோடிக்கும் அதிகம். இந்த 100 கோடிக்கும் அதிகமான மக்களும் உண்பதற்கு வேண்டிய உணவின் இருப்பு போகத் தானே, மீதியை கென்யா போன்ற வறட்சியில் பாதிப்பிற்குள்ளாகும் நாடுகளுக்கு உதவியாகவும் , இன்னும் ஏனைய நாடுகளுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தும், நாடு அந்நியச் செலவாணியை ஈட்டிக் கொள்கிறது. அதாவது, கடந்த 1994 ல் சௌதி அரேபியாவிற்கு இந்தியா ஏற்றுமதி செய்த அரிசியின் அளவு என்னவெனில், 2,78,000 டன்களாகும். (அரப் நியூஸ் - சனி, ஆகஸ்டு 16-1997)

மேலே நாம் குறிப்பிட்ட சௌதி அரேபியா போக இன்னும் ஏராளமான நாடுகளுக்கு இந்திய ஏற்றுமதி செய்யும் உணவுப் பொருட்களின் அளவைச் சேர்த்தால், நமது தேவைக்கு அதிகமாகவே உணவு உற்பத்தி ஆவதை அறிந்து கொள்ளலாம்.

கடந்த 1898 ல் பிரிட்டனின், பிரிட்டிஷ் அசோஸியனைச் சேர்ந்த தலைவர், சர் வில்லியம்ஸ் க்ரூக்ஸ் என்பவர் ஒரு கருத்தை வெளியிட்டார். அதாவது, பிரிட்டனின் மக்கள் கொகை இதே அளவில் வளர்ந்து

கொண்டே இருந்தால், இன்னும் 30 ஆண்டுகளில், வளரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நம்மிடம் கோதுமை உற்பத்தி இருக்காது. இதனால் பிரிட்டன் மிகப் பெரும் உணவுப் பற்றாக்குறையைச் சந்திக்கும் என்றார். சர் வில்லியம்ஸ் க்ரூக்ஸ் அவர்கள் கூறியபடி, பிரிட்டன் உணவுப் பற்றாக்குறையைச் சந்தித்ததா?

1934-38 ல் 0.94 மெட்ரிக் டன்/ஏக்கர் ஆக இருந்த பிரிட்டனின் கோதுமை உற்பத்தி 1956 ல் 1.26 மெட்ரிக் டன் /ஏக்கர் ஆகக் கூடியது.

1995 ல் பிரிட்டனின் மொத்த கோதுமை உற்பத்தி 14,300,000 மெட்ரிக் டன் ஆக உயர்ந்தது.

மேலும், உணவு உற்பத்தியின் அளவானது, வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உயர்ந்து கொண்டே தான் வந்ததே ஒழிய, வளர்ந்து விட்ட மக்கள் தொகை காரணமாக யாரும் பட்டினி கிடக்கவில்லை என்பது இன்றைய நிதர்சன உண்மையாகும்.

கி.பி. 1780 ல் பிரிட்டனின் மக்கள் தொகை 8 மில்லியன்.

1815 ல் --- 18.5 மில்லியன்

1911 ல் --- 45.2 மில்லியன்

1996 ல் --- 65 மில்லியன்

ஆக, சர் வில்லியம் க்ரூக்ஸ் அறிக்கை வெளியிட்ட 1898 முதல் 1997 வரை சரியாக ஒரு நூற்றாண்டு கடந்து விட்ட நிலையில், பிரிட்டனின் உணவு உற்பத்தி அதிகரித்து, மக்கள் அனைவரும் உணவுப் பற்றாக்குறை இல்லாமல் வாழ்வது, மேற்கண்ட மால்த்தஸ் சார்புவாத அறிஞர்களின் கூற்றை பொய்யாக்குகிறதல்லவா?

இதே சம காலத்தில் அமெரிக்காவிலும் அர்ஜெண்டினாவிலும் மித மிஞ்சிய கோதுமை உற்பத்தியின் காரணமாக ஏற்பட்ட விலைச் சரிவைக் கட்டுப்படுத்த, அந்த அரசுகள் மித மிஞ்சிய கோதுமையை டன் கணக்கில் கடலில் கொட்டியும், எரித்தும் அழித்தனரே, அதை உலகம் மறந்து விட்டதா? தவறானதொரு சித்தாந்தக் கொள்கைகளைக் கையில் தூக்கி வைத்துக் கொண்டு, சிறு பிள்ளைகளின் அழுகையை அடக்க பூச்சாண்டி வருவதாகக் கற்பனையாகக் கூறுவோமே, அதைப் போல் இந்த அறிஞர்? பெருமக்கள் பெயர் தெரியாத ஊருக்கு வழி சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலும் 1950 ல் இந்தியாவின் மக்கள் தொகை 361.1 மில்லியன் ஆகும். 1997 ல் 965 மில்லியன் ஆகக் கூடியுள்ளது. மேலும், 2002 பில்லியன் மக்கள் தொகையை விட அதிகம் ஆகி விட்டது.

இதில் வறுமைக் கோட்டுக்குக் கீழே கனிசமான அளவு, அதாவது 65 சதவீத மக்கள் வாழ்ந்தாலும், இநதியா உணவு உற்பத்தியில் தன்னிறைவைக் கண்டுள்ளது. அதே போல தனி நபர் வருமானமும், ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டே தான் வருகின்றது.

எவ்வாரெனில், இந்தியாவின் மொத்த உணவு உற்பத்தி 1950 ல் 50.8 மில்லியன் டன். 1995-96 ல் 185 மில்லியன் டன்னாக உணவு உற்பத்தி உயர்ந்துள்ளது எதைக் காட்டுகின்றதெனில், மக்கள் தொகை உயர உயர உற்பத்தியும் உயர்ந்து கொண்டு தான் வந்துள்ளது.

ஆனால் இந்த உற்பத்தி சரியான அளவில் பங்கிடப்படாமலும்*, பாதுகாக்கப்படாமலும், உற்பத்தி செய்யும் அளவுக்கு ஏற்ப தானிய பதனிடல் வசதியில்லாமையும்** ஆகிய காரணங்களால் உணவுப் பொருள் வீணடிக்கப்படுவதால் தான் பாதிப்பும் நஷ்டமும் ஏற்படுகிறதே ஒழிய, குடும்பக் கட்டுப்பாட்டுத்

திட்டத்தைக் கடைபிடித்ததால் அல்ல. (*, ** விரையமாகும் உற்பத்தி எனும் தலைப்பில் காண்க (பாகம் 2 ல் 6)

இந்தியர்களின் வருட வருமானம் ரூபாயில்..

தரம் வருமான மதிப்பு இந்திய ரூபாயில்

1985 - 1986 1992 - 1993

கீழ்த்தட்டு ரூ. 9000/-கீழே 18,000/-கீழே

தாழ்நடுத்தட்டு 9000/- - 18,000/- 18,000/- - 36,000/-

நடுத்தரம் 18,001/- - 30,000/- 36,001/- - 56,000

உயர்நடுத்தரம் 30,001/- - 42,000/- 56,001/- - 78,000/-

மேல்தரம் 42,000 மேலே 78,000 மேலே

- ஆதாரம் : இந்திய டுடே, ஏப்ரல் 6-20 - 1995.

மக்கள் தொகை கூடிய அதே அளவில் சராசரி இந்தியனின் வருட வருமானமும் கூடியே வந்துள்ளது. எனவே இவர்கள் கண்டு பயப்படும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனும் பிரமையும் தவறு என்பதும் நிரூபணமாகிறது.

மேலும், மால்த்தஸ் அபிமானிகள் கூறும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை பயன்படுத்தும் போது தான் நாட்டில் வாழ்வாதாரமும், நாட்டில் பொருளாதாரமும், தொழில் வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

எவ்வாறெனில், இன்றைய குழந்தை தான் நாளைய நுகர்வோர். இன்றைய தொழில் வளர்ச்சியும், தொழிற்சாலைகளும், இன்றைய மக்களின் தேவைகளை நிறைவேற்றும் அளவு உள்ளன என வைத்துக் கொள்வோம். அதாவது 100 கோடி மக்களின் நுகர் பொருள் மற்றும் உணவுத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு அமைந்துள்ளன. மேற்படி 100 கோடி மக்கள் தொகையை, குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் 100 அல்லது 150 ஆண்டுகளில் குறைக்கிறோம் எனில், குறைந்து விட்ட மக்கள் தொகைக்கு ஏற்ப உற்பத்தியையும் குறைக்க நேரிடும். உற்பத்தி குறையும் போது, தொழிற்சாலைகளையும், உற்பத்தியாளர்களையும், தொழிலாளர்களையும் குறைக்க நேரிடும். இதன் மூலம் நாட்டின் தொழில் வளமும், சந்தைப் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படும். அத்துடன் வேலை இல்லாத் திண்டாட்டமும் ஏற்படும். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரமும் சமூக நிலையும் வெகுவாகப் பாதிக்கப்படும்.

மேலும், இரண்டு உலகப் போர்களுக்குப் பின்னால், பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடுகளில் ஏற்பட்ட மக்கள் தொகைக் குறைவு, குறிப்பாக அதிக ஆண்கள் இறந்ததன் காரணமாக, பிறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்து போனது.

இந்த பிறப்பு விகிதத்தையும், நாட்டின் மக்கள் தொகையையும் சரி செய்வதற்காக, வெளிநாட்டு மக்களை குடியேற்றுவதற்கு, தம் குடியேற்றச் சட்ட விதிகளில் ஏகப்பட்ட மாறுபாடுகளைச் செய்து, சுதந்திரமான குடியேற்றத்திற்கு வழி செய்தது. ஆனால், இன்று அவ்வாறு குடியேறிய பல்வேறு மக்களின் இனம், நாடு, மொழி, நிறம், கலாச்சாரம் காரணமாக, இந்தக் குடியேறிய மக்கள் சொந்த நாட்டு மக்களுடன் வேறுபட்டு நிற்கிறார்கள். இந்த வேறுபாடானது, இந்த அரசுகளுக்கு பெரும் தலைவலியாக உள்ளது. ஏனெனில், குடியேறிய மக்கள் மீது, உள்நாட்டு மக்கள் அதிகமான தாக்குதல்களில்

ஈடுபடுகிறார்கள். மேலும், வேலை வாய்ப்பு போன்றவற்றில் உள் நாட்டு மக்களுக்கும், வெளிநாட்டில் இருந்து குடியேறிய மக்களுக்கும் ஏற்படும் போட்டியானது, உள்நாட்டு மக்கள் அரசுக்கு எதிராகவும், வெளிநாட்டவர்களை வெளியேற்றக் கோரியும் போராட்டத்தில் ஈடுபடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் பொருளாதாரப் பாதிப்பும், நாட்டின் ஸ்திரத் தன்மையில் பிரச்னையையும், பாதிப்பையும் ஏற்படுத்தி வருகிறது எனலாம்.

இதே நேரத்தில் மக்கள் தொகை பெருகப் பெருக உற்பத்தி பெருக வேண்டிய நிர்ப்பந்தம், மனிதனை விரைவான உற்பத்திக்கு அவனைத் தூண்டுகிறது. இதன் மூலம் வேலை வாய்ப்பு, தொழில் வளர்ச்சி பெருகுவதோடு, நாட்டின் பொருளாதாரமும் உயரும் அதேவேளையில். நாட்டின் பாதுகாப்பும் பலப்படுத்தப்படும்.

நேற்று வரை நம் நாட்டில் ஒரு மாடு ஒரு நாளைக்கு 10 லிட்டர் பால் கரந்தால் ஆச்சரியம். ஆனால் இன்று ஒரு நாளைக்கு 40 லிட்டர் கரக்கும் கலப்பு இன மாடுகள் வந்து விட்டன. மேலும், ஆஸ்திரேலியா, டென்மார்க், ஹாலந்து போன்ற நாடுகளின் மாடுகள் ஒரு நாளைக்கு 90 லிட்டர் பால் கறக்கும் திறனுடையவை. மேற்படி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்த மாடுகளுக்கு, அதே சீதோஷ்ண நிலையை செயற்கையாக உருவாக்கி, சௌதி அரேபியாப் பால் பண்ணைகளில், அதே 90 லிட்டருக்கும் குறைவில்லாத பாலை உற்பத்தி செய்கிறார்கள். அதே போல மேற்படி நாடுகளின் மாடுகள் ஈனும் கன்றானது, 8 மாதத்திலேயே சினைக்குத் தயாராகி விடுகின்றது. அதே போல தினம் ஒன்றுக்கு நம்நாட்டுப் பண்ணைகளின் கோழிகள் ஒரு முட்டை தான் இடும். இன்று ஒரு நாளைக்கு இரண்டு முட்டை இடும் கோழிகள் வந்து விட்டன.

அதேபோல, 1 கிலோ கத்தரிக்காய் பறிக்க 10 நொடிகளில் காய் பறிக்க வேண்டிய நிலை போய், இன்று ஒரு நொடியிலேயே 10 கிலோ கத்தரிக்காய் பறிக்கும் அளவுக்கு உலகத்தில் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது.

முன்பு நெல் அறுவடை செய்ய 6 மாதம் காத்திருந்தது போக, இன்று 90 நாட்களில் அறுவடை செய்யக் கூடிய இனங்களை மனிதன் கண்டுபிடித்துள்ளான்.

எனவே, மக்கள் தொகை பெருகப் பெருக, அவற்றைச் சமாளிக்க வேண்டியதன் பொருட்டு எழுந்த உந்துதல்கள் மனிதனை புதிய புதிய கண்டுபிடிப்புகளை செய்யத் தூண்டியது. அதற்கு ஏற்றாற் போல், Genetic Engineering போன்ற புதுப்புது அறிவியல் துறைகள் ஏற்பட்டு, விவசாயத் துறையிலும், கால்நடைத் துறையிலும் வியத்தகு மாற்றங்களைச் செய்து வருகின்றது.

மேலும், எந்தெந்த நாடுகள் மக்கள் தொகையை அதிகமாகப் பெற்றுள்ளதோ, அந்த நாடுகள் பாதுகாப்பிலும் தன்னிறைவைப் பெற்றுள்ளன. அதே நேரத்தில் குறைவான மக்கள் தொகை கொண்ட ஜப்பான், தைவான், குவைத், சௌதி அரேபியா போன்ற நாடுகள் தங்கள் பாதுகாப்பிற்காக அமெரிக்கா போன்ற நாடுகளின் ராணுவ வீரர்களைக் கூலிக்கு அமர்த்த வேண்டிய நிர்ப்பந்த நிலையில் உள்ளனர். எனவே ஒரு நாட்டின் மக்கள் தொகை தான் அந்நாட்டின் பெருஞ் செல்வம். மக்கள் தொகை பெருகப் பெருக வளங்களும் பெருகுமே ஒழிய, அந்நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லாது.

### இ) தனி நபர் வருமானக் கணிப்பு - புதிய முறை

சர்வதேச நாணய நிதி அமைப்பின் கணக்கீட்டின்படி உள்நாட்டுப் பண மதிப்பின் அடிப்படையில் வாங்கும் சக்தியை முக்கியமான காரணியாகக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. இதன் மூலம் மொத்த உள் நாட்டு உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. இப்புதிய கணக்கீட்டின்படி இந்தியாவில் சராசரி தனிநபர் வருமானம் 1,250 டாலராக உயர்ந்துள்ளது. முன்னர் இது 1150 டாலராக இருந்தது. மேலும் இக் கணக்கீட்டு முறையை

வளரும் நாடுகள் அங்கீகரிப்பதில்லை. ஏனெனில், அவைகளுக்கு உலக வங்கியின் சிறப்புக் கடன் உதவி கிடைக்காது. ஒரு நாட்டின் சராசரி வருமானம் 765 டாலருக்கு மேல் இருந்தால் உலக வங்கி நிதி உதவி அளிக்காது என்பதே இதன் காரணமாகும்.

### ஈ) கல்வி இல்லா குழந்தைகளும், தேசத்தின் வளர்ச்சியும்?

மேலும் இந்தியாவைப் பொருத்தவரை 30 கோடிப் பேர் கல்வி இல்லாதவர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் குழந்தைத் தொழிலாளர்களாக வாழ்வைத் தொடங்கியவர்கள். உலகத் தொழிலாளர் நலக் கழகம், வேறு சில பொது நல அமைப்புகளுடன் இணைந்து நடத்திய ஆய்வில், கல்வி கற்ற ஒருவர் 50 ஆண்டுகளில் 12 லட்சம் ரூபாய் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது. கல்வி இல்லாதவர் எத்தனை ஆண்டுகள் உழைத்தாலும் இந்த வருமானத்தை எட்ட முடியாது. (இந்தியன் எக்ஸ்பிரஸ் 01.07.1997 தமிழில் சாலை இளந்திரையன் - சமரசம் ஆகஸ்டு 16-31-1997) என்பது தெளிவாகத் தெரியவந்துள்ளது. இந்தியாவில் சுமார் 2 கோடிக் குழந்தைகள் பள்ளிக் கல்வி இல்லாததால், படைப்பாற்றலுக்கான மன வளர்ச்சியை இழந்து விடுகின்றார்கள். குறைந்த கூலி வேலைகளுக்கும், இவர்கள் பயன் தருவதால், இந்நாட்டின் அரசியல்வாதிகளும், ஆலை அதிபர்களும் அந்தக் குழந்தைகளின் மழலை நாட்களில் கல்வி பெறுவதிலிருந்து தடுப்பதன் மூலம், இந்திய நாட்டின் தொழிலாளர்களின் திறனைத் தடுப்பதோடு, தனி நபர் வருமானத்தையும் அவர்கள் பாதிப்படையச் செய்து விடுகின்றார்கள்.

இந்த தனிநபர் வருமான பாதிப்பானது தேசத்தின் மொத்த வருவாயைப் பாதிக்கக் கூடியதாக உள்ளது. இது போன்ற நிலைகளில், கண் முன் அனைவருக்கும் தெரிந்து நடக்கும் இத்தகைய அநியாயங்களை அரசும், அரசியல்வாதிகளும் தங்கள் லாப நோக்கங்களுக்காக மட்டுமே அவ்வப்பொழுது குரல் கொடுக்கிறார்கள்.

நாட்டின் தனிநபர் வருமானம் உயர்வதால், குடும்ப வருமானம் உயரும் அதேவேளையில், பொருளாதார நோக்குடன், பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்பட்டு விடும் எனும் பயத்தில் குடும்பக் கட்டுபாட்டுத் திட்டத்தை கடைபிடிக்க வேண்டிய அவசியமும் இல்லாமல் ஆகி விடும்.

ஏனெனில் இன்று பொருளாதாரப் பற்றாக்குறை தான் குடும்பத்தில் குழந்தைகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தத் தூண்டும் முழு முதற் காரணியாக அமைந்துள்ளது என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். எனவே, மக்களை கல்வி கற்ற சமுதாயமாக உருவாக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் உயருமே ஒழிய, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் உயராது என்பது இன்று நிரூபணமாகி வரும் உண்மையாகும்.

டிசம்பர், 02, 1997 ல் வெளியான இந்தியா டுடே பத்திரிக்கையில் பக்கம் 46 ல் வெளியானதொரு செய்தியில், தமிழ்நாடு திரைப்படத் துறை மாணவர்கள் எடுத்த, வென்த ட்ரீம் கம்ஸ் ட்ரூ என்ற டாக்குமெண்ட்ரி திரைப்படத்தில், படிப்பறிவில்லாத ரிக்ஷா தொழிலாளிக்கு வரிசையாகக் குழந்தைகள். அவனது மகள் பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதில், கூலி வேலைக்குச் செல்ல நேரிடுகிறது. தன் தந்தை ஒரு குழந்தையோடு நிறுத்தியிருந்தால் குடும்பம் எப்படி இருந்திருக்கும் என அந்த 10 வயத சிறுமி நினைப்பதாக அந்தப் படத்தில் சொல்லி இருக்கிறார்களாம்.

இந்தியச் சட்டப்படி, அனைத்து குடிமகனுக்கும் கல்வி கற்க உரிமையளிக்கப்பட்டுள்ளது. அந்தக் கல்விக்காக வேண்டி இந்த நாடு எந்த அளவில் செலவு செய்துள்ளது. சிலைகளுக்கும், விழாக்களுக்கும், வெட்டி பந்தாக்களுக்கும் மட்டும் பணம் இருக்கிறது. ஆனால், ஆரம்பக் கல்வி வசிதியை நாட்டில் விஸ்தரிக்க மட்டும் பணம் இல்லை. இன்று எத்தனை பள்ளிக் கூடங்கள் கட்டிடம் இல்லாமலும், ஆசிரியர்கள் இல்லாமலும் நடந்த கொண்டிருக்கிறது. கணக்கில்லாதவை.

மேலும், இத்தகைய குழந்தைகளை கொத்தடிமைகளாகப் பயன்படுத்தவும், கூலி வேலைக்கு அமர்த்தவும் சட்டம் தடை செய்திருந்தும், இன்று குழந்தைத் தொழிலாளர்கள் நாட்டில் பெருகக் காரணம் என்ன? அத்தகைய குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் அரசியல் முதலைகளையும், பணக்கார முதலாளிகளையும் இந்த தேசம் என் செய்தது? அந்தக் குழந்தையின் கல்வி மறுப்புக்கு யார் காரணம்? ஏன்? அந்தத் தகப்பன் மேல் மட்டும் முழுப் பழியைச் சுமத்துகிறீர்கள். ஊரில் எந்தத் தகப்பனும் பிள்ளை பெறாவிட்டால் உங்களுக்கு (அரசியல்வாதிகளுக்கு) தான் நல்லது. கல்விக்கு என ஒதுக்கும் பணத்தை சிலைகளுக்கும், சினிமாக் கூத்தாடிகளுக்கும் வாறி இறைக்கலாமே!

அது போகட்டும், ஒரு குழந்தையுடன் மட்டும் வாழும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிலை மட்டும் என்ன வாழுகிறதாம். அந்த ஒரு குழந்தையின் கல்வித் தேவைக்கு இந்த அரசு என்ன செய்துள்ளது. புழுத்துப் போன சத்துணவும், உழுத்துப் போன பால் மாவும் தானா? இன்று எங்கு திரும்பினும் கல்வி என்பது கடைச் சரக்காக காண்வெண்ட் முதல் பல்கலைக்கழகம் முதல் பரவி விட்டதே, இந்த நிலையில் ஒரே ஒரு குழந்தை பெற்ற கீழ் நிலை மக்கள் என்ன தன் குழந்தையை காண்வெண்டிலா படிக்கப் போட்டு விட்டான்?

நீங்கள் செய்வதெல்லாம், அந்தப் பிஞ்சின் மனதிலே நஞ்சைக் கலப்பது தான். தன்னுடன் பிறந்து விட்ட தன் தங்கை, தம்பிகளால் தானே நமக்கு இந்தச் சிரமம் என்ற உளவியல் தாக்கத்தால், அந்தப் பிஞ்சுக் குழந்தை தன் தம்பி தங்கைகளையே எதிரிகளாக நினைக்க வைக்கத் தான் இது போன்ற படங்கள் பயன்படுமே ஒழிய, அதனால் எழும் பிரச்னையை எள் முனையளவும் தீர்க்கப் பயன்படாது.

மேல்மட்டத்துக்கு வேண்டுமென்றால் வதவதவென்ற இருக்கும் குழந்தைகள் அநாகரீகமாகத் தோன்றலாம். ஆனால் கீழ்நிலையில் இருக்கும் மக்களுக்க அது தான் பொக்கிஷமே. ஏன் எனில் இந்த மேல்மட்ட மக்களால் ஏற்பட்ட நிர்வாகக் கேடு, முறையற்ற ஆட்சி போன்வற்றால் விலைவாசி உயர்வு. நுகர்பொருள் வரி ஏற்றம் போன்றவற்றினால் அவனது பொருளாதாரச் சுமையைப் பன்மடங்காக்கிக் கொண்டு வருகிறது. இவற்றை எலலாம் அவன் ஈடு கொடுக்க வேண்டும் என்றால், அதிகக் குழந்தைகளும், அதன் மூலம் வருமானமும் கிடைக்க அவன் வழி தேடிக் கொள்கிறான். இவற்றை எல்லாம் தீர்க்க, கீழ்க்குடிமகனின் நிலை உயர வேண்டுமென்றால், ஆளும் வர்க்கம் முதலில் சீரடைய வேண்டும். ஆணி வேரே பழுதடைந்து நிற்கும் போது, கிளைகளைக் கோபித்துப் பயன் இல்லை..! திரைப்படக் கல்லூரி நண்பர்களே!!!

மேலும் சமூகத்தின் கீழ் மட்டமானது அதிக பிள்ளைகளைக் கொண்டதாக உள்ளது என்பது அவர்களைப் பொருத்தவரை ஒரு சாதகமான விசயம் தான். ஏனெனில், தன் நிலத்தின் பயன்பாடுகளுக்கான கூலி வேலைகள் மற்றும் தன் தொழில்களுக்கான கூலி வேலைகளுக்கு பிறரை கூலிக்கு அமர்த்தும் போது ஏற்படும் பொருளாதார நஷ்டத்திலிருந்து பாதுகாக்க, தன் பிள்ளைகளை அதற்குப் பயன்படுத்தி, பொருளாதார விரையத்திலிருந்து அவன் தன்னைப் பாதுகாத்துக கொள்கிறான். அதனால், அதிகக் குழந்தைகளை அவன் சுமையாகக் கருதுவதில்லை. இத்தகைய நிலையில், அரசு அந்த கீழ் மட்டக் குடிமகன் மேல் கருணை கொண்டு, அவனது பிள்ளைகளுக்கு சரியான முறையில் இலவசக் கல்வி வழங்குமானால், கீழ்க்குடி மகனின் பொருளாதாரம்.., தன் கல்வி கற்ற குழந்தை மூலம் உயர வாய்யப்பிருக்கிறது. இத்தகைய கீழ்க்குடி மகனின் பொளாதார வளர்ச்சி தான் நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சியாக அமையும். ஏனெனில், நாட்டின் 60 சதவீதம் பேர் நாட்டின் சராசரி வருமானத்துக்கும் கீழ்நிலையில் உள்ளவர்கள்.

## 2. இடப்பற்றாக்குறை ஏற்படும்?

குடும்பக் கட்டுப்பாடு மற்றும் மால்த்தஸ் அபிமானிகளின் அடுத்த வாதம், மக்கள் தொகை வளர வளர இடப்பற்றாக்குறை ஏற்படும்..? ஏனெனில், பூமி என்பது ஒரு குறிப்பிட்ட அளவு கொண்ட வாழ்விடமாகும். அதாவது, பூமியின் மொத்தப் பரப்பளவு 57,168,000 சதுர மைல்கள். இதில் 1995 ன் கணக்குப்படி மக்கள் தொகை 573 கோடியாகும்.

மேற்படி உள்ள பூமியின் பரப்பளவோடு, மக்கள் தொகையையும் கணக்கிட்டால் 9-10 ஏக்கர் பரப்பளவில் ஒரு மனிதன் வசிக்கின்றான். அதாவது ஒரு சதுர மைல் பரப்பளவிற்கு 100க்கும் சற்று அதிகமான பேர் வசிக்கிறார்கள். கிட்டத்தட்ட 6-7 கால்பந்து மைதானங்கள் அளவுள்ள இடத்தில் ஒரு மனிதன் வசிக்கின்றான். ஒரு கால்பந்து மைதானம் என்பது ஒன்றரை ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் மனிதன் குடிசையிலும், மாடி வீடல்லாத வீட்டிலும் வசித்துக் கொண்டிருந்தான். ஆனால் இன்றோ, விஞ்ஞான வளர்ச்சியும், தொழில் நுட்பமும் வளர்ச்சி அடைந்து வரும் நிலையில், மனிதன் இன்று அடுக்கு மாடிகளில் வசிக்க ஆரம்பித்து உள்ளான். இதன் மூலம் இடப்பற்றாக்குறை எவ்வளவு ஏற்பட்டாலும், அவற்றை எல்லாம் சமாளிக்கும் அளவுக்கு இன்றைய தொழில் நுட்பம் முன்னேறி உள்ளது.

இன்றைய முன்னேறிய நாடுகளில் முதன்மையான அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 1 சதுர மைல் பரப்பளவிற்கு 22,000 பேர் எந்த அசௌகரியங்களும் இல்லாமல், உலகின் முதல் தர வசதிகளோடு வாழ்கின்றார்கள்.

மேலும் சீனாவின் மொத்தப் பரப்பளவில் 10 சதவீதம் நிலம் மட்டுமே உபயோகத்தில் உள்ளது. மேற்கு ஆப்ரிக்காவில் 62 சதவீத விவசாய நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் தரிசு நிலங்களாக உள்ளன. அதாவது, 1,150,000,000 ஏக்கர் நிலங்கள் தரிசு நிலங்கள். பிரேசில் தனது மொத்த விளை நிலத்தில் (2,000,000,000 ஏக்கர்) 2.25 சதவீதத்தை மட்டுமே விவசாயத்திற்காகப் பயன்படுத்துகிறது. மேலும் பிரேசில் தனது மொத்த விளைநிலத்தில் 29.21 சதவீதத்தைத் தான் விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறது.

ஜப்பான் தனது மொத்த விளைநிலத்தில் 13.97 சதவீதத்தைத் தான் விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறது. கனடா தனது மொத்த விளைநிலத்தில் 8 சதவீதத்தைத் தான் விவசாயத்திற்காகப் பயன்படுத்துகிறது.

விவசாயம் செய்தது போக, எஞ்சியுள்ள இடங்கள் காடுகளாகவும், பாலை நிலங்களாகவும், மலைகள் மற்றும் தரிசு நிலங்களாகவும் கிடக்கின்றன. இவ்வளவு இடங்கள் போக மீதமுள்ள இடங்களில், அதாவது மக்கள் தற்பொழுது குடியிருக்கும் பகுதி போக, மக்கள் குடியிருக்கத் தகுதியான இடங்கள் இன்னும் நியை உள்ளன. மேலும் பல அடுக்குமாடிக் குடியிருப்பு வசதியானது, மக்கள் உபயோகப்படுத்தும் பரப்பளவைக் குறைத்துள்ளது எனலாம். மேலும், மேலே உள்ள தகவல் மூலம், வளரும் மக்கள் தொகை மூலம், இடப்பற்றாக்குறை ஏற்படும் என்பது வெறும் பூச்சாண்டி காட்டும் வேலையேயன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?!

இனி சில நாடுகளில் உள்ள ஜன நெருக்கடியைப் பார்ப்போம்.

| எண் | நாடு | ஜனநெருக்கடி (ஒரு சதுர கி.மீ.களில்) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | அமெரிக்கா | 57.67 |
| 2 | ஆஸ்திரியா | 214.71 |
| 3 | கிரீஸ் | 109.3 |
| 4 | பிரிட்டன் | 319.17 |
| 5 | மெக்ஸிகோ | 85.29 |
| 6 | இந்தியா | 695.3 Per/Sq. mile |
| 7 | ஜப்பான் | 852.5 Per/Sq. mile |
| 8 | இஸ்ரேல் | 777.41 |
| 9 | எகிப்து | 646.44 |
| 10 | ஆஸ்திரேலியா | 3.6 |
| 11 | பாகிஸ்தான் | 423.24 |
| 12 | சௌதி அரேபியா | 16.75 |
| 13 | பிலிப்பைன்ஸ் | 652.52 |
| 14 | மலேசியா | 353.64 |
| 15 | சீனா | 314.6 Per/Sq. mile |
| 16 | நெதர்லாந்து (ஹாலந்து) | 1,055.2 Per/Sq. mile |

மேற்கண்ட அட்டவணையில் ஒவ்வொரு நாடுகளிலும் ஒரு சதுர கி.மீ. களில் வாழும் மக்களின் அளவு உயாந்தும் தாழ்ந்தும் உள்ளன. இதில் நெதர்லாந்தில் ஒரு சதுர மைல் பரப்பளவில் 1055.2 பேர் வாழும் போது. இந்தியாவில் 695.3 பெர் தான் வாழ்கின்றார்கள். அதே போல் மிகக் குறைந்த அளவாக ஆஸ்திரேலியாவில் 3.6 பேர் வாழ்கிறார்கள். நெதர்லாந்தில் ஒரு சதுர மைல் பரப்பளவில் 1055.2 பேர் வசதியோடும், உலகின் வளர்ந்த நாடுகளின் தர நிர்ணய அளவுக்கு இணையாகவும் வாழும் போது இந்தியாவில் 695.3 பேர் ஒரு சதுர மைல் பரப்பளவில் வாழ்ந்து வருவதைக் கண்டு. மக்கள் தொகைப் பெருக்கத்தால் இட நெருக்கடி ஏற்படும் என்றால், இந்த மால்த்தஸ் ன் வாதத்தைக் கிளப்பும், அதற்கு வக்காளத்து வாங்கும் அறிஞர்கள் உண்மையிலேயே புத்தி ஜீவிகள் தானா? என்ற சந்தேகம் நமக்கு எழுகின்றது. மேலும், இன்னும் 1 கி.மீ ல் இவ்வளவு நபர்கள் தான் எல்லா வசதிகளோடும் வசிக்க முடியும் என்ற வரையறை கூட ஏற்படுத்தப்படவில்லை.


மேலும், நெதர்லாந்தில் ஒரு சதுர மைல்பரப்பளவில் இவ்வளவு நபர்கள் வசித்தும், இடப்பற்றாக்குறை என்ற பிரச்னை இல்லாமல் வாழ்கிறார்களே தவிர, இடப்பற்றாக்குறை காரணமாக யாரும் கடலில்

விழுந்து தற்கொலை செய்து கொள்ளவில்லை. மாறாக, கடலை மக்கள் வசிக்கும் இடமாகவும், விளை நிலமாகவும் மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் உண்மை நிலையாகும்.

அதற்கும் மேலாக, அந்தக் கடலையும், குடியிருக்க தகுதியே இல்லாத கரடு முரடான பாறை நிறைந்த இடங்களையும், தோண்டி பின் கைவிடப்பட்ட சுரங்கங்களையும், சதுப்பு மற்றும் பாலை நிலங்களையும், புதிய புதிய விஞ்ஞான தொழில் முறைகளைப் பயன்படுத்தி மனிதன் வாழவும், விவசாயம் செய்யவும், தகுந்த நிலங்களாக மாற்றிப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள். (திருத்தியமைக்கப்பட்ட பயன்படாத நிலங்கள் என்ற தலைப்பில் காண்க)

மேலும், நெதர்லாந்திலும், ஜப்பானிலும் இவ்வளவு ஜன நெருக்கடி இருந்தும், பிறப்பு விகிதம் குறைந்து விட்டதை அறிந்து ஜப்பான் குடும்பக் கட்டுபாட்டுத் திட்டத்தை கைவிடுவதற்கு உண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஆனால் நம் இந்திய அறிவு ஜீவிகளோ? மக்கள் தொகை பெருகுகிறது என ஓலமிடுகின்றார்கள். மேலும் மக்கள் தொகை வளர்ச்சி தான் ஒரு நாட்டை தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும், நாட்டின் பாதுகாப்பிலும் முன்னேற்றம் காணச் செய்யும். அது அல்லாத குடும்பக் கட்டுபாட்டுத் திட்டம், ஒரு தேசத்தை அழிவுப் பாதைக்குத் தான் இட்டுச் செல்லும்.

மேலும் இத்தகைய காரணங்களைக் காட்டிச் செய்யப்படும் பிரச்சாரங்கள் மனிதனின் மூளையை மழுங்கடிக்கச் செய்பவையாகவே இருக்கின்றன. கீழே உள்ள படத்தைப் பார்க்கவும்.




மேலே நாம் பார்த்த படம் நமது நாட்டு அரசு மருத்துவமனைகளில் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரத்திற்காக வைக்கப்பட்டிருக்கும், பிரச்சாரப் படம். இப்படத்தை பார்ப்பவர்களுக்கு அதிகப் பிள்ளை பெற்றுக் கொள்வதால் தகப்பனின் சொத்து எவ்வாறு பிரிந்து விடுகின்றது. இதே இது ஒரு பிள்ளையாக இருந்தால் சொத்து பிரியாமல், முழுச் சொத்தும் பிரியாமல் இருக்குமே எனும் மனநிலையைத் தோற்றுவிக்கும். இந்த மனநிலையானது பார்ப்பவர்களுக்கு, சோம்பேறித்தனத்தையும், முயற்சியின்மையையும் தான் கொடுக்கும்.

எவ்வாறெனில், தகப்பன் தன்னுடைய சம்பாத்தியத்தில் 1 ஏக்கர் நிலம் வாங்கினார் என்றால், பிள்ளை அவனது சுய முயற்சியில் 1 ஏக்கரோ அல்லது அதற்கு மேலோ வாங்கினால் தான் அவன் வெற்றி பெற்ற மனிதனாகக் கருத முடியும். அதுவல்லாது தகப்பனுடைய சொத்தையே நம்பி தன் வாழ்வை நடத்தும் குழந்தை வெற்றி பெற்றவனாகக் கருத முடியாது. அதே போல ஒரு குடும்பத்தில், நான்கு பிள்ளைகள் என்றால், நான்கு பிள்ளைகளும் ஆளுக்கு ஒரு ஏக்கர் சம்பாதித்தார்கள் எனில், அக்குடும்பச் சொத்து, தகப்பனுடைய 1 ஏக்கர் நிலத்தையும் சேர்த்து 5 ஏக்கர் பெருக வாய்ப்பு உள்ளது. ஆனால் மால்த்தஸ் சார்பு வாத அறிஞர்களின் இத்தகைய பிரச்சாரமானது, பெற்றோர்களின் மூளையையும் மழுங்கடித்து, வளரும் குழந்தைகளை அப்பனின் சொத்தையே நம்பி வாழும் சோம்பேறிப் பிள்ளைகளாகத் தான்

ஆக்குமே ஒழிய. சுறுசுறுப்பான உழைக்கும் திறனுள்ள குழந்தைகளையே சமூகத்துக்குத் தராது என்பது தான் உண்மையாகும். மேலும், நம்முடன் மூன்று நான்கு சகோதர, சகோதரிகள் பிறந்தால் தானே, நமக்கு முழுச் சொத்தும் கிடைக்காமல் போனது என்ற கிரிமினல் சிந்தனை ஏற்பட்டு, அனைத்து சொத்தையம் தானே அடைய, அதற்கான கிரிமினல் வேலைகளில் ஈடுபடவும், இத்தகைய பிரச்சாரங்கள் தூண்டவும் காரணமாகவும் அமைந்து விடலாம்.

மேலும், தமிழகத்தில், தேசிய மக்கள் தொகையில், 1 சதுர கி.மீ. ல் 428 பேர் வாழ்கிறார்கள். மற்றும் தமிழகத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில், மக்கள் தொகை நெருக்கம் அதிகம் மற்றும் குறைவாக உள்ள மாவட்டங்களாவன :

| எண் | மாவட்டம் | மொத்த மக்கள் தொகை 1சதுர கி. மீ. | ஜனநெருக்கடி (ஒரு சதுர கி. மீ. களில்) |
|---|---|---|---|
| 1 | சென்னை | 21,811 | 55,638,318 |
| 2 | கன்னியாகுமரி | 945 | 1,591,174 |
| 3 | திருவள்ளூர் | 588 | 4,653,593 |
| 4 | தஞ்சாவூர் | 594 | 2,138,845 |
| 5 | மதுரை | 525 | 3,449,662 |
| 6 | கடலூர் | 596 | 2,122.759 |
| 7 | நாகை | 518 | 2,387,864 |
| 8 | பெரம்பலூர், திருச்சி, கரூர் | 371 | 4,114,323 |
| 9 | சிவகங்கை | 263 | 1,074,989 |
| 10 | புதுக்கோட்டை | 284 | 1,322,494 |
| 11 | இராமநாதபுரம் | 268 | 1,135,887 |

இதில் சென்னையில் தான் அதிகபட்ச மக்கள் தொகையாக 21,811 பேர் ஒரு சதுர கி.மீ.க்குள் வாழ்கிறார்கள். இதே அளவு மக்கள் தொகை தான் அமெரிக்கத் தலைநகர் நியூயார்க் நகரில் வாழ்கிறார்கள். ஆனால், அது வளர்ந்த நாடுகளில் முதன்மையானது. ஆகையால், இவ்வளவு மக்களும் எந்தவித அசௌகரியங்களையும் அடையாமல் வாழ்கிறார்கள். ஆனால் சென்னையைப் பொருத்தவரை மக்கள் பலவித அசௌகரியங்களுடன் வாழ யார் காரணம்? மக்கள் தொகைப் பெருக்கமா? கிடையாது. இதன் முழு முதற் காரணம் அரசே தான். எல்லா முக்கிய தொழிலகங்களும், தொழிற்சாலைகளும், அலுவலகங்களும் தலைநகரில் இருப்பதும், அரசின் சரியான திட்டமிடல் இல்லாமையும் தான் இதன் காரணமாகும்.

ஏனெனில், இவ்வளவு மக்கள் தொகையும் பெருகக் காரணம், கிராமங்களிலிருந்து மக்கள் வேலைவாய்ப்புத் தேடி இடம் பெயர்ந்ததாலும், மேலும் கிராமங்களில் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம்

போன்ற அடிப்படை வசதிகள் மறுக்கப்படுவதாலும் தான் சென்னை இவ்வளவு பெரிய மக்கள் தொகையைப் பெற்றுள்ளதே தவிர, குடும்பக் கட்டுப்பாட்டை கடைபிடிக்காமல், சளைக்காமல் பெற்றுத் தள்ளியதால் அலல என்பதை குடும்பக்கட்டுப்பாட்டு ஆதரவு அறிவு ஜீவிகள் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

கிராமங்களின் அடிப்படைத் வசதிகள் செய்யப்படும் என்பன போன்ற அரசின் திட்டங்கள், திட்டங்களாகவே உள்ளனவே தவிர செயல்பாடு என்பது மிகக் குறைவே. அப்படியே கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகள் செய்யப்படாமலும், செய்யப்படவிருக்கும் வசதிகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் முழுமையாகச் செலவிடப்படுகிறதா? என்றால் இல்லை. காண்ட்ராக்டர் முதல் எம்.எல்.ஏ., எம்.பி., வரை கொள்ளையடித்தது போக, திட்டங்களுக்குப் போய்ச் சேர்வது என்னவோ, வெறும் 20 சதவீதம் தான் இருக்கும். ஏனெனில், ரோடு போடக் கொட்டப்படும் சல்லிக் கற்கள், ரோடு போடப்பட்டதாக பணம் பெறப்பட்ட பின் அவை ரோடுகள் போடப்படாமலேயே அள்ளிச் செல்லும் அவலம் நம் தமிழ்நாட்டில் தான் அதிகம் நடக்கிறது எனலாம்.

இதுபோல, ஆளும் வர்க்கமும், அதிகார வர்க்கமும் செய்கின்ற தவறுகள் தான், சமுதாய அவலங்களைத் தோற்றுவிக்கின்றன. போடப்படும் திட்டங்கள் அறிவார்ந்த முறையிலும் தொலைநோக்கும் கொண்டதாக இருக்கும் பட்சத்திலும், போடப்படும் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் பணம் முழுமையாகக அந்தந்தத் திட்டங்களுக்குச் செலவிடப்படுமானால், நாடு இந்தளவு வளர்ச்சித் தடையைப் பெற்றிருக்காது.

மேலும், இந்திய நாட்டின் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்பவர்கள் இந்த நாட்டுப் படிப்பாளிகளும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தான் என்று சொன்னால் பலர் வியப்படையலாம். ஆனால் அது தான் உண்மை. பல்வேறு உலக நிறுவனங்கள் இந்தியாவின் வளர்ச்சிப் பணிகளுக்குக் கடனாக வழங்கிய 1100 கோடி டாலர் (38,000 கோடி ரூபாய்) பயன்படுத்தப்படாமல் அப்படியே முடங்கிக் கிடக்கிறது. அறிவியல் படிப்பும், புதிய புதிய திட்ட நடவடிக்கைப் படிப்பும் படித்தவர்கள், இந்தியாவில் உலகத்திலேயே இரண்டாவது பெருந்தொகையினராக இருக்கிறார்கள் என்ற புள்ளி விபரம் தரப்படுகிறது. தேடி வந்து கிடைத்த 38,000 கோடி ரூபாயைப் பயன்படுத்தத் தெரியாமல் அழுக்கப்படியப் போட்டு விட்டு, பழைய பஞ்சப்பாட்டையே பாடிக் கொண்டு இருக்கும் நம்முடைய படிப்பாளிகள் பற்றி என்ன தான் சொல்வது? (வணிக மணி, 7-4-97. சமரசத்தில் பேராசிரியர் சாலை இளந்திரையன். ஆகஸ்டு 16-31, 1997)

மேலும், எங்கெல்லாம் தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்புக்களும் அதிகம் உள்ளனவோ அந்தந்த மாவட்டங்களில் தான் மக்கள் தொகை நெருக்கம் அதிகம் காணப்படுகிறது. பிற மாவட்டங்களான இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை போன்ற வறண்ட மாவட்டங்களில் மக்கள் தொகை குறைவாக இருப்பதற்குக் காரணம், தொழில் வளர்ச்சியும், விவசாயமும் மிகக் குறைந்த அளவே காணப்படுவதும், அதன் மூலம் வேலை வாய்ப்பு இல்லாத நிலையினால் தான், மக்கள் தொகை நெருக்கம் குறைவாகக் காணப்படுகிறது. இது போன்ற வறண்ட பகுதிகளிலிருந்து வேலை வாய்ப்புத் தேடிச் செல்வோர்களால் தான், சென்னை போன்ற நகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகமாக இருக்கின்றதே ஒழிய, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை கடைபிடிக்காததால் அல்ல.

மேலும் 1971-81 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 17.50 சதமாக இருந்த மக்கள் தொகை வளர்ச்சி 1981-91 ஆம் ஆண்டுகளில் 14.94 சதமாகக் குறைந்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் இந்தியா முழுவதும் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 23.5 சதமாகும்.

பொதுவாக இடப்பற்றாக்குறை ஏற்பட்டு விடும் என்று குடும்பக்கட்டுப்பாட்டு ஆதரவு இயக்கங்கள் போடும் கூப்பாடுகள் தவறானவை. கண்மூடிக் கொண்டு கதறுவது போலத்தான், வரவர நமது இந்திய கல்வியாளர்களுக்கு சுயசிந்தனை என்பது இல்லாமலாகி விட்டது. வெளிநாட்டு அறிஞன்? எவனாவது எதைப் பற்றியாவது வாய் திறந்து விட்டால் போதும், அதை ஆய்வுக்கு உட்படுத்தாமல் ஏற்றுக் கொள்வது என்பது நம்முடைய பழக்கமாகி விட்டது. இந்தியா தன்னை அடிமைத் தலையிலிருந்து விடுவித்துக் கொண்டாலும், நம் மக்கள் இன்னும் முதலாளிக்கு கைகட்டும் சேவகன் பழக்கத்திலிருந்து மீண்டதாகத் தெரியவில்லை.

இந்தியாவில் 5 சதவீத நிலப்பிரபுக்களிடமிருந்து உள்ள 46 சதவீத நிலத்தை, துண்டு நிலங்கூட இல்லாத 30 கோடி மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். (வணிக மணி, சமரசம் ஜனவரி 1-15, 1997)

இந்தியாவில் 5 சதவீத நிலப்பிரபுக்களிடம் இருக்கும் 46 சதவீத நிலத்தின் மூலம் 30 கோடிப் பேர் பயன் பெறலாம் எனில், பயன் பெறும் 30 கோடிப் பேரும், மீதம் உள்ள 65 கோடிப் பேருக்கு வாழ்வாதாரம் உணவு, இருப்பிடம் போன்ற அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்ற முடியும். எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தால் இடப்பற்றாக்குறை என்ற வாதம் முற்றாக அடிபடுகிறது. மேலும் இதன் மூலம் இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் 65 சதவீத மக்களில் 30 சதவீத மக்களை முழுவதும் வறுமைக் கோட்டுக்கு மேலே கொண்டு வந்து விடலாம்.

மேலும் வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதிகள், கொள்ளையிடப்படாமல், முழுப் பணமும் உரிய முறையில் செலவிடப்படுமானால், அதை அடுத்து, கிராமப்புற மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்துவோமானால், மேலும் புதிய புதிய தொழில்களை கிராமப்புறங்களில் துவங்குவதற்குண்டான அடிப்படை வசதிகளைச் செய்தல் போன்ற பணிகளைச் செய்வோமானால், வேலை வாய்ப்பு பரவலாக்கப்படும் அதே நேரத்தில், மக்கள் ஒரே இடத்தில் குழுமி நெரிசல் ஏற்படுத்துவதையும் தவிர்க்க முடியும். இதன் மூலம் நகரங்களில் ஏற்படும் இடப்பற்றாக்குறையும் தவிர்க்க முடியும். இதன் மூலம் குடியிருப்பு, போக்குவரத்து போன்றவற்றில் நெரிசலைத் தவிர்க்கும் அதே வேளையில், இடப்பற்றாக்குறையால் ஏறும் வீட்டு வாடகை போன்றவற்றை கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

ஆக, இடப்பற்றாக்குறை ஏற்பட்டு விடும் என இவர்கள் புலம்புவது அர்த்தமற்ற வாதமாகும். நகரங்களில் இத்தகைய இடப்பற்றாக்குறைகள் ஏற்படக் காரணம், அரசும், அதிகார வர்க்கமும் தானே ஒழிய, குடும்பக் கட்டுபாட்டுத் திட்டத்தை கடைபிடிக்காததால் அலல என்பது மேற்கண்ட ஆய்வின் மூலம் தெரிய வருகின்றது.

### 3. திருத்தியமைக்கப்பட்ட பயன்படாத நிலங்கள்

## (LAND RECLAMATION PROCESS)

LAND RECLAMATION PROCESS என்பது எதற்குமே பயன்படாத நிலங்களாக பாலை, சதுப்பு நிலங்கள், கைவிடப்பட்ட சுரங்கங்கள், குப்பை கொட்டப்படும் பயன்படாத இடங்கள், பாறைகளும் கற்களும் நிறைந்த நிலங்கள் போன்றவற்றை மனிதன் பயன்படுத்தும் அளவுக்கு சீர்திருத்தி விளை நிலங்களாகவோ, குடியிருப்புகளாகவோ, பூங்காக்களாகவோ மனிதனின் உபயோகத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது. மேற்கண்ட இந்த முறையானது மேலைநாடுகளிலும், சௌதி அரேபியா போன்ற பாலை நிலங்களைக் கொண்ட நாடுகளிலும் அதிகம் பயன்படுத்தி, அத்தகைய நிலங்களின் மூலம் அதிகப் பயனடைந்து கொண்டிருக்கின்றார்கள்.

நெதர்லாந்து (ஹாலந்து) என்பது ஐரோப்பிய நாடுகளில் மிகச் சின்னஞ்சிறிய, குறைந்த பரப்பளவைக் கொண்ட, கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள நாடாகும். இங்கு 1932 ல் ZUIDER ZEE என்ற கட்டுமானத் திட்டத்தின் மூலம் கடலை ஒட்டி 29 கி.மீ. (18 மைல்) அளவு உயராமான தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. இதன் மூலம் கிட்டத்தட்ட 200,000 ஹெக்டேர் (500,000 ஏக்கர்) கடலை ஒட்டிய நிலம் சாகுபடிக்கு ஏற்ற விளைநிலமாக மாற்றப்பட்டது.

அதே போல கிழக்குப் பிரிட்டனில், கடலை ஒட்டிய சதுப்பு நிலங்களை மேம்படுத்தி, முதலில் உப்பு நீரை உறிஞ்சி வாழும் தாவரங்களை சில வருடன் பயிர் செய்து மண்ணில் உப்புச் சத்தை சிறிது சிறிதாக இயற்கையான முறையில் போக்கி விட்டு, தற்பொழுது அவற்றை நல்ல விளைநிலமாகப் பயன்படுத்தி வருகிறது.

அடுத்து, 1930 ல் இத்தாலியின் PONTINE MARSHES திட்டத்தில், ரோம் நகருக்க தென்மேற்கே 70 கி.மீ. தொலைவில் உள்ள சதுப்பு நிலம் சீர் செய்யப்பட்டு கிட்டத்தட்ட 75,000 ஹெக்டேர் (அதாவது 195,000 ஏக்கர்) பரப்பளவு விளைநிலமாக மாற்றப்பட்டது. மேற்கண்ட திடடங்கள் நாட்டுக்கு விளை நிலங்களையும், குடியிருக்கத் தேவையான நிலங்களை மட்டும் தரவில்லை. மாறாக, சதுப்பு நீர் தேக்கத்தில் ஏற்படும் கொசுத் தொல்லை ஒழித்து மலேரியா போன்ற நோய்களையும் கட்டுப்படுத்த உதவியது.

மேலும், அமெரிக்காவில் கீழ் கொலராடோ நதித் திட்டத்தின் (The Lower Colarado River Project) மூலம் பாலைப்பூமியான கலிபோர்னியாவின் இம்பீரியல் பள்ளத்தாக்கு (Imperial Valley of California) இன்று உலகின் அதிக விளைச்சலைத் தரும் நிலமாக மாற்றப்பட்டு உள்ளது.

மேலும், அமெரிக்காவில் கைவிடப்பட்ட நிலச் சுரங்கங்களில் நகரின் குப்பைகளைக் கொண்டு நிரப்பி அவற்றை மீண்டும் விளை நிலமாகவோ அல்லது கட்டுமானப் பணிகளுக்கோ பயன்படுத்தப்படும் அளவுக்கு திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

ஜப்பானை எடுத்துக் கொண்டால், கடலில் மிதக்கும் நிலங்களை ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்கின்றார்கள்.

அடுத்து சௌதி அரேபியாவானது, தனது மொத்தப் பரப்பளவில் 75 சதவீதத்திற்கும் அதிகமான நிலங்கள், பாலை நிலங்களாகும். இந்தப் பாலை நிலங்கள், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விவசாயத்திற்கு ஏற்ற மண் மூலம் சீர்திருத்தப்பட்டு, நல்ல விளை நிலமாக மாற்றப்பட்டு வருகின்றன. மேலும், மனிதக் கழிவுகளை, நோய்பரப்பாத அளவுக்குப் பதப்படுத்தி, விவசாய உரமாகவும், அன்றாடம் வெளியேறும் கழிவு நீர்களைச் சேமித்து, அவற்றை சுத்தம் செய்து, விவசாயத்திற்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவது போன்ற புதிய புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தியும், இன்று கோதுமை உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றுள்ளார்கள். மேலும், சௌதி அரேபியா தனது காய்கறித் தேவையில் 80 சதவீதத்தை தனது நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்கிறது. மேலும் 20 சதவீதத்தைத் தான் இறக்குமதி செய்து கொள்கிறது.

மேலும், பாகிஸ்தானின் சிந்துப் பிரதேசத்தில் அரசின் 138,000 ஏக்கர் பயன்படுத்தப்படாத நிலங்கள் நிலமில்லாத விவசாயிகளுக்கு 1997 ல் புதிதாகப் பொறுப்பேற்ற நவாஸ் ஷெரீப் அரசால் வழங்கப்பட்டது.

ஆக, நம் நாட்டில் ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் உள்ள பாலைப்பகுதிகளில் இப்பொழுது தான், விவசாயத்திற்கு பயன்படும் வகையில் மாற்ற முயற்சிகள் நடந்து வருகின்றன. புதிதாக காடுகள் வளர்ப்புத் திட்டங்கள், பசுமைப் புரட்சி, தேக்குப் பண்ணைகள் அமைத்தல், காய்கறிப் பண்ணைகள்

அமைத்தல் போன்றவற்றிற்காக பயன்படாத நிலங்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வர சமீப காலமாகத் தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் பயன்பாட்டில் இல்லாத நிலங்களான பாலை, சதுப்பு, பாறைப் பூமிகள் போன்றவற்றைச் சீர்படுத்தி பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல் மூலம் தாராளமாக இடப் பற்றாக்குறையைச் சமாளிக்கும் அதேவேளையில், விளை நிலங்களின் பரப்பளவும் அதிகரிப்பதோடு, வேலை வாய்ப்புக்களையும் இத்தகைய நிலங்கள் அதிகப்படுத்துகின்றன.

மேலும் சதுப்பு, பாலை, பாறை நிலங்கள் நம் நாட்டில் ஏராளமாக பயன்பாட்டில் இல்லாமலேயே இருக்கின்றன. அவற்றை சீர்திருத்தி பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் மற்ற நாடுகளைப் போல நாமும் நம் இடப் பற்றாக்குறையை அதிகரித்தும் இடப்பற்றாக்குறையை எளிதாகத் தீர்த்துக் கொள்ளலாம்.

ஆக, மேற்கண்ட ஆய்வுகள் மூலம், மக்கள் தொகை பெருகப் பெருக இடப்பற்றாக்குறை ஏற்படாது என்பதையும், அப்படியே இடப்பற்றாக்குறை ஏற்படுவதாக வைத்துக் கொண்டாலும், நெதர்லாந்து, அமெரிகாக, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், சௌதி அரேபியா போன்ற நாடுகள் பயன்படுத்தும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய இடப்பற்றாக்குறையை நாமும் தீர்த்துக் கொள்ளலாம் என்பதை அறிய முடிகின்றது. ஆக, இம்முறையும் மால்த்தஸ் ஆதரவு வாதம் அடிபட்டுப் போகின்றது.

### 4. உணவுப் பற்றாக்குறை ஏற்படும்!?

இடப்பற்றாக்குறை ஏற்படும் எனும் வாதத்தை அடுத்து இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு திட்ட ஆதரவு அறிவு ஜீவி?! கள் கூறுவது என்னவென்றால், மக்கள் தொகை கூடக் கூட உணவுப் பற்றாக்குறை, ஏற்படும் என்பதே. இதனால் மக்கள் பசியின் காரணமாக மடிய வேண்டிய நிலை வரும் என்கின்றனர். இந்த வாதமும் பொய்யானது என்பதை இறையருளால் நிரூபிப்போம்.

சரியான ஆய்வு முடிவுகளின்படி, பூமியின் மொத்தப் பரப்பளவில 10 சதவீத நிலத்தில் தான் விவசாயம் செய்யப்படுகிறது. மீதி 90 சதவீத நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் விடப்பட்டிருக்கும் காடுகள், புல்வெளிகள், மற்றும் பாலை நிலங்களாகும். இவற்றில் 70 சதவீத நிலங்கள் பயிரிட ஏற்ற நிலங்களாகும். இத்தகைய நிலங்கள், இன்னும் விவசாயம் செய்யப்படாமலேயே விடப்பட்டிருக்கின்றன.

மேலும், இந்த 10 சதவீத நிலங்களில் விளைச்சலாகப் பெறப்படும் உணவு தானியங்களை சரியான முறைப்படி பாதுகாத்தும், சரியான விகிதத்தில் பங்கீடும் செய்வோமானால், உலகில் எவரும் பசியோடு இருக்க மாட்டார்கள். மேலும், இன்று 13.2 மில்லியனுக்கும் அதிகமான சதுர கி.மீ. களில் விவசாயம் நடைபெறுகிறது. மேலும் 13.5 மில்லியன் சதுர கி.மீ. களை புதிய விஞ்ஞான தொழில் முறைகளைப் பயன்படுத்தி, தரிசு நிலங்களை அவைகளை விவசாயம் செய்ய ஏற்ற நிலங்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. புதிய தொழில் நுட்பங்களும், குறுகிய கால சாகுபடி முறைகளும், புதிராக உருவாக்கப்பட்டிருக்கும் திருத்தப்பட்ட (Reclamation Land Project) நிலங்களின் மூலமும், இன்றைய மக்கள் தொகையைப் போல இரண்டு மடங்கு அளவு மக்கள் தொகை கூடினாலும் பஞ்சம் ஏற்படாமல் சமாளிக்க முடியும். அதையே தான், விவசாயப் பொருட்களின் உற்பத்தி அளவும்,அவற்றின் புள்ளி விபரங்களும் நிரூபிக்கின்றன.

நமது இந்தியாவின் மொத்த உணவுப் பொருள் உற்பத்தி 1950 முதல் 1997 வரை :

| | |
|---|---|
| 1950 | 50.8 மில்லியன் டன் |

| | |
|---|---|
| 1995-1996 | 185 மில்லியன் டன் |
| 1997 | 20 கோடி டன் (200 மில்லியன் டன்) |

இந்தியாவின் மொத்த உள்நாட்டுப் பொருள் உற்பத்தி (Gross Domestic Products)

| | |
|---|---|
| 1950 | 19 பில்லியன் டாலர்கள் |
| 1995-1996 | 281 பில்லியன் டாலர்கள் |

இந்திய மக்கள் தொகை

| | |
|---|---|
| 1950 | 361.1 மில்லியன் |
| 1997 | 965 மில்லியன் |
| வரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் மக்கள்தொகை | |
| 2010 | 1,172,101,000 (1172 மில்லியன்) |
| 2025 | 1,383,115,000 (1383 மில்லியன்) |

இந்தியாவின் மக்கள் தொகை வளர்ந்து வருகின்ற அதேவேளையில் உணவு உற்பத்தியும் வளர்ந்து கொண்டு தான் வந்திருக்கிறது. அதே போல தேசத்தின் உள்நாட்டுப் பொருள் உற்பத்தியும் கூடியே வந்துள்ளது. 1950 ம் ஆண்டுகளில் எந்தளவு நிலத்தில் விவசாயம் செய்தோமோ அதே அளவு நிலத்தில் தான் இன்றும் விவசாயம் செய்து கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் அநேக விவசாய நிலங்களை, நகரின் பெருக்கம் காரணமாக குடியிருப்புகளாக அழித்தும் இருக்கிறோம். இந்த நிலையில், வளரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் காரணமாக பசுமைப் புரட்சி கள் ஏற்பட்டு, அந்த நிர்ப்பந்தத்தைச் சமாளிக்க புதிய புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, அதன் மூலம் விளைச்சலும் பெருகி வருவதை மேற்கண்ட புள்ளி விபரங்கள் மூலம் காணலாம். மால்த்தஸ் அபிமானிகள் கூறுவது போல, இந்தியாவின் மக்கள் தொகை கூடக் கூட, பஞ்சம் ஏற்படவில்லை, பற்றாக்குறை ஏற்படவில்லை. மேலும் இந்தியா உணவுப் பொருள் தட்டுப்பாட்டினால் எந்த நாட்டிலும் கையேந்திக் கொண்டு இருக்கவில்லை. மாறாக, உலக நாடுகள் பலவற்றிற்கு உணவுப் பொருட்களையும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களையும் வருடந்தோறும் ஏறுமுகமாகவே ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது.

உதாரணமாக, சௌதி அரேபியாவிற்கு மட்டும் இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருட்களின் மதிப்புகள் ஆண்டுவாரியாக,

| | |
|---|---|
| 1990-1992 | 1.80 பில்லியன் டாலர்கள் |
| 1995-1996 | 2.39 பில்லியன் டாலர்கள் |
| 1997 | 3.40 பில்லியன் டாலர்கள் |

சௌதி அரேபியாவிற்கான இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் தேயிலை, காபி, அரிசி, பல வகை மசாலாப் பொருட்கள், தொழிற் சாதனங்கள், விவசாயக் கருவிகள் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள். மேலும் இந்த ஏற்றுமதியின் அளவு முன்பைக் காட்டிலும் 42.29 சதவீத அளவு இந்த ஆண்டு (1997) அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, நாம் உதாரணத்திற்குக் காட்டும் இந்த ஒரு நாட்டிற்கு மட்டும் இந்த நிலை அல்ல. பொதுவாக,நம் இந்தியாவின் ஏற்றுமதி அளவு இன்றளவும் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

அதாவது, 1950 ல் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 1.26 பில்லியன் டாலர்கள். 1995-1996 ல் 30.3 பில்லியன் டாலர்கள். இவ்வளவு பெரிய சாதனையை எவ்வாறு நிகழ்த்த முடிந்தது என்பதைப் பற்றி, 1997 ல் 7 வது உலக உணவு தின விழாவில் பேசிய மத்திய விவசாய அமைச்சர் மிஸ்ரா அவர்கள் பேசும் போது, இவ்வாறு குறிப்பிட்டார். அதாவது, 1947 ல் அதற்கு முன்னும் இந்தியா பிரிட்டனிடமிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து கொண்டிருந்தது. 1960 க்குப் பின்னால் பசுமைப் புரட்சி, அதன் பின்னணியில் இருந்த அமெரிக்க உதவி மற்றும் அதிக விளைச்சலைத் தரும் வித்துக்களின் பயன், சலுகை அடிப்படையில் வங்கிக்கடன் போன்றவை இந்தியாவை உணவுத் தேவையில் தன்னிறைவு அடையச் செய்தன.

மேலும், முன்னாள் மத்திய விவசாய அமைச்சர் மிஸ்ரா பேசும் பொழுது, நாம் அதிக விளைச்சலைத் தரக் கூடிய வித்துக்களை பயன்படத்தவும், அதற்கான ஆராய்ச்சிகளையும் முடுக்கி விட வேண்டும். இதற்கான நிதியை பொதுமக்களிடம் இருந்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறுவதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டும். நமது பசுமைப் புரட்சியானது 30 சதவீத நிலங்களில் தான் செயல்படுத்தப்படுகின்றது. இதை 70 சதவீதமாக ஆக்கினால் இந்தியர்கள் அனைவரும் பசியின்றி இருப்பதோடு, பஞ்சத்தால் வாடும் நாடுகளுக்கும் நாம் உதவ முடியும் என்ற கருதத்தை வெளியிட்டுள்ளார். மேற்கண்ட அமைச்சரின் கருத்து, மக்கள் தொகை கூடக் கூட பற்றாக்குறை ஏற்படும் என்பதைத் தெரிவிக்கவில்லை. மாறாக, 1947 க்குப் பின் நமது மக்கள் தொகை கூடிய அதே விகிதத்திலேயே, உணவு உற்பத்தியும் கூடியே வந்துள்ளது. மேலும், இருக்கும் நிலங்களை ஒழுங்காக நாம் பயன்பாட்டில் கொண்டு வருவோமானால். புதிய புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவோமானால் நாம இன்னும் அதிகக உற்பத்தியைக் காணலாம் என்பதைத் தானே அமைச்சரின் உரையிலிருந்து நாம் பெறுகின்ற படிப்பினையாகக் கொள்ள முடியும்.

சில நாடுகளின் உணவு உற்பத்தியும் மக்கள் தொகையும்

| நாடுகள் | மக்கள் தொகை | ஜன நெருக்கடி | கோதுமை | அரிசி | உருளைக் கிழங்கு | மொத்தம் சாகுபடி |
|---|---|---|---|---|---|---|

| | | சதுர கி.மீ | சதுர மைல் | | | | செய்யப்படும் நிலம் |
|---|---|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 258,300,000 | - | - | 53,915,000 | 7,006,000 | 18,970,000 | |
| பிரிட்டன் | 65,000,000 | 319.17 | | 14,300,000 | - | 6,700,000 | 43.23 |
| பிரேசில் | 152,000,000 | 59.28 | | 3,077,000 | 9,503,000 | 2,214,000 | 29.21 |
| மெக்ஸிகோ | 90,000,000 | 85.29 | | 4,115,000 | 354,000 | 999,000 | 50.66 |
| இந்தியா | 965,000,000 | 267 | 695.3 | 54,522,000 | 110,945,000 | 15,254,000 | 55.07 |
| சீனா | 1,165,771,000 | - | 314.6 | 96,003,000 | 187,450,000 | - | 43.33 |
| ஜப்பான் | 124,800,000 | - | 852.5 | 860,000 | 12,005,000 | 3,700,000 | 13.97 |
| இஸ்ரேல் | - | 777.41 | - | 160,000 | - | 225,000 | 27.92 |
| ஹாலந்து | 15,193,000 | - | 1,055.2 | 916,000 | - | - | 53.68 |
| பிலிப்பைன்ஸ் | 64,600,000 | 652.52 | - | - | 9,670,000 | 65,000 | 30.7 |
| பாகிஸ்தான் | 122,400,000 | 423.24 | - | 14,505,000 | 4,903,000 | 750,000 | 32.32 |

மேலே உள்ள அட்டவணையில் உலகின் பல விதமாக தட்ப வெப்ப நிலைகள், சூழ்நிலைகள் கொண்ட நாடுகளையும் அதன் மக்கள் தொகையும், ஜனநெருக்கடியும், பொதுவாக மக்கள் உணவாக உட்கொள்ளும், அரிசி, கோதுமை, உருளைக் கிழங்கு போன்றவற்றின் உற்பத்தியும், தமது மொத்த விளைநிலங்களில் எவ்வளவு நிலத்தை விவசாயம் செய்யப் பயன்படுத்தி வருகின்றது என்ற தகவலையும் இந்த அட்டவணையில் உள்ள நாடுகளுடன்அவற்றின் மக்கள் தொகையோடு, அவற்றின் உற்பத்தியையும் நன்றாக ஒப்பீடு செய்து கொள்ளவும்.

இந்த நமது ஒப்பீட்டு ஆய்வில் அதிக மக்கள் தொகை கொண்ட இந்தியாவையும், சீனாவையும் எடுத்துக் கொள்வோம்.

இந்தியாவானது தனது மக்கள் தொகையாக 965 மில்லியனையும், சீனாவானது தனது மக்கள் தொகையாக 1,155 மில்லியனையும் பெற்றுள்ளது.

| நாடுகள் | மக்கள் தொகை | கோதுமை | அரிசி |
|---|---|---|---|
| | | | |

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | 965,000,000 | 54,522,000 | 110,945,000 |
| சீனா | 1,165,771,000 | 95,003,000 | 187,450,000 |

இந்தியாவானது தனது மொத்த விளைநிலத்தில் 55.07 சதவீத நிலத்தில் விவசாயம் செய்து வருகிறது. அதே போல சீனாவானது தனது மொத்த விளைநிலத்தில் 43.33 சதவீத நிலத்தில் விவசாயம் செய்து வருகின்றது.

மேற்கண்ட இந்த உற்பத்திகள் இந்த இரு நாட்டு மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்பவைகளாக உள்ளன. தவிர, ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உணவுப் பொருள்கள் மிகுதமாகவே விளைகின்றன என்பதை நாம் அறியலாம். சீனாவின் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகமாக இருப்பதையும், அதே போல நாம் சுட்டிக காட்டியுள்ளபடி. அந்தந்த நாடுகளின் மக்கள் தொகைக்கு எற்ப உணவு உற்பத்தி அமைந்திருப்பதையும் காணலாம்.

மேலும் விவசாய உற்பத்தியில் தலைசிறந்து விளங்கும் ஒரு சில நாடுகளில் கடந்த ஆண்டுகளில் கோதுமை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் காண்போம்.

| நாடுகள் | மெட்ரிக் டன் / ஏக்கர் 1934-38 | மெட்ரிக் டன் / ஏக்கர் 1956 |
|---|---|---|
| டென்மார்க் | 1.23 | 1.63 |
| ஹாலந்து | 1.23 | 1.45 |
| பிரிட்டன் | 0.94 | 1.26 |
| எகிப்து | 0.81 | 0.95 |
| ஜப்பான் | 0.76 | 0.85 |
| பாகிஸ்தான் | 0.34 | 0.30 |
| இந்தியா | 0.24 | 3.29 |

தகவல் : பெர்த் கண்ட்ரோல். அபுல் அஃலா மௌதூதி

இங்கே கவனிக்க வேண்டியது இறைவனது கருணையினால் உணவு உற்பத்தியின் விகிதமும் கூடியே வந்துள்ளது. மேலும் இந்தியாவைப் பொறுத்தவரை 1934-38 ல் 0.24 மெட்ரிக் டன் - ஏக்கர் இருந்த கோதுமை உற்பத்தி 1956 ல் 3.29 மெட்ரிக் டன் - ஏக்கர் ஆக உயர்ந்திருக்கின்றது.

மேலும் இன்று உலகிலேயே கோதுமையை அதிகமாகக உற்பத்தி செய்யும் மூன்று நாடுகளில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது.

| | |
|---|---|
| சீனா | 95,003,000 மெட்ரிக் டன் |
| இந்தியா | 54,522,000 மெட்ரிக் டன் |
| அமெரிக்கா | 53,915,000 மெட்ரிக் டன் |
| ஹாலந்து | 916,000 மெட்ரிக் டன் |

அடுத்து அரிசி உற்பத்தியிலும் இந்தியா உலக அளவில் இரண்டாம் இடம் வகிக்கிறது.

| | |
|---|---|
| சீனா | 187,450,000 மெட்ரிக் டன் |
| இந்தியா | 110,945,000 மெட்ரிக் டன் |
| ஜப்பான் | 12,005,000 மெட்ரிக் டன் |
| பாகிஸ்தான் | 4,903,000 மெட்ரிக்டன் |

மேலே உள்ள புள்ளி விபரங்களில், இந்த நாடுகள் யாவும் குறைந்த பரப்பளவில் அதிகம் மகசூல் செய்யும் நாடுகளாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆக மக்கள் தொகைப் பெருக்கத்தின் அளவில் உணவுப் பொருள்களின் உற்பத்தியும் இறையருளால் பெருகியே வந்துள்ளதைக் காண முடிகின்றது. மேலும் இந்தியாவைப் பொறுத்தவரை 965 மில்லியன் மக்களின் பசித் தேவையைப் போக்கும் அளவுக்கும், அதன் பின் உணவுப் பொருள் இருப்பு மிச்சமாகவே இருப்பதை நாம் முன்னரே பார்த்த செய்தியின் மூலம் நாம் மீண்டும் இங்கெ ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

அதாவது, 1995 ல் நிதியமைச்சராக இருந்த மன்மோகன் சிங் கூறியதாவது, இன்றைய உணவுப் பொருள் கையிருப்பு 3 கோடி டன்களாகும். 2 கோடி இருந்தாலே போதுமானது. கடுமையான வறட்சியே வந்தாலும் கூட விலை ஏற்றம் வராமல் சமாளிக்க முடியும் என்று சொன்னதை நாம் சிறிது சிந்தித்தால் ஒரு உண்மை புலனாகும். மக்கள் தொகை வளர்ச்சியானது, உணவுப் பொருள் பற்றாக்குறையை ஏற்படுத்தவில்லை என்ற உண்மை தெரிய வரும்.

மேலும், 1994 ல் சௌதி அரேபியாவிற்கு அரிசி ஏற்றுமதி செய்த நாடுகளையும் அளவையும் காண்போம்.

| | |
|---|---|
| இந்தியா | 2,78,000 டன்கள் |
| அமெரிக்கா | 1,76,000 டன்கள் |

| | |
|---|---|
| தாய்லாந்து | 1,28,000 டன்கள் |
| பாகிஸ்தான் | 48,000 டன்கள் |

இந்த இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவானது, 1985 ல் இருந்ததை விட 33 சதவீதம் அதிகமாகும். அரப் நியூஸ் - சனி, ஆகஸ்டு, 16-1997 பக்கம் - 2.

இந்தியா தனது மொத்த உற்பத்தியில்,அதாவது 965 மில்லியன் மக்களின் பசித் தேவை போக மீதி உள்ள அரிசியில், சௌதி அரேபியாவிற்கு மட்டும் 1994 ல் ஏற்றுமதி செய்த அரிசியின் அளவு 2 லட்சத்து 78 ஆயிரம் டன்களாகும். அதிலும் 1985 ல் இறக்குமதி செய்யப்பட்ட அளவை விட 33 சதவீதம் அதிகமுமாகும். இது தவிர எனைய நாடுகளுக்கும் இந்தியா ஏற்றுமதி செய்யும் அளவையும் சேர்த்தால், நமது இன்றைய உணவுப் பொருள் உற்பத்தியானது, இன்னும் ஒரு இந்தியா அளவு மக்கள் தொகைக்கும் கூட நாம் உணவளிக்கலாம். அதையே தானே மேலே நாம் பார்த்த புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது நான்கு நாடுகளான இந்தியா, அமெரிக்கா, தாய்லாந்து, பாகிஸ்தான் ஆகியவைகள் சேர்ந்து சௌதி அரேபியா என்ற நாட்டின், மக்கள் தொகையின் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. சௌதி அரேபியாவின் தேவையானது 1985 ல் இருந்ததை விட 33 சதவீதம் அதிமானாலும் கூட, அவற்றையும் இந்த நாடுகள் சமாளித்து, மேற்கண்ட அரிசித் தேவையை உற்பத்தி செய்து அனுப்புகின்றன.

சுருங்கக் கூறின். இந்தியாவின் இன்றைய மக்கள் தொகை இரண்டு மடங்காக ஆவதற்கு இன்னும் 34.31 வருடங்கள் இருக்கும் நிலையிலேயே. நாம் நமது உணவு உற்பத்தியைப பெருக்கி, கிட்டத்தட்ட 35 வருடத்திற்கு பின் நிகழப் போகும் உணவுத் தேவைக்கான குறியீட்டடை 1997 லிலேயே சாதித்து விட்டோம். எல்லாப் புகழும் இறைவனுக்கே என உச்சரிக்க வேண்டிய உதடுகள், முனுமுனுப்புக் காட்டுகின்றன என்றால், அவர்களின் (அறிவு ஜீவிகளின்?) அறியாமையேயன்றி வேறு என்னவாக இருக்க முடியும்.

மேலும் 1997 ல் ரோமில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் உணவு உச்சி மாநாட்டில் பேசிய போப் அவர்கள், பின்வரும் கருத்தை வெளியிட்டார்கள்.

உலக மக்களுக்குத் தேவையான அளவுக்கும் அதிகமாகவே உணவுப் பொருகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. சமீபத்தில் உணவு உற்பத்தி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளன. தினமணி : 18, அக் 1997.

### 5. சாதனையிலும் சோதனை + வேதனை

இதற்கு முன் நாம் பார்த்த விபரங்களின் மூலம் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விட்டது என்றாலும், உலக விவசாய முன்னேற்றத்தின் புள்ளி விபரங்களோடு ஒப்பீட்டு நோக்குகையில் நமது உற்பத்தி மிக மிகக் குறைவாக இருக்கின்றன என்பதை நாம் மிக வேதனையுடன் சுட்டிக் காட்ட வேண்டி உள்ளது.

அதாவது, சீனாவின் மொத்தப்பரப்பளவில் 10 சதவீதம் தான் உபயோகத்தில் உள்ளது. அந்த 10 சதவீத நிலத்தில் விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலத்தில் 43.33 சதவீதத்தை மட்டுமே உபயோகிக்கின்றது. மேலும், 1,165 மில்லியன் மக்கள், 95,003,000 மெட்ரிக் டன் கோதுமையையும், இன்னும் 187,450,000 மெட்ரிக் டன் அரிசியையும் உற்பத்தி செய்கின்றார்கள். ஆனால் இந்தியாவானது

தனது மொத்த விலை நிலத்தில் 55.07 சதவீத நிலத்தில் விவசாயம் செய்தும் சீனாவின் உற்பத்தி அளவுக்கு நம்மால் செல்ல இயலவில்லை. இந்தியாவானது 54,522,000 மெட்ரிக் டன் கோதுமையையும், 110,945,000 மெட்ரிக்டன் அரிசியையும் உற்பத்தி செய்து, சீனாவை விட பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இதையே, 18 அக் 97 ல் தினமணி யில் வெளியான செய்தி இவ்வாறு உறுதி செய்கின்றது.

அதாவது, 102 கோடி மக்கள் தொகை கொண்ட சீனா 49 கோடி டன் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. 96 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியா 20 கோடி டன் உணவுப் பொருள்களை உற்பத்தியை இந்த ஆண்டு தான் எட்டியுள்ளது. சீனா ஒரு ஏக்கருக்கு 2 டன் நெல் உற்பத்தி செய்கிறது.

மேலும், ஹாலந்து, டென்மார்க், ஜப்பான், போன்ற நாடுகள் புதிய புதிய விஞ்ஞான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, புதிய வித்துக்களையும், புதிய விவசாயக் கருவிகளையும் உருவாக்கி, அதன் மூலம் அதிக விளைச்சலைக் காண்பதோடு, அவற்றைச் சேகரிப்பதில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம்அதிக சேதாரம், இழப்பு ஆகியவற்றைத் தடுப்பதுடன், உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை சரியான விதத்தில் நவீன அறிவியல் தொழில் நுட்ப முறைகளின்படி பாதுகாப்பதன் மூலம் நிறைந்த வருவாயையும், உணவு உற்பத்தியில் தன்னிறைவையும் அடைந்துள்ளன.

| நாடுகள் | விவசாயத்தில் ஈடுபடும் மொத்த நபர்கள் Total Agri. Work Force | விவசாயப் பொருள் இறக்குமதி அமெரிக்க டாலரில் | விவசாயப் பொருள் ஏற்றுமதி மதிப்பு அமெரிக்க டாலரில் | புலால் மற்றும் விவசாய உணவுப் பொருள் இறக்குமதி Food & Animals Imported in American Dollars | புலால் மற்றும் உணவுப் பொருள் இறக்குமதி Food & Animals Exported in Americal Dollars | விவசாயத்தில் ஈடுபடும் நபர்கள் சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 217,730,000 | 1,209,700,000 | 3,173,400,000 | 896,800,000 | 1,126,700,000 | 66.2 % |
| ஹாலந்து | 221,000 | 17,962,800,000 | 30,927,500,000 | 12,168,300,000 | 21,168,300,000 | 3.5 % |

ஹாலந்து என்பது ஐரோப்பா கண்டத்தில் உள்ள மிகச் சின்னஞ்சிறய நாடாகும். அதாவது, 15,193,000 (அதாவது, 1 கோடியே 51 லட்சத்து 93 ஆயிரம்) மக்கள் தொகை கொண்டதொரு நாடு. நம் தமிழக மக்கள் தொகையில் 4 ல் 1 பங்கு கொண்டது. தமிழக மக்கள் தொகை 1991 ல் 5 கோடியே 56 லட்சத்து 38 ஆயிரத்து 318 பேர். 12,850 சதுர மைல் பரப்பளவு கொண்ட சிறிய நாடு தான் நெதர்லாந்து என்றழைக்கப்படும் இந்த ஹாலந்து நாடு.

குறிப்பாக இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்த ஹாலந்தின் இறக்குமதியை நம் நாட்டோடு ஒப்பிடாமல், இரு நாடுகளின் ஏற்றுமதி அளவை ஒப்பிடுவது நாம் எடுத்துக் கொண்ட தலைப்பிற்கு சாலச் சிறந்ததாகும். என்னவெனில், தமிழ்நாட்டை விட மிகச் சிறியதொரு நாடானது,

விவசாயம் மற்றும் தனது உணவுப் பொருள் உற்பத்தியில் எவ்வளவு சிறந்து விளங்குகின்றது என்றால், 1991 ல் ஹாலந்தின் விவசாயப் பொருள் ஏற்றுமதி 30,927,500,000 டாலராக இருக்க, இந்தியாவின் நிலையோ 3,173,400,000 டாலராக இருந்துள்ளது. என்ன பரிதாபம்! அதே போல புலால் மற்றும் உணவுப் பொருள் ஏற்றுமதியில் ஹாலந்து 21,168,300,000 டாலராகக இருக்க, இந்தியாவின் ஏற்றுமதியோ வெறும் 1,126,700,000 ஆக இருந்துள்ளது.

ஒரு சின்னஞ்சிறு நாடு, விவசாய உற்பத்தியில் இந்தியாவை விட 10 மடங்குக்கு மேல் எவ்வாறு சாதனை புரிய முடிகின்றது என்பதைச் சிந்திக்க வேண்டாமா? இத்தகைய சாதனையை அவர்களால் எவ்வாறு நிகழ்த்த முடிந்தது. எல்லாம் தொழில் நுட்பம், புதிய, புதிய விஞ்ஞானத் தொழில் நுட்பம்! அத்துடன் கடின உழைப்பு. இன்று வரை ஆராய்ச்சியில் அந்த நாடு முன்னணியில் நிற்கிறது. உணவுப்பொருள் ஏற்றுமதியை அடுத்து விதைகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அந்நிய வருவாயை ஈட்டிக் குவிக்கிறது.

விவசாய அமைச்சர் மிஸ்ரா அவர்களின் கூற்றுப்படி, நமது மொத்த விளை நில்த்தில் 30 சத நிலத்தில் தான் பசுமைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. அவற்றை 70 சதமாகக் கூட்ட வேண்டும் என்பதை அமைச்சர் இங்கு கூற வரவில்லை. ஏனெனில், நம் நாட்டில் விவசாயம் செய்யக் கூடிய நிலங்களில் நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களில் நீர்ப்பாசன வசதி பெற்றுள்ள நிலங்களின் சதவீதம் சுமார் 26.3 சதவீதம் தான். இந்த 26.3 சதவீத நீர் வசதி பெற்றுள்ள இடங்களில் தானே பசுமைப் புரட்சியைக் காண முடியும். மீதம் இருக்கும் 73.7 சதவீத நிலத்துக்குத் தேவையான நீர் வசதிக்கு என்ன செய்ய இருக்கின்றொம் என்பதைத் தான் அமைச்சர் மிஸ்ரா அவர்கள் கூற மறந்து விட்டார்கள்?! அவரால் எவ்வாறு கூற முடியும். இந்திய அரசியல்வாதிகள் எல்லாம் தேசத்தில் நலன் காக்கும் கொள்கைவாதிகள் அல்லவா?

முஸ்லிம்கள் மட்டும் தானே தேச நலனில் அக்கறை இல்லாதவர்கள்? வெட்கம் கெட்ட அரசியல்வாதிகள் இவர்கள். இவர்கள் தங்களை இன அடிப்படையிலும், ஜாதி அடிப்படையிலும் பிரித்துக் கொண்டது போக மாநில அளவிலும் தங்களைப் பிரித்துக் கொண்டு விட்டார்கள். (2002 அக்டோபர் ல் நடந்த தமிழக, கர்நாடக காவிரி நதி நீர்ப் பங்கீடு விவகாரம்). எத்தனையோ முறை கர்நாடகாவிலும், மத்திய அரசிலும் ஒரே கட்சிகள் ஆட்சிக்கு வந்துள்ளன. அந்த நேரத்தில் காவிரி நதிநீர்ப் பங்கீட்டு பிரச்னையை மிக இலகுவாகக் முடித்திருக்கலாம். ஆனால் இவர்கள் தேச நலனில் அக்கறை கொண்டவர்கள் அல்லவா? அதனால் இன்னும் இழுபறி நீடித்துக் கொண்டே போகிறது. தமிழகத் தஞ்சையில் மூன்று போகம் விளைந்த இடங்கள் இன்று ஒரு போகத்துக்கே அல்லாட வேண்டியதிருக்கின்றது. இந்தியாவின் நெற்களஞ்சியம் இன்று இந்தியாவின் பிச்சைப் பாத்திரமாக மாற யார் காரணம்? தங்களை இன அடிப்படையிலும், ஜாதி அடிப்படையிலும் பிரித்துக் கொண்டது போதாது என்று மாநில அடிப்படையில் பிரித்துக் கொண்ட வக்கிர மனிதர்கள் தானே. இவ்வாறு தங்களைத் தாங்களே இந்தியன் அழித்துக் கொண்டிருக்கும் நிலையில் இவர்கள் என்றைக்கு, சீனாவின் 1 ஏக்கருக்கு மூன்று டன் நெல் உற்பத்தியும், என்ற சாதனைக் குறியீட்டை எட்ட முடியும். சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்கள் எல்லாம் மூளை மழுங்கியர்களாக ஆகி விட்ட நிலையில், தங்கள் இயலாமையையும் வக்கிரத்தையும் வெளிக் காட்ட மனமில்லாமல் தேச மக்களைப் பார்த்து, நாம் இருவர், நமக்கு இருவர், பின் நாம் இருவர், நமக்கு இருவர், இப்பொழுது நாமே குழந்தை நமக்கேன் குழந்தை என்று கூப்பாடு போடத் தொடங்கியுள்ளார்கள்.

அரசியல்வாதிகளாலும், அதிகாவர்க்கத்தாலும் இந்தியாவின் வளர்ச்சிப் பணிக்கு செலவிடப் பட வேண்டிய நதிகள் கொள்ளையிடப்பட்டுக் கொண்டிருப்பது போதாதென்று இந்திய மக்களின் கருவறையையும் இவர்கள் காயப்படுத்தக் துணிந்து விட்டார்கள்! வெட்கம் கெட்ட ஜென்மங்கள்!!

கங்கையைக் காவிரியுடன் இணைந்து விட்டாலே போதும், இந்தியா பொன் விளையும் பூமியாக மாறி விடும். என்றைக்கும் இந்திய அரசியல்வாதிகளால் இந்த சாதனையைச் செய்ய முடியாது. செய்யவும் மாட்டார்கள்!! அத்தகைய சாதனையை முஸ்லிம்கள் மட்டுமே சாதிக்க முடியும். ஏனெனில், உண்மையான இறைக் கொள்கையைப் பின்பற்றும் முஸ்லிம்களிடத்தில் இனவேறுபாடு, ஜாதி வேறுபாடு, மாநில வேறுபாடு, மொழி வேறுபாடு போன்ற எதனையும் காண முடியாது. இத்தகைய வேறுபாடு காட்டாத சமூகத்தை அமைப்பதின் மூலம் மட்டுமே இத்தகைய பிரச்னைகளைத் தீர்க்க முடியும்.

கடந்த 1997 ல் ரோமில் நடந்த ஐ.நா. சபையின் உலக உணவு மாநாட்டில் பேசிய போப் அவர்கள் கீழ்க்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சில பகுதிகள், ஆப்ரிக்கா ஆகிய பகுதிகளில் உணவுப் பஞ்சம் அதிகம் உள்ளது. உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க அரசியல், பொருளாதார நிலைகளில் சரியான அணுகுமுறை தேவை என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

இந்தியாவைப் பொருத்தவரை அவர் கூறிய கருத்துக்கள சரியானவை. இந்தியர்கள் நதி நீர்ப் பங்கீட்டில் அரசியல் வித்தைகளை வெளிப்படுத்தாமலும், விவசாய வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை முழுமையாகச் செலவிட்டும், சரியான அளவில் திட்டமிட்டு செயல்படுவார்களானால், நாமும் ஹாலந்தின் உணர்ந்தபட்ச உற்பத்தியைக் காண முடியும்.

மேலும், மூன்றாவது உலக நாடுகளில் உணவு உற்பத்தியை அதிகரிக்க விவசாயத் துறையில் அதிக முதலீடுகளைச் செய்ய வேண்டும் என ஐ.நா.சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தலைமைச் செயலாளர் ஜாக்லீஸ் டியோப் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ரோமில் அமைந்திருக்கும் ஐ.நா.சபையின் விவசாய மற்றும் உணவு அமைப்பின் இந்தியப் பிரதிநிதி (FAO) பீட்டர் ரோஸ நெக்கர் (Peter Rosenegger) பேசும் பொழுது, புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்க அதிக முதலீடு செய்தல், அதற்கான கட்டுமான அமைப்பை உருவாக்குதல், உணவைப் பதப்படுத்துதல் போன்றவற்றின் மூலம், நாட்டின் உணவுத் தேவைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இயலும் என அறிவுறுத்தி உள்ளார்.

என்பது ஒரு நாட்டின் விவசாய உற்பத்திப் பொருளின் அளவைக் குறிக்கப் பயன்படும் உலக அளவில் நிறுவப்பட்டுள்ள ஒரு குறியீடு ஆகும்.

SNU இந்தக் குறியீட்டின்படி, ஜப்பான் நாடானது ஒரு ஏக்கருக்கு 6-7 SNU உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றது. இதையே ஒரு சதுர மைல்களுக்குக் கணக்கிட்டால், 4000 SNU உணவுப்பொருள்களை உற்பத்தி செய்கிறது எனவும் கொள்ளலாம். ஆக ஒரு சதுர மைல் பரப்பளவில் விளைவிக்கப்படும் உணவுப் பொருள் ஒரு சதுர மைல் பரப்பளவில் வாழும் 4000 பேருக்கு உணவளிக்க முடியும். (By Birth Control. Abul A'la Maududi. Noted from STAMP. DUDLEY. OUR DEVELOPING WORLD. p.120.)

இன்று நம் இந்தியாவில் ஒரு சதுர மைல்களுக்கு 695.3 நபர்கள் வசிக்கின்றார்கள். ஆக, இந்தியாவும் ஜப்பானைப் போல 6-7 SNU உணவுப்பொருட்களை ஒரு ஏக்கருக்கு விளைவிக்குமானால், இந்தியாவைப் போல் 6 மடங்கு இந்தியாவுக்கு உணவளிக்க முடியும்.

சில நாடுகள் தங்களது விளைநிலங்களில் உயர் தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், எவ்வாறு முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதை கீழே உள்ள அட்டவணை நமக்கு தெளிவாக்குகின்றது. அதாவது, இந்தியாவை விட மிகக் குறைந்த அளவே பரப்பளவைக் கொண்ட

ஜப்பான் 21 லட்சத்து 20 ஆயிரம் டிராக்டர்களையும், 12 லட்சத்து 80 ஆயிரம் அறுவடை இயந்திரங்களையும் பயன்படுத்துவதன் மூலம் புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் அந்த நாடு எந்தளவு முன்னணியில் இருக்கிறது என்பது தெளிவாகும். இதனால் தான் அவர்களால் இந்தளவு சாதனையை எட்ட முடிகின்றது. ஆனால் இந்தியாவோ மிகக் குறைந்த அளவிலேயே புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வருவதன் மூலம் உற்பத்தியில் மற்ற நாடுகளை விடப் பின் தங்கியுள்ளது எனலாம்.

| நாடுகள் | விவசாயத்திற்குப் பயன்படும் டிராக்டர்கள் | அறுவடை இயந்திரங்கள் | பால்கறக்கும் இயந்திரங்கள் |
|---|---|---|---|
| இந்தியா | 988,070 | 2,950 | தகவல் இல்லை |
| ஜப்பான் | 2,120,000 | 1,280,000 | 157,000 |
| ஹாலந்து | 197,000 | 5,580 | 39,000 |

டிராக்டர்கள் மூலம் நிலத்தை ஆழமாகவும், விரைவாகவும் உழ முடியும். அதுபோல அறுவடை இயந்திரங்கள் மூலம், தானியங்களை வீணாக்காமல் குறைந்த நேரத்தில் அறுவரை செய்து முடிக்க முடியும். இதானல் நேரமும், பண விரயமும், மனித உழைப்பும் மிஞ்சும் அதே வேளையில், உற்பத்தியின் அளவு கூடக் கிடைக்க வழி பிறக்கிறது.

ஆனால், மேற்கண்ட புள்ளி விவரங்களை எல்லாம் திட்டமிட்டே இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு ஆதரவுக் கூட்டம் மறைத்து விட்டு, தமது சடவாதக் கொள்கையை மட்டும் முன்னிறுத்துகிறது. இவர்கள் அனைவரும் இறைவனின் கருணையை அறியாத மடையர்களின் கூட்டங்களே தவிர வேறு என்னவாக இருக்க முடியும். மால்த்தஸ்வாதிகள், மக்கள் தொகை வளர வளர இடத்தேவையும், உணவுத் தேவையும் அதிகரிக்கும் என்று அதன் பிரச்னையின் ஒரு பக்கத்தை மட்டும் விளக்கினார்களே ஒழிய, அதற்குத் தீர்வாக இறைவன் அருளி இருக்கும் உணவு இருப்பிடம் அதற்கான வாழ்வாதாரங்களையும் அவற்றை அடைவதற்கு மனிதனுக்கு அருளியிருக்கும் ஆற்றலையும் இந்த புரட்டுவாதக்காரர்கள் வேண்டுமென்றே மறந்து விட்டார்கள்.

இதையே, கோலின் க்ளார்க் என்பவர் தமது POPULATION GROWTH AND LIVING STANDARDS. P. 100 நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

மால்த்தஸ் சார்பு வாதக் கூட்டத்தார்களான இவர்கள் மக்கள் மத்தியில் தவறாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஏனெனில் இவர்கள் மதங்களுக்கு எதிரான கொள்கையைக் கொண்டவர்கள். இவர்கள் சொல்லும் வாதங்கள் முழுவதும் அறிவியல் சார்புடையதன்று, வெறும் கற்பனைக் கோட்பாடுகளேயாகும். மேலும் அறிவியலாளர்கள் உண்மையிலேயே அவற்றை அணுகி ஆராய்வார்களென்றால், இது ஒரு புரட்டுவாதக் கொள்கை என்பதை நிச்சயம் இனம் கண்டு கொள்ளாமல் இருக்கவியலாது. மால்த்தஸ் சார்புவாதிகளுக்கு மக்கள் தொகை பற்றிய எந்த அறிவும் அவர்களுக்கு கிடையாது. மேலும் உலக அளவில் பொருளாதார அடிப்படையில் அமைந்துள்ள மக்கள் தொகை ப்றிய விபரங்களை மட்டும் சிறிது

அறிந்து கொண்டிருக்கிறார்களே ஒழிய, உண்மையிலேயே மக்கள் தொகை வளர்ச்சியின் அடிப்படையில் உள்ள சிறிதளவு உண்மைகள் கூட அறியாதவர்கள்.

மேற்கண்ட விபரங்களுக்குப் பின்னும், மக்கள் தொகை வளர்ச்சியில் இடப் பற்றாக்குறை ஏற்படும், உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று சொன்னால், அத்தகைய புரட்டுவாதம் ஏற்புடையதாக இருக்குமா? மனிதன் இறைவன் தனக்கு வழங்கிய சிந்தனா சக்தியைப் பயன்படுத்த வேண்டும். இந்த பூமியானது மனிதனின் வசிப்பிடத்திற்காகவே இறைவனால் படைக்கப்பட்டது. எனவே, அந்த இறைவன் வளரும் மக்கள் தொகைக்கு ஏற்பவே தனது அருட்கொடைகளை விசாலப்படுத்திக் கொண்டே இருப்பான். எனவே, நம் முன் தவறாகப் பிரச்சாரம் செய்யும் மால்த்தஸ் வாத அறிவு ஜீவி?களின் வாதத்தை ஒதுக்கித் தள்ளுவதோடு, அவர்களை மனித இனத்தின் துரோகிகளாகவும் பொது மக்களுக்கு இனம் காட்ட வேண்டியது உண்மையாளர்களின் கடமையுமாகும்.

### 6. விரையமாகும் உற்பத்தி

இந்த மால்த்தஸ் சார்புவாத குடும்பக் கட்டுபாட்டு பிரச்சாரகர்கள், மக்கள்தொகை பெருகப் பெருக உணவுப் பற்றாக்கறை ஏற்படும் என்று சொல்பவர்கள் உற்பத்தியாகும் பொருள்களை பாதுகாத்து, உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க திராணியற்றவர்களாக உள்ளனர். தவறானதொரு வாதத்தை நியாயப்படுத்தத் துடிக்கிறார்களே ஒழிய, உண்மையிலேயே அந்தப் பிரச்னையில் கவனமுடன் அனுகி, அதைத் தீர்ப்பதற்குண்டான வழி முறைகளை ஆராய இவர்கள் முன்வரவில்லை என்பதைத் தான் கீழ்க்கண்ட செய்திகள் நிரூபிக்கின்றன.

உதாரணமாக, நம் இந்தியாவில் நடந்து வரும் பின்வரும் நிகழ்வுகளை கவனமுடன் ஆராயுங்கள்.

கீழ்க்கண்ட இந்த நிகழ்வு மகாராஷ்டிரா மாநிலத்தில் நடந்ததொரு சம்பவமாகும்.

இம்மாநிலத்தின் ஒரு நாளைய பால் உற்பத்தி 36 லட்சம் லிட்டர்கள். இதில் 29 லட்சம் லிட்டர் பாலை மட்டுமே பதனிட வசதி கொண்டது மகாராஷ்டிராவின் பால் பதனிடும நிலையம். மீதி உள்ள 7 லட்சம் பாலை பதனிட வசதியில்லாமல் ஒர்லி கடற்கரையில் கொட்டி விடுகின்றார்கள். இவ்வாறு வீணடிக்கப்படும் பாலின் அளவு, ஒரு வருடத்திற்கு 2,555 லட்சம் லிட்டர்களாகும். பாம்பேயில் மட்டும் ஒரு நாளைக்கு 59000 லிட்டர் பால் வீணடிக்கப்படுகின்றது. (சண்டே வீக்லி, டிசம்பர் 12-18, 1993)

இந்தியக் குழந்தைகள் சரியான ஊட்டச் சத்தின்றி, தம் மழலை வாழ்வை நரகமாக்கிக் கொண்டு இருக்கும் நிலையில், வீணடிக்கப்படும் இந்த பாலின் அளவு பற்றியும், இவ்வளவு பால் உற்பத்தி எவ்வாறு நிகழ்ந்தது என்பதயும் இந்த மால்த்தஸ் சார்பு வாத குடும்பக் கட்டுபாடு ஆதரவாளர்கள் சிந்திக்க வேண்டும்.

அடுத்து,

போதுமான பாராமரிப்பு பாதுகாப்பு வசதிகள் இல்லாத காரணத்தால் ஒவ்வொரு ஆண்டும் 23,000 கோடி ரூபாய் மதிப்புள்ள காய்கறிகள், பழங்கள், அழுகி வீணாகின்றன. இது இந்தியாவின் மொத்த காய்கறி மற்றும் பழ உற்பத்தியில் 50 சதவீதமாகும். (தினமணி, 27-5-1997)

இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தியில் 10 சதவீதத்தை எலிகள் தின்று அழித்து விடுகின்றன. (சமரசம், 16-30, ஜு ன் 1997)

தஞ்சையில் குறுவை சாகுபடியின் போது 350 க்கும் அதிகமான நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. கொள்முதல் செய்யப்பட்ட 5 லட்சம் டன் நெல்லை பாதுகாக்க வசதியில்லாமல் சாலை ஓரங்களில் துணி போட்டு மூடப்பட்டுள்ளது. (தினமணி 18 அக்டோபர், 1997)

இந்தியாவின் பரிதாப நிலையை விளக்க மேற்கண்ட நான்கு செய்திகளைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை.

வருடம் ஒன்றுக்கு 2,555 லிட்டர் பாலும், 23,000 கோடி மதிப்புள்ள காய்கறி மற்றும் பழங்களும், இந்திய நெல் உற்பத்தியில் 10 சதவீதமும் பாதுகாக்க வசதியில்லாமல், லட்சக்கணக்கான உணவு தானியங்கள் வருடந்தோறும் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையில், உண்ண உணவின்றி மாங்கொட்டைகளைத் தின்று உயிரை மாய்த்துக் கொள்ளும் சக பிரஜையை வேடிக்கை பார்த்துக் கொண்டுமிருக்கின்ற சூழ்நிலை தான் இந்திய தேசத்தின் பரிதாப நிலையாக இருக்கிறது.

மேலும் தஞ்சையின் குறுவை சாகுபடிக்குப் பின், அக்டோபர், நவம்பர் (1997) மாதங்களில் தமிழகம் முழுவதும் கன மழை பெய்தது. பாதுகாக்க வசதியில்லாமல் சாலை ஓரம் அடுக்கி வைக்கபட்டிருந்த நெல் மூட்டைகளின் கதி என்னவாகும் என்பதை நாம் சொல்லி விளங்க வேண்டியதில்லை.

இவ்வாறு மற்ற மற்ற மாநிலங்களிலும் இதுபோல விணடிக்கப்படும் உற்பத்தியைக் கணக்கில் கொண்டால், இந்தியாவின் ஒரு ஆண்டு பட்ஜெட் அளவு பணம் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது புலனாகும்.

மால்த்தஸ் வாதிகள் வளரும் மக்கள் தொகைப் பிரச்னையைச் சமாளிக்க குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு செலவு செய்வதற்குப் பதிலாக, இருக்கும் விளை பொருள் உற்பத்தியைப் பாதுகாக்க ஆவன செய்தாலே போதுமானது, எவ்வளவு மக்கள் தொகை பெருகினாலும் சமாளித்து விடலாம்.

மேலும், தமிழகத்தில் 1996 டிசம்பர் மாதம் முற்பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் 780 ஏரி, குளங்கள் உடைப்பெடுத்து விட்டன. மேலும் 1997 அக்டோபர், நவம்பரிலும் இதே நிலைமை தான். இந்தியாவின் விளை நிலங்களில் 26.37 சதவீத நிலங்கள் தான் நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளன. இந்த நிலையில், இயற்கையாகக் கிடைக்கும் மழை நீரைச் சேமித்து வைத்து, முழு விளை நிலங்களிலும் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வக்கில்லாமல் இருக்கும் நிலையில், இவர்கள் என்றைக்கு சீனா, ஜப்பான் மற்றும் ஹாலந்து நாடுகளின் அதிகப்பட்ச உற்பத்திக் குறியீடுகளை எட்டிப் பிடிப்ப முடியும்?! கண்ணுக்கு எட்டிய வரையும் கானல் நீரே!!

இவ்வளவு பிரச்னைகளையும் எளிதாகத் தீர்ப்பதற்குண்டான சாத்தியக் கூறுகள் அத்தனையையும் ஒருங்கே பெற்றிருக்க, இவற்றை எல்லாம் தீர்ப்பதற்கு செலவு செய்வதை விட்டு விட்டு, எம் பெண்களின் கற்பப் பையைச் சூறையாடுவதற்கு செலவு செய்யும், இந்த மால்த்தஸ் வாதிகள் மனித நலனில் அக்கறை கொண்டவர்களா? அல்லது பிரச்னையின் உண்மை நிலையை ஆராய்ந்து, அதற்குத் தீர்வாக விளங்கும் இஸ்லாமியச் சட்டங்களும் அதை வழுவாது பின்பற்றத் துடிக்கும் முஸ்லிம்கள் மனித இனத்தின் மீதும், அதன் நலனின் மீதும் அக்கறை கொண்டவர்களா? என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்கட்டும்.

## 7. கண்கெட்ட பின்..!?

இதற்கு முன் உள்ள தலைப்புகளில் குடும்பக் கட்டுப்பாட்டின் பின்னணியில் எழுந்த சமூக அவலங்களையும், மால்த்தஸ் சார்பு வாத அறிஞர்களின் தவறாக சித்தாந்தங்களையும் அதற்குரிய

காரணங்களுடன் நாம் தெளிவாக்கினோம். இனி வரும் அத்தியாயத்தில், இதற்கான இஸ்லாத்தின் வழிமுறைகள் பற்றி ஆராய்வோம். அதற்கு முன்!!

இந்த குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி உண்மையிலேயே இந்த அறிவு ஜீவிகள் தம் சுய உணர்வோடு ஆராய்ந்திருப்பார்களானால், நாம் இவ்வளவு தெளிவாக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது. ஏனெனில் எந்தெந்நத நாடுகள் இந்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முன்னிருத்தியதோ அநத நாடுகள் எல்லாம் இந்த திட்டத்தை என்றோ மூட்டை கட்டி வைத்து விட்டன. ஏனெனில், அதனால் எழுந்த பிரச்னைகள் மற்றும் முதலான் மற்றும் இரண்டாம் உலக போரின் அழிவுகள் எல்லாம் ஒன்று சேர தேசத்தின் மக்கள் தொகை ஒரேயடியாகக் குறைந்து விட்டதை உணர்ந்து, மக்கள் தொகை பெருக்கத்திற்காக மக்களுக்கு பல சலுகைகளையும் இந்த மேற்கத்திய நாடுகள் தர முன் வந்தன.

உதாரணமாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டனின் உள் துறை செயலர், ஹெர்பர்ட் மாரீஸன் (HERBERT MORRISON) என்பவர் கீழ்கண்ட கருத்தை வெளியிட்டார். அதாவது இன்றிருக்கும் நிலையில், பிரிட்டனின் ஒவ்வொரு குடும்பமும் தனது மக்கள் தொகையில், 25 சதவீத அளவு உயர்த்த வேண்டும். அப்பொழுது தான் பிரிட்டன் இன்றிருக்கும் நிலையை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்ற பிரிட்டன் அரசுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், அதிகக் குழந்தைகள் குடும்பத்தில் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கும் என்ற கருத்து எழுந்த பொழுது, ஒவ்வொரு குடும்பத்தின் பிள்ளைகளின் அளவு விகிதாச்சாரப்படி ஊக்கப்படி, வரிவிலக்கு, வீடு கட்ட உதவி, கல்வி, மருத்துவம் போன்றவற்றில் சலுகை போன்ற உதவித் திட்டங்களை வேறு அறிவித்தன.

இதற்கு ஒருபடி மேலே பிரான்ஸ் செயல்பட்டது. குடும்பக்கட்டுப்பாடு சாதனங்கள் பற்றி விளம்பரங்களை பிரச்சாரம் செய்வது குற்றம் என சட்டம் கொண்டு வந்தது. மேலும் மருத்துவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட குடும்பக்கட்டுப்பாடு பற்றி அறிவுறுத்தவோ அதன்படி செயல்படுத்தவோ யாரையும் தூண்டக் கூடாது என்பன போன்ற சட்டங்களை இயற்றின.

ஜெர்மனியில் இருந்து வெளிவந்த ஒரு செய்திப் பத்திரிக்கை தனது நாட்டின் மக்கள் தொகை குறைந்து வருவது குறித்து, இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டது.

இதே நிலையில் ஜெர்மனி சென்று கொண்டிருந்தால் ஒரு நாள் ஜெர்மனியானது, சுத்தமாக துடைத்தெறியப்பட்ட மலட்டுத் தன்மை கொண்ட நாடாக மாறி விடும்.

அதன் பின் ஜெர்மனி அரசானது, குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விளம்பரம், அது சார்ந்த கல்வி முறைகள் அத்தனையையும் சட்டப்படி தடை செய்யப்பட்டது என அறிவித்தது. அலுவலகம் மற்றும் தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு பெண்களுக்கு தடை விதித்தது. குழந்தை இல்லாத் தம்பதிகளுக்க அதிக வரியும், குழந்தை உள்ள தம்பதிகளுக்கு வரிச் சலுகையையும் வழங்கியது. திருமணமாகாத இளைஞர்களை திருமணம் செய்ய ஊக்குவிப்பதற்காக, 1934 ல் 10 மில்லியன் பவுண்ட் நிதியை திருமணக் கடனாக, 6 லட்சம் இளைஞர்களுக்கு வழங்கியது.

இத்தாலியின் முசோலினி அரசானது ஒருபடி மேலே போய், குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரச்சாரம் அது சார்ந்த அனைத்தும் சட்டப்படி தடை செய்தது. மேலும், அது பற்றி பேசுவது, செயல்படுவது, அதற்கு ஆதரவாக நடப்பது போன்றவைகளை குற்றமாக அறிவித்தது. மீறி நடப்பவர்களுக்கு ஒரு வருட சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் என்ற சட்டத்தை இயற்றியது. மேலும், மருத்துவர்கள் கூட இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவில்லை.

ஆக, இந்த மேற்கத்திய நாடுகள் தமக்கு ஒத்துவராது என என்றோ வீசியெறிந்து விட்டதொரு கொலைகாரத் திட்டத்தை ஏன் இந்த வளரும் நாடுகள், தங்கள் தலையில் தூக்கி வைத்து ஆடுகின்றன என்றால், ஒன்று மேற்கிலிருந்து வரும் வாடைக் காற்று கூட உன்னதமானது என்ற கொள்கை. அதாவது, மேற்கத்திய நாடுகள் தங்கள் காலனி நாடுகளில் ஏற்படுத்திவிட்டுப் போன தாக்கங்கள் என்றும், வளரும் நாடுகளின் எஜமான விசுவாசம் என்று கொள்ளலாம்.

அடுத்து, இந்த மேற்கத்திய நாடுகள் முதலாம் இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஒரு உண்மையை உணர்ந்தன. என்னவெனில், எந்தளவு மக்கள் தொகை வளர்ச்சி அடைகின்றதோ, அந்தளவு அந்த நாட்டின் சக்தி பற்றி உலக அரங்கில் உணரப்படுகின்றது.

அதாவது, முதலாம் உலகப் போருக்குப் பின் 1916 ல் பிரிட்டன், தேசிய பிறப்பு விகிதத்தை ஆராய ஒரு கமிஷனை நியமித்தது. இதில் பணியாற்றிய பிரிட்டனின், மருத்துவ சுகாதார அமைச்சகத்தின் தலைமை மருத்துவரான, சர் ஜார்ஜ் நியூமென், கீழ்க்கண்ட கருத்தை வெளியிட்டார். அதாவது. பிரிட்டனின் பிறப்பு விகிதம் இதே அளவில் குறைந்து கொண்டே செல்லுமானால், பிரிட்டன் இன்றிருக்கும் உலக வல்லரசு என்ற பட்டத்தை இழந்து, உலகின் நாலாந்தர சக்தியாக ஆகி விடும் என்ற எச்சரிக்கையை விடுத்தார்.

ஆக, இந்த குடும்பக் கட்டுபாட்டின் பாதகங்களை நன்றாகவே இந்த மேலைநாடுகள் உணர்ந்தும் கணித்தும் விட்டன. ஆனால், இவர்கள் ஆரம்பத்தில் இத்திட்டம் பற்றி மக்களிடம் ஏற்படுத்திய மனமாற்றம், அதனூடே எழுந்த சமூக, கலாச்சார,பண்பாட்டு மாற்றங்கள், குடும்பக்கட்டுப்பாடு என்ற முறையில், குழந்தைப் பிறப்பைக் குறைக்காமல், சமூகத்தில் ஏற்பட்டு விட்ட மன மாற்றங்களும், கலாச்சார சீர்கேடுகளும் இவர்களை அறியாமலேயே குழந்தைப் பிறப்பைக் குறைத்து வந்து கொண்டிருக்கின்றன.

இனி இந்த மேற்கத்திய அரசுகள் என்ன தான் முயன்றாலும், சமூக மாற்றத்தையும், உண்மையான மனித நாகரீகத்தின் பால் மக்களை மீட்டெடுகக்கச் செய்வதும், அதன் பால் மக்களின் கவனத்தை திருப்புவது என்பதும் இயலாத காரியம் என்ற முடிவுக்க வந்து விட்டனர். ஆகவே, இரண்டாம் உலகப் போருக்குப்பின் மக்கள் பிறப்பு விகிதத்தில் ஏற்பட்ட மாற்றம் அதே நிலையில் தொடராமல், மீண்டும் பிறப்பு விகிதம் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இவற்றை மீட்டெடுப்பது மேற்குலக இஸங்களால் இயலாத ஒன்றாகவும் ஆகி விட்டது. இதனூடே, வளரும் நாடுகள் தங்கள் மக்கள் தொகையைப் பெருக்கிய வண்ணம் உள்ளன. மேலும், பொருளாதாரத்திலும் வளரும் நாடுகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், இன்று மூன்றாம் உலக நாடுகளாக, ஏழை நாடுகளாக இருக்கும் இந்தியா போன்ற நாடுகள் இன்னும் சிறிது நாளில் பொருளாதராத்தில் முன்னேறிய நாடுகளாகவும், ஆள்பலத்திலும், இராணுவ பலத்திலும் மிக உயர்ந்த நிலைக்கு வேகமாக விரைந்து கொண்டிருப்பதும், வல்லரசு எனும் தகுதியை இன்னும் சில ஆண்டுகளிலேயே அடைந்து விடும் எனக் கணிப்பும் இந்த மேற்குலகு அறிவு ஜீவிகளால் உணரப்பட்டு, அதன் வெளிப்பாடுகள் அங்கொன்றும் இங்கொன்றமாக வெளி வந்து கொண்டிருப்பதும், உலக அரசியல் நிலையை நன்கு ஆராய்பவர்களுக்குப் புலனாகும்.

இன்றைய சர்வதேச நாணய நிதி அமைப்பின் புதிய கணக்கீட்டின்படி, இந்தியப் பொருளாதாரம் உலகில் அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் க்கு அடுத்தபடியாக ஆறாம் இடத்தில் உள்ளது.

இந்த நிலையில் இந்த வளர்ந்த நாடுகள் தங்களது, வல்லரசு நாடுகள் என்ற பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்ள மறைமுகமாக வளரும் நாடுகளிடம் கொள்கைத் திணிப்பு மற்றும் அரசியல்

நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி, வளரும் மக்கள் தொகையை குறைக்கச் செய்ய அறிவுறுத்துகின்றன. இதற்கு துருப்புச்சீட்டாக உலக வங்கி யைப் போன்ற நிதி அமைப்புகளைப் பயன்படுத்துகின்றன. மேலும் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் வளரும் நாடுகளில் வெற்றிகரமாகச் செயல்பட இந்த உலக வங்கி மூலம் நிதியுதவி செய்கின்றன.

மேற்கண்ட அனைத்தும் நம் அரசியல்வாதிகளுக்கும் தெரியும். அறிவு ஜீவிகளுக்கும் தெரியும். ஆனால் தெரிந்திருந்தும் இவர்கள் இதன் கேடுகளை மறைப்பது என்பது எஜமான விசுவாசமாகவன்றி, வேறு என்னவாக இருக்கும்!! இவர்கள் வயிறு வளர்க்க எம் பெண்கள் தங்கள் கர்ப்பப்பையைக் காயப்படுத்த வேண்டுமா? சிநதிக்க வேண்டியது அறிவாளிகளின் வேலை? இத்திட்டத்தை ஒதுக்கித் தள்ள வேண்டியது பொதுமக்களின் கடமை!!

## பாகம் 3

## குடும்பக் கட்டுப்பாடு - இஸ்லாமியப் பார்வையும் அதன் சட்டங்களும்

### 1. இஸ்லாத்தின் பார்வையில் மனிதன்!

இன்றைய நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் அத்தனையும் மனித குலத்திற்கு நன்மை செய்யவே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்ற வாதம் தவறானது. அத்தகைய கண்டுபிடிப்புகள் நன்மையானவையா? அல்லது தீமையானவையா? என்பதை, இவைனும், அவனது தூதரும் காட்டித் தந்துள்ள வழிமுறைகளை உரை கல்லாகப் பயன்படுத்தித் தான் அவற்றைத் தீர்மானிக்க முடியுமே தவிர, அவைகள் அறிவியல் கண்டுபிடிப்புகள் என்பதற்காக அவைகள் மனித குலத்திற்கு நன்மை செய்பவையாகத் தான் இருக்கும் என்ற முடிவுக்கு உடனே வந்து விட முடியாது. அத்தகைய கண்டுபிடிப்புகள் மனித வாழ்வில் ஒழுக்க விழுமங்களைப் பேணச் செய்து விடும் என்றும் நம்ப முடியாது. அவைகள் அறிவியல் கண்டுபிடிப்புகள் என்ற ஒரே வாதத்திற்காக, நீதி நெறிமுறைகளைப் புறந்தள்ளி விட்டு, அவற்றை மனித வாழ்வில் அமல்படுத்தவும் முடியாது. அவ்வாறு செய்வது மனித இனத்தின் சீரழிவுக்குத் தான் வழி வகுக்குமே அல்லாது, மனிதனை மனிதனாக வாழச் செய்து விடாது.

நீதி நெறி முறைகளும், ஒழுக்கங்களும் இஸ்லாத்தோடும், அதன் மதக் கோட்பாட்டோடும் பிண்ணிப் பினைந்தவை. ஒழுக்க விழுமங்களையும், இஸ்லாத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க இயலாது. அப்படிப் பிரித்துப் பார்க்க முடியாது. அது தான் இஸ்லாத்தின் கருக் கொள்கையாகும். அது தான் இறைக் கட்டளையும் கூட.

இஸ்லாத்தின் நியதிப்படி, நம்முன் தெரிகின்ற இந்த பிரபஞ்சமும் அதன் காட்சிகளும், ஒரு தூய தெய்வீக நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டது என்ற நம்பிக்கையின்பால் சார்ந்ததாகும். இவை யாவும் வீணுக்காக இறைவனால் படைக்கப்படவில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நியதியின்படி படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, ஒவ்வொரு ஊயிரும் அது படைக்கப்பட்டதன் நோக்கத்தை, அவை நிறைவேற்றியேயாக வேண்டும்.

மேலும், மனிதன் என்ற இந்த உயிரினம் தான் இந்தப் பிரபஞ்சத்தில் இறைவனது முக்கிய படைப்பு. அவனது தகுதியும், அந்தஸ்தும் மற்ற எல்லா உயிரினங்களை விடவும் சிறந்தது. ஏனெனில், இப்பூமியில் மனிதனின் நிலை என்னவெனில், இறைவனது கட்டளைகளை சிரமேற் கொண்டு செயல்படுத்துபவன் என்ற நிலையில் இருக்கின்றான்.

(நபியே!) இன்னும் உமதிரட்சகன் மலக்குகளிடம், நான் பூமியில் (என்னுடைய) பின்தோன்றலை (ஆதமை) நிச்சயமாக ஆக்கப் போகின்றேன். (அல்குர்ஆன் 2:30)

மேலும், மனிதனுக்காக பூமியில் உள்ளவற்றையும், வானங்களில் உள்ளவற்றையும் வசப்படுத்தித் தந்துள்ளான் இறைவன்.

(மனிதர்களே!) வானங்களில் உள்ளவற்றையும், பூமியில் உள்ளவற்றையும், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கின்றான் என்பதையும், அவன் தன் அருட்கொடைகளை (அவற்றில்) வெளிப்படையானவற்றையும், மறைவானவற்றையும் உங்கள் மீது நிறைவாக்கியிருக்கின்றான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா? (31:20)

இதன் மூலம் மற்றெல்லா மதங்களையும் விட இஸ்லாம், மனிதனை ஒரு தனிப்பட்ட அந்தஸ்துள்ள உயர்படைப்பாக கருதுகிறது.

மனிதனின் படைப்பைப் பற்றி குர்ஆன் குறிப்பிடும் போது,

நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான படைப்பாகப் படைத்திருக்கின்றோம். (அல்குர்ஆன் :95:04) என்கிறது.

மேலும் இஸ்லாம் மனிதனை நன்மையின்பால் ஏவுகிறது. சக மனிதனுக்கு உதவி வாழவும் பணிக்கிறது.

அத்துடன், அல்லாஹ்வை - அவனுக்காகவே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாகவும் (அனைத்து தீய வழிகளை விட்டும் நீங்கி இஸ்லாத்தின்பால்) சாய்ந்தவர்களாக அவர்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காகவும், தொழுகையை அவர்கள் நிறைவேற்றுவதற்காகவும், ஜகாத்தை அவர்கள் கொடுப்பதற்காகவுமே தவிர (வேறெதனையும்) அவர்கள் (அதில்) கட்டளையிடப்படவில்லை. இன்னும் இது தான் நேரான மார்க்கமாகும். (98:06)

ஆனால் அந்த நேரான வழி எது என அறிவுறுத்தாமல், கற்றுக் கொடுக்காமல் மனிதனைக் கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல் இறைவன் விட்டுவிடவில்லை. இறைவன் காட்டித் தந்துள்ள அந்த நேரான வழியைப் பின்பற்றினாலன்றி பாவ மீட்சி இல்லை. மேலும், மனிதன் இயற்கையிலேயே பாவப்பட்டவன் (முசபைபையெட ளுைை) என்ற தத்துவத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, ஒவ்வொரு ஆத்மாவும், அதனதன் செயல்களுக்குப் பொருப்பாகும் என்று அறிவுறுத்துகின்றது.

## 2. மனிதனுக்குள்ள சுதந்திரம்

சுதந்திரம் என்ற வார்த்தையை எடுத்துக் கொண்டோமானால், அந்தச் சுதந்திரத்தை முழுமையாகப் பெற்றவன் அல்லாஹ் ஒருவனே. ஆனால் சில வரையறைகளுக்கு உட்பட்டு மனிதனும் சில சுதந்திரங்களைப் பெற்றுள்ளான். ஏனெனில், ஆதம் (அலை) அவர்களை இறைவன் படைத்த போது, மற்றெல்லா உயிரினங்களை விடவும், மலக்குகளை விடவும் தனித்துக் காட்டிய சிந்தனா சக்தியை மனிதனுக்கு இறைவன் வழங்கினான். அதன் மூலம், இறைவனது சட்ட திட்டங்களை ஏற்று நடக்கவும், நடக்காதிருக்கவும் மனிதன் சுதந்திரம் பெற்றுள்ளான். இறைவன் மனிதனை, இயற்கையின் சட்ட திட்டங்களுக்கு பணிந்து நடக்குமாறு பணித்துள்ளான். அந்தக் கட்டளைகளுக்குப் பணிந்து நடக்கும் போது, வானவர்களின் தரத்தை அடைகின்றான். அவற்றை மீறும் போது மிருகத்திலும் கேவலமானவனகா மாறி விடுகின்றான்.

இறைக்கட்டளை மீறுபவர்களை திருமறை இப்படிக் கூறுகிறது :

நிச்சயமாக மனிதன் மிக்க அநியாயக்காரன், மிக்க நன்றி கெட்டவன். (அல்குர்ஆன் 14:34)

மனிதனது, ஒவ்வொரு செயல்களும் அவனது பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவனது ஒவ்வொரு தவறுகளுக்கும் மறுமையில்பதில் சொல்லக் கடமைப்பட்டவன். மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களும், பொறுப்புகளும், ஒழுக்க விழுமங்களும், இவ்வுலகில் அவன் வாழும் காலத்தில் இறைவனுக்கும் அவனது கட்டளைகளுக்கும் பணிந்து, இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களின்படி தம் வாழ்வை அமைத்துக் கொள்வதன் மூலம், அவன் தனது இறைவனாகிய அல்லாஹ் இருக்கின்றான். அவன் தான் நம்மைப் படைத்தான். அவனிடமே நம் மீட்சி இருக்கிறது என்ற சத்திய சாட்சிக்கான தேர்வுக் களத்தில் வெற்றி பெற்றவனாகின்றான்.

## 3. மனிதனது பொறுப்புக்கள்

மனிதன் என்பவன் ஒரு சமுதாய விலங்கு ஆவான். அவனால் தனது வாழ்வை தானாகவோ, தனித்தோ அதைத்துக் கொள்ள இயலாது. மனிதன் என்பவன், மனிதச் சமுதாயம் என்ற கூட்டு வாழ்வில் ஓர் அங்கமாக இருக்கின்றான்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒவ்வொருவரும் பாதுகாவலர் ஆவார். அவர் தன் பாதுகாவலுக்கு உட்பட்ட அனைத்துக்கும் பொறுப்பானவர் ஆவார். (புகாரி)

மேலும் இஸ்லாத்தைப் பொறுத்தவரை, துறவறம் என்பது கிடையாது, எனவே மனிதன் துறவறம் மேற்கொள்வதை தடை செய்வதன் மூலம், தன் பொறுப்புக்களிலிருந்து தவிர்ந்து, வாழ்க்கைப் பிரச்னைகளிலிருந்து விலகி வாழ்கின்ற வாழ்க்கையை விட்டும் அவனை இஸ்லாம் தடுக்கின்றது. மேற்கண்ட பிரச்னைகளிலிருந்து ஒதுங்கி, மறுமையில் வெற்றி பெறுவதற்குண்டான எளிய வழியாக மனிதன் துறவறத்தைக் கைக் கொள்ள முடியாது.

மேலும், மனிதனது உண்மையான வெற்றி என்பது, அவன் ஆற்றும் நற்பணிகளிலிருந்தும், அவனது நற்செயல் முறைகளின் மூலம் கணிக்கப்படுகிறது. இந்த உலகில் அவன் செயல்படுத்தும் நற்செயல்களே, மறுமையில் அவனை வெற்றி பெற்ற மனிதனாக அடையச் செய்வதற்குண்டான நல்வழியாகும். அந்த நல்வழியை அடைவதற்கு, இவ்வுலகில் ஏராளமான இடர்பாடுகள் வந்து அவனது சுதந்திரத்தைப் பறிக்கவும் கூடும். அவனது சுதந்திரத்தைப் பறிக்கும் கட்டுப்பாடுகளை தனது நன்மைக்கே, தனது சமூகத்தின் நன்மைக்கே எனக் கருதும் போது அவன் வாழ்வில் வெற்றி பெற்ற மனிதனாகின்றான்.

அதை விடுத்து அந்தக் கட்டுப்பாடுகளை தனக்கு இடப்பட்ட அடிமைச் சங்கிலி எனக் கருதுவானாகில், அவனது படைப்பின் நோக்கம் அங்கே வெற்றி பெறாது. இறைவனின் கட்டளைகளையும், இயற்கையிலேயே அந்தக் கட்டளைகளின் பின்னணயில் உள்ள பூரணத்துவத்தையும் சிந்திக்கவே அவனுக்கு சிந்தனா சக்தி வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய நிலைகளைச் சிந்தித்து, மதித்து நடப்பானாகில், இப்பூலகில் மனிதனை, இறைவன் தன்னுடைய பிரதிநிதி என்ற அந்தஸ்தைக் கொடுத்து, மற்றெல்லா படைப்பினத்தையும் விட மேலான படைப்பாகப் படைத்ததற்காக நன்றி செய்தவனாவான். அதுவரை மனிதன் அமைதியான வாழ்வைப் பெறுவான். அதை மீறி, இயற்கையை எதிர்த்து, இறைக் கட்டளைகளை மீறி நடப்பானாகில், மனிதனுக்கு இம்மையிலும், மறுமையிலும் நஷ்டம் என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்!?

## 4. இறைச் சட்டங்கள்

இறைச் சட்டங்கள் என்பது நேராக வழியைக் காண்பிக்கக் கூடியவைகள் ஆகும். அவை, மனிதனுக்கு நன்மை எது!, தீமை எது! எனப் பிரித்து அறிவிக்கும் இறைச் சட்டத் தொகுப்பும், வழிகாட்டுதல்களும் ஆகும். அத்தகைய சட்டங்களைக் கொண்டது தான் இறைவேதமாகிய திருக்குர்ஆன் ஆகும்.

திருக்குர்ஆனைப் பற்றி இறைவன் குறிப்பிடும் போது,

தன் அடியார் (முஹம்மது அவர்கள்) மீது (அசத்தியத்திலிருந்து சத்தியத்தைப் பிறித்தறிவிக்கும்) ஃபுர்கானை – அது அகிலத்தார்க்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக் கூடியதாக இறக்கி வைத்தானே, அத்தகையோன் மிக்க பாக்கியமுடையவன். (அல்குர்ஆன் 25:01)

திருக்குர்ஆன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, ஜிப்ரீல் (அலை) எனும் வானவர் தூதர் மூலம் இறைவனால் இறக்கியருளப்பட்டது. அந்தத் திருக்குர்ஆன் தான் இறைவனது கட்டளைகளைக் கொண்ட மூல நூலாகும். அதில் தான் மூலச் சட்டங்களும் அத்துடன் அதனூடே சில விதிவிலக்குகளும் உள்ளன. திருக்குர்ஆனில், மனிதனது வாழ்வியலுக்கு வேண்டிய அனைத்து வழிகாட்டுதல்களும், சட்டங்களும், அடிப்படைக் கொள்கைகளும் உள்ளன.

மேலும், திருக்குர்ஆனில் இறைவன் குறிப்பிடுகின்றான் :

நாம் எம் திருத்தூதராகிய முஹம்மதிற்கு திருக்குர்ஆனை மட்டும் அருளவில்லை. அத்துடன் ஞானத்தையும் வழங்கியுள்ளோம் என்கிறான். அத்தகைய ஞானப் பேழை தான், திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் சொல்லும் செயலும், நடைமுறையும் கொண்ட நபி மொழித் தொகுப்புகள் ஆகும்.

எனவே, திருக்குர்ஆனில் உள்ள சட்டங்களுக்கு மேலதிக விளக்கம் பெற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளான,நபிமொழித் தொகுப்புகள் (ஹதீஸ்) மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், இறைவன் தன் திருமறையில், எனக்கும் (அல்லாஹ்வுக்கும் ) என் தூதருக்கும் கீழ்படிந்து நடங்கள். (3:32)

எனவே, நாம் எடுத்துக் கொண்ட இந்த தலைப்புகளை இறைவழிகாட்டுதல்களை, இறைவனத தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் நடைமுறைகளையும், மேலும் அறிஞர் பெருமக்களின் கருத்துக்களையும் கொண்டு ஆராயப் புகுவோம்.

## 5. திருக்குர்ஆன் ஒரு மருத்துவ நூல் அல்ல!

நமது தலைப்பை ஆராய்வதற்கு நாம் உரைகல்லாகப் பயன்படுத்தும், திருமறையானது ஓர் மருத்துவ நூல் அல்ல. மாறாக, மனித இனத்துக்கு நேர்வழி காட்டக் கூடியதும் மனிதன் உயிர் வாழக் கூடிய இவ்வுலகிலும், அவன் மரணித்த பின் உள்ள மறுமை வாழ்க்கையின் வெற்றிக்கான ஆயத்தப்படிகளை வழங்கக் கூடிய ஆன்மீக வழியைக் காட்டக் கூடியதாகும். இதையே, திருமறை கூறுகிறது :

நபியே! நீர் கூறுவீராக! (இவ்வேதம்) விசுவாசங் கொண்டவர்களுக்கு நேர்வழியாகவும், (உடல் மற்றும் மனநோய்களை) குணப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. (திருக்குர்ஆன் 41:44)

## 6. மனிதன் இறைவனது பிரதிநிதி

இறைவன் மனிதனைப் பற்றிக் கூறும் போது,

அவன் தான் (உங்களுக்கு முன் இருந்தவர்களுக்கு) பிரதிநிதிகளாகப் பூமியில் உங்களை ஆக்கினான் (6:165)

மனிதனானவன் ஒன்று இவைனுடைய கட்டளைகளை ஏற்று, அவற்றை இப்பூமியில் செயல்படுத்தும் இறை அடிமையாகவும், இரண்டாவதாக, தனக்கு முன்னாள் இத்தகைய இறைவனது கட்டளைகளை ஏற்று நடந்து விட்டு வழிகாட்டிச் சென்று விட்ட உத்தம நபிமார்கள் மற்றும் அவர்கள் வழி நடந்த நம் முன்னோர்களின் பிரதிநிதிகளாகவும் செயல்பட வேண்டிய நிலையில் இருக்கின்றான்.

எனவே, தனது அடிமையாகிய இந்த மனிதன், தன்னுடைய கட்டளைகளை அவன் சிரமேற் கொண்டு நிறைவேற்றுவதற்கு நல்ல உடல் நலம் மிக்கவனாகவும் இருக்க வேண்டும் என்பது இறைவனது எதிர்பார்ப்பு. இறைவனுடைய இந்த எதிர்பார்பார்ப்பை பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ள மனிதன், தான் இவ்வுலகில் ஆற்ற வேண்டிய இறைப் பிரதிநிதித்துவப் பணிகளுக்கு முழுத் தகுதி உள்ளவன் என்பதை நிரூபணம் செய்வது தலையாய கடமையாகிறது.

அதற்கு மனிதனது நலத்தையும், உடல் நலத்தையும் பேண வேண்டியது அவசியமாகின்றது. மேலும், அந்த மன நலத்தையும், உடல் நலத்தையும் இறைவன் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களின்படி அமைத்துக் கொள்ளவும் வேண்டும். இதன் மூலம் இறைவன் தன்னைப் படைத்ததன் நோக்கத்தை நிறைவேற்றிக் காட்ட வேண்டும்.

இதையே ரசூல் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

பலமில்லாத நம்பிக்கையாளனை விட பலமுள்ள நம்பிக்கையாளனை இறைவன் மிகவும் நேசிக்கின்றான். (முஸ்லிம்)

மேற்கண்ட நபி மொழி வலியுறுத்துவது என்னவென்றால், ஒரு மனிதன் தன்னுடைய ஆரோக்கியத்தில் அதிகக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்க முயற்சித்துக் கொண்டும் இருத்தல் வேண்டும். மேலும், இங்கே ஆரோக்கியம் என்பது உடல் நலம், மனநலம், மற்றும் சமுதாய நலம் கொண்டதாக இருத்தல் வேண்டும். மேலும், அச்சமுதாயம் நோயிலிருந்து மட்டும் நீங்கியதாக இருத்தல் கூடாது. அதை விட தளர்ந்த, முதுமையான செயல்பாடுகளற்ற சமுதாயமாகவும் இருத்தல் கூடாது.

அத்தகைய நலத்தை எவ்வாறு பேண வேண்டும் என இறைமறை கூறுகிறது என ஆராய்ந்தால்,

மனிதர்களே! பூமியிலுள்ளவற்றிலிருந்து (உண்ண) அனுமதிக்கப்பட்ட நல்லவற்றை உண்ணுங்கள். மேலும் ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன், உங்களுக்கு பகிரங்கமான விரோதியாவான். (2:168)

இதன் மூலம இறைவன் எதை உண்ண வேண்டும் எதை உண்ணக் கூடாது என்று அறிவுறுத்துவதன் மூலம், தன் அடிமையின் ஆரோக்கியத்தில் இறைவன் எந்தளவு அக்கறை கொண்டிருக்கிறான் என்பது புரிய வரும்.

அதாவது, இறந்த பிராணிகளின் மாமிசம்,இரத்தம், பன்றிக் கறி மற்றும் இறைவனது பெயர் சொல்லி அறுக்கப்படாத பிராணிகளின் மாமிசம் போன்றவைகள் இறைவனால் உண்ண தடை செய்யப்பட்டவைகள். மேலும் இவைகளை உண்பதன் மூலம் என்ன என்ன தீமைகள் உண்டாகின்றன என இன்றைய அறிவியல் உலகமும் ஒப்புக் கொண்டுள்ளது. மனிதன் மேல், அவனது ஆரோக்கியத்தின் மேலம் அக்கறை கொண்டுள்ள மார்க்கம் எதுவென்றால், ஏக இறையோனாகிய அல்லாஹ் அருளிய மார்க்கமான இஸ்லாம் ஒன்றேயாகும்.

அதுபோலவே, இஸ்லாம் மதுவையும், சூதாட்டத்தையும் தடை செய்துள்ளது. இவ்விரண்டும் தான் இன்று மிகப் பெரிய சமுதாய சீரழிவுக்கும், பொருளாதார சீரழிவுக்கும் மக்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது.

இதுவரை உணவையும், குடிப்பையும் எவ்வாறு பேணி உடல்நலத்தைக் காப்பது என அறிவுறுத்திய இறைவன், அடுத்து சமுதாய வாழ்க்கையில் கூட்டு வாழ்க்கையில் அவனது செயல்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றான்.

பாதுகாப்பின்மை, உதவியில்லாத நிலையும் ஒரு மனிதனுக்கு அமைதியற்ற நிலையை உருவாக்கும். அந்த அமைதியற்ற நிலையிலிருந்து மனிதனைப் பாதுகாக்க, இறைவனைத் துதிப்பதன் மூலம் அந்த மன அமைதியைப் பெற்றுக் கொள்ளுமாறு இறைமறை மனிதனுக்கு அறிவுறுத்துகிறது.

எத்தகையோரென்றால், அவர்கள் (மெய்யாகவே) விசுவாசங் கொண்டார்கள், இன்னும் அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன. (ஏனென்றால்) அல்லாஹ்வை நினைவு கூர்வதால் இதயங்கள் நிச்சயமாக அமைதி பெறும் என்பதை அறிந்து கொள்வீராக! (அல்குர்ஆன் 13:28)

இன்றைய நிலையில், மனிதனின் மன அமைதி கெடுவது தான் ஏராளமாக குற்றங்களுக்குக் காரணமாகி விடுகின்றது என்பது ஆய்வுகள் கூறும் உண்மையாகும். எனவே, மனிதன் தனக்கு இடர்கள், துன்பங்கள் நேரும் பொழுது, தன்னுடைய இயலாமையை, பாதுகாப்பில்லாத தன்மையை, உதவிக்கு என்று சரியானதொரு நிலை இல்லாமையைக் குறித்து ஏங்காமல், அதற்கு வடிகாலாக குற்றச் செயல்களில் ஈடுபடால், இறைவனை அந்த கன நேரத்தில் துதி செய்வதன் மூலம், அவனுக்குத் தேவைப்படும் மன அமைதி, உதவி ஆகிய அனைத்தையும், ஒருங்கே பெற்றுக் கொள்ளலாம். துதி செய்வத என்பது மணிகளை உருட்டிக் கொண்டு தியானத்தில் இருப்பதன்று. மாறாக, இறைமறையின் வழிகாட்டலை அந்த சமயத்தில் நினைவு கூர்வது, என்பதன் மூலம் மன அமைதி பெறுவதாகும்.

உதாரணமாக, மது அருந்துபவர்களிடம் நீங்கள் ஏன் குடிக்கிறீர்கள்? எனக் கேடடால், அவர்கள் தவறாது சொல்லும் காரணம் எதுவென்றால், வீட்டில் பிரச்னை,அலுவலகத்தில் பிரச்னை, அதனால் எழுந்த மனக் குழப்பத்தையும், உடல் சோர்வையும் போக்கிக் கொள்ளத் தான் குடிக்கின்றேன் என்பார்கள்.

ஆனால் இவ்வாறு அவர் குடிப்பதற்கு முன் எனதிறைவன் மது அருந்தவதைத் தடை செய்திருக்கின்றான் என்ற இறைமறை வசனத்தை நினைவு கூர்வதன் மூலம், அவரது செயலிலிருந்து விடுபட்டுக் கொள்வதோடு, அவனது ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுகிறது.

மனிதன் தன்னைத் தனித்துப் பிரித்து வாழும் போது தான் மேற்கொண்ட மனநிலை, உடல்நிலைச் சோர்வுகளுக்கு உடனடியாக ஆட்பட்டு விடுகின்றான். ஆனால், இஸ்லாமானது, மனிதனை தனிப்பட்டவனாக அவனளவில் வாழ அனுமதிப்பதில்லை.

இஸ்லாமிய அமைப்பும் அதன் சமுதாய வாழ்வும் சகோதரத்துவத்தின் கீழ் கட்டப்பட்டதொரு தொகுப்பாகும். இதைப் பற்றி எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் குறிப்பிடும் பொழுது,

இந்த முஸ்லிம் சமுதாயமானது (உம்மத்) ஒரு உடல் போன்றது. அந்த உடலின் ஏதாவது ஒரு பாகம் நோயுறுமானால், முழு உடலும் அதன் வலியை உணர்வது போல, இந்த இஸ்லாமிய உம்மத்தில் ஏதாவது ஒரு முஸ்லிமிற்கு ஏற்படும் துன்பம், அது அனைத்து முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட துன்பமாகும் என்றார்கள். (புகாரி)

எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் தன் சக முஸ்லிமுடைய நலத்தில் அக்கறை கொள்ள வேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு முஸ்லிமும் தான் தனிமையில் வாழ்பவன், உதவியற்றவன் என்ற மனோபாவம் கொள்வதை அடியோடு தடை செய்கிறது. இதன் மூலம் இஸ்லாமிய சமுதாயமானது உடல் அளவில் மன அளவில் ஆரோக்கியமான சமுதாயமாக திகழ முடிகின்றது.

அதே போல உடல் இச்சைகள் என்பது மனிதனுக்கும், ஏனைய ஜீவராசிகளுக்கும் இறைவன் பொதுவாக இயற்கையானதொரு செயலாகப் படைத்துள்ளான். விலங்குகளைப் பொறுத்தவரை, அவைகளது உடல் இச்சைகளைப் பொறுத்து, அவற்றைத் தனித்துக் கொள்ள எந்த வரையறையும் வகுக்கப்படாதவை. அதேபோல, அவற்றினிடையே உடல் இச்சைகள் ஏற்படுவது என்பது காலநிலைகளை (Season) ப் பொறுத்து அமைகின்றன.

ஆனால், மனிதன் விலங்கிலிருந்து வேறுபட்டவன். மனிதனுக்கென்றே தனியான பிரத்யேகமான உடல் உறவுச் சட்டங்கள் இறைவனால் வகுத்தளிக்கப்பட்டுள்ளன. அதேபோல, உடல் இச்சைக்கான உந்துதல்கள் எல்லா காலநிலைகளிலும், எந்த நேரத்திலும் எழக் கூடிய நிலையில் மனிதனின் இயற்கை அமைப்பு உள்ளது. மேலும் மனிதன் தன்னுடைய உடல் இச்சைகளை திருமண பந்தத்தின் மூலம் மட்டுமே தீர்த்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளான். அதன் மூலம் மட்டுமே குழந்தைப் பேற்றை அவன் அடைந்து கொள் வேண்டும். மேலும், அந்த மண வாழ்வு, ஒருத்திக்கு ஒருவன் என்ற கோட்பாட்டின்படி அமைய வேண்டும்.

இந்த திருமண பந்தத்தின் மூலம் விளையும் சமுதாயம்தான், ஒரு அமைதியான சமூக வாழ்வுக்கு அடித்தளமாக அமையும்.

அதேபோல குடும்பத்தில் கணவனுக்கென்று சில பொறுப்புகளும், மனைவிக்கென்று சில பொறுப்புகளும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. கணவன் வாழ்க்கைக்கு வேண்டிய வாழ்வாதாரம் வசதி போன்றவற்றிற்கு தொழில் செய்து பொருளாதாரம் திரட்டவும், மனைவியானவள் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் வேண்டிய பணிவிடைகள், குடும்பப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு போன்ற பணிகளில் ஈடுபடுதல், என அவரவர்க்கு எற்ற பணிகளை மனநிலை, உடல்நிலை தகுதிகளைக் கொண்டு இஸ்லாம் பிரித்துத் தந்துள்ளது.

இதன்மூலம், தொழில் மற்றும் வேலையின் காரணமாக துவண்டு வரும் கணவனை, இன்முகத்துடன் வீட்டில் இருக்கும் மனைவி வரவேற்று உபசரிப்பு வழங்குவானானால், அவன் ஏன் குடியையும், தன்னுடைய இச்சையைத் தீர்த்துக் கொள்ள விபச்சாரத்தையும் நாட வேண்டும்?! கணவன் மனைவியைக் குறிப்பறிந்தும் மனைவி கணவனுடைய குறிப்பறிந்தும் நடப்பார்களானால், குடும்பம் என்பது அமைதிப் பூங்காவாகத் திகழும்.

மேற்கண்ட செயல்முறைகளைக் கொண்ட குடும்ப அமைப்பு சிதறியதன் காரணமாகவும், அத்தகைய சமுதாய வாழ்வு சிறக்க வழி வகுக்கப்படாததன் காரணமாகத் தான் இன்றைய மேலைநாடுகள் முன்னர் நாம் பார்த்த சீரழிவுகளை அடைந்து கொண்டிருக்கின்றன.

### 7. திருமணமும் அதன் நோக்கமும் :

திருமணமும் அதன் தூய நோக்கமும் இன்றைய மேலைநாட்டுச் சமுதாயத்தில் உணரப்படாமலேயே இருக்கின்றது. ஆனால் இஸ்லாம் திருமணம் பற்றிய தனது கொள்கையில் உயர்ந்த நிலையைக் கொண்டுள்ளது. மேலும், திருமணம் என்ற பந்தத்தைத் தவிர்த்து குடும்பக்கட்டுப்பாடு அல்லது

கருத்தடை பற்றிச் சிந்திக்க இயலாது. எனவே, திருமணத்தின் உண்மையான தூய நோக்கத்தை அறிவதன் மூலம், குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தின் நிலை பற்றி நாம் ஒரு முடிவுக்கு வர இயலும்.

இறைவன் இயற்கையாகவே எல்லா உயிர்களிடத்திலும் பாலியல் உணர்ச்சிகளை ஏற்படுத்தி இருக்கின்றான். மனிதன் தனது சமுதாய வாழ்வில் தனது பாலியல் உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கொள்ள, அவற்றின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள திருமணம் என்ற பந்தத்தைக் கடைபிடித்துக் கொள்ளுமாறு, இறைவன் ஆதி பிதா ஆதம் (அலை) முதல் நமக்குக் கற்றுத் தந்த வழிமுறையாகும்.

திருமணம் என்ற இந்த பந்தம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்டு விட்ட பிறகு, இது வரை அவர்களுக்கிடையே இருந்த பாலியல் தடைகள் விலக்கப்படுகின்றன. இது வரை அவர்கள் இருவருக்கும் இடையே குற்றமாகக் கருதப்பட்ட ஒரு செயல், திருமண பந்தத்திற்குப் பின் சட்டப்படி அனுமதியளிக்கப்பட்ட செயலாக மாறி விடுகின்றது. இதையடுத்து, திருமண பந்தம் மூலம் இணைந்த இருவரும், தங்களது பாலியல் உணர்ச்சிகளை, தாங்கள் அல்லாத மூன்றாவது நபரிடத்திலே வைத்துக் கொள்வதும், இத் திருமண நடைமுறை மூலம் தடை செய்யப்படுகின்றது. (திருமணத்திற்கு முன்னால் பிறரிடத்தில் பாலியல் உறவு வைத்துக் கொள்வது இஸ்லாத்தில் தண்டனைக்குரிய செயலாகும்).

எனவே, தம்பதிகள் இருவரும் சமுதாயம் என்னும் அமைப்பில் கணவன்-மனைவி என்ற பந்தத்தில் குடும்பமாகி, தமது இல்லற வாழ்வின் பயனாக, தம் உணர்வுகளை ஆகுமான வழியில் வைத்துக் கொண்டவர்களாகவும், அந்த இணைப்பின் பயனாக தம் சந்ததிகளைப் பெருக்கி, மனிதன் என்ற உயிரி, இந்த உலகம் உள்ள காலம் வரை தம் இனத்தை இப் பூவுலகில் நிலை நிறுத்துவதற்குண்டான இறை ஏற்பாடாக இந்தத் திருமண பந்தம் திகழ்கின்றது.

இங்கே குடும்பக்கட்டுப்பாடு அல்லது கருத்தடை என்பது, அந்த இறை ஏற்பாட்டை உதாசினம் செய்து, தம் மழலைகளில் எண்ணிக்கையை ஒரு வரையறைக்குள் வைத்துக் கொள்ள மனிதன் கண்டுபிடித்த ஏற்பாடாகும்.

உங்களில் வாழ்க்கைத் துணை இல்லாதவருக்கும் (அவ்வாறே, வாழ்க்கைத் துணைவரில்லாத) உங்களுடைய ஆண் அடிமைகள், இன்னும் அடிமைப் பெண்களிலிருந்து நல்லொழுக்கமுள்ளவர்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள். (திருமறைக் குர்ஆன் 24:32)

இதன் மூலம் திருமணம் என்ற பந்தத்தை அனைவர் மீதும் இறைவன் கடமையாக்கி வைத்துள்ளான் என்பதையும், இஸ்லாத்தில் துறவறம் இல்லை என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இதையே, நபி (ஸல்) அவர்கள், ஒருவன் அல்லது ஒருத்தி திருமணம் செய்து கொள்வாராகில், அவன் அல்லது அவள் என்னுடைய நடைமுறையைப் பேணியவர்களாவார்கள். (புகாரி)

மேலும், இறைப்பிரதிநிதியாகிய இந்த மனிதன், திருமணம் என்ற பந்தம் மூலம், இறைவன் அவனுக்கு வழங்கிய, மனித உற்பத்தி எனும் தன்மை மூலம், இப் பூவுலகை உயிரோட்டமுள்ள களமாக நிலைத்திருக்கச் செய்ய விரும்புகின்றான். அத்தகைய உயிரோட்டமுள்ள களத்திற்கு, ஆரோக்கியமான மனித உற்பத்தியை சமூகம் பெற்றிருப்பது அவசியமாகின்றது.

மேலும், திருமணம் என்பது இரு உடல்கள் இணைந்து தம் இச்சையைத் தணித்துக் கொள்ளும் செயல்பாடு மட்டும் அல்ல. மாறாக, திருமணத்தின் மூலம் இறைச்சட்டம் காட்டிய வழியில் தம் உணர்வுகளை பங்கிட்டுக் கொண்டவர்களாகவும் ஆகி விடுகின்றார்கள். மேலும், திருமணம் என்ற செயல்பாடு மழலைகளின் வரவினால் மட்டுமே பூரணத்துவம் அடைகின்றது. அந்தப் பூரணத்துவத்திற்கு எதிரிடையான ஒன்று தான் குடும்பக்கட்டுப்பாடு அல்லது கருத்தடை ஆகும்.

## 8. பொருளாதார நோக்கம்?

இன்றைய நாகரீக உலகில் குடும்பக் கட்டுப்பாடு என்பது மருத்துவ நோக்கில் அல்லாமல், சமூகப் பொருளாதாரம் மற்றும் நாகரீகம் என்ற போர்வையில் அமைந் மேற்கத்திய காலச்சாரத்தின் பின்னணிகள் தான், குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தையும், அதற்குத் துணையாக அதன் சாதனங்களையும் பயன்படுத்த வேண்டும் என்ற மனநிலையை மக்கள் மனதில் ஏற்படுத்தின. இந்த மேலை நாட்டுக் கலாச்சாரமும், அவர்களது பார்வைகளும், எண்ணங்களும் குடும்ப அமைப்பில் பெற்றோர் எனும் தகுதியானது தம் மீது தேவையில்லாத பொறுப்புகளைச் சுமத்தக் கூடியது என்ற மனநிலையைத் தோற்றுவித்ததும் ஒரு காரணமுமாகும்.

மனிதனது வாழ்க்கை என்பது பலதரப்பட்ட பிரச்னைகளும், இடர்பாடுகளும் நிறைந்த ஒன்று. மனிதனது வாழ்வில் ஏற்படும் இந்த இடர்பாடுகளை எதிர்த்து நின்று வாழ மனிதன் துணிவு பெறுவதை விட்டு, தனது சலன புத்தி மற்றும் சுயநலம் காரணமாக அதனினின்றும் ஒதுங்கி, என்றும் எப்பொழுதும் தன் சுயநலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, மனிதன் என்ற நிலையில் தனக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்ற மனமில்லாமல், அத்தகைய பொறுப்புகளில் இருந்து தவிர்ந்து வாழ, இயற்கைச் சட்டத்தில், இறைவனது நியதியில் கை வைக்க ஆரம்பித்து விட்டான். மனிதனது இத்தகைய செயல்கள் இறை நியதியை எதிர்த்து போர் தொடுப்பதற்குச் சமமாகும். இத்தகைய செயல்களினால் இன்றைய மனித இனம், அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை ஜப்பான், சீனா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வளர்ந்த நாடுகளில் குழந்தைகளின் பிறப்பு வெகுவாகக் குறைந்து விட்டதன் காரணமாக, வயது முதிர்ந்தோர்களின் எண்ணிக்கை உயர்ந்து, இளையதலைமுறையினருக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதன் காரணமாகத் தங்களது திட்டத்தை தாங்களே நொந்து கொண்டு, மீண்டும் மழலைகளை அதிகம் பெற்றுக் கொள்ளுமாறு மக்களைத் தூண்டி வருகின்றது. ஆனால், பிள்ளை பெறுவதையே வெறுத்து விட்ட அந்த மேலை நாட்டுச் சமூகம், அரசாங்கத்தின் வேண்டுகொளை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை விட்டும் வெகு தூரத்திற்குச் சென்று விட்டதை அந்த நாடுகளின் நடக்கின்ற நடப்புகள் தெரிவிக்கின்றன.

இன்று நம் நாட்டைப் பொறுத்தவரை, குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை, பொருளாதார நோக்கில் தான் கடைபிடிக்கப்படுகின்றது. அதிகம் பிள்ளை பெற்றால், குடும்பச் செலவு அதிகரிக்கும், சொத்துப் பங்கீடு அதிகமாகும் என்பது போன்ற காரணங்களும், அதிகம் பிள்ளை பெற்றால் அன்னை உடல்நலத்திற்குக் கேடு என்பன போன்ற வாசகங்களும் தான், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஆதரிக்க மக்களைத் தூண்டுகின்றது. ஆனால் அன்னையின் உடல்நலத்திற்குக் கேடு என்று சொல்லக் கூடியவர்கள், மருத்துவ வசதியே அல்லாத அந்த முந்தைய காலங்களில் வாழ்ந்த மக்கள் எவ்வாறு தங்களது சந்ததிகளைப் பெருக்கிக் கொள்ள முடிந்தது. இயந்திரங்களும், வாகனங்களும் இல்லாத அந்த காலத்து மக்கள் எவ்வாறு தங்களது வாழ்க்கையை நடத்தினார்கள் என்பதையும் இந்த சமூகம் சிந்தித்துப் பார்ப்பது நல்லது. பொருளாதார நோக்கில் பார்த்தால், இறைவன் கூறுகின்றான் :

வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள் (6:151)

அவர்களை கொலை செய்வது பாவமாகும். (17:31)

மனிதர்களே, உங்களது பொருளாதாரம் பாதிக்கப்படும், வறுமை நிலைக்குத் தள்ளப்படுவோம் எனப் பயந்து தங்கள் குழந்தைப் பேற்றைக் குறைத்துக் கொள்ளாதீர்கள். ஏனென்றால், உங்களுக்கும், உங்களைப் போன்ற அனைவருக்கும் உணவு புகட்டக் கூடியவன், வாழ்வாதாரம் வழங்கக் கூடியவன் நான் என்கின்றான் இறைவன். ஒரு தாய்ப் பறவையானது தன் குஞ்சுகளின் மேல் எவ்வளவு அக்ககறை கொண்டு உணவு தேடி அதற்குப் புகட்டுகின்றது. இறைவன் தன்னுடைய தகுதிகளை நம் முன் வந்து

காண்பிக்க வேண்டும் என்பதில்லை. புறவையினங்களும், விலங்கினங்களும் தங்களது சந்ததிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்புடன் இடைவிடாது உணவுக்கும், இருப்பிடத்திற்குமுண்டான போட்டியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் மனிதனோ அத்தகைய முயற்சிகளைச் செய்யாமல், சோம்பேறித்தனமாக, பிரச்னைகளிலிருந்து ஒதுங்கி வாழவே ஆசைப்படுகின்றான்.

மனிதனும் ஏனைய ஜீவராசிகளும் வாழ்வதற்கென்றே படைக்கப்பட்ட இந்த பூமயில், வாழ்வாதாரம் இன்றி வெறுமனே அத்தனை உயிரிகளையும் படைத்து உலவ விடவில்லை. ஆவைஅவைகளுக்குரிய ஏற்பாட்டையும் செய்தே வைத்திருக்கின்றான்.

வானங்களிலிருந்து மழை நீரை இறக்கி, அதன் மூலம் இறந்து கிடந்த பூமியை புற்களாலும், செடிகளாலும் உயிர்ப்பிக்கச்செய்கின்றோம். ஆடு மாடு விலங்கினங்களிலும், உங்களுக்கு படிப்பினை உண்டு. ஏனெனில் அவற்றில் உங்களுக்கு (பால்) குடிப்பும் உண்டு. கனி வர்க்கங்களை தரக் கூடிய பேரீச்சை, திராட்சை, ஸைத்தூன் இன்னும் பலவகைக் கனிகளிலிருந்து அவன் உங்களுக்காக முளைப்பிக்கச் செய்கின்றான். இன்னும் இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான். (அவ்வாறே) நட்சத்திரங்களும் அவனுடைய கட்டளைப்படியே வசப்படுத்தப்பட்டுள்ளன. நிச்சயமாக இதிலும், நினைவு கூறக் கூடிய கூட்டத்தாருக்கு (தகுந்த) அத்தாட்சிகள் இருக்கின்றன. (திருமறைக்குர்ஆன்).

ஆக, இத்தனை வாழ்வாதாரமும் மனிதன் என்ற தன் உயர் படைப்புக்காக, இறைவன் ஏற்படுத்தி இருக்கும் ஏற்பாடுகள் ஆகும். மனிதனோ அவற்றைத் தன் பயன்பாட்டில் கொண்டு வருவதற்குரிய முயற்சிகளைச் செய்யத் தவறி, அதன் பொறுப்புகளிலிருந்து தவிர்ந்து தான், நான் என்ற சுயநல மனிதனாக வாழ ஆசைப்பட்டதன் விளைவு தான் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களும், அதன் மூலம் எழுந்த பிரச்னைகளும் ஆகும். பிரச்னை எனத் தெரிந்த பின்னும் மனிதன் இறை நியதியை தேடிப் பிடித்து தன் வாழ்வில் கடைபிடிக்க முயற்சி செய்கிறானா இல்லையே!! ஏனெனில் அவன் கடைபிடிக்கும் மேற்கத்தியக் கலாச்சாரம் கொள்கைகள் யாவும் பொருளாதார நோக்கு கொண்டவை. அங்கே மனிதனது மனத்தைத் திருத்தும் ஆன்மீகத்திற்கு வேலை கிடையாது. முனிதனின் வாழ்வு முழுமையடைய வேண்டுமெனில், அங்கே அவனது வாழ்வில் ஆன்மீகம் நிலைபெற்றிருக்க வேண்டும். அந்த ஆன்மீகம் இஸ்லாத்தின்பாற்பட்டதான இருந்து விட்டால், அவன் இவ்வுலகில் முழு திருப்தி பெறுவதோடு, இறப்பிற்குப் பின் உள்ள மறுமையிலும் வெற்றியடையும்நிலைக்கு உயர்த்தப்பட்டு விடுகின்றான்.

மேலும், இஸ்லாமிய அமைப்பில் ஜகாத் என்ற சமுதாய வரி, வசதி படைத்த அனைவர் மீதும் கடமையானதொன்றாக இருந்து வருகின்றது. இதனால் பொருளாதாரம இன்றி அல்லல்படும் ஏழைகளும், முதியோர்களும், நோயாளிகளும் உதவி பெறுவர்.

மேலும், பொருளாதார பயத்தால் மழலைகளைக் குறைக்க வேண்டிய அவசியமும் இத்தகு நிலை கொண்ட சமுதாயத்திற்குக் கிடையாது. ஏனெனில், தந்தையால் இயலாத நிலையில், குழந்தைகளுக்கான பொறுப்பு அரசின் மீது சார்ந்து விடுகின்றது. அக்குழந்தைக்கான உணவு, இருப்பிடம், கல்வி, மருத்துவம் போன்ற அனைத்தும் அரசால் அத்தகைய ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்ற உத்தரவாதமும் இருக்கின்றது.

நமது நாட்டில் பிரதமர், முதல்வர் நிவாரண நிதி உண்டே எனலாம். புாரளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு செலவு செய்யப்படும் அதே அளவு உதவி, சாதாரண அடித்தட்டு மக்களுக்கு செய்யப்படுகின்றதா? இல்லையே!!

ஆக, பொருளாதார பயத்தால் மழலைகளைக் குறைப்பது என்பது, இறைவனது அருட்கொடையில் சந்தேகம் கொண்ட நிலையைத் தான் தோற்றுவிக்கும். அத்தகைய பொருளாதாரப் பயம் இஸ்லாம் அல்லாத சமூகத்தில் தான் ஏற்படும். ஏனெனில் அங்கே சமுதாய அமைப்பு என்பது இஸ்லாத்தின் கொள்கையின்பால் கட்டப்படவில்லை. உலகாதாய அடிப்படையில் அமைந்த கொள்கையின் பால் அமைந்ததாகும். ஏனவே தான் இத்தகைய சமுதாயங்கள் தம் வாழ்வில் சீரழிவை மட்டுமே நித்தம் நித்தம் சந்தித்துக் கொண்டு, நிம்மதியை இழந்து தவிக்கின்றன.

## 9. இஸ்லாமிய குடும்பக் கட்டுப்பாட்டு முறை

### திருமறை என்ன சொல்கின்றது :-

குடும்பக்கட்டுப்பாபட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், இன்று நடைமுறையில் உள்ள கருத்தடை முறைகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றித் தான் நடைமுறைப்படுத்த முடியும். இங்கே எந்த நிலையில் இஸ்லாம் கருத்தடையை ஆதரிக்கின்றது என்றும், மேலும் எந்த நிலையில் இத் திட்டத்தோடு முரண்படுகின்றது என்பதையும், அதன் காரணங்களையும் காண்போம்.

திருமறைக் குர்ஆனில் வரும் இரண்டு வசனங்களைப் பொதுவாகச் சுட்டிக் காட்டி, இறைவன் குடும்பக் கட்டுபாட்டுத் திட்ட நடைமுறையைத் தடை செய்துள்ளான் என சில மார்க்க அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அந்த வசனங்களாவன :

.. .. .. வறுமைக்காக (அதைப் பயந்து) உங்கள் குழந்தைகளை நீங்கள் கொலை செய்தும் விடாதீர்கள்.. (6:151).

(மனிதர்களே!) நீங்கள் வறுமையைப் பயந்து, உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். ஆவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கைத் தேவைகளை) வழங்குகின்றோம். நிச்சயமாக அவர்களைக் கொலை செய்வது, பெரும் குற்றமாக இருக்கின்றது. (17:31).

மேற்கண்ட இரண்டு வசனங்களும் வறுமைக்குப் பயந்து, பொருளாதார பாதிப்பு ஏற்பட்டு விடும் எனப் பயந்து குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் என்ற கருத்தைத் தாங்கி நிற்கின்றது.

மேலும் மேற்கண்ட இரண்டு வசனங்களுக்கும் சில அறிஞர்கள் மேலதிக விளக்கங்கள் கூறும் போது, பொருளாதராம் பாதிக்கப்படும் என்று கருதி தங்களின் மகப்பேற்றைத் தடுத்துக் கொள்வது என்பது, சிசுக் கொலைக்கு நிகரானதே என்ற கருத்தைத் தெரிவிக்கின்றார்கள்.

ஆனால் மேற்கண்ட வசனத்தின் மூலம் அத்தகையதொரு பொருளை நாம் பெற்றுக் கொண்டாலும், அன்றைய அரேபியாவின் மூடப் பழக்கமாக இருந்த உயிருடன் பெண் குழந்தைகளைப் புதைக்கும் பழக்கத்தைத் தடுத்து நிறுத்தவே இறைவனால் இவ்வசனம் அருளப்பட்டது என்பது தெளிவு. மேலும் இன்றும் இப்பழக்கம் நம் நாட்டிலும் தொடர்ந்து வருகின்றது.

ஏனவே. இவ்வசனம், பொதுவாக அன்றைய மூடப்பழக்கவழக்கத்தைத் தான் தடை செய்ய இறங்கியதே ஒழிய, இன்றைய நடைமுறையான ஒட்டு மொத்தமாக மகப்பேற்றைத் தடை செய்வதற்கு பயன்படும், கருத்தடைக்கான தடைக்கு ஆதரவாக நாம் எடுத்துக் கொள்ள இயலாது இருக்கின்றது.

இங்கே கருத்தடை சாதனங்களின் பயன்பாடு என்பது சிசுக் கொலைக்கு மாற்றமான செயல்பாட்டை உடையது. ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டியுள்ள இரண்டு வசனங்களின்படி, சிசுக் கொலை என்பது ஏற்கனவே கருவாகி, பூமியில் உயிருடன் பிறந்து விட்ட குழந்தையைக் கொல்வதாகும். ஆனால் குடும்பக்கட்டுப்பாடு மற்றும் கருத்தடை சாதனங்களின் பயன்பாடு என்பது, பெண்ணின் முட்டையும்,

ஆணின் விந்தணுவும் இணையும் முன்பே தடையை ஏற்படுத்தி, ஒரு உயிரி அல்லது சிசு வளரும் முன்பே தடை செய்யப்படுகின்றது. ஆக, மேற்கண்ட இந்த செயல்பாடு சிசுக் கொலை எனில், உடலுறவின் பொழுது வெளியேற்றப்படும் மில்லியன் கணக்கான விந்தணுவில், ஒரே ஒர விந்து தான் சினை முட்டையை கருத்தரிக்கச் செய்ய உதவுகிறது. மீதம் உள்ள அனைத்து விந்தணுவும் செத்து விடுகின்றது. இங்கே, செத்த விந்தணுக்களும் கருமுட்டையை சினைப்படுத்தத் தகுதி படைத்தவையே எனும் போது, செத்து விட்ட விந்தணுக்களின் காரணமாக, இயற்கையால் விளைந்த இந்த செயல்பாட்டை சிசுக் கொலை என்று முடிவு கட்டமுடியுமா? ஏனெனில், இறந்து விட்ட அத்தனை விந்கனுக்களும், இறந்து விட்ட குழந்தைகள் அல்லவா?

எனவே, மேற்கண்ட இரண்டு வசனங்களின் அடிப்படையில் குடும்பக்கட்டுபாடும் அதன் சாதனங்களும் தடை செய்யப்பட்டவையே என்ற முடிவுக்கு வர இயலாததாகி விடுகின்றது

இரண்டாவதாக, திருமறையின் மூலம் எடுத்துக் கொண்ட கருத்து விளக்கங்களும், இயற்கையானதொருகருத்ததடை முறையைக் காண முடிகின்றது.

தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு (அவை பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டுவாாகள். (2:233).

மேற்கண்ட வசனம் மூலம், குழந்தைகளுக்கு இரண்டு முழு வருடம் பாலூட்டுவது - இரண்டு முழு வருடம் பாலூட்டுமாறு தாய்மார்களுக்கு இறைவன் அறிவுறுத்துகின்றான்.

மேலும், ஒரு பெண்ணுக்கு மகப்பேற்றுக் காலம் என்பது ஒன்பது முதல் பத்து மாதங்கள் ஆகும். குழந்தை பிற்நததை அடுத்து பாலூட்டும் காலம் இரண்டு வருடங்கள் (24 மாதங்கள்) ஆகும். ஆக மகப்பேறு மற்றும் பாலூட்டும் காலம் மொத்தம் 33-34 மாதங்கள் அல்லது சற்றேறக்குறைய மூன்று வருடங்கள் எனக் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆக ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் இடையே, மூன்றாண்டுகள் இடைவெளி இருக்கட்டும் என்ற மருத்துவ உலகில் அறிவுரைக்கேற்ப இறை வழிகாட்டுதல் அமைந்துள்ளது. இதுவே இயற்கையானதொரு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமாகவும் அமைந்துள்ளது. மேலும், சில மருத்துவக் குறிப்புகளின் படி, பெண்ணின் உடலியல் கூற்றுப்படி, குழந்தைகளுக்கு பாலூட்டும் காலங்களின்போது, கருவுறுதலுக்கான வாய்ப்பு என்பது மிகவும் குறைவான சந்தர்ப்பங்களில் தான் நிகழுகின்றது.

ஏனவே, மேற்கண்ட முறையின் மூலம் இறைமறையானது, இயற்கையானதொரு வழிமுறை மூலம், இயற்கையானதொரு கருத்தடை முறைக்கு வாய்ப்புக் கொடுக்கின்றது எனலாம். ஆக, மேற்கண்ட இரு விளக்கங்களும் கருத்தடைக்கு, அது சம்பந்தமான விளக்கத்திற்கு குர்ஆனின்ஆாரங்களாக இருந்தாலும், இறைவன் தன் திருமறையில் நேரடியானதொரு தடையை கருத்தடைக்கு எதிராகப் பிறப்பிக்கவில்லை.

மாறாக,

உங்கள் மனைவியர் உங்களுக்குரிய விளை நிலங்கள். ஆகவே, உங்கள் விளை நிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு வாருங்கள். (2:223). (தொடரும்.. இன்ஷா அல்லாஹ்)

உங்கள் மனைவியர் உங்களுக்குரிய விளை நிலங்கள். ஆகவே, உங்கள் விளை நிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு வாருங்கள். (2:223). என்றல்லவா திருமறை கூறி நிற்கின்றது.

மேலும், இந்த வசனத்திற்கு ஹனபி மத்ஹபின் இமாமான அபுபக்கர் அல் ஜஸ்ஸாஸ் என்பவர் விளக்கமளிக்கும் பொழுது, உங்கள் மனைவியரிடம் எவ்வாறு விரும்பியவாறு செல்கிறீர்களோ, அது போலவே நீங்கள் விரும்பினால் அஸ்ல் செய்து கொள்ளவும் உரிமை இருக்கிறது என்று கூறுகின்றார்.

ஆக, பாலூட்டுதல் பற்றியும், மனைவியுடன் கூடுதல் பற்றியும் கூறும் திருமறை, கருத்தடை பற்றி நேரடியான தடையைப் பிறப்பிக்காமல், அமைதியைத் தான் பதிலாகத் தருகின்றது. எனவே, திருமறையை அடுத்து, நாம் விளக்கம் பெற வேண்டிய வழி முறையான திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்வியல் (ஹதீஸ்) தொகுப்புகளை ஆராய்வது சிறந்ததாகும்.

மேற்கண்ட ஆய்வுக்கு முன் ஒரு செயலை ஆகுமானதா இல்லையா என எவ்வாறு தரம்பிரிப்பது என்பதையும், மார்க்க அறிஞர்களான இமாம்கள் எவ்வாறு தரம்பிரித்து வகைப்படுத்தியுள்ளனர் என்பதையும் அறிந்து கொள்வது, நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தவல்லது.

ஹலால் - ஆகுமானது, எந்தத் தடையும் இல்லாதது

மன்துப் - ஆகுமானது, பொதுவான அனுமதியைப் பெற்றது

முபாஃ - அனுமதியளிக்கப்பட்டது. ஆனால் அவற்றைச் செய்ய ஊக்குவிக்கப்படவும் இல்லை,

செய்ய வேண்டாம் என்ற தடையும் இல்லை

மக்ரூஹ் - பொதுவாக விரும்பத்தகாதது, வெறுக்கத்தக்கது

ஹராம் - முழுவதுமாக சட்டப்படி தடை செய்யப்பட்டது. இயற்கைக்கு முரணானது.

மேற்கண்ட விளக்கங்களை மனதிற் கொண்டு, கீழ்க்காணும் விளக்கத்தில் தெளிவு பெறுவோம்.

## 2. நபிமொழி (ஹதீஸ்)கள் என்ன சொல்கின்றன

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திற்கு முன்பே, அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்கு முன்பே அரேபியாவிலும், அதனைச் சுற்றியிருக்கும் பாரசீகம், ரோம், ஆகிய நாடுகளிலும், அஸ்ல் என்ற குடும்பக்கட்டுப்பாட்டு முறை பின்பற்று வந்திப்பதை ஹதீஸ்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அஸ்ல் என்பது, உடலுறவின் உச்சத்தில் ஆணிலிருந்து வெளிப்படும் விந்தை பெண்ணின் உறுப்புக்குள் செலுத்தி விடாமல், பெண்ணின் உறுப்புக்கு வெளியே கொட்டி விடுவதாகும். அதாவது, இதனை மருத்துவ முறையில் Coitus Intereptus என்று கூறுவார்கள்.

இந்த அஸ்ல் பற்றி ஹதீஸ் தொகுப்புகளில் காணப்படும் விபரங்கள் பற்றி நாம் இப்பொழுது ஆய்வு செய்வோம்.

### ஹதீஸ் எண்: 01

ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

நாங்கள் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் குர்ஆன் இறங்கிக் கொண்டிருந்த சமயத்தில், அஸ்ல் செய்து கொண்டிருந்தோம். இந்தச் செய்தி நபி (ஸல்) அவர்களுக்கு தெரிந்தும் எங்களை அவர்கள் தடுக்கவில்லை.

### ஹதீஸ் எண்: 02

ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

எனக்கு ஒரு அடிமைப் பெண் இருக்கின்றாள், அவள் கர்ப்பம் அடைந்து விடுவாளோ என அஞ்சுகின்றேன் என்று நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள்,

நீ விரும்பினால் அஸ்ல் செய்து கொள்! ஆ (ஆனால்) அவளுக்கென்று விதிக்கப்பட்டது அவளை அடைந்தே தீரும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மது, அபூதாவூது).

## ஹதீஸ் எண்: 03

அபூ ஸயீத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

நபி (ஸல்) அவர்களிடம், யூதர்கள் அஸ்ல் செய்வதை ஒரு சிறிய அளவிலான சிசுக் கொலை என்கிறார்கள் எனக் கூறப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், அவ்வாறு அவர்கள் கூறுவது தவறானது, அல்லாஹ் எதையும் படைக்க நாடி விட்டானென்றால், அதிலிருந்து யாரும் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது.

மேலும், இந்த ஹதீஸ் கீழ்க்காணும் முறையிலும் சில நூல்களில் (இஸ்லாத்தில் தாம்பத்யம்) காணப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்களிடம் அஸ்ல் பற்றிக் கூறப்பட்டது. அப்போது நபி (ஸல்) அவர்கள், உங்களில் ஒருவர் எதற்காக இதைச் செய்கின்றார். படைக்கப்பட வேண்டிய எந்த உயிரையும் இறைவன் படைக்காமல் இருப்பதில்லை என்று கூறினார்கள். (திர்மிதி)

## ஹதீஸ் எண்: 04

உமர் இப்னு அல் கத்தாப் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

தன் மனைவியின் முன் அனுமதியின்றி ஒரு கணவன் அஸ்ல் செய்வதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.

## ஹதீஸ் எண்: 05

உஸாமா இப்னு ஸைத் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, நான் என் மனைவியிடமிருந்து அஸ்ல் செய்து வருகின்றேன் என்றார். எதற்காக அஸ்ல் செய்கிறாய்? என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், என் குழந்தை விசயத்தில் நான் அஞ்சுகின்றேன் என்று அவர் கூறினார். (அதாவது, என் மனைவி முதல் குழந்தைக்குப் பாலூட்டும் சமயத்தில் மனைவியுடன் உறவு கொண்டு அவள் மீண்டும் கர்ப்பிணியானால், முதல் குழந்தைக்கு ஏதும் கேடு ஏற்படுமோ? என்று அவர் அஞ்சினார்). அப்போது நபி (ஸல்) அவர்கள், இது ஏதும் கேடு தரும் என்றால், ரோம், பாரசீக மக்களுக்குக் கேடு செய்திருக்குமே?! என்று கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மது).

இதற்கு முன் நாம் கண்ட ஐந்து ஹதீஸு களிலும் அஸ்ல் செய்வதற்குண்டான தடையை நாம் காண முடியவில்லை. மேலும், நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே அவர்கள் நன்றாக அறிந்திருந்த நிலையிலேயே அஸ்ல் செய்வது நடைமுறையில் இருந்தும், நபி (ஸல்) அவர்கள் அஸ்ல் செய்வதைத் தடை செய்யவில்லை.

ஹதீஸ் எண் 4 ன் படி ஒருவர் தன் மனைவியிடம் அனுமதி பெற்று அஸ்ல் செய்ய அனுமதி எனும் நிபந்தனையின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஹதீஸ் எண் 2 ன் படி, ஒருவர் அஸ்ல் செய்தாலும், இறைவன் தன்னுடைய படைப்பை உருவாக்குவதற்கு, அந்தத் தம்பதிகள் மூலம் நாடி விட்டானென்றால், அதை யாராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது என்ற இறைவனது படைப்பின் வல்லமையைக் கூறி நிற்கிறது.

ஹதீஸ் எண் 5 ல் ஒருவர் தன் முதல் குழந்தையின் பால்குடி நேரத்தில், தன் மனைவியிடம் உறவு கொள்வதால், தன் மனைவியிடம் தாய்ப்பால் வற்றி முதல் குழந்தை பாதிப்புக்குள்ளாகுமோ எனப் பயந்து அஸ்ல் செய்கின்றேன் எனச் சொல்லியும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரூம், பாரசீக மக்களை உதாரணம் காட்டி, அஸ்ல் செய்யாமல் இருந்தாலும் பாதிப்பு வராது எனக் கூறுகின்றார்களோ ஒழிய, அஸ்ல் செய்வதே கூடாது எனத் தடை செய்யவில்லை.

மேற்கண்ட 5 வது ஹதீஸையும், கீழ்க்காணும் இந்த ஹதீஸையும் கூறி சில உலமாப் பெருந்தகைகள் அஸ்ல் செய்வது கூடாது என்கின்றார்கள்.

### ஹதீஸ் எண் : 6

ஜு தாமா பின்த் வஹ்ப் (ரலி) அறிவிக்கின்றார்கள் :

நபி (ஸல்) அவர்கள் ஒரு குழுவினருடன் அமர்ந்திருக்கும் பொது நானும் இருந்தேன். அப்போது நபிகள் (ஸல்) அவர்கள், நான் கிலா (ஒரு பெண் தன் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் காலத்தில் தன் கணவனுடன் உடலுறவு கொள்ளல்) வைத் தடை செய்யலாமென்று இருந்தேன். ஆனால், ரூம், பாரசீக மக்களைக் கவனித்த பொழுது, அவர்களது குழந்தைக்கு ஏதும் தீங்கு நேரவில்லை. அதனால் கிலா வைத் தடை செய்யவில்லை என்றார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்களிடம் அஸ்ல் பற்றி வினவப்பட்டது, அது ஒரு சிறிய அளவிலான சிசுக் கொலை (குழந்தையை உயிருடன் புதைப்பதற்குச் சமமாகும் என சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது - Minor Infanticide) என்றார்கள்.

அஸ்ல் செய்வதே கூடாது எனக் கூறும் அறிஞர்கள், இந்த இரண்டு ஹதீஸ்களை (5,6) மேற்கோள் காட்டுகின்றார்கள்.

5 வது ஹதீஸானது, அஸ்ல் செய்யாமலிருந்தாலும் குழந்தைக்குப் பாதிப்பு வராது என்று கூறுவதன் மூலம், அஸ்ல் செய்வதை நபி (ஸல்) அவர்கள் மறைமுகமாகத் தடை செய்துள்ளார்கள் என்ற தோற்றத்தையும், அடுத்து ஹதீஸ் எண் 6 ல் அஸ்ல் செய்வது குழந்தையை உயிருடன் புதைப்பதற்குச் சமமானது அல்லது சிறிய அளவிலான சிசுக் கொலை என்று கூறுவதன் மூலம் இரண்டாவதாக ஒரு மறைமுகத் தடையையும் நாம் காண முடிகின்றது என்ற கருத்தை சில அறிஞர் பெருமக்கள் முன் வைக்கின்றார்கள்.

மேலும், 6 வது ஹதீஸ் பற்றி, இமாம் இப்னு ஹஜர் அவர்கள், ஸஹீஹ் புகாரி ஹதீஸ் நூலுக்கான அவரது புகழ்மிக்க விளக்க உரையான ஃபத்ஹு ல் பாரி - யில் கொடுத்துள்ள விளக்கத்தைப் பார்ப்போம்.

மேற்கண்ட 6 வது ஹதீஸை அறிவிக்கும் ஜு தாமா பின் வஹ்ப் என்பவர் பலவீனமானவர் என்கிறார்கள்.

ஏனெனில், நிறைய ஹதீஸ்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களுக்கு மாற்றமாக நடங்கள், எனக் கூறி இருக்கும் போது, ஹதீஸ் எண் 3 ல் யூதர்களின் நிலைப்பாட்டை மறுத்த நபி (ஸல்) அவர்கள், ஹதீஸ் எண் 6 ல் எவ்வாறு ஆமோதித்திருப்பார்கள் என்ற வாதத்தை முன் வைக்கின்றார்கள்.

(Ahmed Ali Bin Hager Al Asqalani, Fath Al Bari, Riyadh – Al Maktabah Al Salafiyyah, n.d) 9:309 – Abortion, Birth Control, and Surrogate Parenting By Abul Fadl Mohsin Ebrahim).

மேலும், ஜு தாமா என்பவர் பெயரில் வரும் ஹதீஸ்கள் ரத்து செய்யப்பட வேண்டியவை என்று மற்ற மார்க்க அறிஞர்களும் கூறுவதாக இப்னு ஹஜர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இப்னு ஹஸ்ம் அவர்களின் கூற்றுப்படி மேற்கண்ட 6 வது ஹதீஸானத, மேற்கண்ட முதல் மூன்று ஹதீஸ்களைத் தடை செய்வதாக உள்ளது என்று குறிப்பிடுவதாக இப்னு ஹஜர் அவர்கள் கூறுகின்றார்கள்.

மேலும் சிசுக் கொலை அல்லது குழந்தையை உயிருடன் புதைத்தல் என்பது எண்ணமும், அதனுடன் செயலும் சார்ந்தது. மேலும் அஸ்ல் என்பது எண்ணத்தைச் சார்ந்தது. அதாவது, அஸ்ல் செய்வதால் எந்த உயிரும் (சிசுவும்) கொல்லப்படுவதில்லை. மேலும், இதன் மூலம் இறைவனது படைப்பாகிய மூன்றாவது உயிர் எதுவும் பாதிக்கப்படுவதில்லை. எனவே, அந்த செயலின், அதாவது அஸ்ல் செய்வதன் எண்ணத்தை முன்னிட்டு, இதை ஒரு சிறிய சிசுக் கொலைக்கு ஒப்பானது என்ற முடிவுக்கு வர முடியுமே ஒழிய, சிசுக் கொலை தான் என அறுதியிட்டுக் கூற முடியாது.

மேலும் இமாம் கஸ்ஸாலி அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும் போது, மறைமுக ஷிர்க் (ஷிர்க் கபி) போல, இதுவும் ஒரு மக்ரூஹ் ஆன விசயமே ஆகும். ஆனால் சட்டப்படி தடை செய்யப்பட்ட ஒன்றல்ல என்கிறார்கள்.

(Abu Ahmed Muhammed Al Ghazali, Ihya Ul Ulum, (Cairo: Al Matba'ah al Azharriyah a Misiriyyah, 1302 AH) 2:52.

ஆக, அறிஞர் பெருமக்களின் கருத்துக்களுடன் நம் நிலைப்பாட்டையும் வைத்து நோக்கும் பொழுது, கீழ்க்காணும் முடிவுகள் கிடைக்கின்றன.

அஸ்லுக்கான மறைமுக அனுமதி

அஸ்ல் செய்வதை தடுப்பதற்கான மறைமுகத் தோற்றம்

அஸ்ல் என்பது குழந்தையை உயிருடன் புதைப்பதற்குச் சமம் அல்லது சிறிய அளவிலான சிசுக் கொலைக்குச் சமம்

மறைமுக ஷிர்க் போல, அஸ்ல் என்பது மக்ரூஹ் ஆன விசயம்.

மேலும் மேற்கண்ட நான்கு முடிவுகளில், சரியான ஹதீஸ் ஆதாரங்களின்படி அஸ்லுக்கான மறைமுக அனமதிக்குத் தான் அதிக தரம் உள்ளது. எனினும், மற்ற ஹதீஸ்களுடன் இணைத்தும், அறிஞர் பெருமக்களின் கருத்துக்களோடும் ஒப்பிட்டு நோக்குகையில், இஸ்லாம் நேரடியாக அஸ்ல் செய்வதைத் தடை செய்யவில்லை. அதுபோல ஆகுமானது என நேரடியாக அனுமதியைத் தராமல், மறைமுக அனுமதியைத் தான் தந்து நிற்கிறது.

மேலும், இது ஒரு சிறிய அளவிலான சிசுக் கொலை என்று வரும் போது, வெறுக்கத்தக்க மக்ரூஹ் நிலையில் உள்ளது. அடுத்து பெரும்பாலான அறிஞர்களின் கருத்தும், அஸ்ல் செய்வது மக்ரூஹ் என்றே அமைந்துள்ளது. அது போலவே நான்கு மத்ஹபுகளும் அஸ்ல் செய்வது மக்ரூஹ் என்றே தீர்மானித்துள்ளன.

இறுதியாக, பொதுவாக அஸ்ல் செய்வது கூடும் என்ற பொதுவான அனுமதியைப் பெற்றிருந்தாலும், அதை செய்வது அவ்வளவு நல்லதல்ல என்ற முடிவுக்கே நம்மால் வர இயலுகின்றது.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

## 10. அஸ்ல் பற்றி நான்கு மத்ஹபுகள்..

### 1 ஹனபி மத்ஹப் :

கணவன் தன் மனைவியின் அனுமதியின்றி அஸ்ல் செய்வது மக்ரூஹ். ஏனெனில், உடலுறவின் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடியதான மனைவியின் உரிமையை அஸ்ல் செய்வதன் மூலம் கணவன் பறித்துக் கொள்கின்றான். மனைவியின் அனுமதி பெற்று அஸ்ல் செய்வது தவறான காரியமல்ல. ஏனெனில், இச்செயல் மனைவியின் அந்த உரிமையை தற்காலிகமாகத் தான் தடுத்து நிற்கிறது என்கிறார் ஹனபி மத்ஹபின் அறிஞரான இமாம் அல் கஸனி. Ala al Din Ibn Mas'ud al Kasani, Bada'i al Sana'i (cairo, A.H.1322) 2:334

### 2 மாலிக் மத்ஹப் :

தன் மனைவியின் சம்மதம் இன்றி அஸ்ல் செய்ய கணவனுக்கு உரிமையில்லை என்று இமாம் மாலிக் பின் அனஸ் அவர்கள் தனது முவத்தா எனும் நூலில் கூறியுள்ளார்கள். Malik Bin Anas, Al Muwatta, "Kitab al Nikah, Ist Edi. (Beiruth Dal al Nafa'is 1971) 409.

### 3 ஷாபிஈ மத்ஹப் :

அஸ்ல் செய்வது மக்ரூஹ். அதை எந் நிலையிலும் எதற்காகச் செய்தாலும் சரியே. மேலும் அதற்கு மனைவியின் சம்மதம் இருந்தாலும், அல்லது இல்லாவிட்டாலும் அஸ்ல் செய்வது மக்ரூஹ் தான். ஆனால், மனைவியின் சம்மதத்துடன் அஸ்ல் செய்வது ஹராம் போன்ற தடுக்கப்பட்ட செயல் அல்ல. மனைவி சம்மதம் கொடுக்கவில்லையானால், இரண்டு முடிவுகளில் சரியான முடிவு ஹராம் போன்று தடை செய்யப்பட்டதல்ல என்று இமாம் நவவி அவர்கள் கூறியுள்ளார்கள். (Abu Zakriyah Yahya Bin Sharaf Al Nawawi, Commentary On Sahih Muslim. Bab Hukm al Azl, Vol. 3, P.612)

### 4 ஹம்பலி மத்ஹப் :

காரணமின்றி அஸ்ல் செய்வது மக்ரூஹ் ஆகும். ஆனால் ஹராமானதல்ல. மனைவியின் சம்மதம் இன்றி அஸ்ல் செய்தல் கூடாது என்கிறார், ஹம்பலி மத்ஹப்- ன் அறிஞரான இப்னு குதாமா அவர்கள். (Abu Mohamed Abd Allah Bin Ahmed Bin Mohamed Ibn Qudamah, Al Mughni (Cairo: Maktabah al Jumhyrriyah al Ambiyyah, n.d), 7:23 - 4)

அஸ்ல் என்பது மக்ரூஹ் ஆன செயல் என நாம் அறிந்த பின்பு, சில நிலைகளில் அஸ்ல் செய்வது ஆகுமானது என சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளார்கள்.

அதாவது, எண்ணங்களைப் பொறுத்தே செயல்கள் தீர்மானிக்கப்படுகின்றன, என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றுப்படி, எந்த நோக்கத்தை முன்னிட்டு அஸ்ல் செய்கிறோம் என்பதைப் பொறுத்தே அதுது ஆகுமானதான நிலையைக் கொண்டிருக்கும்.

அதாவது, தன் மனைவி கர்ப்பமானால், அவள் உயிருக்கு ஆபத்தாகும் என்ற நிலையிலும், தொடர்ந்து மகப்பேறு எய்துவதால் தன் மனைவியின் உடல் நலம் பாதிக்கக் கூடும் என்பது போன்ற, தேவை என்ற நிர்ப்பந்தம் காரணமாக அஸ்ல் செய்துகொள்வது மார்க்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒன்று என்கின்றார்கள். அதாவது, இஸ்லாத்தில் பன்றி மாமிசம் உண்பது (ஹராம்) சட்டப்படி உண்ணத் தடை செய்யப்பட்டதுது. ஆனால், பன்றி மாமிசம் தவிர உணவுக்கு வேறு வழி இல்லை என்ற நிர்பந்தம் நிலையில் எவ்வாறு பன்றி மாமிசத்தை உண்டு தன் உயிர் போவதைக் காத்துக் கொள்ளலாம் என்றி நிலையில் மார்க்கம் அனமதிக்கின்றதோ அது போன்றதே, நிர்ப்பந்த நிலையில் செய்து கொள்ளக் கூடிய அஸ்ல் - ம் ஆகுமானது என்ற கருத்தைச் சில மார்க்க அறிஞர்கள் முன் வைக்கின்றார்கள்.

எகிப்தின் மார்க்க அறிஞரான ஷேக் அஹ்மது அல் ஷரபாஸ்ஸி என்பவர், எத்தகைய படி நிலைகளில் அஸ்ல் செய்வது கூடும் என்ற கருத்தை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கின்றார் :

இரண்டு மகப்பேற்றுக்கு இடையே தேவையான இடைவெளி (காலஅளவு) ஐ மனைவி விரும்பும் பொழுது,

கணவன் - மனைவி இருவருக்கும் பாரம்பரிய நோய் (Genetic Defect) இருந்து, இவர்கள் மூலம் பிறக்கும் குழந்தைக்கும் அந்நோய் தொற்றக் கூடும் என்ற நிலை இருக்கும் பொழுது,

ஒரு பெண் சமீபத்தில் குழந்தை பெற்று, அக் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் காலத்தில் கருவுறுவது, பால்குடி குழந்தையின் பராமரிப்புக்கும், அப் பெண்ணின் உடலுக்கும் தீங்கு விளைவிக்கும் என்ற நிலை இருக்கும் பொழுது,

அதிகப்படி பிள்ளைகளை கணவனின் போதா வருமானம் மூலம் பராமரிக்க முடியாத நிலை இருக்கும் பொழுது

Abortion Birth Control & Surrogate Parenting By Abul Fadl Mohsin Ebrahim; Noted from Ahmed Al Sharabassi, Islam and Family Planning, in Muslim Attitudes Towards Family Planning, ed., Olivia Schieffelin New York: The Population Council – 1973) 110-11.

மேற்கண்ட இந்த நான்கு படி நிலைகளில் 4 வது நிலை காரணமாக அஸ்ல் செய்து கொள்ளலாம் என்ற நிலை இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு முரணானது.

ஏனெனில், இஸ்லாத்தின் தலையாய ஐந்து கடமைகளில் ஒன்றான, ஏழைவரி (ஜகாத்) என்ற கடமை மூலம் பொது நிதியம் அமைக்கப்பட்டு, இது போன்ற நிலைகளில் மக்களின் பொருளாதாரப் பிரச்னை தீர உதவிக் கொள்ள முடியும். மேலும் இஸ்லாம் அல்லாத நாடுகளிலும் முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து பொது நிதியம் (பைத்துல் மால்) அமைத்து, இது போன்ற தேவைகளுக்கு உதவிக் கொள்ள முடியும்.

இதற்கடுத்ததாக, முன்னதாகவே கண்டறியப்பட்ட பரம்பரை நோய் தன் குழந்தைக்கும் பரவி பாதிப்படையாமல் இருக்க அஸ்ல் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டிருக்கின்றதுது. ஏனெனில், குழந்தை உருவாவதற்கு முன்பே இச் செயல் நடைபெறுவதால், கருச்சிதைவு (Abortion) போன்ற பாவமான காரியங்களுக்க இது இணையானதல்ல (அல்லாஹ் மிக அறிந்தவன்)

மூன்றாவதாக, தன் மனைவி கருவுறுவதனால், மனைவிக்கும், பிறந்திருக்கும் குழந்தைக்கும் தீங்கு நேரலாம் என்ற நிலையில் கணவன் அஸ்ல் செய்து கொள்வது என்ற நிலை தான் மார்க்க அறிஞர்களால் ஏகோபித்த அளவில் ஆகுமானது என்ற கருத்தைக் கொண்டதாகும்.

ஆக இஸ்லாமானது, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இசைவாகவும், ஆணுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும் எந்தவித தீங்கும் நேராத வண்ணமும் ஒரு அழகான இயற்கையானதொரு குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை வழங்கியுள்ளது எனலாம்.

அதாவது,

ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் இடையே மூன்றாண்டுகள் இடைவெளியை, குழந்தைக்கு இரண்டு ஆண்டுகள் முழுமையாகப் பாலூட்டுவதன் மூலம் ஏற்படுத்திக் கொள்வது. இதன் மூலம் குழந்தையின் வளர்ச்சியும், ஆரோக்கியமும் நல்ல முறையில் அமைய இஸ்லாம் அறிவுறுத்துகின்ற அதே வேளையில், பெண்ணின் உடல்நலமும், மனநலமும் எந்தவித தீங்குக்கும் உட்படாத வகையில், இயற்கைத் திட்டமாகவும் இக்குடும்பக் கட்டுபாட்டு முறை அமைந்துள்ளது.

இரண்டாவதாக,

பிறந்து விட்ட குழந்தையின் பராமரிப்பின் பொருட்டும், பாரம்பரிய நோய்கள் குழந்தைக்கம் பரவி குழந்தை பாதிப்படையக் கூடும் என்பதன் பொருட்டும், குழந்தை பெற்றுக் கொள்வதால், மனைவியின் உயிருக்கு தீங்கு ஏற்பட்டு விடும் என்பதன் பொருட்டும், இஸ்லாம் ஆண்களை அஸ்ல் செய்து கொள்ள அனுமதி வழங்கவதன் மூலமும், இஸ்லாம் நவீனமானதொரு, ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத இயற்கை வழிக்கு உகந்ததான குடும்பக் கட்டுப்பாட்டு முறையை வழங்குகின்றது.

மேலும், அது வழங்கும் வழிமுறைகள் ஏனோ தானே என்றபடி இன்றைய குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்க்ள போல் அல்லாமல், சில வரைமுறைகளுக்கு உட்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை வழங்குகின்றது.

ஆனால், இன்றைய குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்கள் பொருளாதார நோக்கம் மட்டும் கொண்டவைகளாக இருப்பதால், அத் திட்டங்கள் மனித சமுதாயத்தில் ஏற்படுத்தும் பாதிப்பை உணர மறுக்கின்றன. ஆனால் இஸ்லாமும் அதன் திட்டங்களும் ஏக இறைவனால் அருளப்பட்டதாகையால், அது மனித நலத்தை முன்னிறுத்தித் தன் திட்டங்களையும், கட்டளைகளையம் வரையறை செய்துள்ளதன்றி, இன்றைய இஸங்கள் போன்ற பொருளாதார நோக்கம் மட்டும் கொண்டதொரு எந்தத்திட்டத்தையும் இஸ்லாம் வழங்குவதில்லை.

மேலும், நபியே! இறந்தோரை நீர் செவியேற்கச் செய்ய முடியாது,

என்ற வசனத்தில், செவிப் புலன் இருந்தும் இறை வசனங்களைச் செவி மடுக்காமல் திரியும் நடைபிணங்களை உவமையாக, அவர்களை இறந்தோருக்குச் சமமாக்கி எவ்வாறு இறைவன் குறிப்பிடுகின்றானோ, அது போன்றதொரு நிலையை, உவமையை கீழ்க்காணும் வசனத்திற்கும் நாம் சரிபார்ப்பது நன்று.

வறுமைக்காக (அதைப் பயந்து) உங்கள் குழந்தைகளை நீங்கள் கொலை செய்தும் விடாதீர்கள் (6:151).

மேற்கண்ட வசனம் அன்றைய அரேபியர்களின் மூடப்பழக்கமான, வறுமைக்குப் பயந்து பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்த இழி நிலையைச் சுட்டிக் காட்டுவதாக, கருத்துச் சொல்லப்பட்டாலும், ஏற்கனவே நாம் பார்த்த குர்ஆன் வசனம் எவ்வாறு இறந்தோர்களுக்குச் சமமாக, உயிர் இருந்தும் செவிடர்களானவர்களுக்கு உவமானம் கூறி, மறைமுகமான பொருள் தந்து நிற்கிறதோ, அது போல வறுமைக்குப் பயந்துது குழந்தைப் பேற்றைத் துண்டித்துக் கொள்ள வேண்டாம் என்றே இறைவன் அறிவுறுத்துவதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும்,

மனிதர்களே!) நீங்கள் வறுமைக்குப் பயந்து, உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள், அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கைத் தேவைகளை) வழங்குகிறோம். நிச்சயமாக, அவர்களைக் கொலை செய்வது குற்றமாக இருக்கின்றது (17:31)

மேற்கண்ட இறைவசனத்தின் மூலம், பொருளாதாரம் மட்டுமே நோக்கமாகக் கொண்டு, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதை, கொலைக் குற்றம் என்று கூறி, அந்த நோக்கத்திற்காக செய்யப்படுவதை இறைவன் தடை செய்துள்ளான்.

மாறாக, முன்னர் நாம் பார்த்த காரணங்களுக்காக அஸ்ல் என்ற குடும்பக் கட்டுப்பாட்டு முறையை தவிர்த்து, ஏனைய லேப்ராஸ்கோபிக், வாஸக்டமி போன்ற நிரந்தர கருத்தடை முறைகளை குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமாகப் பயன்படுத்துவதற்கு இஸ்லாம் அனுமதியளிக்கவில்லை.

அடுத்து காப்பார் டி, லூப் பொருத்திக் கொள்வதுது ஆணுறை அணிந்து கொள்ளுதல், போன்றவை தற்காலிக கருத்தடை சாதனங்கள், விந்தணுவும், கரு முட்டையும் இணையு முன்பே கருத்தரிப்பைத் தடை செய்வதாலும், இம் முறைகள் அஸ்ல் செய்வதன்அடிப்படை நோக்கத்தை இவைகளும் பெற்றிருப்பதாலும், அஸ்ல் க்கான இஸ்லாமிய அனுமதி முறைகளுடன், மேற்கண்ட தற்காலிகக கருத்தடை சாதனங்களை உபயோகிப்பதும் கூடும்.

அடுத்து, பெண்களுக்க கர்ப்பப்பையின் சுவர்களில் கட்டு வளர்ந்து, அக்கட்டியின் மூலம் பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலையில் கர்ப்பப் பையை மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், நீக்கி, நிரந்தர கர்ப்பத்தடை செய்து கொள்வது, மேற்கண்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன் சேராது. எனவே, அவ்வாறு உயிரைக் காக்கும் பொருட்டு சிகிச்சை செய்து கொள்வது இஸ்லாத்தினால் தடுக்கப்பட்டதல்ல என்றும் அறிந்து கொள்வது அவசியம். அல்லாஹ் மிக அறிந்தவன்.

## 11. கருவின் நிலைபற்றிய இஸ்லாத்தின் கொள்கை.. ..

வளர்ந்த ஒரு மனிதனின் உரிமைகள் என்ன என்ன என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படாத இந்த நாளில், இஸ்லாமானது 1422 வருடங்களுக்கு முன்பே கருவில் வளரக் கூடிய சிசுவுக்கு என்ன என்ன உரிமைகள் இருக்கின்றது என்பது பற்றி இஸ்லாம் தெளிவானதொரு கொள்கையை, சட்ட வரைமுறைகளைக் கொண்டிருக்கின்றது. இது இஸ்லாம் இறைவனால் வகுத்தளிக்கப்பட்டுள்ள மார்க்கம் என்பதற்கொரு சான்றுமாகும்.

பெண்ணானவள் கருவுற்று, அவள் வயிற்றில் வளரக் கூடிய சிசுவை, இஸ்லாமானது வெறும்இரத்தக் கட்டி அல்லது பிண்டம் என்ற நிலையில், இன்றைய பொருளாதாரக் கொள்கை கொண்ட இஸங்கள் கொண்டுள்ள அளவுகோளின்படி இஸ்லாம் பார்ப்பதில்லை. மாறாக, கருவானது இறைவனது புதிய படைப்பு, அது இறைவனால் மட்டுமே நிகழ்த்தக் கூடிய அற்புதம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையின்பால் கொண்டது. ஏனவே, எவன் அவ்வுயிரியைப் படைத்தானோ அவன் ஒருவனுக்கு மட்டுமே அதன் மீது உரிமை இருக்கின்றது. முற்ற எவருக்கும் அதன் நிலை என்னவென்று தீர்மானிக்கவோ அல்லது திட்டங்கள் வகுக்கவோ உரிமை கிடையாது.

சிசு என்ற சொல்லுக்கு அறிவியல் இவ்வாறு விளக்கம் தருகின்றது. ஆதவாது, பெண் கருவுற்ற 8 வது வாரத்திலிருந்து அது சிசு உருவாவதற்குத் தேவையான அனைத்து ஆரம்ப கட்டநிலைகளை அடைந்து விடுகின்றது. ஆக, 8 வது வாரக் கருவிலிருந்து அதன் பிறப்பு வரை உள்ள கருவுக்கு சிசு என்ற பெயரைச் சூட்டுகின்றது.

இஸ்லாமும், அதன் அறிஞர் பெருமக்களும் சிசுவையும் அதன் வளர்நிலைகளையும் இறைமறையின் மற்றும் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களின் வாயிலாக மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுகின்றார்கள் :

அதாவது கருப் பையில் இருக்கக் கூடிய சிசுவை பொதுவாக ஜனின் **(Janin)** என்ற சொல்லால் அழைக்கின்றார்கள்.

அவன் உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கிய போது, நீங்கள் உங்கள் அன்னையரின் வயிறுகளில் சிசுக்களாக இருந்த போதும், உங்களை நன்கு அறிந்தவன். (53:32)

பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பன இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம் பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம் பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம் பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம் பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். (23:14-14)

நாம் நிச்சயமாக உங்களை (முதலில்) மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்பு அலக்கிலிருந்தும் பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம் உங்களுக்கு விளக்குவதற்காகவே (இதனை விவரிக்கிறோம்). (22:05).

நாம் மேலே கண்ட குர்ஆனின் வசனம் மூலம் விந்தானது பெலோபியன் குழாயின் கரு முட்டையுடன் ஒட்டிக் கொண்டிருக்கக் கூடிய நிலைக்கு நுத்ஃபா என்றும் பின் அது கருப்பைக்கு நகர்ந்து, ஒட்டிக் கொண்டிருக்கும் அட்டைப் பூச்சி என்ற நிலையான அலக்கா என்ற நிலையையும், பின் கடித்துத் துப்பிப் போடப்பட்ட சதைத் துண்டு போன்ற எலும்பும் சதையும் தோன்ற ஆரம்பிக்கக் கூடிய முத்கா என்நிலையையும் குறிப்பிட்டு, கருவை சிசு என்ற ஒரு பெயரிட்டு மட்டும் அழைக்காமல், அவற்றின் மூன்று நிலைகளைக் குறிப்பிட்டு அழைக்கின்றது.

மேலும் நபிமொழிகளிலும் மேற்காணும் வார்த்தைப் பிரயோகங்களுடன் தான் உள்ளன, என்பதிலிருந்து இஸ்லாமானது, கருவில் வளரும் சிசுவை வெறும் இரத்தக் கட்டி அல்லது சதைத்துண்டு என்று பாராமல், விஞ்ஞானத்துடன் ஒன்றி, தன் ஞானத்தை வழங்குவதன் மூலம் நிச்சயமாக குர்ஆனானது இறைவனின் வார்த்தைகள் என்பதை நம்பிக்கை கொண்டு, அதன் மூலம் என்ன வழிகாட்டுதல்களை இறைவன் நாடி இருக்கின்றான் என்பதையும் அறிந்து, அதன்படி நடக்க முற்பட வேண்டியது தான் உண்மையான மனிதனுக்கு, ஆறறிவு கொண்ட மனிதனுக்கு இருக்க வேண்டிய அழகான நற்பண்பாகும். ஆத்தகைய வழிகாட்டுல்களின் மூலம் மட்டுமே அவன் நிம்மதியாக வாழ முடியும்.

கீழ்க்காணும் நபி மொழியும் குர்ஆனில் காணப்படும் அதே வார்த்தைப் பிரயோகங்களுடனும், கருத்துக்களுடனும் வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

அப்துல்லா இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள் :

சத்தியமும் அதன்பால் உணர்வூட்டப்பட்டவருமான நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (ஒரு விதவையின் உருவில்) உங்களுள் ஒவ்வொருவரும் உங்கள் தாயின் கர்ப்பப் பையில் நாற்பது நாட்கள் சேர்த்து வைக்கப்படுவீர்கள். பின்னர் அதற்குச் சமமான (நாற்பது நாட்கள்) காலத்தில் ஓர் இரத்தக் கட்டியாக மாற்றப்படுவீர்கள். பின்னர் அதற்குச் சமமான (நாற்பது நாட்கள்) காலத்தில் ஒரு சதைத் துண்டாக மாற்றப்படுவீர்கள். பின்னர் (உயிரை அதற்கு ஊதி விடும்) ஒரு வானவரை அல்லாஹ்

அனுப்புவான். இந்த ஹதீஸை முஸ்லிமிலும், புகாரியிலும் (பாகம் 8 பக்கம் 387, ஹதீஸ் எண் : 593) உயிரை அதற்கு யார் ஊதி விடுகின்றார்கரோ என்ற பகுதி முஸ்லிம் ஹதீஸ் நூலில் பதிவாகி உள்ளது.

மேற்கண்ட இறைவசனத்தையும், நபிமொழிகளையும் ஆராய்ச்சி செய்த அறிவியலாளர் மற்றும் மருத்துவரான மாரீஸ் புகைல் என்பவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார் :

அதாவது, உடலுறவின் போது வெளியிடப்படும் அத்தனை விந்தணுக்களும், பெண் சினை முட்டையை கருக் கொள்ளச் செய்யத் தேவைப்படுவதில்லை. ஒரே ஒரு விந்தணு ஒன்றே போதும் என்ற அறிவியலின் கொள்கையை முழுவதுமாக குர்ஆன் பூரணப்படுத்துவதாக, அது பெயரிட்டு அடைக்கும் நுத்ஃபா என்ற சொல் விளங்குகின்றது என்கிறார். நுத்ஃபா என்பது விந்தணுவானது கரு முட்டையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் நிலையைக் குறிக்கும்.

ஆக, படைப்பாற்றலைப் பற்றி தெளிவான கொள்கையைக் கொண்டுள்ள இஸ்லாம், அந்தப் படைப்புக்குத் தேவையான வாழ்வாதாரம் மற்றும் வழிமுறைகளையும் தெளிவாகக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமென்ன!

## 12. இஸ்லாத்தில் சிசு (கரு) வின் உரிமைகள்

மேலே நாம் கண்ட விளக்கத்தின்படி, ஆண் பெண் இல்லற உறவுக்குப் பின் பெண்ணின் வயிற்றில் வளரக் கூடிய உயிரியானது கரு என்றும அதன் பின் சிசு என்றும் அழைக்கப்படுகின்றது என்பதை அறிந்தோம். மேலே உள்ள இஸ்லாத்தில் சிசு (கரு) வின் உரிமைகள் என்ற தலைப்பைக் கண்டதும் சிலருக்கு ஆச்சரியம் ஏற்படலாம். விஞ்ஞானம் முன்னேறிய இந்த 21 ம் நூற்றாண்டில் நாகரீக மனிதனுக்கு என்னென்ன உரிமைகள் உள்ளன என்று அறியப்படாத, அறியப்படாமலும், போராட்டங்கள் ¡லம் சாதித்துக் கொள்ள இன்றும் முயன்று கொண்டிருக்கின்ற இந்தச் சமூகச் சந்தையில், கருவிற்கு - உலக மக்கள் தொகையில் இன்னும் வந்து சேராத ஒரு உயிருக்கு உரிமைகளா? ஆச்சரியமாய் இருக்கிறதல்லவா? அது தான் ஏக இறைவனாகிய அல்லாஹ்வால் வகுத்தளிக்கப்பட்ட இஸ்லாம் என்பது,. ஏனெனில், இவ்வுலகைப் படைத்தவன் அவன். அவன் ஒருவனால் தான் கருவில் இருக்கும் சிசுவுக்கும் மண்ணில் அடியில் கல்லில் மறைந்திருக்கும் தேரைக்கும், கடலின் அடியின் ஆழத்தில் நீந்திக் கொண்டிருக்கும் உயிரிக்கும் வாழ்வையும் அதற்கான வாழ்வியல் சட்டங்களையும் வகுக்க முடியும். அத்தகைய சட்டங்களை, முரண்பாடுகள் காணவியலாத அளவுக்கு உருவாக்க முடியும். இனி கரு (சிசு) வுக்கு என்னென்ன உரிமைகள் இஸ்லாத்தினால் வழங்கப்பட்டுள்ளன என்பதைப் பார்ப்போம்.

### வாழ்வதற்கு உரிமை

ஆதமுடைய மக்களைத் திட்டமாக நாம் கண்ணியப்படுத்தினோம் (17:70)

இறைமறையானது ஆதமுடைய சந்ததியினர்களாகிய இந்த மனிதப் படைப்பு அத்தனையையும் கண்ணியத்திற்குரியது என்று கூறும் பொழுது, அவர்களது உயிரும் கண்ணியமானது என்பதாகின்றது.

அடுத்து,

- எவனொருவன் ஒரு மனிதனைக் கொலை செய்ததற்குப் பகரமாக அன்றி - அல்லது பூமியில் குழப்பத்தை பரப்பிய காரணத்திற்காக அன்றி வேறு காரணத்திற்காக மற்றவனைக் கொலை செய்கிறானோ அவன் மனிதாகள் எல்லாரையும் கொலை செய்தவன் போல் ஆவான். (5:32)

மேலே உள்ள வசனமானது நியாயமான காரணங்களை கொலைக்குச் சட்டத்தின் மூலம் பழி வாங்குதல், மனிதர்களினல் ஏற்படும் குழப்பம் மற்றும் போர்களை அடக்க போன்றவைகளன்றி வேண்டுமென்றே சுயமாக ஒரு மனிதனைக் கொலை செய்வது என்பது, மனித இனத்தையே கொலை செய்வதற்குச் சமமானது என்கிறது. இறைமறை. இதன் மூலம் அநியாயமாக ஒரு உயிரியைக் கொலை செய்வது பெரும் பாவங்களில் ஒன்றாக இஸ்லாம் கருதுகின்றது.

அடுத்துக் கீழ்கண்ட வசனம் ,

மனிதன் மனிதனை உரிமையின்றி கொலை செய்யும் உரிமையை முற்றிலுமாகத் தடுத்துள்ளது.

மேலும்,அல்லாஹ் தடுத்துள்ள எந்த உயிரையும் உரிமையின்றிக் கொலை செய்யாதீர்கள். (17:33).

மேலும் கீழ்க்கண்ட வசனம் சொந்தப் பிள்ளையாக இருந்தால் கூட உங்களுக்கு அவர்களைக் கொல்ல உரிமையில்லை என்கிறது.

(மனிதர்களே!) நீங்கள் வறுமைக்குப் பயந்து, உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். (17:31)

உயிருடன் புதைக்கப்பட்ட (பெண் குழந்தையான) வளும் வினவப்படும் பொழுது (81:8)

அதற்கும் மேலாக, தன் உயிரை தானே மாய்த்துக் கொள்வதற்கும் - தற்கொலைக்கும் கூட இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

உங்களையே நீங்கள் கொலை செய்து கொள்ளாதீர்கள். (4:29)

மேற்கண்ட வசனங்கள் மூலம் அனைவருக்கும் வாழ உரிமையுண்டு. யாரும் யாருடைய உயிரையும் நீதியின் அடிப்படையலன்றி, வேற சு நோக்கங்களுக்காக கொலை செய்ய இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

அதுபோலவே கருவில் வளரக் கூடிய சிசுவையும் ஒரு உயிராகத் தான் இஸ்லாம் அளவிடுகிறது. அதற்கு கீழ்க்கானும் இஸ்லாமியச் சட்டம் சான்றாக நிற்கிறது.

கர்ப்பிணிப் பெண் குற்றம் செய்து, குற்றம் சாட்டப்பட்ட அவளுக்க கொலைத் தண்டனை தீர்ப்பாகும் எனில், அப் பெண் கர்ப்பமாக இருக்கும் காலம் கழிந்து, குழந்தையை ஈன்றெடுத்து, அக் குழந்தைக்கு பாலூட்டும் காலம் கழிந்தோ அல்லது அதற்குப் பாலூட்டுவதற்கு செவிலித் தாய் ஒருத்தியை ஏற்பாடு செய்து விட்ட பின்பு தான், அப்பெண்ணைக் கொலை செய்ய முடியும் என்று அனைத்து மார்க்க அறிஞர்களும், மத்ஹபு உலமாக்களும் ஒருமித்த அளவில் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். (Abortion, Birth Control, Surrogate Parenting)

மேற்கண்ட சட்ட விளக்கம் மூலம் தாய் செய்த கொலைக்குக் கருவில் இருக்கும் சிசு பாதிக்கப்படக் கூடாது, அதற்கு வாழ்வதற்கு உரிமை இருக்கின்றது என்கிறது இஸ்லாம்.

அடுத்து ஒரு பெண் கர்ப்பமான நிலையில் இறந்து விட்டாளென்றால், அவள் வயிற்றில் இருக்கும் குழந்தை உயிருடன் இருக்கின்றது என்ற அறிகுறி தென்படுமானால், அறுவை சிகிச்சை செய்து அகற்றி, அச்சிசுவை வாழ வைக்க முடிந்த அளவு மருத்துவம் செய்ய வேண்டும் என்கிறார், ஷாபிஈ மத்ஹப் அறிஞரான இப்னு குதாமா என்பவர். (Mohamed Ibn Qudamah, Al-Mughni op.lit. 2:551)

ஆக, எந்த நிலையிலும் எந்த உயிரும், அது வளர்ந்த மனித உயிராக இருப்பினும், அல்லது சிசுவாக இருப்பினும் வாழ உரிமை உண்டு. அந்த வாழ்வுரிமையில் தலையிட யாருக்கும் இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

### கரு (சிசு) வின் சொத்துரிமை

இஸ்லாமிய சட்டவியல் நடைமுறைகளின்படி சிசுவானது வயிற்றில் இருக்கும் காலங்களில், அக் குழந்தையின் தந்தையின் சொத்தில் அது உரிமையைப் பெறுவதில்லை. மாறாக, அக் குழந்தை பிறக்கு முன்பே தந்தை இறந்து விட்ட நிலையில், அக் கழந்தை பிறக்கும் வரை சொத்துப் பங்கீடு செய்வதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. எனெனில், பிறக்கும் குழந்தை உயிருடன் பிறக்குமா? அல்லது இறந்து பிறக்குமா என்பது தெரியாது, அடுத்து பிறக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா? என்பதும் தெரியாது. (குறிப்பு : இஸ்லாத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும், சொத்துப் பங்கீட்டில் விகிதாச்சாத அடிப்படையில் வித்தியாசம் உள்ளது என்பதை நினைவில் கொள்க).

இதன் மூலம், அது சிசு தானே, கரு தானே என்ற ஏளனத்துடன் அதன் உரிமையை பாதிக்கச் செய்ய முடியாது. மாறாக, எவ்வாறு வளர்ந்து விட்ட தன் சகோதர, சகோதரி சொத்துப் பங்கீட்டில் உரிமை உள்ளவராக உள்ளார்களோ அது போலத் தான் கருவில் இருக்கும் சிசுவும் உரிமை உள்ளதாக, அது தாயின் வயிற்றை விட்டு உயிருடன் வெளித்தள்ளப்பட்ட பின் அந்த உரிமை அதன் மீது நிச்சயிக்கப்பட்டதாகவும் அமைந்து விடுகிறது. எனவே, இதன் மூலம் இஸ்லாம் என்பது ஒரு பூரணப்படுத்தப்பட்ட மார்க்கம் என்பதை உணரலாம்.

### இறந்து விட்ட கரு (சிசு) வும் அதன் கண்ணியமும்

குறைமாத வளர்ச்சியில் இறந்து பிறந்த சிசுவும், இறந்தே பிறந்த சிசுவும் புதைக்கப்பட வேண்டும். மேலும், குழந்தை பிறக்கும் சமயத்தில் அழுகைச் சத்தம் இல்லாமல் இறந்தே பிறந்திருக்குமானால், அந்தக் குழந்தையைக் குளிப்பாட்டி (அல் குஸ்ல்), கபனிட்டு, ஜனாஸா தொழுகையின்றிப் புதைக்கப்பட வேண்டும் என்கிறது இஸ்லாமிய சட்டமுறை. மேற்கண்ட முறையை குறைமாத மற்றும் நிறைமாதத்தில் இறந்து பிறந்த குழந்தைகளுக்கும் பொருந்தும் என்று இஸ்லாமியச் சட்டங்கள் கூறுகின்றன.

ஆக இஸ்லாமானது, கருவில் வளரும் சிசுவுக்கு வாழக் கூடிய உரிமையையும், சொத்து உரிமையையும், அது இறந்தே பிறந்து விட்டபின் அதை ஒரு இரத்தப் பிண்டமாக நினைக்காமல், அதுவும் ஒரு உயிர் என்ற அளவில் கண்ணியப்படுத்தப்பட்ட அடக்கப்பட வேண்டும் என்பதன் மூலம், என் வயிற்றில் வளரும் குழந்தை தானே நான் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்வேன் என்று எவரும் அதன் வாழ்வுரிமையில் தலையிட முடியாது. என்கிறது இஸ்லாம். அத்தகைய வாழ்வுரிமையைப் பறிப்பது தான் குடும்பக் கட்டுபாட்டு முறைகுளம் அதன் சாதனங்களும். மற்றும் அபார்ஷன் கிளிக்குகளும். ஏனெனில், இத்தகைய குடும்பக்கட்டுப்பாட்டு சாதனங்களும், அதனை உபயோகிப்பாளர்களும் கருவை ஒரு உயிரி என்றும், அதற்கும் மனிதன் போல அனைதது உரிமைகளும் உண்டு என்று நினைப்பதில்லை. மாறாக, அவற்றை ஒரு இரத்தப் பிண்டம் என்ற நிலையிலோ அல்லது விரல் நகத்தைப் போன்ற நிலையிலேயே தான் வைத்துள்ளது.

## 13. கருக்கலைப்பும் அதற்கான தண்டனைகளும்

இஸ்லாமானது கருவில் வளரக் கூடிய உயிரியை (சிசுவை) மனித உயிருக்குச் சமமாக அதாவது உலகில் பிறந்து நடமாடும் மனிதனின் உயிருக்கு எந்த அளவு உரிமை உள்ளதோ அதே அளவு உரிமையை வழங்குவதால், அந்த உயிரி (சிசு)க்கு எதிராகச் செய்யப்படும் செயல்களையும் கடும்

குற்றமாகவே இஸ்லாம் கருதுகிறது. மேலும் அத்தகைய செயலை ஒரு கொடிய கொலைக் குற்றம் என்ற நிலையில் அல்லாது, கடும் குற்றமாக, சட்டத்திற்கு விரோதமான செயலாகக் கருதுகிறது.

எந்தச் செயல் கருவின் வளர்நிலைகளைப் பாதித்து, குறைப் பிரசவம் நிகழச் செய்து விடுகிறதோ அத்தகைய செயலும், அந்தச் செயல் இரண்டாம் நபர் மூலமாகவோ அல்லது தன் சுய உணர்வினால் வேண்டுமென்றே செய்வதன் மூலமாகவோ கருக்கலைப்பை ஏற்படுத்தி, குறைப் பிரசவம் நிகழுமாறோ அல்லது கருக்கலைப்பு செய்யப்படுகிறதோ அத்தகைய செயல்கள் கருவுக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றமாகக் கருதப்படும். இத்தகைய குற்றம் மூன்று நிலைகளில் நிகழுகின்றது.

### 1 பயம் மற்றும் திட்டுதல் மூலம் :

கர்ப்பிணியைத் திட்டுவதன் மூலமோ அல்லது தடித்த கனமான வார்த்தைகள் மூலம் அவள் உள்ளத்தை பாதிப்படையச் செய்து உயிர் பயத்தை ஏற்படுத்துவதன் மூலம் அத்தகைய பயத்தால் ஏற்படும் குறைப்பிரசவம்

### 2 நேரடியான செயல்கள் மூலம் :

வேண்டுமென்றே கருக்கலைப்புச் செய்யும் நோக்கத்துடன் மருந்துகளை உபயோகித்தல் அல்லது மருத்துவரின் உதவியை நாடி கருக்கலைப்புச் செய்து கொள்ளல்

### 3 மறைமுகமான செயல்கள் மூலம் :

கர்ப்பக் காலங்களில் உண்ண உணவின்றி வறுமையில் வாடுதல், நோன்பிருத்தல் அல்லது கெட்ட துர்வாடையை நுகர நேர்தல், எதிர்பாராத விதமாக ஆபத்துக்களைச் சந்திக்க நேர்தல் மூலமாக கருக்கலைப்பு நிகழ்தல்

மேல் உள்ளவற்றிற்கான இழப்பீடுகளும் தண்டனைகளும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

### 1 - குர்ரா :

கருவில் உள்ள சிசுவைக் கலைத்தற்காக குாரா என்ற இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட குற்றவாளி வழங்க வேண்டும்.

அபுஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள் :

ஹுதைல் என்ற குலத்தைச் சேர்ந்த இரு பெண்களின் வாய்த் தகராறு முற்றி, ஒரு பெண் இன்னொரு பெண்ணின் வயிற்றில் கல்லெறிந்து, அதனால் குறைப் பிரசவம் நிகழக் காரணமாகி விட்டாள், இந்த வழக்க இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன்னிலையில் வந்த பொழுது, ஒரு ஆண் அல்லது பெண் அடிமையை சம்பந்தப்பட்ட குற்றாவளிப் பெண் விடுதலை செய்ய வேண்டும் என்ற இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் (புகாரி)

இன்று அடிமை இனம் ஒழிக்கப்பட்டு விட்டதால், சுனன் அல் நஸயீ யில் வரும் ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு நூறு ஆடு அல்லது சுனன் அபூதாவூத் ல் வரும் ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு 500 திர்ஹம்

என்ற அளவிலும் அல்லது ஐந்து ஒட்டகங்களின் மதிப்பை அபராதமாக பாதிக்கப்பட்டவருக்குக் கொடுக்க வேண்டும்.

மேலும், ஒரு கர்ப்பிணிப் பெண் மருந்து உட்கொண்டு, அதன் மூலம் குறைப்பிரசவம் நிகழுமானால், அப் பெண் மேற் சொன்ன குாரா என்ற இழப்பீட்டுத் தொகையை தானமாக வழங்க வேண்டும். மேலும் அந்த அபாராதத் தொகையிலிருந்து அவள் எதையும் அனுபவிக்கத் தடை செய்யப்பட்டவளாகிறாள்.

இமாம் மாலிக் அவர்களின் கருத்துப்படி, முழு வளர்ச்சியடையாத கருவின் மீது தீங்கிழைக்கப்பட்டு குறைப்பிரசவம் ஆனாலும் குாரா என்ற இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட குற்றவாளி கொடுக்க வேண்டும் என்றும், இமாம் அபூஹனீபா மற்றும் இமாம் ஷாபிஈ ஆகியோர்களின் கூற்றுப்படி, குறைப்பிரசவம் ஆன கருவானது எந்த நிலையில் இருப்பினும் சம்பந்தப்பட்ட குற்றவாளி இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்றும், ஹம்பலி மத்ஹப் இமாம்களின் கூற்றுப்படி, 40 நாட்கள் வளர்நிலையைக் கொண்ட கருவின் மீது, அது கலைக்கப்படுவதற்காக செய்யப்படும் எந்தச் செயலுக்கும் (மருந்துகள் மூலம் கலைத்தாலும் சரியே!) சம்பந்தப்பட்டவர் அல்குாரா இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டியதில்லை என்கின்றனர்.

### 2 - திய்யா (முழு இரத்த இழப்பீடு)

இஸ்லாமிய அறிஞர்களும், உலமாப் பெருமக்களும், நபி (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸைக் குறிப்பிட்டு, 4 மாதம் ஆகி விட்ட நிலையில் உள்ள சிசுவின் மீது, அது கருச்சிதைவு ஆகும் அளவுக்கு செய்யும் குற்றத்துக்கு, சம்பந்தப்பட்ட குற்றவாளி முழு இரத்த இழப்பீட்டுத் தொகை (திய்யா)யை சம்பந்தப்பட்ட வாதிக்க வழங்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து உள்ளனர்.

மேலும், இத்தகைய குற்றம் நேரடியாக நிகழ்ந்தாலும், மறைமுகமாக நிகழ்ந்தாலும், சம்பந்தப்பட்ட குற்றவாளி முழு இரத்த இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்று, கீழ்க்கண்ட குர்ஆனின் வசனத்தை ஆதாரமாகக் குறிப்பிட்டு, கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

தவறுதலாக அன்றி ஒரு விசுவாசிக்கு மற்றொரு விசுவாசியைக் கொலை செய்வது, ஆகமானதல்ல. இன்னும் (உங்களில்) எவர் யாதொரு விசுவாசியைத் தவறுதலாகக் கொலை செய்து விட்டால், (அதற்க நஷ்ட ஈடாக) விசுவாசியாகிய ஓர் அடிமையை விடுதலை செய்தலாகும். இன்னும் அவர் குடும்பத்தார் பால் ஒப்படைக்கப்படும் நஷ்ட ஈடாகும். (4:92)

அந்த இரத்த இழப்பீட்டுத் தொகையானது பாதிக்கப்பட்டவருக்கு, குற்றவாளியால் வழங்கப்பட வேண்டும். இழப்பீட்டுத் தொகையாக, 100 ஒட்டகம் அல்லது 200 கால்நடைகள் அல்லது 2000 ஆடுகள் அல்லது 1000 தினார்கள் அல்லது 12000 திர்ஹம் என்ற அளவில் கொடுக்கப்பட வேண்டும். மேலும், மேற்கண்ட குற்றத்துக்கு கருவுற்ற பெண்ணே காரணமாக இருந்தால், அப் பெண்ணும் திய்யா - வை தானமாக வழங்க வேண்டும். அந்த இழப்பீட்டுத் தொகையில் எதையும் அவள் பெற்றுக் கொள்ள முயற்சிக்கக் கூடாது. (Syed Sabiq, Fiqh Al Sunnah, op. cit.2:466-7 (Abortion Birth Control, Surrogate Parenting. Abul Fadl Mohsin Ebrahim)

### 3 - கஃப்ஃபாரா

மேலும், சம்பந்தப்பட்ட குற்றவாளி (திய்யா) முழு இரத்தப்பணம் கொடுத்த பிறகு, முஃமினான ஒரு ஆண் அல்லது பெண் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். இன்றைய நிலையில் அடிமைகள்

இல்லாததால் மேற்சொன்ன 4:92 குர்ஆன் வசனத்தைக் குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட குற்றவாளி தொடர்ந்து இரண்டு மாதங்கள் நோன்பு நோற்க வேண்டும் என்கின்றனர் உலமாப் பெருமக்கள்.

.. .. அவர் குடும்பத்தார் பால் ஒப்படைக்கப்படும் நஷ்ட ஈடும், விசுவாசியான ஓர் அடிமையை விடுதலை செய்தலுமாகும். (இவ்வாறு செய்யும் வசதியை) யார் பெறவில்லையோ அவர் அல்லாஹ்விடம் பாவ மீட்சி பெறுவதற்காக (மன்னிக்கக் கோரி) இரண்டு மாதம் தொடராக நோன்பு நோற்க வேண்டும்... (4:92).

அல் ஜஸ்ஸாஸ் என்ற உலமாப் பெருந்தகையின் கூற்றுப்படி, இவ்வாறு ஒருவர் கஃப்ஃபாராக செய்வதற்காக எண்ணி, நோன்பு நோற்கும் காலங்களின் இடையில் நோய் வாய்ப்பட்டவரானால், நோய் குணமான பின்பு மீண்டும் இரண்டு மாதம் தொடராக நோன்பு நோற்க வேண்டும். நோய்வாய்ப்படுவதற்கு முன் நோற்ற நோன்புகளை கணக்கில் சேர்த்தல் கூடாது.

அடுத்து, சம்பந்தப்பட்ட குற்றவாளி பெண்ணாக இருப்பின், மாதவிடாய்க் காலங்களில் நோன்பு நோற்க அனுமதி இல்லையாதலால், விட்ட நோன்பை மாதவிடாய் கழித்து தொடராக நோற்க வேண்டும். (Abu Bakr Ahmad Bin Ali Al Razi Al Jassas, op. cit., 2:246).

### 14. கருச்சிதைவு - அனுமதியும் நிபந்தனைகளும்

ஒரு தாயின் கர்ப்பப்பையில் உள்ளதை நீக்கி விட நினைப்பது என்பது கருச்சிதைவு ஆகும். அந்தக் கருப்பையில் உள்ள சிசுவுக்கு உயிரூட்டப்பட்டதைத் தொடர்ந்து, கருச்சிதைவு செய்யத் திட்டமிடுதல் என்பது சட்ட முரணானது. சில மார்க்க அறிஞர்கள் அலக்கா என்ற நிலையில் உள்ள கருவையும், 40 நாள் வளர்ந்துள்ள கருவையும் கருச்சிதைவு செய்து கொள்ளலாம் என்கின்றனர். வேறு சிலர் கருத்திரித்து 40 நாட்களுக்குள் உள்ள கருவை கருச்சிதைவு செய்து கொள்ளலாம் என்றும், வேறு சிலர் கரு மனித உருவின் அமைப்பைப் பெறாத நிலை வரை இது அனுமதிக்கப்படலாம் எனக் கூறுகின்றனர். எவ்வாறாயினும் நியாயமான காரணமின்றி கருவைச் சிதைக்காமல் இருப்பது அவசியமானதாகும்.

ஏனெனில் அவசியமில்லாத நோக்கில் கருச்சிதைவு செய்து கொள்வது, கொலை செய்ததற்க நிகரான கொடிய செயலாகும். ஏனெனில், இது ஒரு தடை செய்யப்பட்ட செயல், இந்த சமுதாயம் பெருக வேண்டும் என்று நபி முஹம்மது (ஸல்) அவர்களது கருத்துக்கு முரணானதாகும். இது முஸ்லிம்களைப் பலவீனப்படுத்தி இழிவைக் கொண்டு வரும் காரணிகளில் ஒன்றாகும். மேலும், குர்ஆன், நபி (ஸல்) அவர்களது நடைமுறை மற்றும் அறிஞர்களின் கருத்துப்படி, சில நிபந்தனைகளின்படி கருச்சிதைவு செய்து கொள்ளலாம் என்ற நிலை உள்ளது. அந்த நிலையானது, தேவை என்பதை விட நிர்ப்பந்தம், அவசியம் என்ற உயர்ந்தபட்ச காரணத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அத்தகைய அத்தியாவசியமான நிலையில் தான் இஸ்லாம் அனுமதிக்கிறதே ஒழிய, இன்றைய சூழ்நிலையில் செய்து கொள்ளப்படும் கருச்சிதைவுக்கான காரணங்களுக்கு இஸ்லாம் அனுமதி அளிப்பதில்லை.

டாக்டர் யூசுப் அல் கர்ளாவி அவர்கள் இது பற்றிக் கூறும் பொழுது, தேவை இல்லாமல் அவசியமின்றிச் செய்யப்படும் கருச்சிதைவானது ஒரு ஹராமானதும், வளர்ந்து விட்ட சிசுவின் மீது புரியும் கடும் குற்றமுமாகும் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும், கீழ்க்கண்ட காரணங்களுக்காக கருச்சிதைவு அனுமதிக்கப்படலாம் என்று மார்க்க அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

முதலாவதாக, கருவை அழிக்கும் எண்ணம் சிறிதளவும் இருத்தல் கூடாது.

அப்பெண் கருவுறுவதால், அவளுக்கும், பிள்ளைக்கும் பிரசவ காலங்களின் போது தீங்கு ஏற்படக் கூடும் என்ற பயம் இருப்பின், அல்லது அப்பெண்ணின் உயிருக்கு ஆபத்தாக முடியும் என்ற நிலை இருப்பின்.

பிறக்கக் கூடிய குழந்தை, மரபியல் நோய்களுடனோ அல்லது வேறு ஏதாவது அங்ககீனமாகப் பிறக்கும் நிலை வரலாம் என அறியப்படும் பொழுதும், (இதில் சில அறிஞர்களுக்கு உடன்பாடு கிடையாது) அல்லாஹ் மிக அறிந்தவன்.

தாய் உயிருடன் இருந்து, சேய் இறந்து விட்டதாக மருத்துவர்கள் முடிவு செய்யும் பொழுது, பெரிய உயிரைக் காப்பதற்கு என்ற அவசிய மேலீட்டால் கருச்சிதைவு செய்வது

ஏற்கனவே உள்ள குழந்தைக்கு, உண்டாக தாய்ப்பால் வற்றி விடும் என்ற நிலை இருப்பின்.

## 15. கருச்சிதைவு பற்றி மத்ஹபுகள்

### ஹனபி மத்ஹபு :

கருச்சிதைவு செய்வது என்பது, அது எதற்காகச் செய்யப்படுகின்றது என்ற காரணத்தைப் பொறுத்தது. அத்தகைய காரணங்கள் நான்கு மாத சிசு வரை தான் பொருந்தும்.

அப் பெண் கருவுற்றால் பால் குடி நிலையில் உள்ள குழந்தையைப் பாதிக்கும் என்ற நிலையில்

புதிததாகக் கருவுறுவது, ஏற்கனவே உள்ள குழந்தைக்குத் தேவையான பால் சுரப்பை கட்டுப்படுத்தும் என் நிலையிலும்

குழந்தைக்கு செவிலித் தாய் மூலம் பாலூட்ட செவிலித் தாய் கிடைக்காத நிலையிலும் (இது அன்றைய அரேபியப் பழக்க முறை, இன்றைக்கு இது நடைமுறையில் இல்லை)

அத்தகைய நிலையில், அக் குழந்தை இறந்து விடலாம் என்ற நிலையிலும்,

இன்னும் ஏற்கனவே பிறந்து விட்ட குழந்தையைக் காப்பாற்ற கருச்சிதைவு செய்து கொள்ளலாம் என்கிறார், ஹனபி மத்ஹபின் சட்ட அறிஞரான, இப்னு ஆபிதீன்.

### மாலிக்கி மத்ஹபு

விந்தானது கருப்பையில் நிலை பெற்றிருக்கும் நிலையில், கருச்சிதைவு செய்து கொள்ள அனுமதி இல்லை. மேலும், அக்கருவின் வளர்ச்சி 40 நாட்கள் ஆன நிலையில் கூட கருச்சிதைவு செய்து கொள்ள அனுமதி இல்லை. அக் கருவானது உயிர் பெற்ற பின், கருச்சிதைவு செய்வது தடை செய்யப்பட்டது. ஹராமானது என்று மாலிக்கி மத்ஹபு நூலான ஹஷியா அல் தஸூ க்கி கூறுகின்றது. (HASHIYA AL DASUQI, MOHAMED IBN ARAFAH DASUQI, Op. cit., 2:266-7)

### ஷாபிஈ மத்ஹபு

உயிர் பெற்று விட்ட கருவை கருச்சிதைவின் மூலம் கலைப்பது என்பது குற்றமானது. கருவின் வளர்ச்சியானது, முதலில் விந்தானது கருப்பையில் சினை முட்டையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து, பின் பெண்ணின் கருப்பையில் உள்ள சுரப்பிகளுடன், இணைந்து அது தன் வளர் நிலைகள் ஆரம்பிப்பது முதல் ஆரம்பமாகிறது. அதன் பின் அது உயிர்க் கொள்கின்றது. இத்தகைய நிலையில் கருச்சிதைவுக்கு கருவைத் தூண்டுவது குற்றமாகும். எப்பொழுது அக் கரு உயிர் பெற்று

விட்டதோ, அக் கருவின் படைப்பு முழுமையடைந்து விட்டது. அதன் பின் அக்கருவைக் கலைப்பது என்பது கடும் குற்றமாகும். மேலும், அக் கருவை தாயின் கருவிலிருந்து உயிருடன் பிரித்தெடுத்து விட்டபின், இக் குற்றம் மிகக் கடுமையானதாக ஆகிறது என்கிறார், இமாம் கஸ்ஸாலி அவர்கள். Al Ghazali, op. cit. 2:51, Ihya, 'Ulum al Din'.

## ஹம்பிலி மத்ஹபு

கருவுற்றிருக்கும் பெண்ணைக் காயப்படுத்தி, (அதாவது வயிற்றில் அடித்து என வந்துள்ளது) அதன் மூலம் கருச்சிதைவுக்கு ஒருவர் காரணமாகி விட்டால், காரணமானவர் இரத்த இழப்பீட்டுத் தொகையை பாதிக்கப்பட்டவருக்கு வழங்க வேண்டும். அது போலவே, கருவுற்ற பெண் கருவைக் கலைக்க வேண்டி, மருந்துகளை உட்கொண்டு அதன் மூலம் கருக்கலைப்பு செய்தாரென்றால், அப் பெண்ணும் இரத்த இழப்பீட்டுத் தொகையை தானமாக வழங்க வேண்டும் என்று இப்னு குதாமா அவர்கள் தனது அல் முக்னீ என்ற நாளில் குறிப்பிடுகின்றார்கள்.

மேற்கண்ட மார்க்க அறிஞர்களின் கருத்துக்களில் ஹனபி இமாம் அவர்களின் கருத்தானது இன்றைய மார்க்க அறிஞர்களின் கருத்தோடு தெளிவாக ஒன்றிப் போவதை அறியலாம்.

இன்றைய நவீன கால அறிஞர்களில் ஒருவரான டாக்டர் அல் பூட்டி என்பவர் கீழ்க்கண்ட மூன்று நிலைகளில் கருச்சிதைவு செய்து கொள்ளுதல் ஆகுமானது என்கிறார். மேலும், அக் கருவானது 4 மாத கால அளவுக்குள் இருப்பது அவசியம் என்கிறார்.

பிரசவ காலத்தில் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என மருத்துவர்கள் தீர்மானித்தால்

பெண் கருவுறுவது, அப் பெண்ணை நோயுறச் செய்யும் என்று மருத்துவர்கள் தீர்மானித்தல்

ஏற்கனவே உள்ள குழந்தைக்குத் தேவையான தாய்ப்பால் அவளிடம் குறையும் நிலையிலும், மேலும் அக் குழந்தையின் உணவுக்கு தாய்ப்பாலை மட்டுமே நம்பி இருக்கும் நிலையில் அப் பெண் கருவுறுவது, ஏற்கனவே உள்ள குழந்தையைப் பாதிக்கும் என்ற நிலையிலும்,

ஒரு பெண் கருச்சிதைவு செய்து கொள்வது ஆகுமானது என்கின்றார். அல்லாஹ் மிக அறிந்தவன்.

மேலும், கருவில் இருக்கும் குழந்தையை விட தாயின் உயிருக்குத் தான் முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். நான்கு மாதத்திற்குப் பின், அப்பெண் கருவைச் சுமந்திருப்பது அப் பெண்ணின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலையில், கருச்சிதைவுக்கு அனுமதிக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. இங்கே, முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துப்படி, ஒரு கருவானது தனது வளர்நிலையில் 120 நாளில் ஆன்மாவை, உயிரைப் பெறுகிறது. இக்கருத்துப்படி, அதுவும் ஒரு உயிர் எனும் அடிப்படையில், அக்கருவும், தாயும் சம உரிமை பெற்றவர்களாகின்றார்கள். இந்த நிலையில் கருச்சிதைவு என்பது எப்படி ஆகுமானது என்ற கேள்வி எழும். இங்கே ஷரீஅத் இஸ்லாமிய சட்டத் துணையுடன் இதற்கான வழியைக் காண்பது நலம். இஸ்லாமியச் சட்டப்படி, இரண்டு தீமைகளில், மனதி நலம் பொருட்டு மிகச் சிறிய தீமையைத் தேர்ந்தெடுப்பது ஆகுமானது. எவ்வாரெனில், இரண்டு உயிர்களும் ஆபத்தான நிலையில் இருக்கும் நிலையில் ஏதாவது ஒன்றைக் காப்பாற்றி விடலாம் எனும் நிலையில், ஷரீஅத் சட்டப்படி பெரிய உயிரான அப் பெண்ணின் உயிரைக் காப்பாற்றுவது என்பது தான் சிறந்தது என்ற நிர்ப்பந்த நிலையில், பெரிய உயிருக்கான முன்னுரிமையில், சிறிய ஹராமான கருவைக் கலைப்பது ஆகும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகின்றது. ஏனெனில், அப் பெண்ணானவள் இப் பூமியில் அக் கருவுக்கு முன்னேமேயே நிலை பெற்று விட்ட உயிர். அவளுக்கான கடமைகளும், பொறுப்புகளும், அதனுடன் குடும்பம் எனும் அமைப்பில் ஒரு

துணையாகவும் இருப்பவள். ஆனால், கருவுக்கென்று எந்த பொறுப்பும், கடமைகளும் இல்லை. அந்த நிர்ப்பந்த நிலையில், கருச்சிதைவு செய்வதன் மூலம், அப் பெண் காப்பாற்றப்பட்டு, அவளுக்கென்று உள்ள பொறுப்புகளும், கடமைகளும், குடும்பம் எனம் அமைப்பில் விடுபடாமல் காப்பாற்றப்படுகிறது.

மேற்கண்ட நிர்ப்பந்த நிலையை அடுத்து கருச்சிதைவு செய்வது என்பது முஸ்லிம்களுக்கு ஆகமானதல்ல.

முஸ்லிம்களின் பெருக்கத்தை இது குறைத்து விடும். இஸ்லாமியச் சட்டத்தின் நோக்கம் முஸ்லிம்கள் பெருக வேண்டும் என்பதே.

இது முஸ்லிம்களைப் பலவீனப்படுத்தக் கூடியதும் ஆகும். ஏனெனில், முஸ்லிம்களின் எண்ணிக்கை கூடும் போது அவர்கள் வலிமையடைவதிலிருந்தும், இது தடுக்கின்றது.

அதனால் தான் அல்லாஹ் இஸ்ராயீல் மக்களை நோக்கி இவ்வாறு பேசினான் :

மேலும் பொருட் செல்வங்கள், மக்கள் செல்வங்கள் மூலம் உங்களுக்கு உதவி செய்தோம். உங்கள் எண்ணிக்கையை முன்பை விடப் பெருகச் செய்தோம். (அல்குர்ஆன் : 17:6)

நபி ஷுஐஹப் (அலை) அவர்கள் தமது மக்களுக்கு இவ்வாறு நினைவூட்டினான் :

நீங்கள் எண்ணிக்கை குறைவாக இருந்த நேரத்தை நினைத்துப் பாருங்கள். பிறகு அல்லாஹ் உங்களைப் பெருகச் செய்தான் (7:86)

எண்ணிக்கையில் அதிக மக்களைக் கொண்ட சமூகம் தனது சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறன்ற அதே வேளை, அதனைக் கொண்டு எதிரிகளும் அச்சமுறுவர் என்பது அறிந்து கொள்ள வேண்டிய அம்சமாகும். எனவே, நியாயமான காரணமின்றி பிள்ளை பெறும் வாய்ப்பை அழிப்பது அனுமதிக்கக் கூடியதல்ல. உதாரணமாக ஒரு பெண் கருத்தரிப்பது அவளது உயிருக்கு ஆபத்தாயின் அல்லது அவளது கருப்பையை பயங்கரமான நோய் ஒன்று தாக்கி, அது அவளது உடலில் பரவி அவள் அழிந்து விடும் ஆபத்து இருக்குமாயின் அன்றி பிள்ளை பெறும் வாய்ப்பை இழந்து விடக் கூடாது.

#### முக்கியமான நிபந்தனை :

கருச்சிதைவு செய்வதற்கு அனுமதிக்கப்படக் கூடிய எல்லா கட்டங்களிலும் (குழந்தையின்) தந்தையின் அனுமதியைப் பெறுவது அவசியமாகும். சில வேளை ஒரு கர்ப்பிணிக்கு கருச்சிதைவு செய்வதன் நியாயமான தேவை இருந்தும், அவளின் கணவனின் அனுமதியைப் பெறுவது சாத்தியமில்லை என்றிருந்தால் அப்போது அவள் கருச்சிதைவு செய்து கொள்ள முடியுமா? என்றால், இக்கட்டத்தில் தேவை என்பதானது அனுமதி பெற வேண்டும் என்பதனை மீறி நிற்கிறது. (இஸ்லாத்தின் வழியில் பெண்கள் சுத்தம். ஷேக் முஹம்மது பின் ஸாலிஹ் அல் உதைமீன். தமிழில் எஸ்.எம்.மன்சூர், ரியாத் த.ஃவா மைய வெளியீடு. சௌதி அரேபியா.)

### 16. குடும்பக் கட்டுப்பாடு பற்றி இஸ்லாமிய தீர்ப்பு (FATWA)

சௌதி அரேபியாவின் தலைமை முஃப்தியாக இருந்த, ஷேக் பின் பாஸ் அவர்கள் வழங்கிய மார்க்கத் தீர்ப்பு:

குடும்பக் கட்டுப்பாடும் அதற்காக மருந்துகளை உபயோகிப்பதும் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டது என்பது உலமாக்களின் ஏகோபித்த கருத்தாகும். ஏனெனில், அல்லாஹு த்தஆலா மனித உற்பத்தியை அதிகப்படுத்தி, அது மூலம் மிகப் பெரிய முஸ்லிம் சமூகத்தை நாடி இருக்கின்றான்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

குழந்தைப் பேறு உடையவளையும், இன்பானவைளையும் திருமணம் செய்யுங்கள். உங்களிலிருந்து வெளிப்பட்டோரைக் கொண்டு, மறுமை நாளில் உங்களை எழுப்புவோம். (இப்னு ஹிப்பான், அத்தபரானி, அஹ்மத்)

இறைவனை வணங்குவதற்காகவும், அவனுடைய வழியல் செல்வதற்காகவும், முஸ்லிம்களைப் பாதுகாக்கவும், எதிரிகளின் சதிகளை முறியடிப்பதற்கும் முஸ்லிம் சமூகமானது எண்ணிக்கையில் பெருக வேண்டிய அவசியமாக உள்ளது. தேவை இல்லாதபட்சத்தில், குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்திற்கு உதவும் அத்தனை காரணிகளைப் பயன்படுத்துவதிலிருந்து கண்டிப்பாக தவிர்ந்து கொள்ள வேண்டும். தேவை இருப்பின், அது சட்டப்படி (ஹராம்) தடைசெய்யப்பட்டதல்ல. உதாரணமாக, கர்ப்பம் தரிப்பதால் அவள் கர்ப்பப்பை பாதிக்கப்படும் அல்லது மேலும் அவள் கர்ப்பம் அடைவதால், அவளது உடல்நிலை பாதிக்கப்படும் என்பது இருந்தால், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை பயன்படுத்துவது தவறில்லை. மேலும், அதிகக் குழந்தைகள் இருந்து, சமீபத்தில் ஒரு குழந்தையைப் பெற்று மீண்டும் கர்ப்பமானால், குழந்தைகள் பராமரிப்பு போன்றவற்றிற்கு சிரமம் உண்டாகும் எனில், இஸ்லாத்தில் பாலூட்ட நிர்ணயிக்கப்பட்ட காலம் வரையிலும் அதாவது ஒன்று அல்லது இரண்டு வருட அளவு வரையிலும், அதன்பின் எப்பொழுது அவள் சிரமம் தணிந்து மீண்டும் குழந்தைப் பேற்றுக்குத் தேவையான தகுதியைப் பெற்று விடுவாளோ அன்று வரை குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை (தற்காலிக கருத்தடை முறைகளை)ப் பயன்படத்திக் கொள்ளலாம். அது தவிர்த்து, தனது பொறுப்புகளிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இருக்கவும் அல்லது வேலை செய்வதை எளிதாக்கிக் கொள்ளவும் அல்லது சுகமான வாழ்விற்காகவும் இன்னும் இது போன்ற காரணங்களுக்காகவும் இன்று மக்கள் உபயோகப்படுத்துவது போல உபயோகப்படுத்ததுவதற்கு அனுமதி இல்லை. (Islamic Fatwa Regarding Women Page, 163-164)

## 17. குடும்பக் கட்டுபாட்டுக் எதிராக ஏனைய மதங்களும், அறிஞர்களும்

### கிறிஸ்தவம் :

கிறிஸ்தவர்களின் வேதமான பைபிளில் ஓணாணின் பாவம் (sin of Onan). ஜெனஸிஸ் 38:9 என்ற அதிகாரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓணான் என்பவன் கொல்லப்பட்டான். ஏனெனில் அவன் அவனுடைய விந்தை வெளியே கொட்டினான். (பைபிள்)

பொதுவாக கிறிஸ்துவத்திலும், யூத மதத்திலும் விந்தை விரையமாக்குவது ஒரு தவறான செயலாக ஆரம்ப காலத்தில்லை கருதப்பட்டு வந்தது. ஆனால், பெண்கள் சாப்பிடக் கூடிய கருத்தடை மாத்திரைகள் வந்ததும், அவர்கள் எண்ணத்திலும், சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏனெனில், பெண்கள் சாப்பிடும் மாத்திரைகள் ஆணினுடைய விந்தை நேரடியாக எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. (விந்து வீரியமாகத் தான் இருக்கும், கரு முட்டை தனது வீரியத் தன்மையை,

மாத்திரை உண்பதன் மூலம் இழந்து விடுகிறது ஆர்) D.M.Feldman, Birth Control in Jewish Law, (New York University Press, 1968). Chapter 13, An Oral Contraceptive PP.244-247).

1920 ல் நடந்த லாம்பத் மாநாட்டில் (Lambeth Conference) ல் இயற்கைக்கு மாற்றமாக, எதிராகப் பயன்படுத்தப்படும் அனைத்து காரணிகளுக்கும் எதிரான எச்சரிக்கை அறிக்கை வெளியிடப்பட்டது. அதன்பின் 1930 லும் அதை அடுத்து 1958 லும் நடந்த மாநாட்டில் கணவன்-மனைவி இருவரின் சம்மதத்தின் பேரில், அவர்களுடைய சரியான புரிந்துணர்வு மற்றும் முடிவின்படி, தங்களுக்கு எந்த குடும்பக்கட்டுப்பாட்டு முறை சிறந்ததோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1951 ல் அக்டோபர் 29 ல் போப் XII அவர்கள் வாய் மொழியாக வெளியிட்ட செய்தியில், Rhythm* முறையை மட்டும் கிறிஸ்தவர்கள் பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். (Norman Anderson, Issues of Life and Death (London : Hodder and Stoughton, 1976). 63-4, and Mussallam op.cit., 27). (Both are taken from Abul Fahd Mohsin Ebrahim, ABORTION, BIRTH CONTROL AND SURROGATE PARENTING).

* உடலுறவின் உச்சக்கட்டத்தில் விந்தை வெளியே கொட்டி விடுவது - இஸ்லாமிய முறைப்படி இதனை அஸ்ல் என்று அழைப்பார்கள்.

### இந்து மதம் :

பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு 16,008 மனைவியர்கள் இருந்தனர். மனைவிக்கு ஒரு குழந்தை எனும் அடிப்படையில் பார்த்தாலும், குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை நினைத்தே பார்க்க முடியாது.

மகாபாரதத்தில் பாண்டவர்களின் தந்தை பாண்டுவுக்கு 5 குழந்தைகள் (பஞ்ச பாண்டவர்கள்). மேலும் அனைத்து தெய்வங்களும் பல தாரமணம் புரிந்தவர்களாகவும் உள்ளனர்.

பிராமண மஹா சங்க் என்ற அமைப்பு, ஒவ்வொரு பிராமண இனத்தவரும் 6 குழந்தைகள் வீதம் பெற்றெடுத்துக் கொடுக்க வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டதாக 1991 அக்டோபர் மாதம் தி ஹிந்துஸ்தான் பத்திரிக்கையில் வெளியான ஒரு செய்தியின் தலைப்பு கூறுகிறது.

ஆர்எஸ்எஸ் ன் தோற்றத்திற்கு காரணமான குருகோல்வால்கர், ஹிந்துக்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வதைக் கடுமையான எதிர்த்து வந்துள்ளார். மேலும், அவர் பூமியில் பிறக்கின்ற அனைத்து குழந்தைகளையும் வாங்கிக் கொள்வதற்கு உரிய போதுமான விசாலமான இட வசதிகள் பூமிக்கு இருக்கிறது என்பதை நான் முழுமையாக நம்புகிறேன் என்றார்.

மேலும், உணவு கொடுத்து வளர்க்க முடியவில்லை என்ற ஒரு காரணத்திற்காக ஒரு மனிதன் தன் குடும்பத்தைக் கட்டுப்படுத்த முயல்வது சமூகத்தில் நிலவி வரும் வழக்கமான செயலாகும். இதற்கான தீர்வு குடும்பத்தின் பிறப்பு விகிதத்தைக் குறைப்பதல்ல. மாறாக, அவருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகும்.

மேலும் 1967 ம் வருடம் அரசின் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்த கோல்வால்க்கர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

இத்திட்டம் நடைபெற வேண்டுமெனில், குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதுடன், பிறந்து விட்ட குழந்தைகளின் ஆரோக்யமான, சகலவித வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசே செய்து தர வேண்டும். ஆனால், இத் திட்டத்தைக் கொண்டு வரவேயில்லை. மேலும், அரசின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தரும் அறிக்கையைப் பார்க்கின்ற போது, ஜனத் தொகை அதிகரிப்பு குறித்து அரசு கொள்ளும் அச்சம் அர்த்தமற்றதாகவே தெரிகிறது.

ஒரு முறை லக்னோவில் நடைபெற்ற குடும்பக்கட்டுப்பாடு குறித்த கருத்தரங்கமொன்றில் கலந்து கொண்டார் சுப்ரமணிய சுவாமி. அவர் ஆற்றிய சொற்பொழிவு 1971 நவம்பர் மாதம் 13 ம் தேதி ஆர்கனைஸர் (ஆர்எஸ்எஸ்-ன் அதிகாரப்பூர்வ ஆங்கில மாத இதழ்) இதழில் வெளியாகி இருந்தது. அன்று இந்த சுப்ரமணியசாமி, ஆர்எஸ்எஸ் பாசிஸ இயக்கத்தின் தீவிர உறுப்பினராக இருந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

குடும்பக் கட்டுபாடு செய்து கொள்வது, நாட்டில் பொருளாதார வளர்ச்சியை மிக மோசமான விளைவுகளின் பால், இட்டுச் செல்லும். மேலும் இத் திட்டம் ஆங்கிலேயரின் சதித் திட்டமாகும் என்றும் குறிப்பிட்டார்.

அறிவியல் முன்னேற்றத்திற்கும் அதன் அதீத வளர்ச்சிக்கும் காரணம் அதிக மக்கள் சக்தியின் உழைப்பு, முயற்சியும் ஆகும். குறைந்த மக்களால், வளர்ச்சிப் பணிகளுக்கும், மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உதவ முடியுமெனில், அதைவிட அதிக மக்கள் இருப்பின் அவர்களாலும் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிக்கான உதவிகளைச் செய்ய முடியுமல்லவா? என்று கேட்ட அவர் தொடர்ந்து, ஜனத் தொகைப் பெருக்கமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரே பாதையில் சரிசமமாக வளர்ச்சியடைந்து உள்ளது என்பது கடந்த கால வரலாறாகும். இவ்வாறு சுப்ரமணியசுவாமி பேசியுள்ளார். (ஆர்கனைஸர் : 13-11-1971)

1971 ஆகஸ்டு 21 ல் ஆர்கனைஸர் இதழில் காகா பூஷாண்டி என்ற பத்திரிக்கையாளர் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றி ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதன் தலைப்பே.., குடும்பக் கட்டுப்பாடு பற்றி அழிந்த நாடுகள் என்பதாகும்.

குழந்தைகள் பிறப்பைக் கட்டுப்படுத்திய எத்தனையோ நாடுகள், அழிவைத் தழுவியுள்ளன. ஆனால், குழந்தைகள் பெருக்கத்தால், இதுவரை எந்த நாடும் அழிந்து போனதாக வரலாறு இல்லை என்று வாதாடுகிறார்.

சங்க் பரிவார் அமைப்பின் பிரச்சார பீரங்கி என்றறியப்படும் பிஷன் ஸ்வரூப் கோயல் என்பவர், குடும்பக் கட்டுப்பாடு ஹிந்து சமுதாயத்திற்கெதிரான மாபெரும் சதித் திட்டமாகும் என்று தலைப்பில் ஒரு துண்டு பிரசுரமே வெளியிட்டிருந்தார்.

இந்துக்களே! இந்துக்களே! அரசின் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தில் விழுந்து விடாதீர் என்ற தீர்மானத்தின் மூலம் 1974 மே மாதம் நடைபெற்ற ஹிந்து ராஷ்ட்ரா தளம் அமைப்பினர் ஹிந்துக்களே எச்சரித்தனர் (நன்றி : காடுவாயூர் ஜஅபர் ஸாதிக் பாகவி, MSA கல்லூரி - தூத்துக்குடி - குடும்பக் கட்டுப்பாடும் சங்க் பரிவாரமும் - உங்கள் தூதுவன் மாத இதழ் 5 ஆகஸ்டு 1997. பக் 4-7)

## 18. குடும்பக் கட்டுப்பாடு - முஸ்லிம்களுக்கெதிரான சதியே!

இது வரை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களும், அதனால் எழுந்த சமூக அவலங்களையும் கண்டோம். குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை எதற்காக அமல்படுத்த வேண்டும் என்பதற்காக குடும்பக் கட்டுப்பாட்டு ஆதரவுவாதிகள் எடுத்த வைத்த தவறான சித்தாந்தங்களான வாழ்வாதாரம்

பாதிக்கப்படும், உணவுப் பற்றாக்குறை ஏற்படும், பொருளாதார நெருக்கடி ஏற்படும், இட நெருக்கடி ஏற்படும் என்பது போன்ற அவர்கள் தெரிவித்த காரணங்களுக்கு நிதர்சணமான உண்மைகளை, புள்ளிவிபரப்படி எடுத்துக்காட்டி, அவர்களது வாதங்கள் தவறானவை எனச் சுட்டிக் காட்டி உள்ளோம்.

அத்துடன் இஸ்லாம் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்துக்கு எதிரானது!? என்ற கருத்தினைத் தகர்க்கும் வகையில், இஸ்லாம் எவ்வாறு தன்னுடைய ஒவ்வொரு வாழ்வியல் நடைமுறையிலும் குர்ஆனையும், நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளையும் முன்னுதாரணமாகக் கொண்டு செயல்படுகிறதோ அது போல குடும்பக் கட்டுப்பாடு என்ற வரும்போது, இஸ்லாத்திற்கே உரிய தனித்துவமான கொள்கை மற்றும் விதிகளுடன் கூடிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மட்டும் ஆதரிக்கிறது என்ற உண்மைகளை வலியுறுத்திக் காட்டியுள்ளோம்.

மேலும் இன்றைய குடும்பக் கட்டுபாட்டுத் திட்டமானது பொருளாதார நோக்கம் கொண்டது. அதனால் அதில் ஆன்மீகத்திற்கு வேலை இல்லை. அதனால் தான் இன்று அக் கொள்கையைக் கடைபிடித்த நாடுகள், அக் கொள்கையைக் குழி தோண்டிப் புதைக்க நாடுகின்றன. அத்தனை பெரிய சீரழிவுகளை அந்த நாடுகளில் இத்திட்டம் ஏற்படுத்தி உள்ளது எனலாம். எனவே, இஸ்லாமானது தனது விசாலமான அருட்கொடைச் சட்டங்கள் மூலம் அத்தகைய சீரழிவுகளை ஏற்படுத்தாத, பின்விளைவு ஏற்படுத்தாத இயற்கையானதொரு அருமையான தீர்வை முன் வைக்கிறது. அதே வேளையில், மக்களை நேர்வழிப்படுத்தத் தேவையான ஆன்மீகச் சட்டங்களையும் இதனூடே வழங்குவதால், இன்று கிழக்கிலும், மேற்கிலும் ஏற்பட்டுள்ள ஆன்மீக வெற்றிடத்தையும் நீக்க மருத்துவம் செய்கிறது.

மேற்கண்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அடுத்து, இறைவன் இயற்கையான காரணிகளைக் கொண்டும் மனித இன வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியே வந்து கொண்டிருக்கின்றான். அதாவது இயற்கைச் சாவுகள், நோய்கள், பஞ்சம், வறுமை, புயல், மழை, வெள்ளம், பூகம்பம், காற்று, போர்கள் போன்றவற்றின் காரணமாகவும் மனித இனம் குறிப்பிட்ட அளவு அழிந்தே வந்து கொண்டிருக்கின்றது எனலாம்.

இங்கே பஞ்சம், வறுமை என்று நாம் குறிப்பிடுவதைக் காட்டி, அதற்குத் தானே நாங்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வலியுறுத்துகின்றோம் என்ற கேள்வியைத் தொடுக்கலாம். ஆனால், உலகலாவிய அளவில் இஸ்லாமியச் சட்டங்களை அமுல்படுத்தும் போது அங்கே, தேச வரைபடங்கள் தேவை இல்லாததொன்றாகி விடும். எல்லைகள் அழிக்கப்படும். இன, மொழி, நிற, குல பேதங்கள் முற்றாக துடைத்தெறியப்படும். அங்கு யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தத்துவத்துடன் கூடிய உண்மையான சமத்துவபுரம் நிறுவப்படும். உலகம் முழுவதும் ஒரே இஸ்லாமிய கலிஃபாவின் கீழ் ஆட்சி நடைபெறும் போது, ரோட்டில் தெரியும் நாய் கூட பசியால் சாகும்நிலை என்பது அங்கே இராது.

இஸ்லாமிய சமத்துவபுரத்தில் அதனூடே ஜகாத் முறை பேணப்படும் போது, பொருளாதாரம் ஒரே இடத்தில் குவிவதைத் தடை செய்யும் அதே வேளையில் பொருளாதாரப் பங்கீடு சம அளவில் கொண்டு வரப்படும். தமிழகக் குழந்தைகள் பாலுக்கு ஏங்கும் போது, மஹாராஷ்டிரா அரசு எஞ்சிய பாலைக் கடலில் கொட்டும் அவலம் வராது. உலகளாவிய அளவில், எத்தியோத்திப்பியா நாடு பஞ்சத்தால் வாடிக் கொண்டிருக்கும் போது, அமெரிக்காவிலும், அர்ஜென்டினாவிலும் எஞ்சிய கோதுமையை கடலில் கொட்டியும், அழித்தும் நாசம் செய்யும் அவலம் நடைபெறுகிறது. ஏனெனில், உலகளாவிய முஸ்லிம் சமுதாயத்தில் தேச எல்லைகளும், மாநில எல்லைகளும், நிறங்களும், மொழிகளும், இனங்களும் பேதப்பட்டு நிற்காமல், முஸ்லிம் என்ற இஸ்லாத்தின் தத்துவத்தில் மேற்கண்டவைகள் அழிந்து, உலகலாவிய சகோதரத்துவம் காணப்படும். அத்தகைய இஸ்லாமிய ஆட்சியின் மூலம் தான் பஞ்சம், வறுமை, மற்றும் சமூக நோய்களை முற்றாக ஒழிக்க முடியும்.

மேலும், மால்த்தஸ் அன்று கூறியது போல் உணவு உற்பத்தியானது 1,2,3,4,5,6.. .. .. என்ற அளவிலும் மக்கள் தொகையானது 1,2,4,16,32,.. .. விகிதத்திலும் செல்வதால், உணவுப் பற்றாக்குறை இடப் பற்றாக்குறை ஏற்படும் என்றார். ஆனால் இன்று நடப்பது என்ன? 1950 ல் 361.1 மில்லியனாக இருந்த மக்கள் தொகை இன்று 1 பில்லியனை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த அளவு கூடியும், இந்தியா இடப்பற்றாக்குறையால் விழி பிதுங்கிடவும் இல்லை. உணவுப் பற்றாக்குறையால் பட்டினிச் சாவுகளும் நடைபெறவில்லை. மாறாக, எலியும், பூச்சியும், பாதுகாக்க வசதியும் இல்லாமல் அழிந்தது போக, இன்னும் ஒரு வருடம் பஞ்சமானாலும், உணவுக் கையிருப்பை வைத்து சமாளிக்கக முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதே! ஆக! மால்த்தஸ் - ன் வாதங்கள் பொய்யானவை என்பது நிரூபணமாகி விட்டதல்லவா!?

மேலும், பொருளாதாரப் பாதிப்பு வரும் என்று இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு ஆதரவுவாதிகள் கூக்குரலிடுகின்றார்கள். இன்றைய நாடுகள் பெற்றுள்ள பொருளாதாரம், வாழ்க்கை வசதிகள் எங்கே இருந்து வந்தன. பிறக்கும் போதே கையுடன் அவர்கள் கொண்டு வந்தார்களா? இறைவன், மனிதனை என்று இப்பூமியில் உலவ விட்டானோ அன்றிலிருந்து இன்றுவரை அது தன் வளத்தை இறைவன் கருணையினால் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது. நேற்று வரை ஏழை நாடாக இருந்த இந்தியா, இன்று உலகின் வளர்ந்த நாடுகளின் பட்டியலில், மிகப் பெரும் ஜாம்பவான்களுக்குப் பக்கத்தில் 6 வது இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதே! இந்த மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது. சிந்திக்க வேண்டும்!

வளரும் ஜனத் தொகை என்பது அதிகரிக்கும் உற்பத்தியாளர்களையும், நுகர்வோரையும் குறிக்கும். எவ்வாறெனில், வளரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உற்பத்திப் பெருக்கம் தேவை. அந்த உற்பத்திப் பெருக்கத்திற்கு உழைப்பு, விடா முயற்சி மற்றும் வளரும் ஜனத் தொகைக்கு ஏற்ப அவர்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு, அவற்றை அடைவதற்கான உந்துதல்கள் ஆகியவற்றின் பயனாக புதிய புதிய விஞ்ஞானத் தொழில் நுட்ப முறைகள் போன்ற கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி, புதிய முறை உற்பத்தியையும், உற்பத்தியாளர்களையும் வெளிக் கொணர வைத்தது. மனிதனின் தேவையின் விரிவாக்கம் தான் இன்றைய விஞ்ஞான தொழில் சாதனங்களும் மற்றும் குறுகிய கால உணவு உற்பத்தியும் என்பதை யாரும் மறுக்கவியலாது. மேலும், மக்கள் தொகை வளர வளர நுகர்வோர் எண்ணிக்கையும் சேர்ந்தே வளருகின்றன. நுகர்வோர் பெருகப் பெருக உற்பத்திக் கூடங்கள் அதிகரிக்கும். உற்பத்திக் கூடங்கள் அதிகரிக்க வேலைவாய்ப்பு அதிகரிக்கும். வேலைவாய்ப்பு பெருகப் பெருக, வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழிந்து, மக்கள் தன்னிறைவுடன் வாழும் நிலை ஏற்படும். அதே வேளை நாடும் பொருளாதாரத்தில் முன்னேறும். மேலும், இன்றைய பொருளாதார நிபுணர்களின் புதிய ஆய்வுப்படி, மக்களின் வாங்கும் சக்தியைக் கொண்டு அந்நாட்டின் பொருளாதார வளம் நிர்ணயிக்கப்படுகிறது. அதன்படி, இன்றைய சராசரி இந்தியாவின் தனி நபர் வருமானம் 1250 டாலராக உயர்ந்துள்ளது. இந்த அளவானது ஐரோப்பிய நாடுகளுடன் இணையான அளவாக இருக்கிறது. இந்த முன்னேற்றத்தை இந்தியாவால் எவ்வாறு அடைய முடிந்தது.

மேலும், இன்றைய பிரிட்டனின் சராசரி தனிநபர் வருமானம் குறைந்துள்ளது. ஏன்? குறைந்து வரும் பிறப்பு விகிதமும், அதிகரித்து வரும் முதியோர்களும் தான் காரணமாகும். கடந்த 50 ஆண்டுகளில் என்றும் இல்லாத அளவு பிரிட்டன் முதியோர்களாலும், நோயாளிகளாலும் அவதிப்பட்டு வருகிறது. 1998 ல் அறுவைச் சிகிச்சைக்காக மட்டும் 1 மில்லியனுக்கும் அதிகமானோர் 18 மாதங்களுக்கும் மேலாகக் காத்துக் கிடந்திருக்கின்றார்கள். இவற்றைச் சமாளிக்க இன்று ஒதுக்கப்படும் நிதியை விட 1 பில்லியன் பவுண்ட் நிதியை அதிகமாக 1998 பட்ஜெட்டில் ஒதுக்க முடிவு செய்திருந்தது பிரிட்டிஷ் அரசு. அவர்கள் இதற்கு என்ன தான் கராணம் சொன்னாலும், அதன் முக்கிய காரணம் சமூக மாற்றமும், அதனுடன்

எழுந்த குறைந்த பிறப்பு விகிதமும் ஆகும். ஆக பிறப்பு விகிதக் குறைவும், முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பதும் பொருளாதாரப் பின்னடைவைத் தான் ஏற்படுத்தும்.

மேலும், மேலை நாடுகளில் பிறப்பு விகிதம் குறையக் குறைய, நுகர்வோர் எண்ணிக்கையும் அதே அளவில் குறைந்து கொண்டு வருவதால், வளர்ந்த நாடுகளில் உள்ள வியாபாரக் கம்பெனிகள் நுகர்வோர் அதிகம் உள்ள இந்தியா, சீனா, தாய்லாந்து, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளன. மேலும், இன்று மேலை நாடுகளில் வேலை இல்லாத் திண்டாட்டமும் சிறுகச் சிறுக அதிகரித்தே வந்து கொண்டிருக்கின்றது. ஏன் இந்த மேலை நாட்டு நிறுவனங்கள் இந்தியா போன்ற நாடுகளை நோக்கிப் படையெடுக்கின்றன, இதன் காரணம், மக்களின் வாங்கும் சக்தி. எனவே, மக்கள் தொகை வளர்ச்சியானது, பொருளாதார வளத்துக்கு உரம் சேர்க்குமே ஒழிய, குழி தோண்டாது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

மேலும், இந்தியாவிலும் சரி, உலகெங்கிலும் சரி அதிக மக்கள் தொகை மட்டும் தான் பொருளாதாரப் பிரச்னைக்குக் காரணம் என்று கூறி விட முடியாது. இன்றைய உலகில், சினிமா, மது, போதை, சிகிரெட், விளம்பரங்கள், பட்டாசு வெடிகள், இராணுவத் தளவாடங்கள், விபச்சாரம் போன்றவற்றில் விரையமாக்கப்படும் பணத்தை சமுதாய வளர்ச்சிக்கும், மக்கள் நலப் பணித் திட்டங்களுக்கும் செலவழித்தாலே போதும், இன்றைய இந்தியா என்ன?! அனைத்து நாடுகளின் பொருளாதாரப் பிரச்னைகளையும் எளிதில் சமாளித்து விடலாம்.

உலகில் பொருளாதாரம் எவ்வாறு வீணடிக்கப்படுகிறது என்பதை யுனிசெ∴ப் நிறுவனம் நடத்திய ஆய்வு இவ்வாறு தெரிவிக்கிறது.

கோல்∴ப் விளையாட்டிற்கு 40 பில்லியன் டாலர்

மது, பீர் வகைகளுக்கு 245 பில்லியன் டாலர்

சிகிரெட்டிற்கு 400 பில்லியன் டாலர்

விளம்பரங்களுக்கு 250 பில்லியன் டாலர்

இராணுவத்திற்கு 800 பில்லியன் டாலர்

இதற்கு மாறாக 1735 பில்லியன் டாலர்

குழந்தை நலம், சத்துணவு 13 பில்லியன் டாலர்

ஆரம்பக் கல்வி 06 பில்லியன் டாலர்

தூய்மையான குடிநீருக்கு 09 பில்லியன் டாலர்

மொத்தம் 28 பில்லியன் டாலர்

- நன்றி சமரசம் : செப் 16-30, 1996.

யுனிசெப் நிறுவனம் சாம்பிளாகச் சுட்டிக் காட்டும் கோல்∴ப் விளையாட்டிற்கு மட்டும் 40 பில்லியன் எனில் மற்ற கால்பந்து, கூடைப்பந்து, கிரிக்கெட், அமெரிக்கன் கால்பந்து, ரக்பி போன்ற விளையாட்டுக்களுக்கும் இன்னும் எண்ணற்ற பொழுது போக்கு அம்சமாகக் கருதப்படும் சினிமா போன்ற அநாச்சாரங்களுக்குச் செலவிடப்படும் தொகையைக் கணக்கிட்டால், பாழாகும் பொருளாதாரம் பற்றிய உண்மை நிலையை அறிய முடியும்.

மேலும் 1735 பில்லியன் டாலர் விரையமாகும் அதே நேரத்தில், சமூக வளர்ச்சிப் பணிகளுக்காக உலகமானது வெறும் 28 பில்லியன் டாலர் மட்டுமே செலவு செய்கின்றது. ஆக, சரியாக திட்டமிடல் இல்லாமல் குறுகிய நோக்கில் மனிதன் தன் வாழ்வை அமைத்துக் கொண்டு வருவதை உணரலாம்.

மேலும், மேற்கண்ட துறைகள் மக்களின் விருப்பமான ஜனரஞ்சகமான மற்றும் பொழுது போக்குத் துறைகளாக இருப்பதால், அவற்றில் வீணடிக்கப்படும் பொருளாதாரம் மக்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால், மக்கள் தொகை வளர்ச்சியில் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்ற வறட்டுத் தத்துவம் மட்டும் பூதகரமாகத் தெரிவது ஏன்? ஏனெனில், மூளைச் சலவை செய்யப்பட்டு, மழுங்கடிக்கப்பட்ட, மலட்டுத் தனம் கொண்ட மக்களாக மக்கள் இருப்பதால், சுய சிந்தனையின்றி, தங்களது விரைவான அவசரமான வாழ்க்கை ஓட்டத்தில் சிந்திக்கத் திராணியற்றவர்களாய், பத்திரிக்கைகளாவும், அவர்களால் அறிவுஜீவி?கள் என முத்திரை குத்தப்பட்டோர் சொல்வதெல்லாம் வேத வாக்கு என்ற நிலையை மக்கள் மனதில் ஏற்படுத்தப்பட்டு, அவர்களது சிந்தனா சக்தி மழுங்கடிக்கப்பட்டிருப்பதே இதன் காரணமாகும்.

மேலும், இடப்பற்றாக்குறை ஏற்படும் என்பதெல்லாம் வெறும் கற்பனையேயன்றி வேறில்லை என்பதை இனி வரும் தலைப்புகளில் நாம் நிரூபிக்கக் காத்திருக்கின்றோம். இன்ஷா அல்லாஹ்!

இறைவன் தன் அருட்கொடை மூலம் அருமையான திட்டம் மூலம் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியே வந்து கொண்டிருக்கின்றான். ஒரு முறை மனிதன் வெளியிடும் விந்தில் 220 மில்லியன் முதல் 500 மில்லின் விந்தணு (Spermatozoa) க்கள் இருக்கும். இதில் ஒன்றே ஒன்று தான் கருமுட்டையை சினைத்தரிக்கப் பயன்படுகின்றது. மேலும், பருவமான பெண்ணிடம் சுமார் 4 லட்சம் வளர்ச்சியடையாத கருமுட்டைகள் இருக்கும். இதில் ஒவ்வொரு மாதவிடாயின் போது ஒரு கரு முட்டை தான் சினைக்குத் தயாராகி வரும். பெண்ணின் வாழ்நாளில் அவளது பருவ வயதை தோராயமாக 12-48 என வைத்துக் கொண்டோம் எனில், மொத்தம் 430 முட்டைகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன. இதில் சரியான தருணத்தில் விந்துவும், கரு முட்டையும் சந்திப்பது என்பது மிகவும் குறைவான சந்தர்ப்பத்தில் தான் நிகழுகின்றது. மாதவிடாய்க்கு முன் உள்ள 14 நாள் வரை கரு முட்டையானது கருவுறுதலுக்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு இருக்கும். அது தயாராகி, கருவுறுதலுக்காகன அவகாசம் என்பது, 24 மணி நேர காலத்தில் விந்தணு சந்திக்கும் போது தான் நிகழுகின்றது. மேலும் பெண்ணின் பருவ வயதில் வெளியிடப்படும் 430 சினை முட்டைகளும் கருவுறுதலுக்கு ஏற்றவை தான் இருப்பினும், அவள் தன் வாழ்நாளில் அதிகப்பட்சம் 16 குழந்தைகள் முதல் 20 குழந்தைகள் பெறலாம். ஆனால், இவ்வளவு குழந்தைகளைப் பெறுவோரை அரிதாகவே காண முடியும். இன்று குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அறவே கடைபிடிக்காத குடும்பங்களில் 608 பிள்ளைகளுக்கு மேல் காண முடியாது. எனவே, இதுவும் ஒரு இயற்கையோடு இணைந்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தான்.

மேலும், மனிதர்களில், தம்பதிகளில் பொதுவாக மலட்டுத் தனம் என்பது 10 சதவீதம் அளவு காணப்படுகின்றது. மேலும், குழந்தைப் பேறு இல்லாமைக்கு ஆண்கள் தான் 40 சதவீத காரணகர்த்தாக்களாக உள்ளனர். மீதி உள்ளவற்றிற்கு இருவரும் பொதுவான காரணகர்த்தாக்களாக இருக்கின்றனர்.

(Current Medical Diagnosis and Treatment – Gynecology and Obstetrics. Chap. Infertility By Alan J. Margolis MD., Sadja Green Wood MD, And Ralph c. Benson.MD)

ஆக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கடைபிடிக்காமலேயே இயற்கையின் மூலம் இறைவனே மனித இன வளர்ச்சியை கட்டுப்படுத்தியே வந்து கொண்டிருக்கின்றான் எனலாம்.

மேலும், இன்று இந்தியாவை எடுத்துக் கொண்டால், இந்து மதத் தீவிரவாதிகள் முஸ்லிம்களுக்கெதிரான வாதப் பொருளாக குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை முன் வைக்கின்றார்கள். அதாவது, தேச நலன் பொருட்டு முஸ்லிம்கள் ஏன் குடும்பக்கட்டுபாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்கிறார்கள். உத்திரப்பிரதேச பாரதீய ஜனதா அமைச்சர் 57 மனைவிகளைத் திருமணம் செய்திருப்பது, அது பிஜேபி என்பது கடவுளின் அவதாரக் காட்சி என்று கூறப்படுகின்றது. அதே வேளையில் முஸ்லிம்களுக்கு 4 மனைவிகள் வரை திருமணம் செய்து கொள்ளலாம் என்ற திருமறையின் அனுமதிக்கு, பெண்களுக்கு எதிரான கொடுமையாகச் சித்திரிக்கப்படுகின்றது.

முன் தலைப்புகளில் இந்து மதக் குடும்பக்கட்டுபாடு பற்றி என்ன கூறுகின்றது என்ற தலைப்பில் ஆர்எஸ்எஸ் ன் ஸ்தாபகர் குருகோல்வால்கர் மற்றும் ஆர்எஸ்எஸ் பிரச்சாரகர் காகா பூஷாண்டி, முன்னாள் ஆர்எஸ்எஸ் மற்றும் இந்நாள் ஜனதா தளத் தலைவர் சுப்ரமணிய சுவாமி ஆகியோரது கருத்துக்களும், பிராமண மகாசபையின் தீர்மானங்களும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு எதிராகவே இருக்கக் கண்டோம். இவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என இந்துக்களை எச்சரிக்கை செய்திருக்கும் போது, முஸ்லிம்களை மட்டும் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளத் தூண்டுவதேன்?

ஒரு கண்ணில் வெண்ணையும், இன்னொரு கண்ணில் சுண்ணாம்புமா? இது தான் இந்துத்துவாவின் தேசியக் கொள்கையா? நாட்டில் 80 சதம் இருக்கும் இந்துக்கள் பெருக வேண்டும், 15 சதவீதம் இருக்கும் முஸ்லிம்கள் அழிய வேண்டுமா? இவர்கள் அல்லவா இந்தியாவின் நலன் விரும்பிகள்?!

பாபர் மசூதி இடிப்பின் மூலம் இந்தியாவையும், இந்திய ஜனநாயகத்தையும், இந்திய மதச்சார்பின்மைத் தத்துவத்தையும் குழி தோண்டிப் புதைத்தவர்கள் அல்லவா இவர்கள்! அன்று அஹிம்சைப் புறாவைக் கொன்றார்கள். இன்று உலகச் சமாதானத் தூதனான இஸ்லாத்தையும், அதைப் பின்பற்றும் முஸ்லிம்களையும் அழிக்கப்பார்க்கின்றார்கள். இவர்கள் அல்லவா மனித இன நல ஆர்வலர்கள்? மொத்த முரண்பாடுகளின் உருவம் அல்லவா இந்த இந்துத்துவாவும் அதன் சேவகர்களும்! அன்றிலிருந்து இன்றுவரை தேச நலன் காப்பதில் முஸ்லிம்களுக்கு ஈடாக எவரும் தியாகத்தைச் செய்து விடவில்லை. எல்லா சமுதாயமும் தியாகம் செய்திருந்தாலும், முஸ்லிம்கள் தங்களது சதவீதத்திற்கு மேலேயே தியாகம் செய்தார்கள் என்பதை வரலாறு இன்றும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

பொதுவாக 16 ம் நூற்றாண்டிலிருந்து அறிவியல் அறிஞர்களுக்கும் மதத் தத்துவங்களுக்கும் இடையே ஒரு கொள்கைப் போர் நடந்து வந்து கொண்டிருக்கின்றது. தங்கள் புராணக் கட்டுக்கதைகளுக்கு எதிராக, அறிவியல் கொள்கைகள் அமையும் போது, அத்தகைய கொள்கைகளையும், அறிஞர்களையும் எதிர்க்கத் துணிந்த மதவாதிகள் சில சமயங்களில் கலிலியோ போன்றோரைக் கொன்றது போல், கொலையும் செய்து வந்தனர். அத்தகைய புரட்டு வாத, வாழ்வியலுக்கு ஒத்துவராத மதத் தத்துவங்களின் வரிசையில் இஸ்லாத்தையும், அதன் சட்டங்களையும் இன்றைய அறிவியல் உலகம் இணைத்துப் பார்த்தே வந்தது தான் துரதிருஷ்டமானது. ஆனால், இன்றைய அறிவியல் உலகமானது, இஸ்லாத்தின் கொள்கைகள் தனித்துவம் வாய்ந்தது, அறிவியலுடன் அதன் நிரூபணமான கோட்பாட்டுடன் இயைந்து போகக் கூடிய மார்க்கம் என்ற உண்மையை உணர்ந்து வருகிறது. அறிவியல் உண்மைகளுக்கும் குர்ஆனிய தத்துவங்களுக்கும் ஒரு சிறிய மாறுபாட்டைக் கூட காணவியலாத அறிவியலாளர்கள் பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு வரும் நிகழ்வானது, ஏனைய மத வாதிகளுக்கு எரிச்சலை உண்டு பண்ணியுள்ளது. தங்கள் புராணக் கதைகளுக்கும், இஸ்லாத்தின் பூரணத்துவக் கொள்கைகளுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் செய்து புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதை விட்டு விட்டு, இஸ்லாத்தின் மீதும், அதன் கொள்கைகள் மீதும் போர் தொடுத்துப்

பார்த்தனர். எல்லாம் முனை முறிந்த அம்புகளாக தோற்று விழுந்தன. இனி இது போன்ற ஆயுதங்களால் இஸ்லாத்தை எதுவும் செய்து விட முடியாது என்ற எண்ணத்தில் புதிதாக தேசிய நலன் என்ற புதிய கோட்பாட்டின்படி, குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை முஸ்லிம்கள் மீது வலியத் திணிக்கப் பார்க்கின்றார்கள். அவர்களது இந்தக் கொள்கைத் திணிப்பையும் அதன் திட்டங்களையும் தகர்ப்பதே இந்த புத்தகத்தின் பிரதான நோக்கமாகும்.

மேலே நாம் கொடுத்துள்ள தகவல்கள், அவர்கள் சார்ந்திருக்கும் புராணப் புரட்டுக் கதைகளிலிருந்து எடுத்தவைகள் அல்ல. மாறாக, செய்தி ஊடகங்களிலிருந்தும், அறிஞர் பெருமக்களின் ஆய்வுகளிலிருந்தும் திரட்டப்பட்டவை.

மேலும், அவாள்கள் அவர்களது புராணத்தின் மீது நம்பிக்கை இழந்திருக்கலாம். அதில் நியாயமிருக்கிறது. ஆனால் அதையே முஸ்லிம்களிடம் எதிர்பார்ப்பது நல்லதல்லவே. ஏனெனில் முஸ்லிம்களாகிய நாங்கள் பற்றிப் பிடித்திருப்பது, ஏக இறையோனாகிய அல்லாஹ்வின் திருமறை எனும் அறுந்து விடாத கயிற்றை அல்லவா!! அந்த அல்லாஹ்வின் மீதல்லவா பூரண நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்.

ஏனெனில்,

வானங்களிலும் பூமியிலும் அவ்விரண்டிற்கும் இடையிலும் உள்ள அத்தனையும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். (20:6)

அந்த,

அல்லாஹ் தான் உங்களைப் படைத்தவன், அவனே உணவு வழங்குகின்றான் (30:40)

என்ற ஆன்மீக நம்பிக்கையைப் பெற்றவர்கள் முஸ்லிம்களாகிய நாங்கள், பொருளாதாரம் பாதிக்கும், வாழ்வாதாரம் பாதிக்கும் இட நெருக்கடி ஏற்படும், உணவுப் பற்றாக்குறை ஏற்படும் எனப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. அதற்கான தேவையும் இல்லை.

அவனுடைய படைப்புகளில் முஸ்லிம்கள் அல்லாதாரகிய நீங்களும் ஒருவர் தான். உங்களுக்கும் அவனே உணவையும் வாழ்வாதாரத்தையும் வழங்குகின்றான் என்ற நம்பிக்கையைப் பெற்றுவிட்டீாகளானால், நீங்களும் இஸ்லாமிய நம்பிக்கையை அதன் சுவையை சுவைத்தவர்கள் ஆவீர்கள். அது போலவே இவ்வுலகிலும், மறு உலகிலும் வெற்றி பெறுவதோடு, அதன் கனப் பொழுது முதல் சமூக அமைதியையும், சமூக நீதியையும் பெற்று விடலாம்!! இறைவன் நாடினால்!!!

அல்ஹம்துலில்லாஹ்!! எல்லாப் புகழும் ஏக இறையோனாகிய அல்லாஹ்வுக்கே!!